LC
N45
101682

18 FEB 54

உ

பரமபதி துணை.

யாகோபு அருளிச்செய்த

# வைத்திய சிந்தாமணி 700,

## குருநூல் 55, சேர்ந்தது.

இஃது

மதுரை வித்துவான்

த. குப்புசாமி நாயுடு அவர்களால்,

பரிசோதித்த பிரதிக்கிணங்க

மதுரை, புதுமண்டபம், புத்தகஷாப்

இ. ராம.

குருசாமிக்கோனார் சன்

G. இராமசாமிக்கோன்

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசி வீதி. குருசாமிக்கோனார் தெரு,

ஸ்ரீராமச்சந்திர விலாசம் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

P. I O. No M D 101 — 4—10—45. 400 Copies.

விலை ] 1945 [ ரூ 3—0—0

நான்காம் பதிப்பு.

101682
LC
N45

உ
பரமபதி துணை.

# இராமதேவரென்ற யாகோபு இயற்றிய

## சாஸ்திரங்களின் விபரம்.

| | | | |
|---|---|---|---|
| வைத்திய சிந்தாமணி | 700 | வகாரக் களங்கு | 300 |
| ௸ குருநூல் | 55 | ௸ பஞ்சமித்திரம் | 300 |
| சுண்ணக்காண்டம் | 600 | ௸ தண்டகம் | 110 |
| ௸ சுண்ணம் | 300 | ௸ சூஸ்திரம் | 55 |
| ௸ சுண்ணசூஸ்திரம் | 155 | ௸ இடைபாகம் | 16 |
| ௸ சூஸ்திரம் | 55 | ௸ செய்பாகம் | 16 |
| லோகச்செந்தூரம் | 300 | வைத்ய வாதசூஸ்திரம் | 400 |
| ௸ செந்தூர சூஸ்தி | 150 | ௸ வைத்தியம் | 300 |
| ௸ சூஸ்திரம் | 55 | கல்லாடமும் சாஸ்திரம் 17க்கும் அரும்பத உரையும் | |

ஆக மொத்தம் 17 சாஸ்திரங்கள். புத்தகம் 12.

மேற்கண்ட சாஸ்திரங்களை பன்னிரண்டு புத்தகங்களாக அச்சிட்டு தனித்தனியாகவும் மொத்தமாய் ஒரே கோர்வையாகவும் பயிண்டு செய்திருக்கிறது தேவையுள்ளவர்கள் நேரிலும் வீ பீ தபால் மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

## ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலமான அச்சுக்கூடத்ததிபர்களுக்கும் புத்தக வியாபாரிகளுக்கும் மற்றுமுள்ளவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்:—

இந்த சாஸ்திரம் ஓலை ஏட்டுச் சுவடியாயிருந்ததைப் போதுமான திரவியச் செலவு செய்து என்னால் அச்சிட்டு (கெவர்ன்மெண்ட்) சட்டப்படி ரிஜிஸ்தர் செய்திருப்பதால் இச்சாஸ்திரத்தைப் பிறர் எவ்விதத்திலும் அச்சிடக்கூடாதென்பதைத் தெரிவித்துக்கொண்டேன்.

இ. ராம. குருசாமிக்கோனார் சன்,
G. இராமசாமிக்கோன்
புத்தகஷாப் புதுமண்டபம் மதுரை,

உ
பரமபதி துணை.

## யாகோபு அருளிச்செய்த

# வைத்திய சிந்தாமணி 700.

ஆரணத்தில் அகிலாண்ட கோடிதன்னில்
அலைகடலில் வரையினிலு மமர்ந்தே யெங்கும்
பூரணமாய் நிறைந்துநின்ற பொருளேகாப்பு
புகழ்பெரிய நபிமார்கள் பாதங்காப்பு
காரணமாய் எனக்குப்பேர் யாகோப்பென்று
கருணையுடன் றனழைத்த குருவேகாப்பு
தாரணியுள் ளோர்பிழைக்க விந்நூல்தன்னைச்
சாற்றுதற்கு ஆண்டவன்றன் பாதங்காப்பே.

பூரணியாள் பெற்றவிநாயகனார்தன்னைப்
போக்கோடே புந்திதனில் வைத்துக்கொண்டு
காரணமாய்க் கையைந்து முகத்தான்றன்னைக்
கற்பகத்தின் செல்வனைத்தான் கருத்திலெண்ணி
நாரணன்றன் மருமகனை நவின்று கூறி
நற்பாதஞ் சிரசில்வைத்துப் பணிந்துபோற்றி
பாரதனிற் பண்டிதத்தைப் பலநூலாய்ந்து
பார்த்தறிந்த சிந்தையினுற் பாடினேனே. (1)

சிகையில்மதி அமுதத்தை யணிந்தயீசன்
செப்பரிய விடையேறி நின்றோன்மீதே
தகையான மழுவெடுத்த பெரியோன்றனும்
தன்மையாய்க் காளியுடன் வாதுசெய்தோன்
தொகையாத யானிடரைப் படைத்தோன்ஞானத்
தொன்மைதரு நகைசெய்து யெரித்தோனை
இகமகிழுஞ் சிவனுடைய பதமம்போற்ற
இணையடியைத் தொழுதுபணி யியல்புள்ளோரே.

ஞானத்தான் குலமறுத்து வள்ளிதன்னைச்
சுருதிபெறச் சிறையெடுத்த சீமான்றன்னைப்
பாரமுள்ள தேவர்களுக் கிடுக்கந் தீர்த்த
பார்வதியாள் புதல்வனெனும் பயன்பெற்றோர்க்கு
கோரமுள்ள யெக்கியத்திற் கலந்துநின்ற [ம்
குணவானை மயிலூர்ந்த குமரன்பாதம்
வீரமுடன் சிரசில்வைத்துத் தொழுதுபோற்றி
விதமான பண்டிதத்தை விளம்புவேனே. (3)

நெஞ்சதனில் வீற்றிருந்த நெடியோனுக்கு
நித்தியமும் பணிசெய்யுந் துணைவிதன்னை
அஞ்சியே தக்கனுட யெக்கியத்தின்
அழகியநீ ரணிந்தவளே அனைத்துலோகம்
மிஞ்சியே படைத்தவளே ராஜனோடே
மிகப்பிரிய மாயிருந்து வளர்த்தாள்தன்னைத்
துஞ்சிலா மனத்துள்வைத்துப் போற்றிசெய்து
தொல்லுலகிற் பண்டிதத்தைச் சொல்லுவேனே.

பொதிகைவாழ் மாமுனிவர் பாதம்போற்றி
புகலரிய தன்வந்திரி பாதம்போற்றி
விதியிலுயர் காலாங்கி பாதம்போற்றி
வெற்றிபெற்ற போகருட பாதம்போற்றி
பதியான யூகிமுனி பாதம்போற்றி
பத்திதரும் சட்டைமுனி பாதம்போற்றி
திதிபுகழும் புலத்தியர்தன் பாதம்போற்றி [னே
நினைவில்வைத்துப் பண்டிதத்தை நிசஞ்சொல்வே

ஆதிமுத லென்பேரு இராமதேவர்
அடைவாகக் குளிகையிட்டு மக்காதேசம்
வீதியிலே சென்றுபுக்கச் சாய்புகண்டு
விருப்பியே சாஸ்திரத்தில் மிகவும்பேசி
நீதியா யென்மனதிற் றேற்றமாகி
நேராகத் தொண்டனைத்து தேர்ந்துபார்த்து
ஓதியதோர் ஞானத்தின் செயலுங்கண்டேன்
உற்றுணர்ந்து பிற்பாடு உறுதியானேன். (6)



உறுதியுற்று யிருக்கையிலே யாகோப்பென்று
உண்மைப்பேர் கொடுத்துச் சுன்னத்துச்செய்து
அருமைபெறத் தொப்பியொன்று யீய்ந்தாரப்போ
அசனுசனும் வேறல்ல நீநானென்றேன்
பருதியுற்றப் பண்டிதத்தை மிகவும் பார்த்துப்
பருத்தறிந்து வைத்தியங்கள் பலிக்கவென்று
பிருதியுற்று வடதேசம் மக்காசென்று
பேதமது யில்லாமற் பேசினேனே. (7)

பேசினேன் வைத்யசிந்தா மணியதாகப்
பேர்பெறவே யெழுநூறு விருத்தமாக
வீசினேன் மதுரகவி போலேசொன்னேன்
விதமாக யெந்நூலை விரும்பிப்பாரு
ஆசுகவி போலர்கும் அனந்தம்போக்கு
அடுத்துநின்ற பண்டிதர்கள் பிழைக்கவேண்டி
வாசினையாய்ப் பார்த்தறிந்தால் யெல்லாம்வாய்க்கும்
வகைசொன்ன பொருளென்று மருவிப்பாரே (8)

மருந்து வகை.

சொன்னதொரு லேகியங்கள் கிருதம்யெண்ணெய்
சொற்பெரிய வங்கபற்பம் உப்புச்சொன்னேன்
நன்னயமாய் அயபற்பம் நாகபற்பம்
நலமான களங்குமுதல் அன்னபேதி
இன்னிலத்தில் கல்நாறின் பற்பமோடு
இங்கிதமாய் வைப்புமுதல் திராவகங்கள்
கன்னல்பெற ஆக்ராணம் நசியப்போக்கு
காரணமாய் ரசவாதந் தைலமாமே. (9)

தைலமொடு பஞ்சமித்திரம் புடத்தின்பாகந்
தாக்கரிய கிருதமொடு பிட்டுமார்க்கம்
ஒயிலோடு கருங்கோழி யெண்ணெய்மார்க்கம்
உரமாகப் பீனிசத்தி னெண்ணெயோடு
அயிலமொடு செப்பினுட பற்பந்தானும்
அடைவான தங்கச்செந் தூரமார்க்கம்
துயிலமொடு சோழியுட சூரணங்கள்
தொகையாகப் பாடியநூல் துலக்கந்தானே. (10)

துலக்கமாய்க் கெந்தகத்தின் பற்பமோடு
அடியான அரிதாரஞ் சிலையுஞ்சாரம்
விலக்கமாய் வைப்போடு காந்தம்வங்கம்
விரும்பியே அப்பிரேகம் விதங்கள்ரெம்ப
பிலக்கவே பார்த்தாக்கால் களங்கந்தோணும்
பிசகாது என்வசனம் பொய்போகாது
மலைக்குள்ளே ஜலமிருந்த விதமேபோலாம்
மகிழ்வாக யாகோபு வழுத்தும்வாரே. (11)

தன்மருக்குங் கன்மருக்குந் தனங்கள்ரெம்பத்
தாட்டிகமாய்க் கொடுப்போர்க்கும் வழிபட்டோர்க்
வன்மவினை தீருமென்று யிந்நூல்தன்னை [கும்
வாழ்த்தியே கொடுத்துவிடு மற்றுமின்னம்
கன்மமுள்ள கசடருக்குஞ் சண்டாளர்க்கும்
கலிமிடியின் காமியற்றும் பாதகர்க்கும்
நன்மையுள்ள நூல்கொடுத்தால் நாகமெய்தும்
நானிலத்தில் யாகோபு நலஞ்சொன்னேனே.(12)

வாலை ரசம்.

வன்னிகெற்பம் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
வகைசமமாய்க் கொடிவேலி வேருஞ்சேர்த்து
உன்னிதமா யிடித்துநையக் கடத்திலிட்டு
ஒழுங்காக மேல்மூடிச் சீலைசெய்து
பன்னியே வாலைரச மாகச்சாமம்
பதறும லெரித்திடவே உயரவேறும்
சென்னியே வாலைரச மாகும்பாரு
செப்பினார் யாகோபு திறமைதானே. (13)

திரமான கல்லுப்புப் படியுந்நாலு
திட்டமா யிடைசேரு செங்கல்மாவை
வரமாகச் சேர்த்திடித்துச் சட்டியிட்டு
வன்மையா யழுத்தி நீர் நடுவிலேதான்
அரமாகப் பள்ளமிட்டு வகையதாக
அதிலிடுவாய் வாலைரசம் பலமும்நாலு
கரமாக மேல்மூடிச் சீலைமண்ணேழ்
கட்டிவைக்க யாகோபு கருதினாரே. (14)



சொன்னதொரு அடுப்புதனிற் றூக்கிவைத்துச்
சுகமாகச் சாமமெட்டு மெரித்துவா நீ
நன்னயமாய் மேலேறும் பதங்கம்பாரு
நாட்டியே மயிர்க்குச்சு தன்னாலேதான்
சின்னபின்ன மாக்காமல் வழித்துக்குப்பி
சிறப்பாக அடைத்துநீ மூடிபோட்டுக்
கன்னலதா யெரித்திடவே உயரவேறுங்
கருத்துரைத்தார் யாகோபு கருணைதானே. (15)

குப்பி யெரிப்பு.

எரித்திடவே பதங்கமது தேங்காய்போலே
எறியே தானிருக்கும் உடைத்துமெள்ள
வரித்திடவே குருவாகும் வைத்துக்கொண்டு
வன்மையாய் லேகியங்கள் கிருதமெண்ணெய்
நரித்திடவே செந்தூர மிதிலேபோட்டு
நலமாக உண்டிடவே நாட்டிலுள்ள
பெருத்திட்ட பிணிசங்கள் கடலேபுக்கும்
பேசாதே யென்றுசொன்னார் யாகோப்தானே.(16)

பண்டிதத்தைக் கண்டிதமாய்ப் பார்த்துத்தேறு
பரிவான பிணியினுட பருவப்பாரு
கண்டிதமா யிருந்தாக்காற் றூரஓடு
கருத்துள்ளே தீருமென்றால் மருந்துதாக்கு
மூண்டிதமாய் வியாதியெல்லாங் கடலேபுக்கும்
முதுமையாய்ப் பத்தியந்தான் காக்கச்சொல்லு
தண்டியா யிருந்தாக்கால் மருந்துதன்னைத்
தாக்கென்று யாகோபு திடஞ்சொன்னாரே. (17)

அகலிகையைத் தேவேந்திரன் சிநேகஞ்செய்ய
அதிற்பிறந்த தெங்கள்குல மன்னாள்தன்னில்
சுகமாக மறைந்ததினால் கௌதமரும்
சூட்சமுள்ள மாவரென்றும் தேவரென்றும்
ஜெகமெச்சப் பேருமிட்டா ரதிலிருந்து
தீரமுட னேராம தேவரென்று
மகபதியா மகஸ்தியரும் பேருமிட்டு
வாழ்த்தினார் முனிவரெல்லா மகிழ்ந்திட்டாரே.

அயச் செந்தூரம்.

எருவதனைத் தகடாக்கி எட்டிச்சாற்றில்
ஏழுதரந் தோய்த்தாட்டி யிடிக்கத்தூளாம்
பகருமுன் னிலைச்சாற்றி லரைத்துருட்டிப்
பருப்புடமாய்ப் போட்டெடுசெந் தூரமாகும்
அநிலமதில் நோயாளி அன்பாய்வந்தால்
அரிசியிடை யேகொடுக்கக் குன்மம்மூலம்
வெகுபிணிக ளறுமெனவேழ் நூறுசொல்லி
விளங்கவைக்கு மிந்திரியம் விளைவுமாமே. (19)

நல்லிரும்பு அரப்பொடியைக் காந்தத்தாலே
நாடியே யெடுத்ததனைக் கல்வத்திட்டு
சொல்லினிய சம்புமா முத்தப்பட்டை
துவைக்கவருஞ் சாருவிட்டுச் சாமமூன்று
மெல்லியதாய் நலநீத யாகுமட்டும்
விடாதரைத்து உலர்த்தியதை வைத்துக்கொண்டு
சொல்லுமனுப் பானத்தோ டியப்பாண்டு
சுகமூஷ்ணம் குன்மமுடன் செரவ்ஸ்தமாமே. (20)

தாம்பூரப் பற்பம்.

சுத்திசெய்த தாம்பூரந் தகடாக்கித்
துண்டித்துப் புளியிலைபோல் தகடுசெய்து
குற்றமறக் கெந்திசம னய்ப்பொடித்துக்
கூட்டியே எலுமிச்சம் பழத்தின்சாற்றை
வற்றவற்ற விட்டுரவி தனில்நாளெட்டு
வார்த்ததிலே தலைசுருளி மேனிச்சாறும்
நித்தநித்தம் வகைக்கொருநா ளூறவைத்து
நெருடிப்பார் தகடுருகி மெழுகுமாமே. (21)

மெழுகதுதா னுலர்ந்தபின்பு பொடியதாக்கி
முக்கடுகுஞ் சீரகமு மிந்துப்பைத்தும்
மெழுகுபோ லரைக்களஞ்சி பற்பந்தன்னை
மிகத்தேனி லுண்டுவரக் குன்மமெட்டும்
பழுவாதம் தீர்பித்தஞ் சூலைபுண்ணும்
பருதிகண்ட பனிபோலா மென்றேயீசன்
மழுவெடுத்தா ரிம்மருந்தி லுண்மைகண்டு
வானவரு மாலயனு மகிழ்ந்தாராமே. (22)



அக்கினி குமாரச் செந்தூரம்.

ஆய்ந்தெடுத்த அரபொடியிற் பழச்சாரிட்டு
அரைத்துநன்றாய் வில்லைதட்டி ரவியில்வைத்து
காய்ந்தபின்பு முன்போலே அரைத்துக்கட்டிக்
காயவைத்து மறுபடியும் முன்போற்செய்து
மாய்ந்தபின்பு தெந்தகத்தைச் சுத்திசெய்து
வளர்பிரண்டை களாக்கொடிச் சாற்றிலூற
தோய்ந்திடவே ரவியிலிட்டுக் காயவைத்துச்
சூதத்தைப் பதங்கித்துத் தூயதாக்கே. (23)

ஆக்கிவைத்துத் தாம்பூரந் தகடாய்ச்செய்து
ஆறிரண்டு அரைச்சதூரக் கள்ளிச்சாற்றில்
போக்கதிலே தகடதனைச் சுத்திசெய்து
பொடியாக்கி மூன்றிலொன்று வர்ணகெந்தி
தாக்கியரை முன்சாற்றில் தகட்டிற்சேர்த்துத்
தண்டாமல் குகையிலிட்டுச் சில்லுமூடி
வாக்கினிய சீலைமண் பெலக்கச்செய்து
வனத்தினொரு வடுக்கியதைப் புடத்தைப்போடே

போட்டிடத்தாம் பூரமது களிப்பற்றுப்பால்
போலாகும் புகழ்ந்திடுமுன் சூதபற்பம்
நாட்டோரு நல்வீரங் கெந்தியாலும்
நாள்மூன்று தாம்பூரப் பற்பத்தோடுங்
கூட்டியரை கல்வத்தில் பழுக்கும்வன்னி
குமரியுட சாற்றினால் நாலுசாமம்
ஆட்டி நன்றாய் மெழுகுபட அரைத்துவாங்கி
ஆதித்தன் ஒளிபடவே தட்டிவையே. (25)

தட்டிவைக்கத் தாளமதின் புரத்தின்மேலே
தளல்பறந்து வெந்துநீ ராகுமித்தைக்
கட்டிவைத்து அனுப்பானந் தன்னிலீயக்
கடினமாங் குன்மங்க ளெட்டுந்தீரும்
முட்டிவிடுஞ் சூலைவகை யாறுந்தீரும்
முதிர்வாய்வு மூன்றில்வரும் பாண்டுபோகும்
குட்டமறும் வாதபித்த மற்றதாலே
கூடிவரும் வியாதிகளுங் குணமதாமே. (26)

சத்திகுன்மம் எட்டுக்கும் அயம்,

காந்தத்தா லெடுத்த அயப் பொடிபலமுப்பத்து
கனகதிறம் போல நிம்பக் கனிநால்பத்து
சேர்ந்திருக்க நால்கித்தாய்ப் பிளந்துவைத்துத்
தினமுமொன்று தானருந்து தோலைநீக்கு
மாந்தராய்க் கர்மமது செய்துவந்த
வலிசத்தி குன்மமது வெட்டும்போகும்
பூந்தஅரி முனிவர்களு மெய்த்துக்கொள்வார்
புகலாதே யாவருக்கும் புதுமையாமே. (27)

நாக பற்பம்.

இலுப்பைநெய்யிற் சாரத்தைப் பொடித்துத்தூவி
இருபத்தோர் தரமுருக்கிச் சாய்த்தநாகம்
வலுத்துநிற்குஞ் சட்டிதனி லிட்டுருக்கி
வாகாகக் கொடிக்கள்ளி மரத்தின்கீழே
பழுத்துதிர்ந்த சருகெடுத்து முச்சாமந்தான்
பாங்காக வருத்தெடுத்துப் பொடித்துநன்றாய்
செலுத்திடவே கள்ளியுட சருகைச்சுட்டுச்
சிறப்பாக நீர்விட்டுத் தெளியவாங்கே. (28)

தேறியே தெளிந்தநீர் வார்த்தரைத்துத்
திரட்டியே குக்குடத்திற் களிப்பு நீங்கும்
நீரினிலே வெளுப்பாகு மட்டும்போடு
நிகழ்த்தியதோ ரனுப்பானத் துடனேயீய்ந்தால்
கூறியிடு மேகங்க ளிருபத்தொன்றுள்
குட்டங்கள் பதினெட்டுங் குன்மமெட்டும்
மாறிவிடும் வாதமென்ற ரோகமெல்லாம்
மகிமைபெற உடலிருகி வாலையாமே. (29)

தாம்பூரப் பற்பம்.

சுத்தமுள்ள தாம்பூரந் தகடாய்த்தட்டிச்
சூடனையும் பொடித்திட்டு நொச்சிச்சாற்றில்
பத்துதரங் காய்ச்சித்தோய் பிரண்டைச்சாற்றில்
பதினைன்றும் புளியாரைக் கிழங்கு மோரில்



சுத்தமறக் காய்ச்சித்தோய் கசடு நீங்கும்
கூட்டுவது கெந்தியது நாலத்தொன்று
வைத்தரைவல் லரைச்சார் தகட்டிற் பூசி
வாய்மூடிக் கனைக்கவொரு புடத்தைப் போடே.

போட்டெடுக்கப் பற்பமதா முன்சாற் றாலே
புகட்டியரை புடந்தோறுங் கசடு நீங்கி
காட்டுவது நீலவர்ண மடங்கிற் றானல்
கனகமென்ற பற்பமிது அனுப்பானத்துள்
கூட்டியிடு ஈரேழு நாற்றி யெட்டாய்க்
கூறுகின்ற வியாதியெல்லாங் குடிவிட்டோடும்
மீட்டிவிடுந் திரிநாடி நோய்களெல்லாம்
வீணர்கட்கும் வாழ்வுதரும் பதிவு மாமே. (31)

சதுர்முகப் பற்பம்.

காரீயந் தாம்பூரம் நாகம் வங்கம்
கசடறுத்துச் சமனுக்கிக் கனல் மேலிட்டு
பாரியதி லுருக்கியதோ சிலையுந்தூவிப்
பருங்காரண்டி யிட்டதனை வறுத்துக்கிண்டி
ஆரியபின் னெடுத்துகுழிக் கல்வத்திட்டு
அருக்கன்பால் விட்டரைத்துப் புடமாறிட்டு
வேரினிய வச்சிராங்கிப் பால்விட்டாட்டி
விரைந்துமே மூவேழு புடமும்போடே. (32)

போட்டெடுத்துக் கல்வத்திற் பொடியாய்ச்செய்து
பொட்டிவெல்லத் தனுப்பானத் துடனேயீய்ந்தா
மூட்டியபின் னிருவினைகள் முன்னேவந்து
முடிந்ததென்று முன்னோர்கள் எழுதிவைத்த
எட்டிலுள்ள அஷ்டகுன்ம முடனே நீங்கும்
எளிதாக யிம்மருந்தைப் பத்தியுண்ணை
ஓட்டிவிக்குந் திருவுளமே யென்றுநோக்கி
உறுதிபெற வினையக்லு முண்மையாமே. (33)

திரிவங்க கற்பம்.

திரிவங்கம் பலமூன்று சுத்தி செய்து
திடமான அயக்காரண்டி தன்னி விட்டு
அரிவுடனே உருக்குமுகந் தன்னி லேதான்
அடைவான பொற்றலையை யிடைநேரிட்டு

விரிவாகக் கிண்டிடவே பொரிந்துதாளாம்
  விதமாக வெடுத்துமே கல்வத்திட்டு
நேரிபெறவே பொற்றலையின் சாற்றுலாட்டி
  நிலைவரமாய் மூன்றுபுடம் போட்டிடாயே. (34)

போட்டிடவே செந்தூர மாகும்பாரு
  போக்கோடே அனுப்பானத் துடனேகொள்ள
நாட்டிலுள்ள வியாதியெல்லாங் காணுதோடும்
  நபியுண்ட கற்பமிது நானுங்கொண்டேன்
கேட்டபேர்க் கெல்லாந்தான் சொல்லவேண்டாம்
  கேலியாய் வைத்தியத்தைச் செய்யவேண்டாம்
பாட்டிலே ஆராய்ந்து பாகமாகப்
  பதிவாகச் செய்தாக்காற் பலனுமாமே. (35)

குன்மத்திற்கு உப்புக்கட்டு.

கல்லுப்புச் சோரனுமே சமமாய்ச்சேர்த்துக்
  கல்லுரலி லிட்டிடித்துக் கலையத்திட்டு
சில்லிட்டு மூடியதைப் புடத்தைப்போடு
  தீயாத்தி நீலகண்ட யிலைச்சாற்றுலே
மெல்லியதா யரைத்துருட்டிக் காயவைத்து
  மென்றுதின்ன மருந்துவிசை ஆறுநாள்தான்
சொல்லுகின்ற அஷ்டகுன்ம மெல்லாந்தீருஞ்
  சோதனையா யருந்துமுன்னில் சொஸ்தமாமே.

தாம்பிர பற்பம்.

சுத்தித்த தாம்பூரந் தகடு தாக்கிச்
  சொல்லுகின்ற புரசுலர்த்திச் சுட்ட சாம்பல்
மத்திக்கும் பிரண்டைச்சார் தகட்டிற்பூசி
  வாய்குவிந்த குகையிலிட்டுச் சில்லு மூடி
மெத்தித்துப் புடம்போடப் பற்பமாகும்
  விசையற்று அனுப்பானந் துடனேயீய
சத்தித்து வருங்குன்ம மெல்லாந்தீரும்
  சத்தியமா யிம்மருந்தைச் சாற்றினேனே. (37)



மேகவெள்ளைக்கு லேகியம்.

ஆகுவா கனன்மெச்சுஞ் சாருதன்னில்
  அவ்விடைக்கு ஆவின்நெய் விட்டுநன்றாய்
வாகுபெறக் கற்கண்டு ரெட்டிப்பிட்டு
  மத்திக்க வெண்ணெய்போல் வலுத்துநிற்கும்
மேகுமே முப்போதுண் மாங்காய்வீதம்
  மேகமறும் வெட்டைநிற்கும் சுருக்கல் போகும்
ஏகுமே கதிர்கண்ட பனிபோலாகும்
  எடுத்துரைத்தேன் யாகோபு யினியவாறே. (38)

அஷ்ட குன்ம சதுர்முகச் சூரணம்.

தேத்தாவின் வேர்த்தோலும் ஐவிரலி வித்துஞ்
  சிறுநாக விரையுடனே அருக்கன்வேர்ப்பட்டை
ஏத்தியே சமபாகந் தூளாய்ச்செய்து
  இருநேரந் தேனில்வெரு கடியுமுண்ண
பத்தியுடன் மண்டலத்தில் அஷ்டகுன்மம்
  பறந்துவிடு மிம்மருந்தி னுண்மைகண்டு
சுத்தமதாய்ப் பொசிப்புமிக உண்ணச்செய்து
  சுகம்ளிக்கும் பத்தியங்கள் பிடிக்கத்தானே. (39)

குன்மத்திற்கு.

கல்லுப்பும் புண்ணாக்கு மிரும்பின்கிட்டங்
  கருவாக வகைக்குச்சம னாகச்சேர்த்து
நல்லவெலு மிச்சஞ்சார் படிநாலுக்குள்
  நாலிலொன்று கற்றாழைச் சாறுங்கூட்டி
மெல்லியதா யரைத்ததனை உலர்த்திக்கொண்டு
  மேவியே அயத்தாம்பிரம் நாகங்கூட்டி
துல்லியதேன் அனுப்பானத் துடனேஉண்ண
  துடர்ந்தஅஷ்ட குன்மங்கள் தொலைந்துபோமே

மகோதரத்திற்கு கடுக்காய்த் திராவகம்.

வரிக்கடுக்காய்த் தோல்குருணி யிரும்பின்கிட்டம்
  வராகனெட்டு சாரம்வெடி யுப்புரெட்டி
கரியபிள்ளை ஆட்டமுரி பதக்குவிட்டுக்
  கத்தரித்துப் பச்சைப்பனை யோலைபோட்டு

இரவியிரு நாள்வைத்து வாலையேற்றி
இறக்கியே திராவகத்தை யுண்டாராகுல்
பெருவயிறு விஷபாகம் மகோதரங்கள்
பேர்ந்தகலும் பத்தியங்கள் பிடிக்கத்தானே. (41)

சேம்பின் பற்பம்.

செம்பினுட் அரபொடியும் பலமுமெட்டு
செலுத்தியடிப் பாண்டத்தி னுள்ளேயிட்டுக்
கொம்புபாகல் இலைச்சாரில் பதக்குவிட்டுக்
கொட்டியே தீயெரிப்பாய் கமல்ம்போலே
கெம்பியே சாருவற்றிச் சாம்பலாகும்
கிண்டியரை கல்வத்திற் சாருவிட்டு
தம்பமரை வில்லைதட்டிக் காயவைத்துத்
தனி அகலி லிட்டுப்புடம் பத்துபோடே. (42)

பத்தியுட னூரவிட்டுக் கல்வத்திட்டுப்
பண்டரைத்த சாற்றிலே அரைத்துவில்லை
பெத்தபெரும் புடம்போடக் கசடு நீங்கும்
பேணியதை யனுப்பானத் துடனேயீயச்
சத்திவலி வாதபித்த மயக்கத்தாலே
சார்ந்துவரும் அஷ்டகுன்மஞ் சூலைவாய்வு
சுத்தமாய்ப் போக்கிவைக்கும் ஒளிவெங்காயஞ்
சுகப்படுத்தும் யார்க்குமிதைத் திறந்திடாதே (43)

விரைவாதத்திற்கு.

கருநூலில் சேராநின் பாலையூட்டிக்
கட்டுகொண்டை சதைநடுவே மறுநாள்தன்னில்
அரைநாளே தவிர்த்தவிழ்க்க ரணமுமாகும்
ஆவிநெய்யில் வேப்பின் தூள் அரைத்துக்காய்ச்சி
உருவாகக் கடுகளவு மெழுகுதானும்
ஊட்டியரை களிம்பாகும் உலரும்புண்கள்
விரைவாத மகலுமென்று யாகோபுதானும்
விளம்பினே னென்பேரு விளங்கத்தானே. (44)



சுவாச காசத்திற்கு

புண்டரீகக் கொழுப்புதன்னை யுருக்கநெய்யாம்
போடதிலே கிராம்புரெண்டு பலமுள்ளாக்கி
கிண்டிவரச் சலியாமல் ரவியில்வைத்துக்
கிளறியே லவங்கமதி லிட்டுநெய்யை
உண்டபின்பு உலர்த்தியதைத் தினமோரெட்டு
உண்டிடவே கீழ்சுவாச ரோகமெல்லாம்
தெண்டனிட்டு ஓடுமடா பொய்யாதொன்றுஞ்
செப்பினேன் யாகோபு திறமைதானே. (45)

சேங்கோட்டை வல்லாதி.

சேராநின் கொட்டைபடி நாலுவாங்கிச்
செம்மையாய்ப் புகையிலைச்சார் தன்னிற்போட்டு
வீரதுதா னடங்கவே வைத்துக்கொண்டு
வீதமாகக் கல்லூரலி லிட்டுப்பின்பு
தாரெள்ளு துருசு அரபொடியெட்டிட்டுத்
தாக்கியே திரிகடுகு ஓமங்கூட்டி
பாராளுங் கொத்தமல்லி. நெல்லிமுள்ளி
பதிவாக வகைக்கு அரைப் பலமும்போடே. (46)

போட்டுமே கல்லூரலிற் கடினமாகப்
பூராகத் தானரைத்துச் சீனியிட்டு
தாட்டுமே நெய்விட்டுப் பானைதன்னில்
நலமாக அடைத்துமண் டலமேயுண்ண
காட்டில்களி மேகமுதல் விஷங்கள்போகும்
கனமான நரைதிரைகள் சூலைப்புண்கள்
தேட்டுமே போகும்யாகோபுசொன்னேன்
கிருபையுள்ள அவிழ்தமிது செய்துபாரே. (47)

கிராணிக்குச் சூரணம்.

நாறும்பூ பலமாறு விளங்கமூன்று
நாட்டுவாய் கொடிவேலிப் பட்டையொன்றும்
வேறுவினை தீரதிரி கடுகுஒன்று
வியன்படவே நிறுத்துவறு பொடியைத்தேனில்

திரும்வினை தீரென்று உண்ணக்கிராணி
தீரமான சில்விஷங்கள் தடிப்புமேகம்
ஆறுபொழுதுண்டிடவே சகலரோகம்
அணுகாது யாகோபு அறைந்திட்டேனே. (48)

சுவாச காசத்திற்கு.

காரைவேராதண்டை வேரும்நேராய்க்
கண்டித்து யிருதூக்குக் கிசாயமிட்டு
நீரதனை வடித்துப்பின் குழம்பதாக்கி
நிறுத்துமே கிராம்புரெண்டு பலமுமிட்டு
ஊறியபின் குழம்புடனே அரைத்துஉண்டை
உருட்டியுண்ண வருகுன்மஞ் சுவாசகாசந்
தீருமென்று யாகோபு சொன்னேனித்தைச்
ஜெகத்திலெந்தன் பேர்விளங்கச் செப்பினேனே

நீர்க்கட்டுக்கு.

வெடியுப்புச் சேரரையில் நாழிதண்ணீர்
விட்டுஒரு சட்டிதனிற் கரைத்து நீருள்
நடுவிலிடு பத்துமொந்தை தண்ணீர்தன்னில்
நாழிவிட்டுச் சட்டிநீரதிற்சேராமல்
அடிபடவு மொந்தைதான் சுழற்றி நீருள்
அமுழ்த்திவைத்துக் கடிகையைந்து மொந்தைநீ[ரை
கொடுமிதனை நீர்க்கட்டுக் குணமாமென்று
கூறினர் யாகோபு குணமாய்த்தானே. (50)

வெடியுப்பு எண்ணெய் கழற்ற.

பொட்டிலுப்புப் படியொன்று சட்டிமீது
பின்போட்ட படிநாலு ஊற்றுபாணி
கட்டளையாய் அடுப்பேற்றிப் படியாய்க்காய்ச்சிக்
கனிந்துமே கண்ணடைந்த சிலைதன்னை
வட்டமிட்டு பதிநாலாய் மடித்திருக்க
வளமாக உப்பிலெண்ணெய் துணியில் நிற்கும்
இட்டமுடன் உப்பதுவுங் கம்பியாகும்
இனிஉப்பு யாகோபு யிதஞ்சொன்னரே. (51)



படைராஜன் உப்பதனைச் சாக்கிரேடே
பாய்ச்சிடவே சாக்கதுதான் கட்டிப்போகும்
விடையேறும் ஈசனவர் சொன்னஉப்பை
மேதினியோர் காணாமல் விழிப்பார்பாரு
கடைபார்த்து வாங்கிவந்து எண்ணம்பண்ணிக்
கட்டிடுவார் வேதையிதிற் காணார்வாதி
இடையாள பச்சையுப்பால் வேதையர்மோ
இனிதாக யாகோபு யிதஞ்சொன்னாரே. (52)

தருவங்கச் செந்தூரம்.

கடினமாந் தலையான வெடியுப்புத்தான்
கரண்டிதனில் வைத்துருக்கி யாதிரட்டிப்
படியாகப் போட்டுருக்கப் பற்பமாகும்
பதிவாகக் கரண்டியினால் தேய்க்கச்சுண்ணாம்
தொடிதனிலே யெடுத்துமே கல்வத்திலிட்டு
நூன்முறையாய்த் தானரைத்து ரவியிற்காய்த்து
படினமாய் மாளமட்டும் புடந்தைப்போடு
பண்பான செந்தூர மாகுந்தானே. (53)

தேனிலிடு நோயெல்லாந் தெரிந்துப்போகும்
ஜெயமாக ரவியிலிடு தங்கமாகும்
வாளிலிடு வையகத்தில் பிறைத்துக்கொள்வோர்
வடிவான வங்கச்செந் தூரம்பண்ணு
நாளிலத்தி லெனைப்போலார் விளக்கச்சொன்னார்
நாடியே யிந்தவங்கம் நிசமதாகும்
தாளிலேயாய் நின்றவிடம் யாகோபுசொன்னார்
நாஷ்டிகமாய் [illegible] தழுவிப்பாரே. (54)

நாசிக்கட்டு.

சோரனாது பலமொன்று [illegible]
[illegible] வைத்துருக்கி [illegible]
பாரமுடன் பொற்சிலையை [illegible]
பதிவாகக் [illegible] டவே உருத்துப்போகும்

நேரமதா யெடுத்தரைத்து வில்லைதட்டி
நின்றநிரை வளையலுப்பைக் கவசங்கட்டி
வாரமதாய்ப் புடம்போடக் கட்டிப்போகும்
வகைசொன்னார் யாகோபு வளமைதானே. (55)

புடம்போட்டுக் கவசத்தைத் தள்ளிப்போட்டுப்
பொருளாக எட்டில்ரெண்டு சாரஞ்சேர்த்து
நடமாகச் சேர்த்தரைத்து உருக்கிப்பார்க்க
நாகமது முத்துப்போல் மணியுமாகும்
வடமான மணியிடைக்கு ஏமங்கூட்டி
வகையான ரவிபத்தி லொன்றுதாக்கி
திட்மான தங்கமாம் யாகோபுசொன்னார்
தீர்க்கமதைக் கண்டுகொள்ளத் திறமையாமே.(56)

துருசுச் சுண்ணம்.

வங்கத்தைக் கரண்டிதனி லுருக்கிக்கொண்டு
வாகான பொற்றலையைப் பாதியிட்டு
இங்கிதமா யுருக்கிடவே ரெண்டுஞ்சேர்ந்து
இதமாக உருகும்பா ரதிலே நீலன்
சங்கையறத் தோய்ந்தெடுப்பாய் சுண்ணம்வீரந்
தனையங்கி யறைத்து நீலனுக்குக்கட்டி
வெங்கனலிற் புடம்போடச் சுண்ணமாகும்
விபரமதா யாகோபு விளம்பினாரே. (57)

துருசினுட சுண்ணத்தா லிரதங்கட்டித்
துடியான பரஷாண மெல்லாங்கட்டி
வரிசையாய் வேதைமுகந் தெரியப்பார்த்தேன்
வகையான யென்பேர்யா கோபுவென்றார்
பரிசனத்தை உங்களுக்குத் தெரியச்சொன்னேன்
பாதையிது கண்டறிந்து பதிவாய்ச்செய்வாய்
உரிசையா யெழுநூறும் யென்னூல்தன்னில்
உற்றுமே பார்த்தாக்காற் சித்தியாமே. (58)



விந்துகட்ட.

கல்லாய்ந்த திலந்தானே பிடியுமொன்று
கையடங்கத் தானெடுத்துப் பாணியோடே
நல்லாநீ மென்றுதின்பாய் படுக்கும்போது
நலமாய்மண் டலத்தில்மணி யிறுகிக்கட்டும்
பொல்லாத சகலரோகம் மேகம்போகும்
புகலாதே யெவர்க்குமிதைப் புலன்சொல்லாதே
செல்லாத விடங்களிலே சென்றிடாதே
செப்பினார் யாகோபு திறமிதாமே. (59)

கைகா லெரிவுக்கு.

பூனையது வணங்கியிலை பலமோபத்து
புகல்கருத்த சீரகமவ் விடையேசேர்த்து
பானுவிலே காயவைத்துப் பொடியாய்ப்பண்ணிப்
பதிவான சருக்கரையும் பாதிசேர்த்து
தேனையதி னுடனிட்டுப் பத்துமேழு
தினமுண்ண மெய்யினுட யெரிவுநீங்கும்
ஞானமிகும் புத்தியுண்டு கன்மந்தீரும்
நலமான யாகோபு நவின்றார்தானே. (60)

தாகண்டாக.

நீர்முள்ளி தட்டிடையாம் வித்துவாங்கி
நெருங்கிநின்ற கதலிப்பழம் பிதுக்கியொன்று
சோதில்முன் விரைகூட்டிப் பனியில்வைத்துச்
சென்றெடுத்து எழுநாள் தினம்முண்ணு
நாரியரைச் சேராதே புளியாகாது
நலந்தருகும் விந்திருகி மணியாய்க்கட்டும்
காரியமா யாகோபு சொன்னாரிந்தக்
காசினியில் மானிடர்க்குக் கருத்துவைத்தே. (61)

கேந்திதைலம்.

கசடறுத்த கெந்தகமும் பலமும்நாலு
காசிகுப்பி தனிலெரிக்கக் கரிபோலேறும்
உசரயெடுத் தெருக்கிலையின் பழுப்புச்சாற்றை
ஊட்டியே வற்றவற்ற ரவியில்வைத்து

பிசிரிடவே நாற்பதுநாள் தைலமாகும்
பெலமாகும் அனுப்பானத் துடனேயீந்தால்
தரையில்வரு ரோகமெல்லாங் குணமாமென்று
சாற்றினர் யாகோபு தாமாய்த்தானே. (62)

ரசகேந்தித் தைலம்.

அரைகுதஞ் சத்தியுட னாதஞ்சேர்த்து
அதைஅரை நீ சாமமொன்று வீரிப்பாலால்
அரைக்கவது கரிபோலே தூளாய் நிற்கும்
ஆனமையா மெருக்கினுட பழுப்புங்கூட்டி
நிரையாகக் குழித்தைலம் வாங்கிநேரே
நேர்மையா யனுப்பானத் துடனேகொள்ள
வரமான நோய்களெல்லா மகன்றுபோகும்
வண்மையாம் யாகோபு வளஞ்சொன்னரே. (63)

பெருவாயன் பாலரைக்கால் தயிலஞ்சொட்டு
பிசிருதைக் காலமே கொண்டுநித்தம்
ஒருபொழுது ஏழுநாள் கொடுத்தாயானல்
உறைந்துநின்ற உட்காய்ச்சில் ரெத்தகாசம்
குறையான சயரோகம் சுவாசகாசம்
குணமாயிம் மருந்தைமுக் காலுங்கொள்ளு
பறையாதே பெருமைதனைக் காட்டாதேபார்
மறைவிது யாகோபு பகர்ந்திட்டாரே. (64)

மலஜலக் கட்டுக்கு.

காட்டினுட ஆமணக்கு யெண்ணெய்வாங்கிக்
கசடகற்றி வச்சிரப்பால் விட்டுக்காய்ச்சி
நீட்டுமுன்னே நீர்க்கட்டு மலக்கட்டோடும்
நேரமது ரெம்பவுந்தான் பேதியானல்
மாட்டிடுவா யாவின்பா லதனையுண்ண
வகைகுணமாம் பேதியது வளமாய்நிற்கும்
கூட்டிடுவாய் மலக்கட்டுக் கிதுவேயாதி
குணமாகும் யாகோபு குறித்தார்பாரே. (65)



ஆருத புண்ணுக்கு.

சுரைவிரையின் பருப்புஒரு சேருவாங்கிச்
சூடனுடன் பெருவாய் நீர் தெளித்தரைத்து
அரைத்ததனில் நீர்வார்க்க யெண்ணெய்கக்கும்
அத்தயிலஞ் சீசாவி லடைத்துக்கொண்டு
புரைப்புண்ணில் தயிலமிட்டுக் குளித்துவந்தால்
பொய்யாது தும்மல்பீ னிசங்கள்தீரும்
சிரசினுள்ள ரோகமெல்லாம் கடலேபுக்கும்
செப்பினர் யாகோபு திறமைதானே. (66)

தலையிடிக்குத் தைலம்

பேய்ச்சுரையின் காயைக்கல் லுரலிலிட்டுப்
பிசகாம லொருசேரு யிடித்துநன்றாய்
தாச்சிபடி யெண்ணெயிட் டெரித்துமூழ்கு
தப்பாது பீனிசங்கள் மண்டைக்குத்து
நோய்ச்சடலம் நீர்பாய்ச்சல் போகும்போகும்
நுவலுமுன்னே சிரசிலுள்ள புண்கள்தீரும்
வாச்சபடி புளிதள்ளு பிணிகள் நீங்கும்
வலுமையாம் யாகோபு வழுத்தினரே. (67)

திராச் சுண்ணம்.

நாலிக்கந் தனையெடுத்துத் தகடாய்த்தட்டி
நாறும்பூ தனையரைத்து எருக்கம்பாலால்
வாலிக்க யிதைமேலே கவசங்கட்டி
வகையாக ஒருபுடத்தில் கருப்பதாகும்
பாலிக்கப் பப்பாளிப் பாலைவிட்டு
பதறாமல் அரைத்துமைப்போற் காயவைத்து
நீலிக்கப் புடம்போடச் சுண்ணமாகும்
நிலையாக யாகோபு நிசஞ்சொன்னரே. (68)

தாம்பூரப் பற்பம்:

சுத்தித்த தாம்பூரந் தகடாய்த்தட்டிச்
சூட்சமுள்ள பெரியோர்களுண் ணுங்கற்பம்
சித்திக்கப் புடம்போடு கனக்கவெந்து
திருநீறு போல்வெண்மை நிறமாய்ப்பால்

மத்தித்து அனுப்பானத் துடன்கொடுக்க
வாயுவென்ற ரோகமொடு குன்மம்போகும்
சித்தத்தில் கருணைவைத்து உலகத்தோர்க்குச்
செப்பினர் யாகோபு திறமைதானே. (69)

பாஷாண பற்பம்.

சொல்லடங்கா வெள்ளைப்பா ஷாணம்நாலு
சுண்ணாம்பிற் சுத்திசெய்து கழுவிக்கட்டி
முள்ளங்கிச் சாருவிட்டு மூன்றுசாமம்
முறுகாம லெரித்துப்பின் கல்வத்திட்டு
துல்லியவெள் ளுள்ளிச்சார் முள்ளங்கிச்சார்
தொடர்ந்தரைத்து நாலாநாள் குப்பிக்கேற்றி
மெல்லினமாய் வாலுகையி லெரித்துவாங்கி
மிளகளவாய்க் கொள்ளபல வியாதிபோமே.

வங்கச் செந்தூரம்.

கன்னிகையை யறுத்துமிடு கடுக்காய்த்தூளைக்
காட்டிடவே ஜலமாகும் கருவங்கத்தைச்
சென்னீரி லரைத்துஐந்து புடமும்போடச்
செந்தூர மாம்வங்கம் நாலிலொன்று
வன்னிகெற்பம் வாழ்மடந்தை சேர்த்துமூன்றும்
வாய்த்தபுட மிட்டுரவி நூற்றுக்கொன்று
உன்னிதமாய்க் கொடுத்துருக்க யேமதாகும்
உறுதியா யாகோபு உரைசெய்தாரே. (71)

பாறையுப்புக் கட்டு

உத்துயெடு பாறையுப்பு இடையேபண்ணை
உண்மையாய்ப் பழச்சாரு விட்டரைத்து
பத்துவிசை சிடத்திலிட்டு எரிக்கவேணும்
பதிவாக மேற்படியுஞ் சேர்த்தரைத்து
சந்துபட வில்லைதட்டிக் காயவைத்துச்
சதுராக மேனியிலை அங்கிபூட்டி
தத்துவமாய்ப் புடமூன்று மிட்டுருக்கச்
சாதகமாய்க் கரிக்குடியா உப்புமாமே. (72)



மெழுகுத் திராவகம்.

வெண்மெழுகு கல்லுப்பு வகைக்குச்சேரு
வெள்ளையென்ற பாஷாணம் பலங்காலாக
வண்மையுட னிடித்துரவாய்க் கிடத்திலேற்றி
வாலையிட்டுத் தீயெரித்துப் புகைநீர்வாங்கித்
துன்மைதரும் வாதமென்ற ரோகமெல்லாந்
தோணவே குணமாகுஞ் சொரிசிரங்கு
வண்மையுருஞ் சிலையாறும் ரணங்களாறும்
மனமகிழ்ந்து யிம்முறையை மருவிப்பாரே. (73)

சேங்கொட்டைத் திராவகம்.

சேரிரண்டு சேங்கொட்டை யிடித்துச்சாலில்
ஜெலம்பதக்கு விட்டதையும் கலந்துமூடி
ஊரியநாள் ரெண்டதன்பின் வாலைவைத்து
உற்பனமா யெரித்துவிடில் திராவகத்தை
சீராக வாங்கியிதைக் குப்பியிட்டுத்
தினங்கொண்டால் வாதபித்தயெரிவுசோபம்
நீரழிவு வயிற்றிரைச்சல் நீங்காத்தாகம்
நிறுத்துமென்று யாகோபு நிசஞ்சொன்னாரே

சந்தனத் திராவகம்.

சந்தனமும் வெட்டிவேர் ஏலஞ்சோம்பு
சமனிடித்துப் பொடியாக்கிச் சாலிலிட்டு
சிந்திவிடும் நீர்பதக்கு இருநாளூறில்
செலுத்திவிடு வாலுகையில் திராவகத்தை
கந்தர்பச்சைக் கற்பூரம் பொடித்துப்போடு
காசிகுப்பி தனிலடைத்து உண்டாயானால்
விந்திருகிக் குளிர்ந்துவிடுந் தாபசோபம்
வெதுப்படங்கித்த லுடம்பு வலுக்குந்தானே

புத்தூத் திராவகம்.

வரகுவைக்கோல் தனில்வெல்லந் தெளித்துக்கட்டி
வந்தடையும் ஈயுமொரு பட்சம்பின்பு
திரகுழியில் மூடியிட்டு நீர்தெளித்து
திரிதினத்தில் முளைகிளம்பும் புதிறுவென்று

தருகியதைத் தெளித்து நீர்ப் பதக்குச்சாலில்
தணலேற்றி வாலையிட்டுத் திராவகத்தைப்
பருகஉண்ட அன்னம் சீரணமதாகும்
பசியெடுக்கும் வாதமறும் பலிதமாமே. (76)

அமுரித் திராவகம்.

சடத்தினுட அமுரிபடி யெட்டுவாங்கிச்
சரியான கிடமிட்டு வாலைமூடித்
திடத்துடனே யெரிக்கப்புகை முறிந்து நீராம்
திறமான அமுரியது முறிந்துதானால்
விடத்தினுட பூநீரை யெண்ணெய்வாங்கும்
விதமான வாதமது ஏவலாகும்
துடக்கறுத்துத் துருசுசுண்ண மீரும்பாரு
சுகமாக யாகோபு சொல்லினேனே. (77)

காவட்டம்புல் திராவகம்.

காவட்டம் புற்கதிரை யிடித்துத் தூளாய்க்
கனமான கிடத்தில் நீர் மிதக்கவிட்டு
ஆவட்டம் பதமாக ரவியிலிட்டு
ஆறுநாள் சென்றபின்பு வாலைமூட்டி
தீவட்ட மிறங்குகின்ற திராவகத்தில்
தினமந்தி சந்தியுண்ண வாதங்கிராணி
நாவட்டஞ் செய்யாது சயமும்போகும்
நயந்தருமே தீபனமும் நாடிப்பாரே. (78)

ஓமத் திராவகம்.

பொட்டலையி னிடையோமம் சமமாய்ச்சேர்த்துப்
பொடியாக்கிச் சட்டியிட்டுத் தணிதண்ணீர்
விட்டுதிரி நாளூறி வாலைவைத்து
விதமாக யெரிக்கவருந் திராவகத்தைக்
கொட்டமென்ற மேருவிட்டுக் கொண்டாயானால்
குன்மமுதல் வாதமய்யங் கிராணிநீங்கும்
உட்டணத்தால் வந்ததொரு சூலைபோகும்
உளம்பெருக உண்ணவைக்கு முண்மைதானே.



மிளகுத் திராவகம்.

கன்மிளகு அரைத்தூக்கு உடைத்துமூந் நீர்
கலந்திருநா ளூறியபின் காய்ச்சக்கேளு
இன்பமுடன் வாலையிட்டுப் புகைநீர்வாங்கு
இதையெடுத்து யிருகாசு யிடை நீகொண்டால்
துன்பமுதல் வாதபித்த சயமுந்தீரும்
துடர்பிணியும் வாராமல் சுகமதாக்கும்
முன்புவந்த ரோகமெல்லாம் நீங்கிப்போகும்
விதித்தபிணி யகற்றிவிடும் விளங்கும்பாரே.

சுண்டை வற்றல் திராவகம்.

சுண்டைவற்றல் மாம்பருப்பு கருவேப்பிலைகூட
சுக்கோமம் நெல்லிக்காய் வற்றல்தானும்
பண்டைவெந் தயமோடு வகைக்குச்சேரு
பாவகமாய் வார்த்தெருமைப் பாலாலாட்டிச்
கண்டுதயிர் மிதக்கவிட்டுத் திரிநாளூறில்
கனமான வாலையிட்டுப் புகைநீர்வாங்கி
உண்டால்நீ கிராணியெல்லாங் கடலேபுக்கும்
உற்றுணர்ந்து யாகோபு உரைத்தார்தாமே. (81)

உள்ளித் திராவகம்.

உள்ளிபலம் பத்துமுக் கண்ணன்றனை
உடைத்துகிட மிட்டுநீர் பிடித்துச்சாலில்
தள்ளியிடு மூன்றரைநாள் கழிந்தபின்பு
தனையெடுத்துக் கிடமிட்டு வாலைமூடித்
துள்ளிபுகை நீர்வாங்கி யுண்ணக்கிராணி
துடியான கழிச்சலது ரெத்தக்கிராணி
தள்ளிவிடு மலஜலங்க ளெல்லாம்போகும்
தனைக்கண்டு யாகோபு சாற்றினாரே. (82)

பெருங்காயத் திராவகம்.

பெருங்காயஞ் சேரொன்று உரலிலிட்டுப்
போரான கருப்பட்டி யிடைசேரிட்டு
தருங்காமல் பாணியது மிதக்கவிட்டுத்
தன்மையாய் ஆறரைநா ளூறவைத்துச்

சுருங்காமல் வாலையென்ற சட்டிமூடிச்
சுருக்கமாய்ப் புகைநீரை வாங்கிக்குப்பி
பருங்காம லடைத்துண்ணக் கிராணியெல்லாம்
பாதைநடந் தேகிவிடும் பார்த்திடீரே. (83)

திரிகடுகுத் திராவகம்.

திரிகடுகு ஏலஞ்சி ரகமும்ஓமம்
சேர்நிறை வகைக்கொன்று அம்மியிட்டுக்
குரிமடியப் பொடியாக்கிச் சாலிலிட்டுப்
குற்றமறப் பாணியது மிதக்கவிட்டுப்
பரிவாகத் திரிநாளில் வாலைமூடிப்
பக்குவமாய்ப் புகைநீரை வாங்கி நீயும்
பிரியமுடன் கொண்டுவர உஷ்ணவாய்வு
பேசரிய சயமிருமல் போகுந்தானே. (84)

தென்னங்கள்ளுத் திராவகம்.

தென்னைமரக் கள்பதக்குச் சாலிலிட்டுத்
திட்டமதா யாறுதின மானபின்பு
நன்னயமாய்ப் புகைநீரை வாங்கிக்கொண்டு
நலமான தாளகந்தான் களஞ்சிபோட்டு
முன்னதுபோற் புகைநீரை வாங்கியுண்ணு
மூன்றுநாள் புளிதள்ளி யுண்ணுஉண்ணு
சொன்னபடி சயங்களெட்டுந் தீருமென்று
சுருக்கமா யாகோபு உரைத்திட்டேனே. (85)

திரிபலாதி திராவகம்.

பெருகயெடு திரிபலையை வகைக்குச்சேரு
பேசரிய திரிகடுகு உரலிலிட்டு
வருகபடி பாணியது மிதக்கவிட்டு
வண்மையாய் மூன்றுநாள் தானுமூறிப்
பருகஅடை வாலையிட்டுப் புகைநீர்வாங்கிப்
பக்குவமாய் நாளாறு கொண்டுபாரு
தருகவருஞ் சிலேட்டுமத்தின் காசம்போகும்
தாட்டிகமா யாகோபு தான்சொன்னரே. (86)



கல்லுப்புத் திராவகம்.

கல்லுப்புச் சேரெடுத்து இஞ்சிச்சாரு
கனக்கவிட்டுப் பாண்டத்திற் றிரிநாளூறிற்
மெல்லவே வாலையென்ற சட்டிமூடி
மெதுவாகத் தீயெரித்துப் புகைநீர்வாங்கிச்
செல்லரெண்டு நாளதுவுங் கொண்டாயானல்
சென்மமுள்ள குன்மமெட்டும் கடலேபுக்கும்
நல்லபெரு வாழ்வுதரும் யாகோபுசொன்னர்
நாட்டிலே யென்வசனம் நன்மைதேரே. (87)

தேரவே சாரமொன்று எட்டிலொன்று
சேர்த்திடு நீ சூதமது படியோன்பத்து
காரமது ரெண்டுபத்து ஐந்துஞ்சேர்த்துக்
கனக்கயிடி வாலைதனிற் புகைநீர்வாங்கிக்
கோரமதாய்ச் செம்புருக்கி யதிலேசாய்க்கக்
குற்றமறுந் தூட்டிடைதான் உண்டுதேரு
பாரமில்லை பித்தகுன்மம் வாய்வுபோகும்
பாக்கியவான் யாகோபு பலன்சொன்னரே. (88)

சரக்குகள் கட்டத் திராவகம்.

படைராஜன் பலம்பத்து வளையம்நேராய்ப்
பார்த்துயிடி வாலைதனி லடைத்து நீரைக்
கடைநீரைப் பிடித்ததனில் சூதப்போடக்
கரைந்துபோம் முன்போலே புகைநீர்வாங்கு
விடையாகச் சரக்கெல்லாந் தோய்த்துத்தோய்த்து
விதமாக ரவியிலிட வெந்து நீறும்
சடையாமற் சொன்னதிந்தப் புதுமைதன்னைத்
தாட்டிகவான் யாகோபு தான்கண்டேனே. (89)

லிங்கப் பதங்கம்

பதங்கலிங்கம் பலம்பத்து கல்வத்திட்டு
பார்த்துஅரை சூதத்தின் புகைநீராலே
விதமாக அரைத்துவில்லை ரவியில் வைத்து
வெற்றிபெறக் கட்டத்திலிட்டு எரித்துக்கொள்ளு

நிதமாக அடியில்நிற்கும் பற்பந்தன்னை
நேராகக் கொண்டுவர அஷ்டகுன்மம்
அதமாக யேகிவிடும் நசையெல்லாம்போம்
ஆதியுரை யாகோபு அறைந்தார்தானே. (90)

அரிதார பற்பம்.

மடலினிய அரிதாரங் கல்வத்திட்டு
மயமான யெருக்கலம்பால் தன்னாலேழு
புடமினிய தினமரைத்துக் கதிரில் வைத்துப்
போட்டெடுநீ வில்லைபுடம் காடையாக
நிடமினிய நீறுகும் பணமவ்வீதஞ்
செல்லஉண்ணச் சயகாசஞ் கடிகள்போகும்
படமினிய கடல்புக்கும் யாகோபு சொன்னார்
பார்த்திடவே தாரபற்பம் பலிதமாமே. (91)

சுவாசகாசங்களுக்கு.

சாதுவாய் யாய்ந்துணர்ந்து வல்லோர் சொன்ன
சாஸ்திரத்தில் மனதுணர்ந்து புவியின்மீதில்
வாதுதவி கொண்டதொரு தேற்றான்வித்து
வளமான ஆவின்பா லுடனரைத்து
மாதுதய காலமதி லுண்ண நித்தம்
வாதசயத் தாலெழுந்த சுவாசகாசஞ்
சீதமுள இருமலுமே செவியிற்கேட்டால்
தெண்டனிட்டுப் போமெனவே செப்பினாரே.

கடுகு லேகியம்.

செப்பியதோர் கடுகுவொரு சேருவாங்கித்
திரண்டிருக்குங் கற்கண்டு சேருரெண்டு
அப்பதனிற் பாகாக்கி அருள்மூன்னாக
அரைத்துநன்றாய்க் கிண்டியதைத் தேனுமிட்டு
துப்புறவாய்க் கிண்டியுண்ண மந்தாரகாசம்
சுவாசத்தின் காசங்க ளோடிப்போகும்
ஒப்புரவாய்த் திருமென்று யாகோபுசொன்னார்
உரைக்கொண்ணாக் கைகண்ட சூட்சந்தானே.



நீர் கட்டுக்கு

ஒலித்திட்ட ஒளிதனிலேம் பூதத்தாலே
உடலெடுத்த வினையதனா லடர்ந்தரோகம்
வலித்திட்டு அடிவயிற்றிற் சலத்தைக்கட்டி
வாணஉப்புச் சாரமிரு வகையுவாங்கி
பலித்திட்ட மருந்துரைப்பேன் பரையாதெங்கும்
பாணியுமே நாழி கருத்தப்பச்சை
கொலித்திட்டு காய்ச்சியிரு காரவுப்புக்
கூட்டியுண்ண நீர்க்கட்டுக் குணமதாமே.

அயச்செந்தூரம்.

காடிதெளித் துதியந்தோல் சாறுவாங்கிக்
கல்லாய்ந்த அரபொடியில் மிதக்கவிட்டு
சாடியே ரயில்வைத்துச் சுவறமட்டும்
சாருவிட்டு மூன்றுநா ளானபின்பு
கூடிநின்ற முன்சாற்றி லரைத்தரைத்துக்
குளத்துமுட்டை பெரும்புடமா எட்டுந்தீர்த்து
போடந்தத் தண்ணீரா லரைத்து நீயும்
புடம்போட மாதுளம்பூ நிறம்போலாமே. (95)

ஆமிதனை அனுப்பானத் துடனேயீய
அரும்பிணிகள் வாதபித்தம் ஐயத்தாலே
தேமம்வரும் அனேகமா ரோகமெல்லாம்
நீங்கிதிரி நாடிகளு முறுக்குமேறும்
காமசலம் பெருகிவிந் திறுகிக்கட்டும்
கண்கள்சிவப் பேறியே வீரஞ்செய்யும்
தாமரைப்பூ மணக்கும்வெகு தீரமாகும்
சடலமுமே மாந்தளிர்போல் மின்னுந்தானே (96)

வீக்கத்திற்குஞ், சூலைக்கட்டுக்குங் குழம்பு.

பாதிரிவேர்ப் பட்டைதனைப் பாலிற்கொள்ளப்
பத்தியமாங் காய்ப்பருப்புப் பத்துநாளும்
வாதமறுங் கெற்பத்தாற் கணுக்கள் வீங்கி
வருத்தமிகுஞ் சுரோணிதங்கள் மேகங்கொண்டு

சூதமுண்டு கைகால்கள் முடக்குநீங்கச்
சுருக்கெனவே குத்துகின்ற சூலைநோய்கள்
நீதகலும் பத்தியமா யுண்டாயானால்
செயமாங்கை கண்டிது செப்பினேனே. (97)

சகல மேகத்திற்குஞ் சூரணம்.

நற்பரங்கிப் பட்டையது சேருரெண்டு
நன்றாகப் பொடிபண்ணிச் செப்பிற்செய்த
சிற்பரையைப் பூசியதிற் பொடியைப்போட்டுத்
தீயெரித்து மதுவுரெண்டு படிதான்வார்த்து
உற்பனமா யகலிலிட்டுச் சீலைசெய்து
உறவதுவாய்ப் பூமிபுடமெட்டு நாள்தான்
கற்பமதைத் திறந்தெடுத்து வைத்துக்கொண்டு
காய்ந்துயிரு நேரமரைப்பலமேகொள்ளே.(98)

கொள்ளையிலே மேகங்கள் கைக்கருப்பு
குணமாகும் ரணங்கிரந்தி காலின்புத்து
விள்ளுமிந்த ரோகமெல்லாங் குணமதாகும்
மெய்யுடலைச் சுகப்படுத்தும் விசையதாக்கும்
அள்ளியுண்ட ரசவேகங் கைக்கடுப்பு
ஆருத ரணங்கிரந்தி அண்டப்புத்து
விள்ளுமிந்த வியாதியது சொஸ்தமாகும்
வேதாந்த யாகோபு விளம்பினேனே. (99)

அருநெல்லித் திராவகம்.

பச்சையரு நெல்லியிஞ்சித் தான்றியோடு
பாவகமா யிடித்ததனைப் பாண்டத்திட்டு
இச்சையுடன் ரெண்டுபடி தண்ணீர்விட்டு
இதயாகத் திரிநாள்தா னூறவைத்து
உச்சிதமாய் வாலையிட்டுப் புகைநீர்வாங்கி
உணர்வாகத் திரிகடுகிற் கொள்வீராகில்
நிச்சயமாய்ச் சயமீளைப்பு காசம்போகும்
நிர்ணயமாய் யாகோபு நிசஞ்சொன்னாரே. (100)



தாம்பிரப் பற்பம்

கசடறுத்த தாம்பிரத்தைத் தகடாய்த்தட்டிக்
கனிந்தயெலு மிச்சஞ்சார் கல்வத்திட்டு
வசமாக நாலும்நாள் அரைத்துப்பூசி
வளமாகப் பெரும்புடத்தில் வெட்டையாகும்
பிசகாம லிந்தவெட்டைப் பலம்நிறுத்துப்
பின்புஎடை நாகஞ்சேர் சூதந்தன்னைத்
தசநாளில் முன்னீரானால் அரைத்துக்கொள்ளத்
தாட்டிகமா யாகோபு எழுதினாரே. (101)

காரியதனைத் தானெடுத்துக் கல்வந்தன்னிற்
கனமாகப் பொடியாக்கிச் சொல்லக்கேளு
பிரிவாக முக்கடுகு அந்திசந்தி
போட்டரைத்துக் கழஞ்சுபற்பம் விரவிலுண்ணச்
சரியாகுங் குன்மமெட்டும் சூலைரோகம்
சணத்திலே பானுகண்ட பனிபோலாகும்
பெரியோர்கள் சொன்னதிந்த நேர்மைதானும்
பேசினேன் யாகோபு பெருமைதானே. (102)

ஈளைகாசத்துக்குக் குழித்தைலம்.

நாயுருவி முற்றினதாய் நறுக்கிமிக்க
நற்பசுவின் கோமயத்திற் போட்டுப்பாண்டம்
வாயிலிட்டுப் பூப்புடத்திற் றயிலம்வாங்கி
வைத்ததனை வெற்றிலையில் மென்றுதின்ன
நோயில்பெரு மந்தார சுவாசகாசம்
நானுக்கிருமல் யீளைகண்டத் துடிப்புநீங்கும்
காயமதைப் பலக்கவைக்குஞ் சித்தர்சொன்னார்.
கருணையிது தப்பாது கண்டுதேறே. (103)

மூலக்கிராணிக்கு லேகியம்

பெருமரத்தின் பட்டையது தூக்குரெண்டு
பெலத்தவட்டத் திருப்பிவேர் அதனிற்பாதி
கருகருக்க வறுத்திடித்துக் கஷாயமிட்டுக்
கர்ய்ச்சிவடி கட்டிவெல்லம் அதிற்கலந்து

திரிகடுகு நடுநீக்கி யேலங்கிராம்பு
சீரகமுஞ் சங்கிலைத்தோல் சிறுநாகப்பூ
வரிமருவுங் குரோசானி விடையம்போடு
மணியபினி பத்திரியுஞ் சாதிக்காயே. (104)

காயிதுகள் வறுத்திடித்துப் பாகுதன்னிற்
கலந்துமே வெள்ளாட்டு நெய்சேர்போடு
தீயெரித்துக் காசிடைதா னுண்ணவேதான்
சீமூலங் கிராணியுட கடுப்புமாறும்
நோயகலுங் கோதில்லாக் கிராணியெல்லாம்
நூணுக்குமல மிறங்குமுன்னே ரத்தஞ்சாய்தல்
வாயுமிந்த சிலேத்துமத்தின் பேதி நீக்கி
வைக்குமிதைப் புகலாதே சாற்றக்கேளே. (105)

சாற்றக்கே ளனுப்பானத் துடனேயியச்
சன்னிசுரம் அபஸ்மாரம் குன்மஞ்சூலை
மூத்திரத்தின் கிரிச்சனங்கள் மேகதாகம்
மூலமுதல் வாதமெண் பத்துநாலு
சேத்துமங்கள் காய்ச்சலுறல் வயிற்றில்ரோகஞ்
சில்விஷங்கள் குஷ்டமகா ரோகமெல்லாம்
காற்றடிமுன் பஞ்சதுபோல் பறக்கும்நோய்கள்
கைகண்ட பாகமிது கருதிப்பாரே. (106)

நாகசேந்தூரம்.

சுத்திசெய்த நாகமது உருகும்போது
துளசியுட கொம்புகளைத் துணித்துயிட்டு
மத்திக்க யிருசாமம் பற்பமாகும்
வாங்கியதைக் கல்வமிட்டு குமரிச்சாற்றைக்
குத்தியரை புடமைந்து தாக்கிப்போடு
நூறிப்பாய்ப்பின் னதனைச்சம் பழச்சாற்றிலே
பத்தெட்டுப் புடம்போடச் செந்தூரிக்கும்
பரிந்தெடுத்து அனுப்பானந் தன்னிலீயே. (107)

இய்யவே மண்டலத்திற் குன்மமெட்டும்
ஏகிவிடுங் கருநாகச் செந்தூரந்தான்
அய்யமொடு வாதபித்த மதனால்வந்த
ஆயிரத்தெட் டாம்பிணிக ளகலநீங்கும்



நய்யுமுடல் தாதுவிர்த்தி காயசித்தி
நவில்தேகம் வீரமிகச் செலுத்திவைக்கும்
மெய்யிதுதான் கட்டியிதைச் செந்தூரத்தால்
வேதைமிகத் தருங்குணத்தின் மேன்மைபாரே

செவி நோய்க்கு வடத்திராவகம்.

வடம்பத்து வளையமது நாலூருகும்
வண்மைபெறக் கல்லுரலி லிட்டுத்தூளாய்
குடமடைத்து வாலையென்ற சட்டிமூடிக்
குப்பிவைத்துக் கடைநீரை வாங்கிக்கொண்டு
திடமினிய யிந்நீர்துட் டிடையேதூக்கித்
திறமான அபினிதான் கழஞ்சுகூட்டி
செடமான செவியிலிடு யிரண்டுநாளாஞ்
செப்பினார் யாகோபு திறமையாமே. (109)

அடுத்துநின்ற காதுச்சீ பாய்ச்சலோடும்
அழிவான செவிடுசெவிக் குத்தல்போகும்
படுத்துவிடுங் கிருமியொடு நாற்றம்பாய்ச்சல்
பதிவான ரணமாறும் பாரிலோர்க்குக்
கொடுத்துவிடு காற்றுமுன்னே பஞ்சுபோலாம்
குணமாகுங் கதிர்கண்ட பனிபோலாகும்
எடுத்துவிடும் எரிச்சல்நிற்கும் இன்பமாகும்
எழுதினார் முன்னோர்க ளிதமாய்த்தானே. (110)

கவுசை மகோதரத்திற்கு.

ஆட்டமுரி சேரரையாங் கடுக்காய் பத்து
அதையரைத்துத் திரிநாளு முண்டுபாரு
வாட்டுகின்ற மகோதரங்கள் ஆம்பற்கட்டி
வயிற்றுவலி பெருவயிறு குன்மச்சூலை
காட்டுமுன்னே பறந்தோடுங் கடலேபுக்கும்
கருத்துணர்ந்தோ ரிதுகண்டு உண்டுகொள்வார்
எட்டதனில் முன்னோர்க ளெழுதிவைத்த
இயல்பதனை யாகோபு யெழுதினாரே. (111)

திருசுச் செம்புவேதை

கசடறுத்த சத்தியது பலமும்பத்து
 கனிநிம்பச் சாற்றினாற் சாமமாட்டி
பிசகாமற் கண்டாவித் தகட்டிற்பூசிப்
 பின்புஅதை நொறுங்க மட்டும் புடமூன்றிட்டு
வசமாகக் குகையிலிட்டு வண்டில் கூட்டி
 வன்மைபெறச் சேர்த்தரைத்து உருக்கச்சத்தாம்
நசமாகுஞ் சத்தினிட பெருமைதன்னைத்
 தாஷ்டிகமா யாகோபு சாற்றினாரே. (112)

சத்துநிறம் வெங்கலம்போற் றானேதோணுஞ்
 சத்துடைத்துச் சுடர்தன்னைப் பாதிசேர்த்து
வெத்திபெற முன்சாற்றால் சத்தையாட்டு
 விரும்பியே வில்லைதட்டிக் கதிரில்வைத்து
நித்தியமாய்ச் சிவக்கமட்டும் புடத்தைப்போடு
 நினைவாக மதியெட்டி லிரண்டுசேரு
வித்திடவே மாற்றதுவும் எட்டுமாகும்
 வேதாந்த யாகோபு விளக்கமாமே. (113)

அடுத்துநின்ற திருசுக்குள் செம்பைக்கொண்டு
 அடைவாகச் சத்தாக்கி உருக்கிக்கொள்ளு
படுத்துநின்ற செம்பெடுத்து மதியினுள்ளே
 பாய்ச்சிடவே ஏமமாம் பாரிலோர்க்கு
உடுத்துமே கண்டரது செம்புதானும்
 உறுதியாய் மாளாட்டால் ஏமமில்லை
கொடுக்கத்தான் களிம்பாகும் குணமுமில்லை
 கூறினார் யாகோபு துயரம்போமே. (114)

திருசுச் செம்புச் செந்தூரம்.

துயரந்தான் போவதற்குச் செய்பு ஏமம்
 தூக்கியிடை யுருக்கியே தகடடித்து
நயமாகச் சத்தியுடன் சினஞ்சேர்த்து
 நாடியரை முன்னீரா லரைத்துஅப்பிப்
பயமாகப் புடம்போட்டு நொறுக்கிக்கொண்டு
 பரிவாகப் பாதிசுடர் சேர்த்தரைத்துச்
செயமாகப் புடம்போடச் செந்தூரிக்கும்
 செழுமைபெற யாகோபு செப்பினாரே. (115)



செப்பியதோர் செந்தூரந் தன்னையெடுத்துச்
 செயமாக மதியெட்டில் சேண்டுதாக்கு
ஒப்பாகுஞ் சாயமுள்ள ஏமமாகும்
 உற்றுணர்ந்தால் கருத்தோனும் உறுதியாகும்
தப்பில்லை பாகமதைக் கண்டுதேறில்
 தாழ்ச்சியில்லை மெய்விளங்குந் தரணியோர்க்கு
முப்பொழுதும் ஆகுமென்று யாகோபு சொன்னார்
 முற்றுணர்ந்த பாகமுமா முறுதிதானே. (116)

விஷப்பாண்டு வீக்கத்திற்கு

இருப்பூநா கப்பூச்சி உடைத்துஆய்ந்து
 இருக்கிறதைப் பார்த்தெடுத்துப் பழச்சார்விட்டு
அரைப்பதுநீ மைபோலே நீர்மேல்நிற்க
 அதையெடுத்து அனுப்பானத் துடனேயீய
உரைப்பதுகேள் குன்மங்கா மாலைசோகை
 உடல்வெளுப்பு மாறிமிக ஒளிந்துதானும்
திறப்படுமே நாடி தசை யிறுகியேறுந்
 திரிதோஷ வினையகலுந் திடமாங்கானே. (117)

காணுமிக் குணங்களினி யிதனைமுந்திக்
 காடியிள நீர்தன்னா லரைத்துமுட்டை
பேணியதிற் புடமாறு தீர்ந்தபின்பு
 பின்னதனின் பாலதனா லரைத்துப்போடு
சேணிறமாய்ச் சிவக்குமட்டுந் துடர்ந்துபோடு
 சிவப்பாகச் செந்தூர மாகும்பாரு
வேளைபடி யனுப்பானத் துடனேயுண்டால்
 விஷப்பாண்டு சோகைமுதல் விலகுந்தானே (118)

காரியச் செந்தூரம்.

காரீயம் மேரண்டத் தயிலம்வாங்கிக்
 காட்டெருமைச் சாணத்தின் பாலிற்சேர்த்து
ஆரியபின் னுருக்கியெழு தரமுஞ்சாய்த்து
 அடிகனத்த சட்டிதனி லுருக்கும்போது
கூறும்அம்மன் பச்சரிசி போட்டுக்கிண்டு
 குங்குமத்தின் நிறமாகுஞ் சாமமூன்றில்

சேரிதற்குள் படிக்காரம் பலங்கால்போட்டுச்
செந்தூர மாகுமட்டுஞ் சாமமாட்டே. (119)

மாட்டியபின் ரவியிலிட்டுச் செந்தூரத்தை
வகையாகக் கல்வத்தில் அகத்திச்சாற்றால்
ஆட்டியபின் நீர்விட்டு மிதக்கத்தேத்தி
அகத்திநீர் மூன்றுதா மானபின்பு
காட்டிரவி காந்திதனிற் காயவைத்துக்
கருதியே அனுப்பானத் துடனேயிய
நாட்டிலே மானிடர்க்குச் சலரோகங்கள்
நன்மையுடன் தீர்த்துவிடும் நம்பிச்செய்யே(120)

அயச்செந்தூரம்.

அரபொடியைக் காந்தத்தா லாய்ந்துகொண்டு
ஐயிரண்டு பலமதற்குச் சாரமொன்று
இரட்டிப்பாய்த் தயிர்கலந்து காடிதானும்
இட்டுசட்டி மேல்மூடிச் சீலைசெய்து
உரியிலிட்டு மண்டலஞ்சென் றெடுத்துப்பாரு
உரைத்திருக்குஞ் செந்தூரம் நீரின்மேலே
பரவாட்டால் முன்தயிரிற் பாதிகூட்டிப்
பத்துரெண்டு நாள்நிறுத்திப் பண்பாய்வாங்கே

வாங்கியதைப் பொடி நன்றாய்க் கல்வந்தன்னில்
வைத்திறுத்திக் கொண்டதனை வாட்டக்கேளு
மூங்கிவித்து ஆவாரை வித்துச்சூர்ணம்
மூன்றுபங்கி லொருபங்கு செந்தூரமிட்டு
தீங்கருந்தேன் நெய்வெண்ணெய் தன்னிற்கொள்ளத்
திருவுளத்தி னுதவியினால் சகலரோகம்
நீங்கிவிடும் மெய்யெரிவு சலரோகங்கள்
நேர்மையுடன் யாகோபு சொன்னார்பாரே. (122)

உப்புச்செந்தூரம்.

பாருப்பு தன்னையறிந்து வாங்கிக்கல்வம்
பாய்ச்சியரை மேனிச்சார் புடமூன்றிட்டால்
சேருப்பு சிவப்பாகச் செந்தூரிக்கும்
சிவப்பான சாதிலிங்கஞ் சமனாய்ச்சேர்த்துச்



சாருவிட்டு உமிப்புடத்திற் போட்டுவாங்கிச்
சமமாக பணவிடையே தேனிற்கொள்ளத்
திருமதுமூலமதிற் சீதக்கிராணி
திடமாக யாகோபு செப்பினாரே. (123)

தாம்பூரகாந்தச் செந்தூரம்.

தாம்பூரங் காந்தம்ரெண்டும் பொடியதாக்கிச்
சமன்சேர்த்து வாய்குவித்த கலையத்தேத்தி
நீம்பநிம்பப் பழச்சாறு மிதக்கவிட்டு
நீங்காமற் சில்லிட்டுச் சீலைசெய்து
மேம்பாடாய் நெற்குழியின் நடுவேவைத்து
மெத்திட்டுச் சாக்கதனை நிழலிவிட்டுப்
போம்படியே மண்டலஞ்சென் றெடுத்துப்பார்க்கப்
புட்டுப்போற் செந்தூர மாகுந்தானே. (124)

ஆமிதனைப் பொடித்துநன்றாய்ப் பதனஞ்செய்து
அனுப்பான விதத்தில்நீ யீந்தாயானால்
போம்வினையுந் தீர்ந்துவிடும் வாதருலை
பொல்லாத குன்மமெட்டும் மேகவாய்வும்
திமையுமம் பீஜண்ட வாதவீக்கஞ்
சேருகட்டுங் குடல்வாத மெல்லாம்போகும்
மாமுனிவ ரெடுத்துரைத்த செந்தூரத்தை
வழுத்தினார் யாகோபு மகிமைபாரே. (125)

அன்னபேதிச் செந்தூரம்.

வடதிசையிற் பிறந்துவந்த அன்னபேதி
வாங்கி ஒரு சேருதன்னைப் பழச்சார்விட்டுக்
குடக்கல்லி லரைத்துவட்டிக் காயவைத்துக்
குருகவொரு புடம்போடச் செந்தூரிக்கும்
உடலறிந்து அனுப்பானந் தன்னிலீய
உதிரத்திற் பிறந்தமகா குன்மமெட்டும்
விடைபெற்றுக் கொண்டுசெல்லும் மற்றரோகம்
விரைவாக விடுசெலுத்தும் விசையதாமே. (126)

கரியுப்புக் கட்டு.

உருசைதரும் பூவதனைக் கல்வத்திட்டு
உத்தரைமே னிச்சாறு தன்னாற்சாமம்
வருசையாய் வில்லைதட்டிக் கதிரில்வைத்து
வண்மைபெற மூன்றுபுடம் போடக்கட்டும்
துரிதமுடன் பலமொன்று சத்தியொன்று
சூழமுன் னிடைபதங்க ரசமுஞ்சேர்த்துப்
பிரியமுட னிருசாமம் மேனிச்சாற்றால்
பேசாதே யரையென்றார் பெரியோர்தானே. 127

கண்டர் சத்து.

அரைத்துகுன்றி போலளவு நிழலுலர்த்தி
அதையெடுத்துப் புறம்பாக வைத்துக்கொண்டு
புரைத்துகண்டர் செம்பெடுத்து அனலிற்காய்ச்சிப்
புதுக்குகையி லிட்டுருக்கிப் பின்புகேளு
குரைத்துமே ஒவ்வொன்றாய்க் கிராசமிட்டால்
கூட்டியுண் ணுஞ் சத்தாகும் சத்திற்றானும்
பரைத்துவண்டிற் கல்வத்தி லரைத்துருக்கப்
பரிவான வெள்ளையாம் பாரிலோர்க்கே. (128)

வெள்ளையென்ற சத்தில்நின்ற மெண்ணெய்வாங்க
விளம்புகிறே னதிற்களஞ்சி பாதியிட்டு
உள்ளபடி கல்வமிட்டு முன்சார்விட்டு
உத்தரைத்து வில்லைதட்டிக் கதிரில்வைத்தே
துள்ளமுன்போல் பெரியபுடம் போட்டெடுக்கத்
துப்பறவாஞ் செந்தூரம் முருக்கம்பூவால்
கொள்ளையதில் வாதமென்று யாகோபுசொன்னார்
கூர்ந்துறைத்தே னென்பேரு விளங்கத்தானே

விளங்கவே மதிபத்தி லொன்றுதாக்க
மேலான தங்கமாம் பாரிலோர்க்கு
பழங்கதைபோற் பேசாதே செய்துகொண்டு
பாரிலே உண்டுடுத்தி ஞானம்பாரு
களங்கமறச் சொல்லிவிட்டேன் கருத்தாய்ப்பாரு
கண்டதைநீ யொருவருக்குங் காட்டொண்ணாது



உளங்குளிர்ந்து யாகோபு சொன்னநீதி
உறுதியது சத்தியமா யுற்றுப்பாரே. (130)

உற்றுமே உப்பதிலே கண்டாலேமம்
உறுதியாம் வேதைமுகங் கலங்காமற்பார்
சித்திகளும் மெத்தவுண்டு கர்மிக்கர்கா
செகமதனிற் பாரமில்லை தோய்ந்துபாரு
முத்திபெறும் முந்நூறில் களங்குசொன்னேன்
முடியளவுஞ் சோதித்துச் சித்திபெற்று
சத்துகளைப் பார்த்துணர்ந்து யாகோபுசொன்னேன்
சகலசித்துங் கைவசமாய்த் தாக்கிப்பாரே. (131)

செம்பிற்கிராசம்.

பதங்கரசம் பலமொன்று அடியில்நின்ற
பதிந்தஉப்பு முன்னிடையாந் தேவியொன்று
இதம்படவே மேனிச்சார் தன்னாலாட்டி
எந்திசையும் புகழ்கடலைப் பிரமாணந்தான்
அதம்படவே அரைத்துரவி காயவைத்து
அதையெடுத்து ரவியுருக்கி இடைக்கிரெட்டி
பதம்படவே கிராசமிடச் சத்தாய் நிற்கும்
பாரினிலே யாகோபு பகர்ந்திட்டாரே. (132)

மதித்தசத்தை உடைத்திடு நீ வெட்டைவெள்ளை
மதிமயக்க மெண்ணெய்தனை வாங்கக்கேளு
விதித்தவிதி படியிட்டஞ் சத்துநின்றால்
விதமான ஆலாத்தி தன்னைவாங்கி
உதித்தபடி பாதியிட்டு முன்னீராலாட்டி
உத்தெடுத்துப் புடமிடவே பவளம்போலாம்
மதித்தபடி பொன்னாகும் மயங்கவேண்டாம்
மதிதலத்தில் யாகோபு வசனித்தாரே. (133)

பண்டுமெதி யிருபத்து உருக்கிக்கொண்டு
பத்தியுடன் திருவுளத்தை நோக்கிப்பின்பு
கண்டுகொடு செந்தூரம் ரெண்டதாகும்
கலங்காம லதைவாங்கிப் பழுக்குங்கண்டீர்

தொண்டுபடு மிதைவித்துச் செலவுசெய்து
தொக்கவே உண்டுடுத்தித் தொழிலைப்பாரு
கண்டுநீல முழுதுபயி ரிட்டாப்போலாம்
கருணையுடன் யாகோபு காட்டினாரே. (13

அரிதாரச்செம்பு

சுத்தமுள்ள வாள்மடந்தை கல்வத்திட்டு
சூட்சமுள்ள பதங்கரசக் குருவும்நேராம்
பத்தவிழும் நிம்பச்சார் சாமம்நாலு
பகரும்போ தரைத்த உண்டை கடலைபோலாட
வித்தகமாய்க் கதிரில்வைத்து எடுத்துக்கொள்ளு
வீதமிடை கண்டரவி யுருக்கித்தாக்கு
சித்தமுள்ள சத்தாகு மென்றுதானுஞ்
செப்பினார் யாகோபு திரமைதானே. (135)

திரமையாய் வண்டிலது காலுங்கூட்டிச்
சேர்த்தரைத்து உருக்கியெடு துய்யான்போலாம்
வரமருளு மிச்சத்தி லீயம்போக்க
வலுவான செம்பர்கும் வழுத்தக்கேளு
திரமருளும் சித்தருட ரூபிபாதி
சீர்பெறவே கன்னியர்பால் தன்னாலாட்டி
உரம்படவே வில்லைதட்டிப் புடத்தைப்போட
உத்தசிவப் பாகுமென்று உரைத்திட்டாரே. (136

சொன்னபடி மதிபத்துக் கொன்றேயிட்டால்
சோதியுள்ள யேமபாம் நேர்மைமெத்த
முன்னமே சொன்னதுபோற் காயசித்தி
முடிவாக உண்டுவிட நோயெல்லாம்போம்
கன்னலரி தாரம்பொன் னணியுண்டோ
கனகமய மாய்ச்சொரியுங் காட்டொணாது
இன்னிலத்தி லிருக்கமட்டு முண்ணலாகும்
இக்குணந்தான் யாகோபு யெழுதினாரே. (1

அயச்செந்தூரம்.

காந்தமது இடித்தபொடி பலமும்பத்து
கல்வமிட்டு நிம்பகனிச் சாற்றாலாட்டிச்



சார்ந்தபடி மூன்றுநா ளரைத்துவாங்கிச்
சனகன்மகள் தாள்போற்றிப் புடத்தில்வைக்க
மாந்தகுண மதிற்பிறந்து வெந்துஆறும்
மறுபடியு முன்போலே அரைத்துக்கொண்டு
சேர்ந்தாவி புடத்தில்வைக்கச் சிவப்பதாகும்
சிறந்தசெந் தூரமிதைச் செலுத்தக்கேளே. (138)

செலுத்துமிதை அனுப்பானந் தேகங்கண்டு
தேனிலரைக் காசிடையுந் தின்றுயானால்
பெலத்தமகா ரோகமஷ்ட குன்மமெல்லாம்
பேதலித்து விடைகேட்டுப் பின்கொண்டோடும்
வலுத்தபெல முண்டாகு மிறுகுந்தேகம்
வாதபித்த சிலேட்டுமங்கள் வழங்குந்தேக
பலமான செந்தூர மிதுதானப்பா
பகாரிது தருகும்வெகு பலனைத்தானே. (139)

கல்நார் பற்பம்.

வெற்பதனி லுற்பவித்த கல்நார்தன்னை
வெள்ளையற வெடுத்துவந்து பலமும்நாலு
உற்பனமா யுவர்மண்ணு சுண்ணம்நேரே
உடன்கரைத்துப் பாணிபடி யிட்டுக்காய்ச்சிக்
கற்பனையாய்க் குளம்புபத மிறக்கிவைத்துக்
கல்நார்விட் டரைத்துவில்லை காயவைத்து
சொற்படியே புடத்திலிடு சுண்ணமாகும்
சொல்லரிது யாகோபு சொன்னார்தானே. (140)

மூட்டோடே குலைந்தபல் தன்னிலேதான்
முக்கியமா யதைத் தேய்த்துப் பார்க்குமுன்னே
நாட்டிலே பல்லிறுகித் தந்தவாய்வு
நலமான பற்குத்து அரணையெல்லாம்
காட்டிலிடு கதிர்கண்ட பனிபோலேகும்
காரணமாய்த் தந்தவலி கடலேபுக்கும்
தாட்டிகமாய் யாகோபு சொன்னசொல்லைத்
தன்மையாய் நம்பியிடச் சாந்தமாமே. (141)

சித்தண்டச்சுண்ணம்.

வாரணத்தின் முட்டைதனைப் பத்தெடுத்து
வடிவாக உவர்மண் ணுச் சுண்ணாம்நேரே
காரணமாய்ப் பாணிபடி ரெண்டுவிட்டுக்
கருதியதைக் காய்ச்சிடவே கட்டிப்போகும்
தோரணமா யதையலம்பி மஞ்சள் தள்ளித்
துடியாக அரைத்துரவி காயவைத்துப்
பாரணமா யிதையூதப் பரிவாஞ்சுண்ணம்
பதிவாக யாகோபு பகர்ந்தார்தாமே. (142)

அண்டமதைக் கடுஞ்சுண்ண மாக்கிக்கொண்டு
அடைவான துருசுதனை நிம்பச்சாற்றால்
கண்டுநன்றா யரைத்துருட்டிக் காயவைத்துக்
கனக்காகச் சுண்ணமதைக் கவசங்கட்டிப்
பண்டெனவே புடமிட்டு எடுத்துக்கொண்டு
பண்புள்ள செய்பதனை வெட்டைபண்ணி
விண்டதொரு கண்ணத்தைக் கொடுப்பீராகில்
வினையகலும் எமவித்தை சித்தியாமே. (143)

ஆவரே வேதாந்த சித்தரெல்லாம்
அவனியதில் விளங்கிடவே அருமையாகச்
சீவனுள்ள ஒளிமிகுந்த கனகமென்று
செம்புரவி மதியளவு மாகச்சேர்த்துப்
பூவுலகில் மானிடர்கள் பலருங்கொள்ளப்
போகாத வினைகளெல்லாம் போகும்போகும்
ஆவலுட னிந்தவகை யறிந்துநன்றாய்
அறிந்திடவே யாகோபு அறிவித்தாரே. (144)

அயச்செம்பு.

கருவான அயங்கழஞ்சு நாலெடுத்துக்
காரமது பொரிநிறுத்து நாலுபத்து
உருவாகப் பழச்சாற்றை விட்டுஆட்டி
உண்டபின்பு காயவைத்துப் புடத்தைப்போடத்
திருவாக மைபோலாம் உருக்கியூதத்
திடமான ரவியாகும் அயத்தில்செம்பு



பெருவாழ்வு மிகவுண்டாம் மதியிற்பத்து
பெலமாயொன் றீய்ந்திடவு மேம்மாமே. (145)

ஷை களங்குச் செந்தூரம்.

செம்பெடுத்து நாலிலொன்று ஏமம்நாகம்
சேர்ந்திடவே களங்காகும் களங்கப்நேரே
வம்புசெய்யு மிரதம்சேர்த் தரைத்துநன்றாய்
வகைமேரு வினிலெரிசெந் தூரமாகும்
அம்புவியில் ரவிதனிலே நூற்றெண்டிட்டால்
அடைவான தசமாற்றும் அறிந்துபாரு
தெம்புடைய யாகோபு சொன்னாரித்தத்
திடமான செந்தூரஞ் செய்துபாரே. (146)

வங்கச்செந்தூரம்.

வங்கமது உருக்கையிலே கொத்தமல்லி
வலுவம்மன் பச்சரிசி விஷ்ணுகாந்தி
பங்கமது சாமம்ரெண்டு வருக்கத்தூளாம்
பற்பமதைக் கதலித்தண்டுச் சாற்றாலாட்டி
அங்கியதிற் புடமாறு தீர்ந்தபின்பு
அதைக்குமரி அன்னமிட்டு அரைத்துநான்கு
வெங்கனலிற் புடம்போடத் தோஷம்நீங்கும்
வேண்டியதோ ரனுப்பான விதத்திலீயே. (147)

சேர்க்கையதின் குணங்கேளீர் பத்தோர்மேகம்
சீரியதோர் கவிசைவலி லிங்கப்புத்து
நீர்க்கடுப்பு மணிக்கரைதல் தாதுநஷ்டம்
நீரிழிவு யெலும்புருக்கி அஸ்திமேகம்
மூர்க்கபிர வாதவலி யையத்தாலே
முடியவந்த பிணியகற்றிச் சுகமுண்டாக்கும்
பார்க்கஉடல் தங்கநிற மாகும்மேனி
பத்திவந்த நீரிழிவு பாழதாமே. (148)

வெள்வங்கப் பற்பம்.

வங்கமது சேருருக்கி யெருக்கம்பாலில்
வார்த்தேழு தரஞ்சாய்த்துத் தகடதாக்கி

அங்கதனைக் கத்தரித்து அரசம்பட்டை [து
அடையில்வைத்துப் புடம்போடு அடவாய்ப்பத்
சங்குநிற மாயிருக்கும் அனுப்பானத்திற்
ருனுன்ன மண்டலத்தில் மேகமெல்லாம்
இங்களதைக் கங்குல்கண்ட விதம்போலாக்கும்
திடமான சடலமிது தங்கமாமே. (149)

க்ருவங்கப் பற்பம்.

காரியிடை அப்பிரேகஞ் சமமாய்ச்சேர்த்துக்
கண்டித்துக் கல்வத்தி லிட்டுநீயும்
பாரியல்பாய் எருக்கம்பால் விட்டுச்சாமம்
பத்தாட்டிப் புடம்போடப் பற்பமாகும்
வீரியமாம் பற்பத்தை யனுப்பானத்தில்
மிகவருந்த, நீரிழிவு மேகமெல்லாம்
வாரிதான் வருகின்ற துவாரமெல்லாம்
வளமையா யடைக்குமது வண்மைதானே. (150)

நாகபற்பம்.

கள்ளமதுபோக்கியே நாகந்தன்னைக்
கரண்டிதனில் வைத்துருக்கி அயத்தாற்கிண்டு
உள்ளபடி நீறுமந்த நீறுதன்னை
உற்றெடுத்துக் கல்வமிட்டுக் குமரிச்சாற்றால்
மெள்ளவதை அரைத்துவில்லை கதிரில்வைத்து
மேதினியில் அரசனுட பட்டைமூடி
தள்ளாமற் புடம்போடச் சங்குபோலாம்
தாட்டிகமாய் யாகோபு சாற்றினாரே. (151)

உண்டிடவே பணவிடையா மதுவிலிட்டால்
உறுதிபெற்ற மேகமெல்லா மோடிப்போகும்
பண்டிதர்கள் பிழைக்கவிந்தப் பற்பமாகும்
பானுரைத்த பாகமதை யானுங்கண்டேன்
கண்டபடி எழுநூற்றில் முறையதாகக்
காட்டினேன் சகலருக்குங் கன்மந்திர
தொண்டர் செய்யும் பாகமதாய்ச் செய்துசொள்ளு
தொல்லுலகில் யாகோபு சொன்னவாறே. (152)



வாதசூலைக்கு எண்ணெய்.

கொட்டையெண்ணெய் படியொன்று சட்டியிட்டுக்
குற்றமற்ற ரசபற்பங் கழஞ்சுநாலு
விட்டதிலே வச்சிராங்கிப் பாலைவிட்டு
விதமாகக் கொதிக்கவைத்துக் கடுகைநீக்கி
முட்டுகா சிடையுண்ண வாதரோகம்
முனிந்தோடும் சூலையறும் பித்தம்போகும்
திட்டமதா யாகோபு சொல்லிவைத்த
திரமதைப் பண்டிதர்கள் தெரிந்துதேரே. (153)

அரிதார பற்பம்.

திரைதாரம் பலம்நிறுத்துக் கற்சுண்ணத்துள்
திட்டமாய்த் தாக்கிரட்டி பாணியூற்றி
வரையதனை யெரித்தெடுத்துக் கசடுநீக்கி
வாதைபடக் கல்வமிட்டுத் தில்லைப்பாலால்
அரைத்ததனை யிருசாமம் வில்லைதட்டி
அடைவாகக் காயவைத்துப் புடமுமிட்டால்
நரைபோலே வெளுத்துமது நீறிப்போகும்
நாடறிய யாகோபு நலஞ்சொன்னாரே. (154)

தேனிலிரு பணவிடையுந் தானேகொள்ளத்
தெளிந்திடுங்காண் சயகாச மிருமலீளை
வானிலது பறந்தோடுங் குடிகள்குட்டம்
வன்மைதருஞ் சதையடைப்பு சூலையெல்லாம்
பானுதனிற் காற்றடிக்குங் கொள்கைபோலும்
பகலவனைக் கண்டயிருள் போலாம்நோய்கள்
கூனிநின்ற வாதமது நிமிர்ந்துபோகும்
கூறினார் யாகோபு குணமிதாமே. (155)

சொன்னதொரு லேகியங்கள் கிருதம்எண்ணெய்
சொன்னஅய பற்பமுப் பூவுஞ்சொன்னேன்,
தன்னயமா யுலகிலுள்ள பேர்கள்யாரும்
நல்கியதோர் பிணியகல ஞாலமீது

உன்னவரும் பரப்பிர்மந் தன்னைப்போற்றி
உண்டிடவே பிணிகளெல்லா மற்றுப்போகும்
தன்னிகரில் லாதபடி சூட்சங்கண்டு
சாரதிசெய் பாகமதைச் சாற்றுவேனே. (156)

சுக்கான் துருசுச் சுண்ணம்.

சாரதியைத் தானெடுத்துச் சுண்ணச்சீலை
தாக்கியிடு கதிரில்வைத்துப் பின்பு நீயும்
பார்திலே வங்கத்தைச் சட்டியிட்டுப்
பக்குவமா யுருக்கியிட்டு மூழ்கச்சாமம்
நீரதிலே யெடுத்துப்பின் பார்க்கும்போது
நிஷ்களா னந்தமது கசடு நீங்கும்
வேரதிலே கொக்குநிற மாகுங்கண்டீர்
வேதாந்த யாகோபு விளம்பினாரே. (157)

துருசுக் கட்டு.

விளக்கமறச் சுக்கானை உலையிலிட்டு
வீதமுட னூதிடவே வெந்து நீறும்
துளக்கமதாய்க் காரமிட்டு அரைத்துப்பின்பு
சுத்தித்த கங்காளன் மேலேகட்டு
பளக்கமறப் புடப்போடு கண்டர்கட்டும்
பணவிடைதா னெடுத்திய விராலிதன்னிற்
களக்கமற யிடித்திடவே வரும் நீரொன்று
கருணைபெற யாகோபு காட்டினாரே. (158)

சூதக் களங்கு.

சூதமது காண்டிதனிற் சேருமிட்டுச்
சுடுதணலில் வைத்துவிடு விராலிச்சாறு
பேதமற விட்டெரிக்க வெண்ணெய்போலாம்
பின்புருட்டிச் சுத்தசலந் தன்னிலிட்டுப்
பூதியமாய்ப் புடம்நூறிற் கட்டிநின்று
புகழாகக் கரியில்நின்று மணிபோலாடும்
வாதமிகு விந்திறுகும் கவனமாக
வகையான் யாகோபு வழுத்தினாரே, (159)



திரிலோகப் பற்பம்.

அாசனவன் கரியில்நின் றுருகும்போது
அதிலிடுநீ தாளுக்கு ஒன்று ஏமம்
விரசாக யேமமிடை நாகம்போடு
விரைவிரண்டு மொன்றாகக் களங்கமாகும்
உரவாக நவலோகம் நூற்றுக்கொன்று
உகந்து இடு ஏமமாம் ஒளிவோமெத்த
பர்வசமாய்க் கருத்துவைத்து உலகத்தோர்க்குப்
பாக்கியமாய் யாகோபு பாவித்தாரே. (160)

களங்குதனை யுடைத்துபண விடையின்வீதம்
கனிந்தநறும் பழத்தில்வைத்து உண்ணமேனி
உளங்குளிரச் செவ்வலரி போலாந்தேகம்
உறுதிபெற்ற மலைபோலா முண்மையாகும்
சளனமறும் விந்திறுகும் முறுக்குமேறுஞ்
சரியாக வெப்போறும் பாலன்போலாம்
உளங்குளிர யாகோபு சொல்லிவைத்தார்
உண்மையிது யாவருக்கு முறுதிதானே. (161)

நாகவங்கப் பற்பம்.

நாகமொடு வங்கமதைச் சமனதாக்கி
நலமாக உருகையிலே ஆடாதோடை
சாகவே யிட்டுருக்கிப் பிண்டிப்பற்பம்
சரியாக அஞ்சுபுடந் தாழஞ்சாற்றில்
பாகமா யரைத்துருட்டிக் காயவைத்துப்
பத்திரண்டு புடப்போடப் பதர்பார்வெண்மை
ஆகமட்டும் புடப்போடக் களங்கம் நீங்கும்
அதையெடுத்து அனுப்பானத் துடன் நீஊட்டே.

கூட்டதனைப் பணவிடைதா னுண்ணச்சொல்லு
குணமான மண்டலத்திற் குறுவிர்த்தி
வாட்டமறு கொள்ளாமற் போகந்தானும்
மணியிறுகுந் தாதுவிர்த்தி வளரும்போகம்
சூட்டுமலர்க் குழலாளும் பிரியாள்கூடிற்
சுகமறிந்து புருஷனெனத் தொழுவாள் நித்தம்
பட்டிலினிப் பயன்பிரிக்க அறியாமற்றுன்
பகர்ந்ததினிப் பண்டிதரே பயன்கொள்வீரே. (163)

சூதம் நாகப்பற்பம்.

சுத்தித்த நாகமது கழஞ்சுரெண்டு
சூதமிரு கழஞ்சுரெண்டு சிறக்கநேரே
பத்தித்த நாகமது உருகும்போது
பாய்ச்சதிலே யிருவகையும் பொடியாய்ச்செய்து
மத்தித்து வருக்கம்மன் பச்சரிசியோடு
மாண்டதுவும் பற்பமாம் பணமெடுத்து
நித்தித்த ரஸ்தாளிப் பழத்திலீயத்
திடமாக ஜலரோகந் தீருந்தானே. (164)

கருவங்கப்பற்பம்.

பதங்கரச மிரண்டுவங்கம் ரண்டுங்கூட்டிப்
பாய்ச்சியதை யுருக்கியே கல்வத்திட்டு
ஒதுங்கியே கருமத்தன் குமரிச்சாற்றில்
உகந்தரைத்துக் காய்ந்தபின்பு குப்பிக்கேற்றி
கதங்கிடமாய் வாலுகையி லேற்றிமேலே
கவிழ்த்துசட்டி மண்செய்து அனல்மேலிட்டுத்
தளங்கிளரி யிருபதுநா ழிகையிற்குளும்
தணலாறி யெடுத்துப்பார் தவளமாமே. (165)

தவளமாம் பற்பமதை அனுப்பானத்தில்
தந்திடவும் வாதமுதல் மேகம்போகும்
பவளப்பூ பூத்தமலர் போலதாகும்
பவுத்திரங்க ளாருஞ ரணங்களாறும்
குவடுபுயத் தருகில்நின்ற கண்டமாலை
குணமாகு மிம்மருந்து கொண்டபேர்க்கு
தவநிலைக்கக் குருபதத்தைத் தியானஞ்செய்து
தானீய்வாய் யாகோபு சாற்றினரே. (166)

அரிதாரப் பற்பம்.

மடலினிய அரிதாரஞ் சேரிரண்டு
வளமாகச் சீலையிலே தளரக்கட்டி
விடமறவே சுண்ணமிட்டு வெந்நீர்வாரு
வெந்துநின்ற தனையெடுத்துக் கிழிய்விழ்த்துப்
படவதிலே பதினைந்து தாமும்நீற்றிப்
பதையாமற் புரசுபட்டை பூவின்சாற்றிற்



சுடவதிலே அரைத்திதனை வில்லையாக்கிச்
சுட்டபுளிச் சாம்பலுள்ளே சொருகிவையே (167)

வைத்தெரிக்கக் கமலாக்கினி சாமம்நாலு
வார்த்தெடுத்து முன்சாற்றி லொருநாளாட்டி
உத்தமனே மெழுகதுபோல் நன்குயாட்டி
உலர்த்தி முன்போற் புடமதனைப்போட்டெடுத்து
அத்தவே குமரியின்னஞ் சாமம்நாலு
அரைத்துருட்டிக் காயவைத்து அதைமுன்சாம்பல்
மெத்தியிட்டுக் கீழ்மேலு மோடுமூடி
வேகவினிக் கசபுடமா யேத்திப்போடே. (168)

போட்டதனை வேகாட்டால் தனப்பாலாலே
புகட்டியரை புடப்போடு பூப்போல் நீறும்
காட்டிதனைப் பணவிடைதா னனுப்பானத்திற்
கலந்துண்ணைத் தீருகிற வியாதிகேளு
கூட்டமதாய் ஆயிரத்து எட்டுரோகம்
குணமாகும் புகைச்சலொடு வெளுத்ததேகங்
கேட்டவுடன் நில்லாது சயரோகந்தான்
கீர்த்திபெற்றுக் கையாண்ட முறையீதாமே. ()

நாகபற்பம்.

ரசமுமொரு பலமிடைதான் நாகங்கூட்டி
நன்மையாய் முசுமுசுக்கைச் சாருவிட்டு
இசையாறு சாமமரைத் தகலிலிட்டு
இதமாகக் கோழிமயில் புடமும்போடு
மசியுமதை யனுப்பானத் துடனேயீய
வடிவான மேகமொடு வாதந்தீரும்
தசையில்பெரு வாதமையத் தாலேவந்த
சகலபிணி மிரண்டோடுஞ் சாப்பிட்டோர்க்கே.

ரசகெந்தி மெழுகு.

ரசம்நாலு கெந்தியெட்டு முள்ளங்கிச்சாரில்
நாலுநா ளரைத்துகுப்பிக் கேற்றிமூடி
பசுஞ்சாணிக் குப்பைக்குள் ஆறுமாதம்
பதித்தெடுக்க மெழுகினனுப் பானத்துண்டால்

தசைவாத பித்தமயத் தாலேவந்த
சடத்திலுறும் வியாதியெல்லா மாளுங்கண்டாய்
பிசகாது யிக்குணங்கள் சித்தியாகும்
பெண்கள்மதந் தனையிறக்கும் விந்துதானே. ()

சகலவலிப்புக்குஞ் சுடர்த்தைலம்.

அரிதாரங் கெந்திசிலை நாவிகாயம்
அரையரையாம் பலம்வசம்பு பூண்டுநேரே
பருதியின்பால் விட்டரைத்துத் துணியிலூட்டிப்
பஞ்சென்னெய் குத்திசுடர்த் தைலம்வாங்கிக்
குருகவிதைப் பத்தியமாய்க் கொண்டாயானால்
குடல்வாயு தனுர்வலியுஞ் சன்னிசீதம்
பெருவினைகள் வலிப்புகளும் பச்சைவாதம்
பேர்கேட்டா லோடிப்போம் புகழ்ந்துஉண்ணே.

வலிப்புக்கு நிம்ப யெண்ணெய்.

உண்மையிந்த மருந்தோடே வாளமெட்டு
உதையவன்பால் விட்டரைத்து ஊறிநிம்ப
எண்ணெய்படி யிரண்டதினில் விட்டுக்காய்ச்சி
இதமாக வடித்திட்டுப் பலனைக்கேளு
ஒன்பதுநாட் கொள்ளவுமே சன்னிசீதம்
ஓடிப்போம் இசிவுகளும் விட்டேஏகும்
தன்மையினு லுண்மையிது சொல்லடங்காத்
தாக்கிப்பார் செகந்தனிலே சரியிதாமே. (173)

வாதத்திற்குப் பச்சைவெட்டு

கெந்தியொன்று தாரம்ரெண்டு சூதம்பத்து
கேள்நிம்பச் சாருவிட் டரைத்துருட்டி
தந்திடவே அனுப்பானந் தேனிலுண்ண
தனுர்வாதம் அற்புதத்தின் வாதந்தீரும்
பிந்திசுப கால்கரங்கள் குஷ்டரோகம்
பிடிப்புகளுந் திமிர்வாதம் குதிவாதங்கள்
கந்திருளை விலக்குகின்ற கதிரோன்போலக்
கணையாறுஞ் சுகப்படுத்திக் கார்க்குந்தானே



குஷ்டத்திற்குக் குழித்தைலம்.

அரிதாரஞ் சேரொன்று கிளிஞ்சிச்சுண்ணம்
ஆக்கியதைக் கற்றாழஞ் சாருநிம்பஞ்
சரிசாலை சாரணைச்சார் புரசம்பட்டைக்
கதிரவன்பால் அரசம்பால் எலியாலம்பால்
மறவாம லிரண்டுநா ளரைத்தொவ்வொன்றில்
வைத்தெடுத்துப் பூப்புடத்திற் றைலம்வாங்கி
பறையாம லனுப்பானத் துடனே கொண்டால்
பதினெட்டுக் குட்டமது பறந்துபோமே .(175)

சகல ரோகங்களுக்கும் எண்ணெய்

முத்தெண்ணெய் கணக்களந்து படியுமொன்று
முப்பிரண்டைச் சாருவிட் டொருநாள்மூடி
வைத்தபின் னெடுத்துமே கொதிக்கவைத்து
வடிவாக வாசுகியை அதனிலிட்டுப்
பத்தியெண்ணெய் விட்டிருநாள் கதிரில்வைத்துப்
பதமாக அதையருந்து கடுகைநீக்கி
அத்தனுட மலையெடுத்தோன் நகர்தீயிட்டோன்
அவன்தந்தை சினந்திரும் அறிவீர்தானே. ()

சூலைக்கு எண்ணெய்.

வெங்காயங் கழஞ்சுயிடை எட்டேயாகும்
விளக்கெண்ணெய் ஒருபடியி விட்டுக்கொண்டு
சிங்காரத் தந்திவிதை பலமுமொன்று
சிவவிந்து கற்பூரம் பலமரைக்கால்
பங்கமில்லா தேயரைத்துக் காய்ச்சியுண்டால்
பக்கமுள்ள சூலைவகை யாறுவாதந்
தங்காது குடல்புரட்டல் வாய்வுகுன்மம்
சத்தியமோ தரம்நாலுந் தரியாதென்னே. (177)

தரியாது சுரம்வழலை குஷ்டரோகம்
சகலகுன்மம் யோனிருத்தல் வாதசூலை
ஒருபீஜம் அண்டத்தி னிருவீக்கங்கள்
உள்ளதண்டு சூலைசிறு நீர்க்கடுப்பு

கிரிசனங்கள் சேத்துமங்கள் விஷபாகங்கள்
கெதிகெட்டு ஓடுமடா மேகவாய்வு
விரிவாகுங் கலி நீங்கும் அறிவாயிந்த
விளக்கெண்ணெய் உண்டவர்க்கு ஷிசையுமாமே.

அண்டவாதத்திற்குத் தைலம்

இரையுமெலி யாலின்வேர் பலமூன்று
இடித்துவசம் புள்ளியுங் கஸ்தூரிமஞ்சள்
அரையாகும் பலமுமெண்ணெய் நாழிகூட்டி
அடுப்பேற்றிப் பதமாக வடித்துக்கொண்டு
மறையாமல் தலைக்கிட்டு மூழ்கிவந்தால்
மார்புவலி குன்மமூத் லண்டவாதம்
அறியாமல் வந்தோமென் சடலம்விட்டு
அகலுமிந்தத் தைலத்தி னுண்மைதானே. (179)

குஷ்டத்துக்கு கேந்திச் சுடர்த்தைலம்.

கெந்திபலம் நாலுரசந் தாரஞ்சூடன்
கிளர்வீரம் சிலைவகைக்குப் பலமொன்றாகப்
பந்தமாம் பொட்டிலுப்பு மூன்றுபலங்கூட்டிப்
பசுவின்நெய் விட்டரைத்துத் துணியிற்பூசி
சிந்திடவே சுடர்த்தைலம் வாங்கிநித்தம்
சேர்ந்தவனுப் பானத்தி லுண்டாயானால்
எந்தவித வாய்வுகளுங் கடிகள்குஷ்டம்
இருந்தவிடந் தெரியாம லேகுந்தானே. (180)

வாதசூலைக்குச் சுடர்த்தைலம்.

கெந்திபலம் அஞ்சுவெடி யுப்புமொன்று
கிளர்சாரம் வீரமொரு பலமுங்காலாய்
நந்திபண்ணை யுப்புடனே நாலுங்கூட்டி
நல்லெண்ணெய் விட்டரைத்துத் துணியிலூட்டி
முந்தநெய்யிற் குத்திசுடர்த் தைலம்வாங்கி
முறைக்குமனுப் பானஞ்சர்க் கரையிலேடே
தந்துவிடும் புளிபுகையும் வழக்கமான
சமையல்புலால் கூட்டிநிதந் தானுண்பாயே (181)



சாப்பிடவே மண்டலத்தில் வாதசூலை
தமாகமு முறுசூலை மேகவாய்வு
காப்புடனே புண்கிரந்தி கிரிச்சனங்கள்
கடல்புக்கும் நீரிழிவு நீர்க்கட்டோடும்
நாப்பான முடவாதந் தடித்தகுஷ்டம்
நவிலுமையந் தொந்தமகா ரோகம்நீங்கும்
மூப்பகன்று எவ்வனந் தாதுவிர்த்தி
மூட்டிவிக்கும் சித்தர்சொன்ன மொழியிதாமே.

பீனிசத்துக்குத் தைலம்.

கொல்லன்கோ வைக்கிழங்கின் சாருநாழி
குறித்தகருத் தாட்டுப்பால் எண்ணெய்நாழி
நல்லுள்ளி வசம்புகஸ் தூரிமஞ்சள்
நன்மிளகு வகைக்குப்பலம் நிறுத்துப்போட்டு
சொல்லடுப்பி லெரித்தெடுத்து மூழ்கத்தண்ணீர்
சுடசென்ற பீனிசங்கள் தும்மல்தீரும்
பொல்லாத மந்தார சுவாசகாசம்
போகுமிரு தலைவலிகண் ணெரிவும்போமே.

சூலைபதினெட்டுக்குத் தைலம்.

எள்ளெண்ணெய் படியொன்று பழச்சாறொன்று
இதற்குநேர் தழுதாளை ஆடாதோடை
கள்ளிப்பா லெருக்கன்பால் படியரைக்கால்
கவனித்தொன் றாய்ச்சேர்த்து எரித்துவாங்கி
அள்ளிசிறு கரண்டியெண்ணெய் கொண்டாயானால்
அப்பனே சூலைவகை யெல்லாம் நீங்கிப்
பிள்ளைகளே கதிர்கண்ட பனிபோலாகும்
பெருமைபெற்ற யாகோபு பேசினாரே. (184)

கேற்பசூலைக்கு முன்னைத்தைலம்.

முன்னையிலை வெங்காயம் விளக்கெண்ணெய்
முதிராமற் காய்ச்சிவடி கட்டியுண்ண
கன்னிகெற்பச் சூலைவெட்டை மலமும்நீங்கும்
கண்ணெரிவு நீர்ச்சுருக்கு கைக்கால்குத்தல்

பின்னுமலத் துவாரவழி கடுப்புவீக்கம்
பிரிந்தோடும் நீர்க்குழியின் இரணம்போகும்
பொன்னுருகுங் காரமதைப் பொரித்துக்கூட்டப்
போக்கிவைக்கும் நீரடைப்பு புகழ்ந்துகேளே.

வாதத்திற்குக் கேந்தித் தைலம்.

அண்டமதைப் பொத்தினுட் கருவைப்போக்கி
அரைப்பலமாங் கெந்தகத்தைப் பொடித்துவைத்
கொண்டுகேள் கவுதும்பை யிலைச்சார்கொஞ்சங் [துக்
குத்தியே கீழ்தோலும் புரமுமூடிக்
கண்டமுள்ள துணியாலே கட்டித்தூக்கிக்
கலையத்தெண்ணெயிற்றெளாந் திரமுங்கட்டி
நிண்டதீ பாக்கினியா யெரித்தெடுக்க
நிகழ்த்துவேன் தைலமாய் திற்குந்தானே. ()

தானென்ற தைலமதை நாகவல்லித்
தழையிட்டு நாற்பதுநா ளுண்டாயானால்
கோனென்ற வாதபித்த ஐயத்தாலே
கூடிநின்ற குணத்தாலுந் தொந்தம்நீங்கும்
வானென்ற உடலில்வந்த வியாதியெல்லாம்
வடிவாக ஓடிவிடுங் களங்கமற்று
மானென்ற தருங்குணத்தைக் குறித்துச்சொன்னேன்
வசனிக்கக் கூடாது உலகத்தோர்க்கே. (187)

வட்டக் கிலுகிலுப்பை எண்ணெய்.

வட்டக்கிலு கிலுப்பைச்சார் படியோரெண்டு
வசம்புவெள்ளை வெங்காயம் பலமுங்காலாம்
பட்டைபல மிரண்டுமுத் தெண்ணெய்நாழி
பதமாகக் காய்ச்சியடித் திண்ணவேதான்
துட்டவிஷ பாகமது வற்றிவாடித்
துலையுமுப்பு புளிதள்ளி யுண்டுபின்னும்
திட்டமதாய் மறுபத்தியம் பிடித்தால்நன்றாய்த்
தீர்ந்துவிடும் உண்மையிது திட்டந்தானே.



எலிகடிக்குமருந்து.

விளக்கெண்ணெய் பருத்திச்சார் வகைக்குநாழி
விட்டுசது ரக்கள்ளிப் பாலுழக்கு
குளிக்குமஞ்சள் திப்பிலியும் பூனைக்கட்டாங்
கூட்டமிது பலமொன்று குறையாமற்றான்
இளக்கமது யில்லாமற் பதத்தில்வாங்கி
இப்படிக்கு வடித்துஒரு கரண்டியிய்ந்தால்
உளக்குஎலி கடிகள்பதி னெட்டுந்தீரும்
உண்மையிது பத்தியமா யுண்ணத்தானே. (189)

கிரிச்சின வெட்டைக்கு.

மணிப்புங்கின் பட்டையின்மேற் பரணிநீக்கி
மாங்காயி னளவதாய்ப் பலம்வெங்காயம்
துணிவிளக் கெண்ணெய்யரைப் படியுமிட்டு
துரிதமா யதைக்காய்ச்சி வடித்துக்கொண்டு
குணித்துவரும் மூத்திரங் கிரிச்சிரம்வெள்ளைக்
குட்டம்விட்டு முக்கலுடன் கடுப்புந்தீரும்
தனித்திருந்து பத்தியமாய்க் கொண்டாயானால்
தப்பாது குணமாகுந் தன்மைதானே. (190)

காசத்திற்குச் சூரணம்.

வெள்ளெருக்கின் காயினுட விரையைவாங்கி
வேதித்துக் கல்லுப்பை யிட்டுப்பின்பு
பள்ளமுருங் கப்பயத்தி லிட்டுமூடிப் [திக்
படுகுமன்னங் கொதிக்கையில்வைத் தெடுத்துலர்த்
கொள்ளுதிரி கடுகரத்தை அக்கிராகாரம்
கோஷ்டமொடு கடுக்காயும் பலமிடித்து
தெள்ளியதோர் சூரணத்தைத் தேனிற்கொள்ளச்
சிதறிவிடுங் காசமெல்லாஞ் செப்பினேமே. (191)

மந்தாரகாசத்துக்கு மாத்திரை.

இரும்புரசம் நாபிகெந்தி சிலைவெங்காரம்
இந்துலிங்க மப்பிரேகம் தாம்வாளம்
திரிகடுகு திரிபலையுஞ் சமனதாகச்
சேர்த்துகழற் கொடிமுருங்கை இலையின்சாறில்

அரைத்துஅதை மூன்றுநாள் திரட்டிக்கொண்டு
அனுப்பானந் தேனுடனே அருந்தத்தீரும்
கரியமந் தாரகாச ரோகந்தீரும்
கைகண்ட பாகமிது கருதிப்பாரே. (192)

குஷ்டம் 18க்கும் சூரணம்.

முத்தினதோர் விடத்தலையின் பட்டைதன்னை
முழுதுமேற் பரணியைச்சூ ரணமதாக்கி
மெத்தினமாய்ப் பலம்நாலு சூதம்நாலு
விட்டரைநீ குலாமல்லிச் சாரில்சாமம்
மத்தினமாய்ப் பின்னுலர்த்திப் பொடியாய்ப்பண்ணி
மண்டலந்தான் தேனதனிற் கொண்டாயானால்
குத்தமறத் தீர்த்திடும்பத் தெட்டுக்குட்டங்
குடியோடிப் போகுமென்று கூறினாரே. (193)

மலட்டு வலிக்கு

அன்னமிடு முன்னிடும்பு அழுக்கைப்போக்கி
அப்புதனிற் கரைத்திருத்துத் தெளிவைவாங்கி
மின்னிடையாள் ருதுகாலம் வயிற்றுநோவு
மீறிடும்போ திதையறிந்து மூன்றுநாளும்
பின்னுமொரு தரங்குடிக்க வயிற்றுப்பூச்சி
பேதலித்து யிருந்தவிடந் தெரியாமற்றான்
சொன்னமில்லா வாறையொத்த வேசிபோலத்
துலையுமிது கைகண்ட தொழிலீதாமே. (194)

மலசலகட்டுச்சூலைக்கு.

ஆளிவிரை துட்டிடையாங் கல்லையாய்ந்து
அரைப்படி நீர் விட்டதனை அரைத்தாக்காய்ச்சிக்
சேனுமிதிற் புட்டிவெல்லம் பலங்கால்போட்டுக்
கிளறியதை யெடுத்துநீ பொழுதுமூன்று
நாளதனிற் கொடுத்துப்பார் சூலைவாய்வு
நன்றாக மலசலமுங் கழன்றுவிம்மி
காலியா யோடிவிடும் பொழுதுதானுங்
கண்டபனிப் போலோடும் குணமீதாமே. (195)



பச்சை வாதத்துக்கு.

விதிபிறந்த மதியதனைச் சுத்திசெய்து
மிளகுசமன் கூட்டி நீர் விட்டுஆட்டி
உதிமிளக தாகவே உண்டைசெய்து
உற்றவனுப் பானமதை யுரைக்கக்கேளு
நதியுறையா மன்னத்தில் உரைத்துக்கொண்டு
நற்சடத்திற் பூசிடவே பச்சைவாதம்
பதிகரங்கள் நரம்புகளும் முறுக்குமேறிப்
பண்டதுபோல் நடைகொடுக்கும் பரிட்சைபாரே.

இசிவுவலி குன்மத்துக்கு.

ரசமரைக்கால் இந்துப்புக் காலதாகும்
நல்லஅர பொடியுமரை கெந்தியொன்று
பசுங்குமரி அன்னமிட்டு அரைத்துநையப்
பழுத்துலர்ந்த தேங்காயி னோட்டுள்வைத்து
திசைவிளங்கு மணற்புடத்தில் வைத்துவாங்கித்
தினங்குன்றி வெற்றிலையிற் றின்பாயானால்
இசிவுவலி குன்மமகா ரோகமெல்லாம்
இருந்தவிடந் தெரியாம லேகுந்தானே. (197)

வேறு.

திரிகடுகு நாவியெவச் சாரந்தாரம்
சிவன்கிழங்கு பாவட்டை சித்ரமூலம்
விரைசமுத்தி ராயிலுப்பை வேப்பம்வித்து
வேரும்பட்டை அழிஞ்சியிவை சமமாய்த்தூக்கி
அரியயிஞ்சி நொச்சிபுளி யெருக்கம்வேர்ச்சார்
அரைத்துமே உண்டைசெய்து அதையுட்கொள்ள
விருமைகொண்ட போதுகண்ட ரோகமெல்லாம்
விளைந்தவெகு நோயெல்லாம் விட்டுப்போமே.()

நீர்க்கோர்வைக்கு நசியம்.

காட்டெருமைப் பால்கறந்து கன்றின்சாம்பல்
கணக்களவு ரெண்டுமொன்றாய் விரவிச்சேர்த்து
போட்டுரவி சூடுபடக் காய்த்தபின்பு
புனல்தோஷ மகன்றிடவே நசியம்போடு

கேட்டுடனே சிரசிலுள்ள நீரின்கோர்வை
கெடுவிட்டு நாடுவிட்டுக் கிரகம்பேர்ந்து
பேட்டிதர யிருளகற்றுங் கதிரோன்போலே
பேருமென்று யாகோபு பேசினரே. (199)

உஷ்ணவாய்வுக்கு.

தூணிமோர் கடுக்காய்த்தூள் இந்துப்பிரண்டு
சுயமான சுக்கஞ்சு பலமுங்கூட்டி
பேணிமிள கோமந்திப் பிலித்தூளொன்று
பேரான சீரகமோர் பலமுஞ்சேர்த்து
வேணிரவி நெய்வெண்ணெய் போலரைத்து
விதமாக நித்தியமு மிருகால்கொண்டால்
ஊணிநிதஞ் செரியாத உஷ்ணவாய்வு
ஊதுமந்தங் குணமாகும் உண்மைதானே. (200)

சயங்காசக் கட்டிகளுக்குத் தைலம்.

அப்பிரகத் தகடதனைக் கரியில்வைத்து
அடைவாக வூதியபின் உள்ளிதன்னை
ஒப்பாக நறுக்கிஅரி தாரங்கொஞ்சம்
உறுதிபெற வைத்துமுன் தகட்டில்வைத்துத்
தப்பாம லூதிவிடு தைலம்வீழும்
சாப்பிடவே சயகாசங் கடிகள்போகும்
முப்பொழுது உண்டுவிடு மேனிதங்கம்
முத்திபெற யாகோபு மொழிந்ததாமே. (201)

பித்த வாய்வுக்கு.

திரிகடுகு கொடிவேலி ஓமங்காயம்
சீரகம்நல் லெண்ணெய்யுள்ளி கடுகிந்துப்பு
கருவேம்பி னிலைபிரண்டை சேமன்தண்டு
கந்தமுடன் பிண்ணாக்கு வகைநேரிட்டு
நெரியாக எலுமிச்சம் பழச்சாறாலே
நேகவரைத் தாவின்நெய் விட்டுக்காய்ச்சி
பிரியமுடன் அன்னத்திற் சேர்த்துநீயும்
பிடித்துண்ண வாயுவலி புரட்டல்போமே. (202)



10 FEB 1946

உதட்டுப் புழுவுக்கு.

அதாமது பருத்துநொந்து வெளுத்ததானால்
ஆட்டுசங்க முள்ளாலே பிடித்துக்குத்தி
உதிரமதைத் துடைத்தாலம் பாலைப்பூசி
உகந்தரவு தாளிப்பழம் பிளந்துகட்டி
கதிரவன்முன் நிறுத்திவைத்து மூன்றுசாமம்
கட்டவிழ்த்துப் பார்க்கவதிற் சுமூன்றுபூச்சி
விதமறிந்து மூன்றுநா ளின்னுங்கட்ட
வினைதீரும் யாகோபு விளம்பினேனே. (203)

சூதமுறிவுக்கு கியாழம்.

கோட்டுகரி முகத்தோனைப் பெற்றோன்விந்தைக்
குடித்ததனல் பதங்காங்கள் முடக்கிவீங்கி
வீட்டில்நெருப் பதைப்பிடித்துச் சாலிலூட்டி
விடுமதில்நீர் இருதூணி மூன்றிலொன்று
முட்டியதின் மேலிறுத்திச் சாருவாங்கி
முன்மருந்தின் செந்தூர முணர்ந்துகொள்ள
போட்டிபெரு நோய்கள்சரக் கட்டுவிட்டுப்
போக்கிவிக்கு முண்மையிது புகலக்கேளே. (204)

மூலக்கிராணிக்கு பாஷாணக்கட்டு.

துய்யவெள்ளைப் பாஷாணம் பலமோரெண்டு
துணித்ததனை யொந்தையில்விட் டெருக்கம்பாலும்
பெய்யுமதை யொந்தைமேல் யொந்தைமூடிப்
பிலக்கமண் சீலைசெய்து அடுப்பிலிட்டு
நையளரி சிலுசிலுப்பு அடங்கிவிட்டால்
நலமாக யிரக்கியே ஆறவைப்பாய்
பையபண விடைகொள்ள மூலக்கிராணி
பறக்குமே சுரமெல்லாம் பதிவாய்த்தானே. (205)

சூலைவாதத்துக்கு மாத்திரை.

காயமுடன் கெந்தியுப்பு கழற்சிசுக்கு
கடுகுரோ கணியஞ்சுஞ் சமனாய்க்கூட்டி
வாயில்பெரு முருங்கையின்தோல் சாற்றாலாட்டி
வளம்பெறவே காசிடைதா னெடுத்துநீயும்

நோய்களுக்கு அனுப்பான விதத்திலீய
நொடியில்சிர ரோகமுதல் மூலவாய்வு
தாயமுள்ள வேசிமையல் கொண்டோன்பாலில்
தனப்போல வாதயய்யஞ் சரியுந்தானே. (206)

மதுவின் குணம்.

சுடுநீரில் நீரைவிட்டால் நஞ்சதாகும்
சுருதியொக்குங் கள்ளுதனில் நீரைவிட்டால்
படுவான மிகப்போதை யாகும்பாரு
பாலுரைந்த பாவனைபோல் மானிடர்க்கு
இடுகாதே காடியுண்டு பாலையுண்ண
இன்பாச வாதயாம் பத்திஞானம்
நடுவாகத் தோணுமது சுழியிலேறும்
*நாதர்ந்த யாகோபு நலஞ்சொன்னரே. (207)

கிராணிக்கு அபின் மருந்து.

உள்ளியது ஒருபூண்டு உடைத்ததற்குள்
உற்றஅபி னிலந்தைவிதைப் பிரயாணந்தான்
தள்ளிவிட்டுமூடியபின் நெருப்பிலிட்டுத்
தன்மையாய்ப் பார்த்திருந்து பதத்திலேதான்
சள்ளையில்லா தேயெடுத்துத் திரிதாளுண்ணச்
சண்டாளக் கிராணியெல்லாங் கடலேபுக்கும்
கொள்ளுமிதில் அதிசாரம் வாய்வுதீக்கும்
குருவை நினைந் துண்டிடவே குடிலம்போமே ()

பாஷாணக் கட்டு.

எலிகொல்லி தேவிமிரு தாரசிங்கி
இயல்பான கெவுரியுடன் தொத்தமஞ்சும்
வலியவெடு சீனச்சுண் ணாம்புதன்னை
வலுக்கவரை கவசமிட்டுக் கதிரில்வைத்து
கில்துமறச் சட்டியெடு அதனிற்பாதி
கிளிஞ்சிநீர் விட்டுஅதின் மேலேஉண்டை
பொலியுடனே வைத்துப்பின் சுண்ணமூடிப்
பொங்கமுட னிருசாம மெரித்துக்கொள்ளே.()



பஞ்ச சுண்ணச் சேர்மானம்.

எரித்துயெடு கட்டாகுங் கட்டுதன்னை
இயல்பான குழியம்மி யிட்டுநன்றாய்
அருத்தமதாய்ச் சுண்ணமதின் நீர்விட்டாட்டி
அதன்பிறகு புகைநீர்விட் டரைத்துக்காய்ந்து
திருத்தமதாய் முன்போல எரிக்கவந்து
தெளிவான சுண்ணமாஞ் செகத்தின்மீதிற்
பொருத்தமாய்ப் பலநோய்க்குக் கொடுக்கத்திரும்
புகழான யாகோபு புகன்றார்தானே. (210)

சுண்ணமதாம் பாஷாணம் எடைபோகாது
சூட்சமுட னெடுத்துப்பொன் பணமவ்வீதம்
நன்னயமாய்க் கொடுத்திடுநா ளெட்டில்நன்றாய்
நன்மைபெற மெய்யில்நின்ற நசலும்போகும்
குன்மமெட்டும் வாதபித்தங் கடலேபுக்கும்
குஷ்டநோய் சிலேற்பனங்கள் குணமதாகும்
சொன்னபடி காலமட்டும் நசல்வராது
சுகம்பெறவே யாகோபு சொன்னார்தாமே.(211)

சரக்குக்கட்டத் திராவகம்.

காச்சலஞ்சாம் பொட்டலையும் பலமீரைந்து
கண்டுயெடு படிக்காரம் அய்யஞ்சாரும்
மாச்சலரைப் பொடியாக்கிக் கட்த்திலிட்டு
மருகவதின் மேல்வாலை கவிழ்த்திச்சீலை
வாச்சபடி செய்தடுப்பில் வைத்துப்பின்பு
வகையாக யெரியிடவே முந்நீர்வெள்ளை
ஓச்சதுவைத் தள்ளியெடு நடுநீர்வாங்கு
உறுதிபெறப் பிடித்தபின்பு கடைநீர்வாங்கே. ()

வேடியுப்புத் திராவகம்.

கடுமையுள்ள நீர்பிடிக்கப் பசப்புநீராம்
கண்டுஒரு சேரிறுத்துக் கரிப்பீங்கானில்
அடுமைபட விட்டுரசம் நாலிலொன்று
அணல்கிளம்பும் புகையெழும்பும் மேலேபீங்கான்

நடுவுடனே கவிழ்த்துநீ அகல்பீங்கானில்
நன்மைபெற வைத்திட்நீர் தானேவீழும்
படுமுன்னே சரக்கெல்லாம் வெந்துநீறும்
பரிவான யாகோபு பயின்றவாறே. (213)

துருசுச் சுண்ணம்.

நீலனெரு பலமெடுத்து முன்னீர்தோய்த்து
நிழலில்லாக் கதிர்முன்னே அதனைவைத்துக்
காலமதி லெட்டுநாள் வைத்துப்பாரு
கடுமையாய்ப் பொங்கியது நீறுமாகும்
வேலையிதிற் கிளிஞ்சிநீர் நாலிலொன்று
வீரமது சேர்த்தரைத்துத் துருசின்மேலே
கோலமிக அங்கியிட்டுப் புடத்தைப்போடு
கொடுஞ்சரக்குத் துருசுமது நீறுமாமே. (214)

நல்லாக நீறினது பணமவ்வீதம்
நாடியெடு விராலியிலை தன்னிலிட்டு
மெல்லாகப் பிழிந்துவிடு நீர்தான்வீழும்
மேன்மையாய் அயக்காண்டி தன்னிலிட்டு
வெல்லவே அரன்பீச மிட்டுக்காய்ச்சு
மேன்மைபெறக் கட்டியது மணிபோலாடும்
செல்லவொரு சாரணைதான் தீர்ந்தாயானால்
திடமாகும் கெவுனவழி யோடலாமே (215)

திரிலங்கச் செந்தூரம்.

உருக்கினதோர் சூதமது நாலிலொன்று
உருக்கிமெள்ளக் குகையிலிட்டுத்தங்கத்தாயைப்
பருக்கவே கூடவிட்டு உருகும்போது
பாய்ச்சிநீ யேமமிடை நாகந்தன்னை
அருமையா யுருக்கியெடு கல்வமிட்டு
அன்னச்சார் விட்டரைத்துப் புடமுமூன்று
கருகவே போட்டெடுக்க முருக்கம்பூவாம்
காட்டவே நவ்லோகம் ஏமமாமே. (216)

தாளகநீர்

சிவந்ததொரு செந்தூரம் அகலிலிட்டுச்
சிறக்கமெள்ளக் கரியில்வைத்து நாளத்தாலே



நவம்பட்வே ஊதியெடு சுண்ணம்நேரே
நல்லதிரு வாழ்மடந்தை கல்வத்திட்டுத்
தவம்பெறவே அரைத்தன்னஞ் சாமம்நாலு
தக்ககதிர் காயவைத்துப் புடமூன்றிட்டுப்
பவம்படவே எடுகொக்கு நிறமேயாகும்
பரிவான யாகோபு பகர்ந்தார்தாமே. (217)

அடுத்துஎடு பணவீதந் தேனிற்கொள்ள
அருள்பெருகுங் காசசய மேகமெல்லாந்
தொடுத்துவிடும் வலிவாய்வு குன்மமேகும்
துன்பமில்லை சிலேத்மங்கள் தொண்ணூற்றுறும்
படுத்துவிடும் வாயுவெல்லாங் கடலேப்புக்கும்
பருதிகண்ட பனிபோலே பறந்துபோகும்
கொடுத்துவைத்த திதுவாகும் யாகோப்நன்றாய்க்
கூறினு ரிதன்பெருமை கூறொண்ணுதே. (218)

மண்ரேச் செந்தூரம்.

மண்ரேந் தனையரைத்துக் கலையத்திட்டுக்
வாகுபெற மூடியதை மண்ணுஞ்செய்து
தொண்டுபடக் குழிப்புடமாய்ப் புதைத்துப்போடு
துன்பமற ஒருமாத மானால்நன்று
கண்டுயெடு மானிடர்க்குக் கொடுத்துப்பாரு
கருதியதோர் நசலெல்லாங் கடலேபுக்கும்
பண்டுபட வுடனரைத்து உண்டாயானால்
பலனுகும் யாகோபு பயின்றவாறே. (219)

உண்ணுமார்க்கம்.

கடுஞ்சுண்ண மூதியதைப் பீங்கானிட்டு
கதிர்பனியில் நாளைந்து வைத்தெடுக்கப்
படுவேகந் தணிந்துவிடும் யெடுத்துஉண்ணப்
பதிவான நசலெல்லாம் பறந்தேயோடும்
கொடுமையா யூதியுடன் கொடுத்தாயானால்
கொடுஞ்சுருக்கு நாவுதடு வெந்துபோகும்
கடுமைபடக் கொடுக்காதே யென்றுசொன்னார்
கருத்துறவே யாகோபு கருத்தாய்த்தானே. ()

ரசப் பதங்கம்.

ரசப்பதங்கந் தனையெடுத்து உடனேயுண்டால்
நவின்றருடல் வெந்துவிடும் நசல்போகாது
நிசமாக ரசபதங்க மதையெடுத்து
நிலையான கல்வமிட்டு முலைப்பாலாலே
வசமாக அரைத்துகதிர் ஒருநாளிட்டு
வாகாக உண்டிட்டவே நசலுந்தீரும்
பிசகாது இம்மொழிகள் பொய்போகாது
பிரபலமா யாகோபு பேசினாரே. (221)

லிங்கப் பற்பம்.

வன்னிபற்பந் தனையெடுத்து யெட்டிலொன்று
வண்மைபெறப் புகைநீரை விட்டரைத்து
நன்மைபெற உபயநாள் வைத்து உண்ண
நலமாகும் நசலெல்லாங் கடலேபுக்கும்
சொன்னபடி பேதிநிற்கும் ஐயந்தன்னைத்
துலைத்துவிடு மிப்பொருளும் நிசயதாகும்
கன்னலறு மேகங்கள் வாய்வுபோகும்
கனிந்துரைத்தார் யாகோபு கருணைதானே. ()

அப்பிரகச்செந்தூரம்

அப்பிரகம் பலமிடைசேர் வீரந்தன்னை
அரைத்துவிடு செயநீரா லொருசாமந்தான்
செப்பியிடு பெரும்புடமாய்ப் போட்டபின்பு
சிறக்கயெடு மறுபடியு மரைத்துப்போடு
முப்புரத்தை யெரித்தாப்போல் நீறுமாகும்
முனைந்துயெடு அரிதாரம் நாலிலொன்று
இப்படிக்குச் சேர்த்தரைத்துப் புடம்நாலிட்டால்
இதுமுருக்கம் பூப்போற்செந் தூரமாமே. (223

முருக்கம்பூ நிறமாஞ்செந் தூரந்தன்னை
முதலாகப் பணவிடைதான் தேனிலுண்ண
அருக்கதிறம் போலாகும் மேனிதோனும்
அழிந்துபோம் நீரிழிவு மேகந்தானும்



பருக்களுஞ் சிலேத்துமங்கள் பதறியோடும்
பகலவனைக் கண்டபனி போலவாகும்
திருக்கைவேல் கைப்பாணம் போலாமிந்தத்
திடமான அவிழ்தமிது செய்துபாரே. (224)

நாகவங்கப் பரிச்சுண்ணம்.

நல்லதங்க மோரிடையாங் காரிநேராம்
நாகமது காரியிடை குகையிலிட்டு
மெல்லவதை யுருக்கியிடை கல்வத்திட்டு
மேதினியில் கற்றாழஞ் சோற்றாலாட்டி
சொல்லரிய வில்லைபண்ணிக் கதிரில்வைத்துச்
சூட்சுமமாய் யாளமட்டும் புடமுமிட்டு
வல்லமையா யெடுத்துப்பார் வெண்மைபோலாம்
வண்மையுள்ள யாகோபு வசனித்தாரே. (225)

தாளகச் செந்தூரம்.

உறிக்குமட லரிதாரம் ஓட்டிலிட்டு
உறுதிபெற அசம்நீராற் சுருக்குச்சாமம்
குறித்துநீ யெடுத்துநிறு நாலிலொன்று
கூட்டிடுவாய் முன்சுண்ணங் கல்வத்திட்டு
முறிக்கவருங் கற்றாழை நீர்விட்டாட்டி
முடிவுபெற ரவியதனிற் காயவைத்து
மறுத்துமிதைப் பெரியபுடம் மூன்றுபோட
வளமான செந்தூர மாகுந்தானே. (226)

போட்டெடுக்கச் செந்தூரம் பவளம்போலாம்
புகழான ரவிநூற்றி லொன்றுதாக்க
நீட்டுமுன்னே ஏமமாம் பணமவ்வீதம்
நேரான மண்டலமே யுண்ண நீயும்
வாட்டுகின்ற நோயெல்லாந் தவிடுபோலாம்
வகையான நரைதிரைக ளற்றுப்போகும்
கேட்டபிணி தெண்டனிடும் யாகோபுசொன்னார்
கிருபையுள்ள செந்தூரஞ் செய்துவுண்ணே. ()

இந்தநா லெழுநாளும் விதைக்குறுக்கி
இனியசுண்ணம் முந்நூறு இயம்பினேன்யாம்
முந்நூற்றைந் நூறுமுந் நூறுசொன்னேன்
முதன்மையாம் வைத்திய முந் நூறுசொன்னேன்
சிந்தைதனி லுணர்ந்துநசல் தீரவேண்டிச்
செப்பினேன் வாதசூத் திரம்நானூறு
எந்நாளு டனாய்ப்பார்த்து வைத்தியஞ்செய்தால்
இதமான நசலெல்லாந் தீருந்தானே. (228)

லிங்கப்பதுங்குச் செந்தூரம்.

ஜாதிலிங்கம் பலமெடுத்துக் கலசத்திட்டு
சத்தெடுத்து அதில்நேராங் காரிநாகம்
ஊதியே யுருக்கியிடை வன்னியிட்டு
உற்றஅன்னத் தாலரைத்து வில்லைசெய்து
சோதிகதிர் காயவைத்துக் கடத்திலிட்டுச்
சுருக்காக மூடிமண் சீலைசெய்து
ஓதியெரி கமலம்போல் மூன்றுசாமம்
உற்றுணர்ந்து யாகோபு உரைசெய்தாரே (229)

எரிக்கரசம் பேலேறுஞ் சூரண்டிவாங்கி
இனிநாளை அடியில்நின்ற வில்லையோடே
செரிக்கஅரை முந்நீரா லொருநாளாட்டிச்
சித்திபெற முன்போலே யெரித்துவாங்கி
முரிக்கவிந்தப் படியைந்து தீயெரிக்க
முறைவிதமெய்க் கதையுதிர்ந்துபோகும்
அரிக்குநீக சந்துமது கைபாகந்தான்
அடைவாக யாகோபு அறைந்தவாறே. (230)

உருக்குச்செம்பு வேதை.

ஆய்யாவோர் உருக்கு ஊட்ட செப்புமூன்று
ஆக்கிரெண்டும் உருக்கையிலே குருவொன்றிய
மெய்பாகக் கருப்பாகும் யோகஞ்சேர்த்து
மிளகுது ரெண்டிடைதான் தங்கமாகும்
சையாக விந்தமே செலவுசெய்து
சுந்திரிதான் செய்துண்ணு அன்னந்தன்னை



பொய்யல்ல பாகமிது கண்டாயானால்
பொருள்வருகும் யோகோபு புகன்றிட்டாரே. ()

மந்தாரகாசத்திற்கு

சீருகின்ற மந்தார காசத்துக்குச்
சிறப்பான மருந்தொன்று சொல்லக்கேளு
நாருகின்ற வசம்பதனை வாங்கிவந்து
நல்லதந்தி தோல்போக்கி வறுத்தபின்பு
பாருலகிற் பழச்சாறு விட்டரைத்துப்
பதியசுண்டைக் காயளவு உண்டைவாந்தி
முருகின்ற வயிறுதான் பேதியாகும்
மோர்ச்சாதம் உண்டிடவே தீருந்தானே. (232)

விஷத்திற்குப் பூரமாத்திரை.

முந்திரச கற்பூரம் பலமும்நாலு
முன்பாகப் புடம்வைத்து விதமொன்று
சத்தியமிது பலமொன்று கல்வமிட்டுத்
தாக்கியரை ரெண்டுமொன்றாய்க் கரியதாகும்
நித்தியமாய் முன்பூரஞ் சேர்த்தபின்பு
நிலவரமாய்ப் பால்விட்டு அரைத்துக்காய்ந்து
சித்தியாய்ப் பணவிடைதான் அந்திசந்தி
தின்றிடவே மண்டலத்திற் சாந்தங்கேளே. ()

கடிவிஷங்கள் குஷ்டமொடு கடலேறுக்கும்
கனித்தசுரஞ் சன்னிகுன்மம் கழலோடும்
அடியுள்ள வாதபித்தஞ் சிலேற்பனங்கள்
தலைநோவிடும் மகோதரமும் வழுநாகம்
படியுமிது சோகைகா மாலையாவும்
பருகிகண்ட பனிபோலாம் புளிப்புவிட்டு
இடிவிழுந்த பாம்புபோல் வியாதிதீரும்
இதமாக யாகோபு வியம்பினாரே. (234)

நசலான பேர்களுக்கு மூன்றுநாத்தை
நாடியே அறுபத்தொரு பண்ணச்சொல்லு
பிசகாத நாலுமிளகும் வன்னிபற்பம்
பேணியே மூன்றுதினஞ் சாப்பிட்டேதான்

வசமான பிற்பாடு விஃநாளம்பண்ணி
வண்மைபெற லேகியங்கள் தயிலமுழுகு
இசைவாகச் செய்தாக்காற் சுகமதாகி
இனிதான நசலெல்லாம் நீங்குந்தானே. (235)

நீங்குமே மண்டலந்தி லந்திரந்தி
நேராகப் பணவிடைதான் தேனிற்கொண்டால்
பாங்குபெற மலக்கட்டுஞ் சலக்கட்டுந்தான்
பரிவான பித்தவெட்டை பாரிலேகும்
ஓங்கியே புளிதள்ளி யுண்டுதேறு
உறுதிமிக மாப்பண்டந் தள்ளியுண்ணு
தாங்கிநிற்குங் கால்வாதந் தன்மையாகும்
தாஷ்டிகவான் யாகோபு சாற்றும்வாறே. (236)

நீர்க்கட்டுக்குக் கியாழம்.

தந்திவிரை தட்டியொரு சேர்தானென்று
தனித்துசிறு சட்டியிட்டுப் பாணிரெட்டி
மொந்தைவிடு எட்டொன்றாய்க் காய்ச்சிறுத்து
முப்பங்கி லொருபங்கு பொரிகாரத்தைச்
சந்ததமாய்ப் பொரித்திட்டே உண்டபேர்க்கு
சல்லியிலே நீரடைப்பு நீரெரிப்பு
எந்தவித முந்தீரு மென்றுசொன்னார்
எரிகதிர்தான் கண்டபனி யியல்பதாமே. (237)

சயகாசத்திற்கு தாளகச்சுண்ணம்

சாகரத்தின் மலந்தன்னைக் கல்வத்திட்டுத்
தாக்கியரைத் தூறிடவே சுண்ணமாகும்
வேகமறச் சோதிதனை முன்போலூது
விதமாக ரெண்டுசுண்ண மிடையேசேர்த்துப்
பாகமா யுரைத்தன்னந் தன்னாலாட்டிப்
பதிபயெடு கதிரில்வைத்துப் புடமுமூன்று
ஆகமதா யிட்டுத்துட் டிடையேகொள்ள
அருள்பெருகுஞ் சயகாச மேகுந்தானே. (238)



காமாலைக்கு.

சிறுநெல்லி தனைப்பிடுங்கி யுரலிலிட்டுச்
சிதுகயிடித் தப்பிழிந்து ஆவின்பாலைப்
பெருகவிடு படிகாரம் கொஞ்சமிட்டுப்
பேருலகி லுண்டுவர ஆறுநாளில்
உருகசப்பு உப்புடனே புளியுமாகா
உடலிற்கா மாலையெல்லாம் ஓடிப்போகும்
பருகியிட நீர்க்கசப்பு வெண்ணெய்யாகும்
பாருலகில் யாகோபு பயின்றவாறே. (239)

இருமலுக்குக் கசாயம்.

அருநெல்லி தான்றிக்கா யிஞ்சிநேராம்
அதையிடித்துச் சட்டியிட்டு யெட்டொன்றாக்கித்
திரிகடுகு பொடியிட்டுத் திரிநாட்கொள்ளத்
தீராத உஷ்ணமொடு கபமீளைப்பும்
விரிவாக யிருமலொடு கோழையெல்லாம்
வேகமறு முறுதியிந்தக் கியாழம்தேர்ந்தி
பெரியவர்கள் சொன்னமுறை யிதுதப்பாது
பிரித்துயிதைச் செப்பினார் யாகோபுதானே. (240)

சீனக்காரச் சுண்ணம்.

மங்காத வெண்சீனம் பலந்தானைந்து
வாங்கியதைப் பொரித்துமே கல்வத்திட்டு
தங்காத யெருக்கம்பால் தன்னோடேதான்
தக்கதொரு அண்டவெண் கருவும்நேராய்
சிங்கார மாகவிட்டுத் திரிநாள்வைத்துச்
சித்திபெற முன்பொரித்த பொரியிலிட்டுப்
பங்காக அரைத்துவில்லை கதிரில்வைத்துப்
பத்தைந்து யெருவிலிடச் சுண்ணமாமே. (241)

தாளகச் சுண்ணம்.

இடமினிய சுண்ணமதாஞ் சீனந்தானும்
சிறந்தயெடு எருக்கம்பால் விட்டுஆட்டி
மடலினிய அரிதாரம் மேலேகட்டி
மயமாகத் தானுமே கதிரில்வைத்துக்

கிடமிட்டுக் கிளிஞ்சி நீர் படியும்ரெண்டு
கீர்த்திபெற உள்வைத்துக் கிளிஞ்சி நீற்றை
படிரெண்டு மிட்டமுக்கி வைத்துத்தீயைப்
பார்த்தெரிக்கத் தாளகமும் நீறுந்தானே. (242)

பொய்யாது மென்வசனந் தாரம்நீற்றைப்
புகலரிய பணவிடைதான் மதுவிலுண்ண
மெய்யாகச் சயகாசம் இருமல்கோழை
மேனிசுர வலையடைப்பு மூச்சுசோபம்
வையகத்தில் எலிகடிகள் ருத்திரவாய்வு
வரையிலே யெழுந்தகதிர் பனிபோலாகும்
செய்யஅரன் தானறிந்த பாகமாகுஞ்
செப்பினுர் யாகோபு திறமைதானே. (243)

காந்தச் செந்தூரம்.

அங்குசமும் பலம்பத்து அயமும்நேராய்
அதையரைத்து உலர்த்திநாற் புடமுமிட்டால்
இங்கிதமாய்ச் சிவந்துவிடும் சத்திருதம்
இதமாக முன்கண்ட யிடைக்குப்பாதி
தங்காம லரைத்துமுன்னீர் தன்னைவிட்டுத்
தக்கதொரு கிடத்திலிட்டு மேலேமூடி
பங்கம்வரா தெரித்தெடுக்கச் சிவந்துபோகும்
பதிவான யாகோபு பலன்சொன்னரே. (244)

தந்திவிரை தட்டியெடு பலமுமெட்டு
தக்கதொரு மிளகுரெண்டு சோம்புமெண்டு
முந்திவெடு கடுக்காயும் பலமும்யெட்டு
முளிந்தநெல்லி முள்ளிமுன் னிடையேகூட்டிப்
பந்தமுடன் செந்தூரத் தாதிநீராற்
பதியவரை மையதுபோற் கதிரில்வைத்துச்
சுந்தரமாய்ப் பொடியாக்கி வைத்துக்கொள்ளச்
சுருதிதனை யாகோபு சொன்றார்தானே. (245)

மூவிரற்றாள் யெடுத்துவைத்து முன்செந்தூரம்
முத்தினதோர் இலந்தைவிரை யளவுவைத்து



தேவமுதமாகியதேன் குழைத்துநீயுஞ்
செப்பாமற் றின்றுவிடு ஆறுநாளில்
பாவினைமுந் தெண்ணெய்யிட்டு முழுகச்சொல்லு
பாங்காகப் புளிதள்ளி மோர்ச்சோறுண்டால்
தாவிவரும் தசலெல்லாந் தானேபோகும்
தாட்டிகவான் யாகோபு தன்மைதானே. (246)

பித்தவெட்டை பாண்டுயகோ தரமுந்தீரும்
பின்புதான் சொரிசிரங்கு மேகவாய்வு
குத்தலிட்ட சூலைமுதல் வெட்டைபோகும்
கூறியது யிதின்குணங்கள் கொள்கைமெத்த
நித்தம்நித்த மயக்குகின்ற பித்தந்தானும்
நீங்குமென்று யாகோபு சொன்னநீதி
புத்தியுள்ள நபிமார்கள் சொல்லக்கேட்டுப்
புவியதனி லிந்நூலைப் புகன்றிட்டேனே. (247)

கண்டர்சத்து.

கண்டாவி பலமொன்று தகடுதட்டிக்
கனிந்துயிடை தேவிதன்னைக் கல்வத்திட்டு
பண்டுஅரை பாணியினற் சாமமாட்டிப்
பக்குவமாய் மேற்பூசிக் கதிரில்வைத்துத்
தொண்டுபடப் புடமுமிட்டு வலுவாதாகத்
தொக்கயெடு சத்தாக யிருக்கும்பாரு
வண்டிலது கால்சேர்த்து அரைத்துருக்க
வகையாக வெள்ளிபொன்போ லாடுந்தானே

அயச்செம்பு

அடுத்துமே சத்துநின்ற யிடைக்குத்தானும்
அரபொடியைக் கல்வத்தி லிட்டுக்கொண்டு
தொடுத்தரைத்துக் குகையிலிட்டு உருக்கச்சத்தாம்
தொல்லுலகி லயச்செய்பாம் செம்பெடுக்க
விடுத்தபெரி யோர்கள்தான் மயங்குவார்கள்
வேதாந்த முடிவாகும் ரூபிதன்னைத்
தடுத்துயெடு பாதியிட்டு அரை அன்னத்தால்
தாக்கியே யிருசாமங் கதிரில்வையே. (249)

பானுவினில் வைத்தெடுத்துப் புடமூன்றிட்டுப்
பத்தியெடு சிவப்பாகுஞ் சிகப்புக்காணில்
வானுலகிற் பறந்தோடா வண்டில்சேர்த்து
வகையாக அரைத்துருகை தன்னிலிட்டுத்
தானுலவ உருக்கிடவே செம்புகாணும்
தனிவான செம்பினுட நிறத்தைத்தானும்
தேனுலவுங் கண்ணினாற் பார்க்கப்போகா
திடமாக யாகோபு செப்பினாரே. (250)

பஞ்சமித்திரம்.

அயச்செம்பு தனையெடுத்துக் குகையிலிட்டு
ஆற்றுநீர் போலுருக்கு நெய்தேன்நேராய்
நயம்படவே நல்லெண்ணெய் யிலுப்பைநெய்யும்
நாடியெடு தேங்காய்நெய் சரிநேர்பாகம்
மயம்படவே சேர்த்தொன்றாய் வைத்துக்கொண்டு
மகிமைபெற்ற செம்புருக்கித் தரமும்பத்து
செயம்படவே உருக்கியதை சாய்க்கவென்று
செப்பினார் யாகோபு விளங்கத்தானே, (251)

அயச்செம்புச் செந்தூரம்.

கோடிகதிர் போலாகுஞ் செம்புதன்னைக்
கூறியெடு மதியெட்டுக் கிரண்டுதாக்க
பாடியே பொன்னாகும் பொன்னினோடே
பாய்ச்சிவிடு யேமமொன்று பரிந்துருக்கி
ஆடியெடு யேமமாம் பொன்னைத்தானும்
அடைவாகக் கடையில்விற்றுச் செலவுசெய்து
தேடியே நபிமாரைத் துதித்துக்கொண்டு
திறமைபெற யாகோபு சொன்னவாறே. (252)

புறந்த அயச் செம்பெடுத்து யிடையேதங்கம்
பார்த்துருக்கித் தகட்டித்துத் தேவிவிந்து
துறந்தபடி பாதிசித்த ரூபிசேர்த்துத்
தோய்ந்தரைக்கச் செந்தூரத் தாதிவிட்டுக்
கறந்தரைத்து வழித்தந்தத் தகட்டிற்பூசிக்
காயவைத்து யெடுக்கயிது சுருக்கம்பாரு



அறந்தழைக்க மூன்றுபுடம் போடச்செய்பாம்
ஆதிமதி யிருபதுக்கு ஒன்றுதாக்கே. (253)

தாக்கியெடு மாற்றெட்டு ஆணிக்கொக்கும்
தாண்டவமாம் நபிமார்கள் சொன்ன நீதி
பாக்கியது அயச்செம்பு யிருந்ததானாற்
பாதையிதில் பிரிவுமெத்தப் பலனைக்காண்பாய்
வாக்கினிய யாகோபு சொன்ன நீதி
வையகத்தில் சுத்தரச வாதிகாண்பான்
போக்கில்லா வாதிகள்தான் காணாரென்று
புகட்டினார் புவியிலுள்ளோர் பிழைக்கத்தானே()

வெட்டைக்கு மருந்து.

சித்திருணி யிலையதனை உரலிலிட்டுத்
திறமாக யிடித்துச்சார் பிழிந்துநன்றாய்
வத்திடுஞ்சா ரெள்ளெண்ணெய் யிடையேயிட்டு
வண்மைபெறக் கைச்சேரை கொண்டுநன்றாய்
முந்தநா ளாறுதனில் புளிப்புக்கைப்பு
முனிவாகத் தள்ளிவிடு வெருநாள்வெட்டை
சந்தமாய்த் தீர்ந்துநீர் சுருக்குப்போகும்
சாற்றினார் யாகோபு தன்மைதானே. (255)

சூதகவலி குன்மத்திற்கு.

வச்சிரமு மோதகமும் புரசங்கொட்டை
வகைக்கெடு நீ பலம்நாலு திப்பியீர்க்கு
பச்சையா யிடித்துபுதுச் சட்டியிட்டு
பாணிபடி யிட்டுமெட் டொன்றாய்க்காய்ச்சி
உச்சிதமாய்ப் பூநீர் துட்டிடை போட்டுண்ண
உதரத்தில வலிகுன்மம் கிருமிவாந்தி
நிச்சயமாய்ப் பருதிகண்ட பனிபோலாகும்
நேர்மையுள்ள யாகோபு நிசஞ்சொன்னாரே.( )

அப்பிரேகப் பதங்கம்.

வச்சிரத்தின் அப்பிரேகம் பலமும்நாலு
வைத்திடு நீ கல்வமிட்டு வீரங்காலாம்
உச்சிதமாய்ப் பாணிவிட் டரைக்கவெண்ணெய்
உறுதிபெற முச்சாமஞ் சென்றபின்பு

மூச்சிமடக் கதிரில்வைத்து மூடிநன்றாய்
மூனையுவிட்டு கடத்திலிட்டு மேலேமூடு
தச்செயலாய்ச் சீலைமண்தான் மூன்றுசெய்து
தாக்கியே அடுப்பினில்வைத் தெரித்துவாங்கே.

அடுப்பில்வைத்து யெரிசாமஞ் சென்றபின்பு
அதையெடுத்துப் பிரித்துப்பார் பதங்கமாகும்.
எடுத்துவழி பணவீதம் வெல்லந்தன்னில்
இட்டிடவே திரிநாளில் பேதிசோகை
அடுத்துவருங் காமாலை பாண்டுகுன்மம்
அழிம்பான மகோதரமும் சூலைரோகம்
எடுத்துவிடுஞ் சூதகத்தின் வாய்வுமந்தம்
இதமாகும் யாகோபு இயம்பினாரே. (258)

உதரத்திற் கட்டிநின்ற உதிரந்தன்னை
உறுதியா யுடைப்பிக்கும் ஆய்பற்கட்டி
நிதமுண்ணும் அன்னத்தைச் செரிக்கப்பண்ணும்
நிலையில்லா தோடிவிடும் ருத்ரவாய்வு
பதகரத்தின் நரம்பிறுகும் முறுக்குமேறும்
பசுமைதரு முடல்வலுக்கும் சயமும்போகும்
சதமுமிதை அந்திசந்தி உண்ணச்சொன்னார்
தவறாமல் யாகோபு சாற்றினாரே. (259)

அப்பிரேகச்செந்தூரம்.

பதங்கத்தைச் செந்தூரம் பண்ணிஉண்ண
பதிவாகும் நசலெல்லாங் கடலேபுக்கும்
நிதமுண்ணக் காயசித்தி நிலைக்கும்பாரு
நிச்சயமாய் நரைதிரைக ளற்றுப்போகும்
மதம்பிறக்கும் வலையில்நின் றுழலவேண்டாம்
மாயையது சுழற்றினால் வலுத்துக்கொல்லும்
விதங்களினி வீரச்செந் தூரஞ்சொல்ல
வீற்றிருந்து யாகோபு விளம்பினாரே. (260)

அயவீரச்செந்தூரம்

புகைநீரை அரைபொடியி லூற்றிநன்றாய்ப்
பொங்கியே புகையுமதைக் கல்வத்திட்டு



துகையாக வீரங்கால் விட்டரைத்துத்
தூக்கியெடு வில்லைகதிர் காயவைத்து
அகமகிழ ஓட்டிலிட்டுப் புடமுமிட்டால்
ஆகுமது செந்தூர முருக்கம்பூப்போல்
பகையில்லா முனிபதங்கந் தனைநேர்கூட்டிப்
பாய்ச்சியிதைக் கல்வத்தில் பண்பாயாட்டே. ()

ஆட்டுகையான் பாணியினாற் சாமந்தானும்
அதைக்கதிரிற் காயவைத்துச் சுடுக்கையிட்டு
கூட்டுபண விடைவீரஞ் செந்தூரத்தைக்
கொடுக்கவே கிராணிதனூர் வாதபித்தம்
மூட்டியதோர் சோகைமுதல் அண்டவாதம்
மூர்க்கமுள்ளவெட்டையொடுகுறைநோய்குட்டம்
தாட்டிகமாய்மூலமுதற் போகுமென்று
தவறாமல் யாகோபு சாற்றினாரே. (262)

சூதகவாய்வுக்கு எண்ணெய்

அப்பாகற் பூரவல்லி வெங்காயச்சா
றறுநாழி முத்தெண்ணெய் படிதானென்று
செப்பமுடன் சீரகங்காற் பலமும்போட்டுச்
சேர்த்தெண்ணெய் தனிலிட்டுக் காய்ச்சிநன்றாய்
ஒப்பாக யெட்டுநா ளுண்டாயானால்
உள்மூல வலிகடுப்புச் சீதரெத்தம்
தப்பாமல் நிற்குமிதற் கரண்டிகொண்டால்
சாந்தமாம் சூதகத்தின் தவறும்போமே. (263)

ரணங்களுக்குச் சீந்தி லெண்ணெய்.

சீந்திவேர் பலம்பத்து கருணைகொண்டு
சிறந்தபழச் சாற்றிலரை யெண்ணெய்நாழி
காந்திபட யிதைத்தானும் வைக்கும்போது
காசுகட்டிப் பலமொன்று பொடித்துத்தூவி
பாந்தமுடன் கரண்டியெண்ணெய் பத்துநாட்கொள்
பறக்குமே கிரந்திப்புண் உப்பாகாது
வந்திடவே ஆறாத ரணங்கள்தானும்
இருந்தவிடந் தெரியாம லேகுந்தானே. (264)

வாதத்திற்கு கருங்கோழித் தைலம்.

குக்குடந்தான் முட்டையிட்ட கோழியொன்று
குணமாகச் சிறைபிடுங்கிக் குடலைபோக்கி
இக்கிடவே உரலிலிட்டுக் காயஞ்சுக்கு
இதமான பரங்கியுட பட்டையுள்ளி
நக்கிடவே வகையொன்று பலங்காலாகத்
தாட்டிகம தாயிடித்து மிடாவிலிட்டுச்
சிக்கெனவே பாணிபடி பத்துவிட்டுச்
செயம்பெறவே யெட்டொன்றாய்க் காய்ச்சிடாயே.

காய்ச்சியதில் நிம்பயெண்ணெய் இடையேயிட்டுக்
கனமாக நீர்சுண்டயெரித்துயெண்ணெய்
தாச்சியில்லா தொருகாண்டி யெட்டுநாளுந்
தானருந்த வாதமெல்லாங் கடலேபுக்கும்
பஞ்சிடவே சூலைபதி னெட்டும்போகும்
பகல்கண்ட பனிபோலே பறந்துபோகும்
வாச்சிட்டுச் சொல்லாதே வயித்தியத்தை
வடிவாகச் செய்திடவே வாழ்வுமாமே. (266)

மேகத்துக்கு குமரியெண்ணெய்.

சுற்றுமுஞ் சாருபடி ரெண்டிரேடே
கன்னியா குமரிகெந்தி பலமுமெட்டு
சிற்றும ணக்கெண்ணெய் ரொட்டிகூட்டித்
திரண்டபத மாய்வடித்துக் கொள்வீராகில்
பத்தோடு பதினொன்று மேகமெல்லாம்
பானுவைத்தான் கண்டபனி யதுபோலேகும்
இத்தலத்தில் அரிபிரந்தி மேகமெல்லாம்
இடம்விட்டுக் குடிபோமென் றியம்பினாரே ()

பித்தவெட்டை கிரிழிவுக்குக் கிருதம்.

கனியான ரஸ்தாளி யிருபதாகும்
காராவின் நெய்தேன்சக் கரையுஞ்சேரு
இனிதான சீரகமும் பலமுமெட்டு
இடித்திட்ட சூரணமுங் கலந்தேகாய்ச்சி



தினங்கரண்டி யிருநேரங் கொண்டாயானால்
தீர்க்கமுடன் நீரிழிவு பித்தவெட்டை
கனமான பயித்தியத்தின் விகாரம்போகும்
கைபாகங் கண்டறிந்து கழறினோமே. (268)

வாழை மா பலாச்சூரணம்.

முப்பழத்தின் புறத்தோலும் பலமும்நாலு
முஞ்சம்பா நெற்பொரியும் பலமும்நாலு
ஒப்புறவாய்க் காயவிட்டு யிடித்துவாங்கி
உண்மையாய் வடிகட்டிச் சூரணத்தைச்
செப்பமா யனுப்பானத் துடனேகொள்ளத்
திரிருமல் வாந்திபித்தங் கபங்கள்வாய்நீர்
கொப்பெனவே குணமாகும் தேகம்புஷ்டி
குணமாகும் இதையெவர்க்குங் கூறொண்ணாதே

சூலைவாய்வுக்கு மாத்திரை.

காயமொடு தந்திதிரி கடுகுரோகணி
கனமாக வகைக்கு ஒரு நிறையதாக
வாயில்பெரு முருங்கையின்தோல் சாறிலாட்டி
வளம்பெறவே காசிடைதா னுண்ணச்சொல்லு
நோயகலு மனுப்பானந் தன்னிலிய
நால்மேக ரோகமுதல் சூலைவாய்வு
தாயமுள்ள வெசிசையல் கொண்டோன்பாலில்
தனம்போல் வாதமையந் சரியுந்தானே (270)

கலைமான்கொம்புப் பற்பம்.

கலங்கொம்பைக் காணியிலே கவசங்கட்டிக்
கனபுடமா யிட்டெடுத்துக் கலிந்துட்கொள்ள
ஜலம்பெருகு மேகமுதல் ரெத்தபித்தஞ்
சத்திவலி குன்மம்நெஞ் செரிவுகாந்தல்
உலர்ந்துடலங் கருகுமக் கினியின்மந்தம்
உட்காய்ச்சல் நீரெரிப்பு வித்தில்ரெத்தம்
தலங்குபச்சைக் கற்பூரஞ் சேர்த்தேஉண்ணச்
சகலவினை தானகன்று போகுந்தானே. (271)

வெண்குந்திரிக்கப் பற்பம்.

வெண்குந்திச் சுண்ணாம்பு வடிதான்கட்டி
வெளிறுமந்த நீரிலிட்டுக் குழம்பதாக்கி
விண்ணுனுக் கிட்டதுணி யதனிற்றேய்த்து
மயங்காமற் காய்ந்தபின்பு அகலில்மூடிக்
கண்ணுகப் புடம்போட்டு யெடுத்துக்கொண்டு
காலிபசு நெய்யுடனே கலந்துட்கொண்டால்
புண்ணுகும் சிறுநீரு நீருகட்டல்
போக்கிவிக்கு மேகமினிப் போகுந்தானே.(272)

கள்ளிப்புக் கிரந்திக்கு.

கள்ளிப்புக் கிரந்திமெய்யில் வந்ததானுல்
கதிரவன்பேர் கொண்டயிலை தனைப்பிடுங்கிக்
கிள்ளித்தான் நாகவல்லி யிலையுஞ்சேர்த்து
கிருபையுடன் மண்டலந்தான் கொண்டீரானுல்
உள்ளிபுழுப் போலிருந்த கிரந்தி நீங்கி
உதையாதி சூரியன்போ லொளிருந்தேகம்
விள்ளத்தான் போகாது யெவர்க்குமித்தை
மெய்யான உபதேசம் விளம்பினேமே. (273)

பித்த எரிவுக்குச் சூரணம்.

சிரகமும் பலம்நாலு பரங்கிபட்டை
சேரரையாம் முசுமுசுக்கை வேரின்சூர்ணம்
நேரிதுவாஞ் சர்க்கரையாம் சமமாய்ச்சேர்த்து
நெய்தேனில் மண்டலமே கொண்டாயானுல்
மாரெரிவு கபவாதம் பித்தந்தாகம்
மயக்கமொடு குடல்பிரட்டல் வாந்திமூர்ச்சை
ஆரமுட லெரிவுகுன்ம மனேகரோகம்
ஐயமிந்தக் குணங்களெல்லா மகலுந்தானே :()

கண் வியாதிக்கு

குக்குடத்தின் அண்டமதை அவித்துஒட்டைக்
கொட்டிதட்டிப்பிளந்ததற்குள் கருவைவாங்கி
புக்கியதில் கற்கண்டு பொடித்துக்கூட்டிப்
புனலிரங்கும் குறடதினுல் பிடித்துவாட்டக்



கக்கியிடு மிந்நீரைப் பதனஞ்செய்து
கண்ணிலிட நேர்ய்தொண்ணூற் ருறும் நீங்கும்
பக்குவமாஞ் சித்தியிது யாகோப்சொன்ன
பண்டிதமா மிந்நீரு பலிதமாமே (275)

கிரிமிக்குக் கஷாயம்.

முத்தினதோர் புரசம்விரை பேய்பீர்க்குந்தான்
முப்பிரண்டை யோமமிது சமனதாகக்
குத்தியே யிருநாழி தண்ணீர்விட்டுக்
கூட்டியே யொன்றுகக் காய்ச்சிஉண்ண
பத்திநின்ற கிருமியெல்லாங் கூடுகூடாய்ப்
பரிந்துவிழு மர்ம்பருப்புத் தின்ன நீங்கும்
சுத்தமாய் முன்னோர்க ளுரைத்தவார்த்தை
சொன்னதிது கைகண்ட தொழிலுமாமே. (276)

பெரும்பாடு எலும்புருக்கி நோய்க்கு

சக்கரையும் பலம்பத்து பாகதாக்கிச்
சமைத்ததிலே அஞ்சுபலம் பரங்கிப்பட்டை
மிக்கவிதைச் சூரணித்து தூவிக்கிண்டி
மெழுகுபத மாயெடுத்து உண்டாயானுல்
தக்கபெரும் பாடுவெட்டை யெலும்புருக்கித்
தங்காது பத்தியமோ உப்பில்லாமல்
குக்குடத்தி னண்டமன் வேழுநாளுங்
கொள்ளநல முண்மையிது கூறினுரே. (277)

மலட்டுக்கு பச்சைவெட்டு மாத்திரை.

சூதமொடு கெந்தம்வெண் காரம்நேரே
தூக்கியரை தேள்கொடுக்கு குமரிப்பாலும்
வீதமதை யொவ்வொருநா ளரைத்துக்கூட்டி
வியாதியறிந் தனுப்பான விதத்திலீய
வாதமுதல் கனல்ரோகம் ருத்ரவாய்வு
மார்புவலி குன்மவலி சூலையாறும்
சீதமதைக் கொண்டமந் தாரகாசம்
செல்லுமது யிம்மருந்தால் தீருந்தானே. (278)

கெர்ப்பத்திற்கு எண்ணெய்.

தட்டியெடு கொட்டைட்டி வித்தெடுத்துத்
தாஷ்டிகமாய்த் தந்திவிரை யிடையேசேர்த்து
முட்டிதனி லடைத்துநின்று ஆரிற்பொத்து
முக்கியமாய்க் குழித்தைலம் வாங்கிக்கொண்டு
சட்டமாய்ப் பேதிக்குக்கா சிடையேவிட்டுச்
சரியிடையாய் மஞ்சளாறு கலந்துகொண்டு
வட்டலினி மாதவிடாய் நன்னிலுண்ண
வையகத்திற் பாலனது உண்டாம்பாரே. (279)

அரிதார்த் சுடர்த் தைலம்

உரிக்குமட லரிதாரஞ் சுண்ணைப்புக்குள்
ஒருமூன்று சாமமதை நீத்திவாங்கி
முருக்கிலையுங் கரிசாலைப் பழச்சார்விட்டு
மென்மெழுகு போலரைத்துத் துணியிலூட்டி
அருக்கனதிற் காய்ந்துசுடர்த் தைலம்வாங்கி
அதையெடுத்துச் சீசாவி லடைத்துக்கொண்டு
சுருக்கஅரைப் பணவீதங் கொடுக்கவேதான்
சுவாசமொடு மந்தார காசம்போமே. (280)

உஷ்ணவாய்வுக்கு மருந்து.

சிறுகீரை வேர்தூக்குப் பதக்குப்பாலுஞ்
சேர்த்தரைத்துப் படியாவின் நெய்யைவிட்டு
அரைத்தூக்குச் சர்க்கரையு மிளகுஞ்சேரு
அடுப்பினிலே வைத்ததனைப் பதமாய்க்காய்ச்சி
மறக்காம லரைப்பலமாய் ஒருபோதுண்ண
மகாவுஷ்ண பயித்தியத்தின் வாதம்நீங்கிச்
சுருக்குடனே வாதநீ ரிறங்கிமேகம்
சுகமாகுங் கைகண்ட தொழிலுமாமே. (281)

இசிவுக்கு.

உள்ளியுடன் மிளகுசுக்குக் கல்லுப்போடு
ஒருநாழு வெற்றிலையின் காம்புங்கூட்டி
கள்ளியின்சார் விட்டரைத்துக் காய்ந்துவேப்பங்
காயளவு யிருநேரம் ஐந்துநாளும்



கொள்ளுமிதை யிருபுறமு மிழுத்துக்கொண்டு
குத்தலிட்டு அடிவயிறு அண்டம்வீங்கில்
உள்ளங்கால் வலிவீக்கம் வாங்குமென்று
உண்டவர்கள் சொல்வார்கள் உண்மைதானே. ()

அண்டவாய்வுக்கு மெழுகு.

அதிமதுரம் செண்பகப்பூ கழற்சிவேரும்
அதின்கொழுந்து மதின்பருப்பு கோஷ்டம்ஏலம்
பதிலவங்கம் மூடக்கொத்தான் கொழுந்தும்பட்டை
படிமீதி லிவையெல்லாந் தேங்காய்ப்பாலில்
மெதுவுபட அரைத்ததனைக் குழம்பதாக்கி
மெதுவாகத் தின்றுயிரு நேரந்தானும்
விதனம்விடும் மண்டலத்தில் வாதம்போகும்
மெய்யிதுண்மை முன்னோர்சொல் வீண்போகாதே.

அந்தர வாய்வுக்கு.

கல்லுப்பு யிந்துப்பு மிளகுசுக்கு
கழுகுசவுக் காரம்வெங் காரங்காயம்
நல்லஅர பொடிகடுகு ரோகணியும்
நவிலுவேன் பலமாகும் நாலத்தொன்று
சொல்லுமினி மாவுலிங்கம் பட்டைகூட்டிச்
சூரணித்து நாரத்தங் காய்க்குள்ளிட்டு
நல்லினிய பாண்டத்திற் சதுரக்கள்ளி
நறுக்கியிட்டு வெள்ளாட்டின் நீரைவாரே. (284)

சலமதிலே வார்த்திட்டு முன்னேசொன்ன
சரக்கிட்டுக் காயவைத்துச் சட்டிமூடி
நலமெதுவா யிருசாம மெரித்து வாங்கி
நாரத்தங் காய்க்குள்வைத்த சரக்கிற்பாதி
பலமதுவா யுலாவைத்து அரைத்தொன்றுருக்கிப்
பக்குவம தாகஒரு நேரங்கொள்ள
உலகதனி லுள்ள அண்ட வாதமெல்லாம்
ஓடிவிடும் அந்திரவட்ட முண்மைதானே. (285)

அண்டவாதத்திற்கு.

அஞ்செண்ணெய் படிநாழி மணத்தக்காளி
அதின்சாறு படிகலந்து அனல்மேலிட்டு
இஞ்சியதில் மாமஞ்சள் காப்பன்பட்டை
ஈரரையாம் பலமிடித்துத் தூவிக்காய்ச்சி
நஞ்சதோ லகற்றியுள்ளி படியுமிட்டு
நன்முகச் சிவந்தபத மிறக்கியுண்ண்
மிஞ்சுமிரு பீஜஅண்ட வாதஞ்சூலை
மெய்யைவிட்டு அகலுமென விளம்புவாயே(286

குடல்வாதம் அண்டவாதத்திற்கு.

விளக்கெண்ணெய் படியொன்று சாரணையின்சாறு
விட்டதிலே படிரெண்டு கலந்து காய்ச்சி
இளக்கமில்லாப் பெருங்காயம் பலமோரெண்டு
இந்துப்புப் பலம்ரெண்டு பொடித்துத்தூவி
தளக்கமிலாப் பதம்பார்த்து வடித்துக்கொண்டு
சண்டிஅந்திர அண்டத்தின் வாதசூலை
உளத்தியிடுங் குடல்வாதம் வலியுந்தீரும்
உண்மையென்று முன்னோர்கள் மொழிந்ததாமே.

அண்டவீக்கத்திற்கு.

முடக்கத்தான் வேருபட்டை மிளகுபூண்டு
முத்துவிளக் கெண்ணெய்தனிற் காய்ச்சியுண்ண
இடக்கத்தான் விரைவாத மகலுமின்னும்
இயம்பக்கேள் நுணாவின்வேர் காய்வைத்து
மடக்கத்தான் சூரணித்து வைத்துக்கொண்டு
வளர்கையாந் தகரைசெருப் படியின்சாற்றில்
கொடுக்கத்தான் இருகழஞ்சிச் சூரணத்தைக்
கொள்சூலை விரைவாதங் குணமதாமே. (288)

அண்டவாதத்திற்குப்புகை.

புங்கம்விரைக் கழற்பருப்பு மிச்சங்கொட்டை
பொடிசெய்து புளிமரத்தின் பிராணிசுட்டு
அங்கிதனைச் சட்டியிலே யெடுத்துக்கொஞ்சம்
அதிலிடுமுன் சூரணத்தைப் புகையைவீசத்



தங்குகின்ற அண்டத்தில் பிடித்தாயானால்
தளர்ந்திடுமே அண்டத்தின் வீக்கம்வாடி
தொங்குகின்ற வலிநீங்கும் மூன்றுநாளில்
துலைந்துவிடும் விரைவாதஞ் சூட்டிப்பாரே. ()

அண்டவீக்கத்திற்குக் கட்டு.

சேராநின் கொட்டைபலம் மஞ்சள்கூட்டிச்
செறிப்புடனே யிடித்துத்தேன் மெழுகுநேரே
வாராகக் கூட்டியிடி மெழுகுபோலாம்
வலமிடமாய்க் காலிற்கட் டிடவேவாய்வு
வீரமுள்ள கட்டினகாற் பிடிப்புநீங்கும்
விதமான வீக்கமுடன் முழங்காற்கட்டி
பாரமுள்ள திரிநாளில் தீர்ந்துபோகும்
பருதிகண்ட பனிபோலே பறக்குந்தானே. (290)

சூதகமலம் சலம் அடைப்புக்கு.

சுன்னமிட்டுப் பூவமுக்கு வாங்கக்கேளு
சுத்தமுடன் பாணியிட்டுக் கரைத்திறுத்து
நன்னயமாய்த் தெளிவிருத்துக் காய்ச்சவுப்பாம்
நாரியர்க்கு மாதவிடாய் கண்டபோது
இன்னிலத்தில் நீர்க்கட்டு மலபேதங்கள்
இருந்திடுகி லிதைநெய்யி லுண்ணத்தீரும்
கன்னல்மொழி யுமையாள்தான் சொன்னநேர்மை
காசினியில் வயித்தியத்தைக் கண்டுபாரே. (291)

வாதசூலைக்கு பச்சைவேட்டைக் காந்தச்செந்தூரம்.

தாம்பிரமும் காந்தமதைப் பொடியதாக்கிச்
சமன்சேர்த்து வாய்குவிந்த கலயத்தேற்றி
நிம்பநிம்பப் பழச்சாறு மிதக்கவிட்டு
நீக்கமில்லாச் சில்லிட்டுச் சீலைசெய்து
மேம்படநெல் லிருகலத்தில் நடுவேயிட்டு
மெத்திட்டுச் சாலுக்குள் நிழலில்வைத்துப்
போம்படியே மண்டலம்பின் னெடுத்துப்பார்க்கப்
புட்டுப்போற் செந்தூரம் பூப்போலாமே. (292)

ஆமிதனைப் பொடித்துநன்றாய்ப் பதனஞ்செய்து
அனுப்பான விதத்தினிலே யீய்ந்தாயானால்
போம்வினைக ளற்றுவிடும் வாதசூலை
பொல்லாத குன்மமெட்டும் வயிற்றுநோயும்
நிலையறப் பீஷமண்ட வாதவீக்கஞ்
சேருகுடல் வாதமெல்லாங் கடந்துபோகும்.
மாமுனிவ ரெடுத்துரைத்த செந்தூரத்தை
வழுத்தினேன் யாகோபு வைத்தியப்பாரே.(293)

அண்ட வாய்வுக்கு.

கொடிவேலி முருங்கப்பட்டை முதியார்கூந்தல்
கூறுபலங் கழற்பருப்புப் புங்கின்வித்து
இடுகருங்கொள் ளெட்டுபலந் தினையைத்தானும்
இருநாழி சூரணித்து வெண்பங்காக்கி
துடியான பழையமோர் நாழிதன்னில்
துரிதமொரு பங்கிட்டுக் கூழாய்க்காய்ச்சி
அடுத்தடுத்து எட்டுதினங் கொண்டாயானால்
அண்டத்தின் வாய்வுவலி நீங்கிப்போமே. (294)

அண்ட வீக்கத்திற்குப் பத்து.

போமிதற்கு வீக்கம்மேற் பூச்சுக்கேளு
புகழ்நிம்பப் பழச்சாற்றிற் சுக்கையாட்டி
காமியின்மேல் அண்டத்திற் பூசியேதான்
கனமில்லா அனல்காட்டு ரெண்டுசாமம்
திண்மையிலா வலிவீக்கம் வற்றிவாடி
திறப்படுமே முன்பதுபோல் திரும்பிவாட்டு
நாமிதுவே கண்டபடி சொன்னோமுண்மை
நாட்டிலே யெவர்க்குமிதை நவிலொண்ணாதே. ()

சேங்கொட்டைத் தைலம்

முற்றினதோர் பால்நிறைந்த சேராங்கொட்டை
முனையகற்றித் தூக்குரெண்டு நொறுக்கிச்சாலில்
எற்றிய நீர் கலம்விட்டு நாலிலொன்றாய்
இறக்கிட்டுக் காய்ச்சியதை வடித்துக்கொண்டு
வற்றவே முன்போலே காய்ச்சிப்பின்பு
வடியதனைப் பாண்டத்தி லொட்டிநின்ற



சுற்றியதோர் தைலமெல்லாங் காண்டியாலே
சுரண்டிடுமுன் கிஷாயமதிற் கலக்கிச்சேரே. ()

மேககுஷ்டத்திற்கு சேங்கொட்டை லேகியம்.

பாக்கதுபோற் பழுத்தநெல்லிக் காயின்சாரு
படியெட்டுக் கூவிளத்தின் வேர்தோல்தாமும்
தூக்கிரெண்டு நறுக்கியிரு மரக்காற் கியாழும்
சுகமாக ஆம்போது வெல்லந்தானும்
நோக்கமுடன் நூறுபலம் கரைத்துக்கூட்டி
நுணுக்கமாய்ப் பாகுசெய்து காட்டுச்சீயும்
காக்கவே கார்போகம் வாலுளுவை
கருஞ்சீர மோமங்குரோ சானிதானே. (297)

தானியுடன் திரிகடுகு திரிபலையும்மூன்று
தாணியடா தூய்யுமந்தக் கிழங்குதானும்
கானகத்தில் புங்கம்பூ வீழிப்பட்டை
காய்ந்தவகை பலமேழிற் பாதிகூட்டி
ஆனதினிப் பாங்கிப்பட்டை தூக்குஒன்று
அன்பாகச் சூரணித்துப் பாகிற்றூவி
ஊனமிலா ஆவிநெய் படிதான்ரெண்டு
உறுக்கியிட்டுக் கிளறியதைக் கலயத்தேற்றே. ()

ஏற்றியிதை நல்லதொரு சுபதினத்தில்
இருநேரம் மண்டலந்தான் புளிதள்ளெண்ணெய்
மாற்றிவிடு ஆறாத இரணைமேகம்
வாதமொடு கிரந்திசொரி சிரங்குபுண்ணும்
ஆற்றிவிடுங் கடிவிஷங்கள் குட்டமோடு
ஆறாத கைக்குத்தல் மேகஊறல்
பூத்துடனே கடித்ததிமிர் வெடித்தபுத்தைப்
போக்கிவிக்குந் தளிர்போல்மெய் யாகும்பாரே()

உண்ணஒரு மண்டலத்திற் கடிகள்தீரும்
ஊறல்பெரு மேகவித ஊண்களபுத்து
புண்ணதுகள் மண்டலமோ ரெண்டில்நீங்கும்
பொய்யாது குட்டங்கள் ரெண்டிலப்பா

திண்ணமிதில் லோகமொடு நாகங்கூட்டித்
தீர்ந்துவிடுஞ் சக்கரமாய்த் தாரஞ்சூதம்
தண்ணுதலாய்ப் பற்பமே கூடிற்றானால்
நசலுடம்பு தங்கம்போல் நன்மையாமே. (300)

மூத்திர எரிவுக்கு லேகியம்.

கார்ப்பாசிக் கொட்டையின்பால் குருணிகொண்டு
கன்னலெனுஞ் சர்க்கரையுஞ் சேருகூட்டி
நேர்ப்பாக அனலிலிட்டுப் பாகதாக்கி
நெய்நாழி நல்லெண்ணெய் நாழிரெண்டும்
சேர்ப்பாக மெழுகுபத மாக்கிக்கொண்டு
தினங்காண்டி கடுகெண்ணெய்யுண்டாயானால்
நேர்ப்பாகும் வெகுமூத்திர மெரிவுதாகம்
நிற்குமென முன்னோர்கள் நிகழ்த்தினாரே. (301)

நீரிழிவுக்குக் கதலிலேகியம்.

ரஸ்தாளிப் பழமுவேழ் தோலைப்போக்கி
நாட்டினிய சக்கரைசேர் நெய்யும்நாழி
மஸ்தான கசகசா பலமோபத்து
மையாக அரைத்தொன்றாய் மெழுகதாக்கிச்
சித்தாகக் கருவங்கச் செந்தூரங்கூட்டித்
தின்னஒரு மண்டலந்தான் சலரோகங்கள்
வித்தாரத் தாகமொடு மெரிவுதீரும்
மெய்யாக வேயுரைத்தேன் மேதினிக்கே. (302)

ஜலரோகத்திற்கு.

எருமையிடுஞ் சாணியின்பால் சட்டிதன்னில்
இட்டிடுவாய் வேடுகட்டித் தளிர்ஆவாரை
தரித்ததின்மே லிட்டுவதை வேகவைத்துத்
தளிர்தனை யரைத்துருட்டிக் காயவைத்து
உரியிலிடும் நல்லெண்ணெய் கொஞ்சமிட்டு
உண்மைசெப்பு நெருஞ்சிபாக் கள்வுசேர்த்து
இருவகையுந் தயிருடனே அரைத்துக்கொள்ள
இனியமகா சலரோக மேகுந்தானே (303)



புத்தான்சோர்க் கியாழம்.

புத்தியுள்ள சோறெடுத்துக் காயப்போட்டுப்
புரசம்பூ சுக்குசமன் பொடியாய்ச் செய்து
நித்தமிரு வேளையுந்தேன் வெண்ணெய் நெய்யில்
நிகழ்த்தவே அமுதப்பா லந்திசந்தி
ஒத்ததிலே அனுப்பானத் துடனேயீய்ந்தால்
உடலுக்குள் சலரோக் நீர்கள்போகும்
வத்தவைக்கு மேகசுரம் விலகிப்போகும்
வழங்கியதோர் நல்மருந்து வழுத்தினேனே. ()

நீரிழிவுக்கு.

வன்னியிலை யுடனேதா னத்திப்பிஞ்சும்
வகையாக நிழலுலர்த்திச் சூரணித்து
நன்னயமா யெருமைப்பால் தன்னிற்போட
நலமான பாலதுவுந் தோய்ந்துபோகும்
சொன்னதிதை நல்லெண்ணெய் தன்னிற்சேர்த்து
சுகமாக மூவிரண்டு நாள்தான்கொள்ள
முன்னுரைத்த நீரிழிவு சலரோகங்கள்
முழுதுமே போகுமென்று மொழிந்தவாறே. ()

கோவைகந்தம் பாலுடனே கொண்டாயானால்
குடிபோகும் சலரோகம் நிம்பச்சாரில்
பூவில்பெரும் நல்லெண்ணெய் கலந்துகொள்ளில்
போக்கிவைக்கும் நீரிழிவைப் புகலக்கேளு
ஆவினுட பால்குருணி யிடையிற்காசு
அபினிட்டுக் குழம்பாக்கி யவ்வீராளி
பாவினைசெய் தளந்துழக்குத் தின்றாயானால்
பறக்குமகா சலரோகம் பண்பதாமே. (306)

நீரிழிவுக்கு இடிமருந்து

சுத்தித்த காரீயம் பலமும்ரெண்டு
தூய்யதிரு நீர்படியு மதின்மேலிட்டு
மத்தித்த சிறுகீரை வேரைக்கொண்டு
வருத்திடவே காரீயம் பற்பமாகும்

ஒத்திட்ட கடல்ராஞ்சி ஆவாரம்பட்டை
உலர்த்திடித்து மூன்றுவகை சமனாய்க்கொண்டு
சித்தித்த தயிர்பதக்குப் பாண்டத்திட்டு
சீலைகொண்டு வேடுகட்டிச் செப்பக்கேளே. (307)

செப்பக்கேள் ஆவாரைத் துளிரைத்தாலும்
செம்மிட்டு மேற்பரப்பி மருந்தைவைத்து
அப்பதின்மேற் சீலையிட்டுச் சட்டிமூடி
அனலிவிட்டு யிருசாம மெரித்துவாங்கி
ஒப்பதமா மருந்திலையு மரைத்து உண்டை
உலர்த்தியதைத் தயிரிலிட மதுமேகங்கள்
கொப்பெனவே நீரெரிவு வாதந்திரும்
குணமாகும் நீரிழிவு கொடுத்துப்பாரே. (308)

சூதவங்க மெழுகு.

சூதமதைக் காரீயத்தோ டுறவதாக்கிச்
சுதாகமத்து முள்ளுலகு கருவேல்வேம்பு
ஓதியம் பிசின்கிராம்பு குரோசானியோடு
ஓமமல்லி சாதிக்காய் சிறுநாகப்பூ
சாதியிலைக் கசகசா யேலத்தோடு
சடாமாஞ்சி மாமஞ்சள் கடல்ராஞ்சியும்
சீதமலர் கேசகமு மிவைகள்வாங்கித்
திரிபலையும் வகைக்குஅரைப் பலமுங்கூட்டே()

கூட்டுசம னுவாரை வித்தின்சூரணம்
குறைத்துஅத்தி மரத்தின்வேர் நீரைவாங்கி
ஆட்டியதைக் கழற்சிக்கா யளவுஉண்டை
அனுப்பானந் தயிர்தேனி லுண்டாயானால்
நாட்டுகின்ற நீரிழிவு அங்கதாகம்
நாவறட்சி தாகமொடு மதுமேகங்கள்
ஓட்டிவிடும் இம்மருந்தை யெடுக்கும்போதே
உண்டவுடன் சுகமாக விருக்குந்தானே. (310)

நீரழிவுக்கு மெழுகு.

நெருஞ்சகத்தி நாயுருவி வெல்வேலாத்தி
நீர்முள்ளி ஆவாரை வாகையோடு



கருங்காலி விரைவகைக்குப் பலமும்நாலு
கடலீழிஞ்சி கருவேலும் நாவற்பட்டை
திரிபலையும் முள்ளுல்கும் பிசின் ஆலத்தி
சேர்ந்தமா தளம்பிஞ்சு மூன்றுமாகும்
கருத்தநிலப் பனைக்கிழங்கு தேத்தாங்கொட்டை
கருமத்தங் காயின்விதை பலமும்நான்கே (311)

நாங்காகுஞ் சரக்குகளை வறுத்துக்கூட்டி
நையயிடி சூரணமும் படியாம்ரெண்டில்
பாங்கான முன்தைலம் படியுமொன்று
பச்சைத்தண் ணீர்படியுங் கலந்துகொண்டு
நீங்காமற் சூரணத்திற் கிளறிவிட்டு
நிகழாமற் பிசறியே மெழுகதாக்கு
வாங்காமல் தோண்டிதனில் மருந்தையிட்டு
வாய்க்குநல்ல சீலைகட்டி வழுத்தக்கேளே. (312)

வழுத்தக்கேள் வாயகன்ற சட்டிதன்னில்
வாருயிரு படி நீரை யதிலேவிட்டு
அழுத்தியந்த மருந்திட்டுத் தோண்டிதன்னை
அப்புதனிற் படாமல்குப் புத்துமூடி
குழுத்தியிடு சீலைசெய்தா வாரைதன்னைக்
கொண்டுவந்து பச்சையா யெரித்துப்பாரு
உழத்திய நீர் வற்றியபின் னெடுத்துஆற்றி
ஊற்பனமா யனுப்பானத் துடனேயீயே. (313)

மேகரோகி தாகத்திற்கு.

ஈயவே குணமாகுஞ் சலரோகந்தான்
எடுக்குகின்ற தாகங்கள் தீரவேண்டி
சீயஅதி மதுரேலம் வில்வம்வெட்டிச்
சீரகமுஞ் சிறுகீரை குருந்திநோடு
தாய்முள்ள கதலிவெல்லம் நல்லதாகச்
சந்தனத்தூள் பனைவெல்லம் புளிவெங்காயம்
நேயமா யிடித்ததனைத் துணியிற்கட்டி
நேராகக் கிசாயமிட்டு அதை நீஉண்ணே. (314)

நீரழிவுக்கு ஆவாரைச் சூரணம்.

நன்றினிது ஆவாரை காய்ந்தவித்து
நலமாகச் சூரணித்து யெடுத்துவைத்து
குன்றுதிரி பலைச்சாரி லவைப்பலத்தைக்
குழித்தைல மாயிறக்கி ஊசிக்காந்தம்
ஒன்றுபலந் தான்சேர்த்துச் சூரணித்து
ஒருகவசந் தனிலிட்டுப் பிசைந்துகொண்டு
அன்றுமே மூன்றுபடி நீரைவிட்டு
அடைவாகக் கவசமது செய்துகேளே. (315)

ஆக்கவே கவசவாய் தீப்படாமல்
அந்தரத்தின் மேற்சட்டி கவிழ்த்திமூடி
வாக்கினிய சீலமண் நாலுசெய்து
வைத்தநீர் சுவறவற்ற யெரித்துவாங்கி
பாக்களவு தயிரிலிடச் சலரோகங்கள்
பறக்கும் நாவறட்சிக்கு நெற்பொரியும்
தாக்கதில் வாழைப்பழம் புரட்டியுண்ணத்
தாகமுடன் வறட்சிபோந் தன்மைதானே. (316)

பஞ்சலோக மாத்திரை.

வங்கம்அயம் அப்ரேகம் காந்தம்நாகம்
வகைக்குஒரு பலமாகுஞ் செந்தூரஞ்செய்
இங்கைந்துநேர் தாவரையின் வித்துஞ்சேர்த்து
இருங்கதலி சந்தனநீர் இதில்விட்டாட்டி
புங்குவிதை போலுருட்டி அனுப்பானத்தில்
புகட்டிடவே சலரோகம் மேகவாய்வு
தங்கியிடா தகலுமென மூன்றோர்சொன்ன
சாஸ்திரத்தின் படியுரைத்தேன் சார்ந்துபாரே. ()

நீரிழிவுக்கு திரிவங்க மாத்திரை.

காந்தமொன்று வங்கம்ரெண்டு அப்ரேகமூன்று
கல்சத்து நாலுதிப்பப் பிசிறேடைந்து
சார்ந்துபட நிம்பயிலைச் சாரிலாட்டித்
தருமிலத்தை விரையளவு திரட்டிக்கொண்டு.



சேர்ந்தவகை அனுப்பானத் துடனேயீயத்
தீர்ந்துவிடும் கிரிச்சனங்கள் மூவேழ்மேகம்
சோர்ந்துவிடும் பொய்யாது மெய்யாமுண்மை
சொல்லினார் யாகோபு திறமைதானே. (318)

சுக்கில மேகத்திற்கு

செக்கிலிட்ட தேங்காய்நெய் படிதானெட்டில்
சிறுகீரை நெருஞ்சிகள்ளி முசுக்கைவேரும்
தக்கிடையாம் வகைக்குரெண்டு பலமேதாக்கி
சந்தனம்போ லரைத்தெண்ணெய் கலந்து நீயும்
பக்குவத்தி லெரித்திறக்கி வைத்துக்கொண்டு
பருக்ஒரு மண்டலத்தில் மூவேழ்மேகம்
சுக்கிலந்தான் வற்றியுற்ற மேகமப்பா
சுகமாகும் யாகோபு சொன்னவாறே. (319)

மந்தார காசத்திற்கு

தொந்தமிந்த மந்தார காசத்துக்குச்
சூட்சமாய் மருந்தொன்று சொல்லக்கேளு
அந்திசொடா வசம்புகா சிடையுமூன்று
அரைத்தபொடிக் கதலியுட பழத்திலூட்டி
முந்திதொடு துண்டபின்பு போரைக்கூட்டு
மோசமில்லை வாந்திபண்ணும் முடுக்கும்அய்யம்
சிந்தியபின் பத்தியமோ மோருஞ்சோறும்
செலுத்திடு மூன்றேநாளிற் றீருந்தானே. (320)

கடைச்சரக்குத் திராவகம்.

வனமிருந்த மூலிகையுங் கடைச்சரக்கும்
வாதபித்தம் அய்யமதிற் சேர்க்கையான
இனமறிந்து கூட்டியிதை யிடித்துவாலை
இட்டுநீர் விட்டுமிதை ரவியில் வைக்க
அனல்பிறந்து கொதிப்பெடுத்துப் பொங்கிநிற்கும்
அதுபதமென் றறிந்துமே வாலையிட்டு
தணலெரித்துப் பொங்காமல் மெதுவாய்த்தீயை
தானெரிக்கத் திராவகமும் வருகும்பாரே. (321)

மலசலக் கட்டுக்கு.

தண்ணீர்மிட்டான் கிழங்கும் பழத்தின்சாருந்
தனித்தனியே உழக்கு அதி மதுரம்யேலம்
எண்ணியிரு காசிடையுங் கரைத்துக்கொண்டு
இதற்குநேர் சர்க்கரையுங் கலந்துஒன்றாய்
புண்ணியஞ்சேர் பரப்பிர்மந் தன்னைப்போற்றிப்
போதரவாய்ப் போதகத்தை மனத்திருத்தி
உண்ணிடவே மலசலமும் நீங்கிவாதம்
ஓடுமென்றே யாகோபு உரைத்திட்டாரே. (322)

சுரத்திற்கு.

கடுவிடத்தைக் கல்வமிட்டு உலாவிநின்ற
காலாறு பறவையது சதம்பிடித்துப்
படருகின்ற யிம்பூரல் கூடவிட்டுப்
பாங்குபெறக் கல்வத்தி லரைத்துநன்றாய்
உடலிலுள்ள நடுக்கல்சுர முறையிட்டாலும்
ஓடியொளித் தொளிந்துவிடு மென்றுமுன்னோர்
திடமுடனே யிம்மொழியை யாகோபுசொன்னார்
திறமதனைத் தெளிவதனாற் றேர்ந்துகொள்ளே ()

அரையாப்புக் கட்டிக்கு.

வீரகெந்தி சமனிறுத்துப் பொடியதாக்கி
மெதுவனலி லுருக்கியதை ஆறவாங்கி
திரமுடன் சுண்ணாம்பு நீர்விட்டாட்டித்
திரண்டுவருங் கட்டிதன்னி லிருநேரந்தான்
சேரயிதைப் பூசியிடு வருத்தம் நீங்கிச்
செனித்தயிடந் தெரியாமற் கரைந்துபோகும்
பாரிலுள்ள கட்டியதற் கெல்லாமாகும்
பரிட்சைபார் நிசமாகப் பலிக்குந்தானே. (324)

பதினெட்டுக் குட்டத்திற்கு.

ஏறுகின்ற அழிஞ்சில்விரை தோடுபோக்கி
இந்திடைக்குப் பூரமதை யியல்பாய்ச்சேர்ந்து
ஊறுசுற்றிப் பாலைச்சேர்த் தரைத்துக்கொண்டு
உறுதிபெற அனலில்மெள்ள வறுத்துப்பின்பு



கூதியதை இலவம்விரைப் பிரமாணந்தான்
கொண்டிடவும் நல்லெண்ணெய் யாகாதென்று
பாரிலே குஷ்டமது பதினெட்டுந்தான்
பதியைவிட்டு ஓடுமென்று பகர்ந்தார்பாரே. (325)

திமிர் மேகத்திற்கு.

இறங்கழிஞ்சில் வேர்த்தோலைப் பொடியாய்ச்சீவி
இனிதான கதிரவன்முன் காயவைத்து
திறமதுகுன் றுமலேமான் கொம்புதன்னை
நிறையாகச் சேர்த்தரைக்கா சிடையவ்வீதம்
உறும்படவே வெண்ணீரிற் கரைத்துக்கொண்டால்
ஓதரிய திமிர்குட்டம் முதலாய்த்தீரும்
பரங்கொடுக்கு மதின்தயில் மகாநோய்தானும்
பரமாகத் தீருமென்று வழுத்தினாரே. (326)

தாளகச் செந்தூரம்.

ஆனைக்கால் மூலிகையை யரைத்துத்தாரம்
அதின்மேலே கட்டியிடு அடுத்துக்கேளு
கோனமாய்த் தேங்காயை உடைத்துஉள்ளே
குணமாகச் சூரண்டியிட்டு அதற்குள்வைத்து
வானதுவும் மூடிரெண்டும் பொருந்தப்பார்த்து
வடிவான புடம்லெகுவாம் அரிதாரந்தான்
தானதுவுஞ் செந்தூர மாகும்பாரு
தானருந்தச் சுரகாச சயமும்போமே. (327)

தாளக பற்பம்.

மடந்தைதனைச் சுத்திசெய்து சினப்ரெட்டி
மதிபோலே பூதியெடு சுண்ணமாகும்
குடங்கையினு லதைக்கருவி லரைத்துக்கொண்டு
கோதையந்த வாழ்மடந்தை மேலேமூடி
திடப்படவே வெய்யோனிற் காயவைத்துச்
சிறுபுடமாய்ப் போட்டெடுக்கப் பற்பமாகும்
உடம்படவே உண்டுவிடு பணமதாக
உற்றுநின்ற காசசய மோடிப்போமே. (328)

நீரிழிவுக்கு கருவங்கப் பற்பம்.

காரிய மேயிருக்க செகுராமன்முன்
　　கமலதிரு ஜானகியைக் கண்டுகொள்ள
வாருதியை யடைக்கமிகு வருத்தஞ்செய்து
　　வமுத்தியபின் னரியபொருள் வால்மீகத்தில்
சோறுதனைக் கல்ந்தெடுத்துத் தூவ நீருஞ்
　　சுவறிவற்றித் தென்கடலுந் தூர்வதாகும்
நீரிழிவுக் கிதையிடவும் நிமைக்குமுன்னே
　　நிறுத்துமென்று முன்னோர்கள் நிசஞ்சொன்னாரே.

தேகபுஷ்டி லேகியம்.

மேனியிலைப் பூக்கொன்றை கையான்பாநிரி
　　மிக்கயெடு நால்ச்சரக்கு மிடையேசேர்த்து
வானிலுயர் கதிரவன்முன் காயவைத்து
　　வடியிடித்துச் சர்க்கரைநெய் சேர்த்துக்கிண்டி
தேனதனில் மண்டலமு விரலின்வீதஞ்
　　செலுத்திடவும் நாள்தோறும் புத்தியுண்டாம்
நானிலத்தில் தேகமது பொன்போலாகும்
　　நலமான தேகமயம் நாடுந்தானே. (330)

அயச் செந்தூரம்.

உல்லாச மாயிரும்பை நையத்தட்டி
　　உறுதியுட னதைமடக்கிக் குகையிலிட்டு
சல்லாப மானஉலை தன்னில்வைத்துத்
　　தனைச்சிவக்க ஊதிநிறந் தன்னைப்பார்த்து
மெல்லாக நாறும்பூ விடையேதாக்கு
　　மிதமான மயில்நிறமா யுருகும்பாரு
நல்லாக அதையெடுத்துக் கல்வமிட்டு
　　நாடியே யாகோபு நலஞ்சொன்னாரே. (331)

நாடியே பொற்றலையின் சாறினாலே
　　நலப்பெறவே அரைத்துகதிர் காயவைத்து
மூடிபுட மாறிட்செந் தூரமாகும்
　　முறுதிபெறப் பணவிடைமண் டலமேகொள்ள
கூடியே நரம்பிலுகும் விந்துகட்டும்
　　குணமாக ரோகமெல்லாங் குடிவிட்டோடும்



தேடியே சூரியன்முன் னிருளைப்போலே
　　தீர்ந்துவிட யாகோபு திறஞ்சொன்னாரே. (332)

கெந்தி சுத்தி.

நாறும்பூ தனையெடுத்துக் கல்வத்திட்டு
　　நாடிபுளி யெலுமிச்சம் பழச்சாராலே
கூறுபட அரைத்துலர்த்திக் கரண்டியிட்டுக்
　　குணமாகக் கரிநெருப்பி லுருக்கிப்பாலில்
வேறுபடச் சாய்த்திட்வே நாலுரெண்டு
　　விதமாக அரைத்துருக்கிச் சாய்க்கவெண்ணெய்
ஊறவிட்டுக் குடிபோகு மென்றுசொன்னார்
　　ஊக்கமா யாகோபு உலகிற்றானே. (333)

வெள்ளி சுத்தி.

துய்யாலுங் களஞ்சிரெண்டு காரிரெண்டு
　　துப்புறவா யுருக்கியே ஊதநன்றும்
மெய்யாகச் சிறலற்றுத் துய்யானாகும்
　　மேன்மைபெறத் தகடடித்து யிடையேபூவை
நையவே அன்னமிட்டு அரைத்துப்பூசி
　　நலமாக அந்திடைக்குப் புடத்தைப்போடு
வையகத்தி லிப்படியே புடமைத்தானல்
　　வகையாகக் கரியாகும் வழியைக்கேளே. (334)

மாற்றேற வெள்ளி.

கரியெடுத்துக் காரினே ரிடையாய்க்கூட்டிக்
　　கணக்காக உருக்கூது ரசிதமாகும்
பரிபோலே ஓட்டிவிட்டுப் பழுக்கச்சுட்டால்
　　பாகமாய்ப் பொன்போலே பழுக்கும்நேர்மை
விரிவான யிந்தவெள்ளி நலமதாகும்
　　வேதைக்கும் புடத்துக்கும் நிலைக்குமென்று
சரியாக யாகோபு தானுஞ்சொன்னார்
　　சத்தியமா யிந்தமுறை தாக்கிப்பாரே. (335)

ரசமெழுகு.

அருகுருணி நீர்விட்டு நிம்பமூலி
　　அரித்துமே பாண்டந்தி லிட்டுநீரை

இருபடியாய்க் காய்ச்சியதை யிறுத்துக்கொண்டு
இன்பமாய் அரன்பீசம் பலமுமிட்டு
குருகயெரி விளக்குப்போல் குழம்பதாக்கிக்
கொட்டியே கல்வமிட்டுச் சாமமாட்டி
பருகயெடு மெழுகாகும் பணமேயிட்டால்
பறக்குமே ரோகமெல்லாம் பண்பாய்த்தானே ()

ரசம் உண்ட வீரடங்க.

புங்கவேர் தென்னம்பூ பாளைக்குள்ளே
பூவுருவி யுடன்மிள காறுங்கூட்டி
மூங்கபடி பாணிவிட்டு வெட்டொன்றாக்கி
மூநுபசு வெண்ணெய்யிலே யருந்துமூன்று
சங்கரன்றன் விந்துரச வீரடங்கும்
சரீரசுக முண்டாகும் எரிவுபோகும்
பங்கமுள்ள நீர்க்கட்டும் ஓடிப்போகும்
பதிவான யாகோபு பாலித்தாரே. (337)

இளம்பிள்ளை வாதத்திற்கு எண்ணெய்.

குமரகுரு பரனேறும் பட்சிதன்னைக்
கொண்டுவந்து சிகைபிடுங்கிக் குடலைப்போக்கி
அமரவே உரலிலிட்டுப் பரங்கிப்பட்டை
அடைவான சேரரைக்கால் உள்ளிநேரே
சிமரயிடு காயமது களஞ்சிநாலு
சேர்த்திடித்துப் பாண்டமதி லிட்டுப்பாணி
நமரயிடு வெட்டொன்றாய்க் காய்ச்சிக்கொண்டு
நலமாக வடிகட்டிச் சட்டியூற்றே. (338)

ஊத்தியே நீம்பெண்ணெய் படிதான்வாரு
உறுதிபெறத் தீயதனை விளக்குப்போலே
பாத்துமே யெரித்திடு நீ திரியைத்தோய்த்துப்
பதமாகக் கொளுத்திடவே பற்றிற்றுனெண்
நாற்றிசையு மெண்ணெய்பத மாகும்பாரு
நலமாகு மெண்ணெய்யைத்தான் காண்டிவீதம்
சேர்த்துஉண்ண யிளம்பிள்ளை வாதந்தன்னைச்
சிதைத்துவிடும் முடக்குவா தங்கள்போமே. (339)



சுர சன்னிக்கு.

குமரனுட மனைவியைத்தான் மூலம்வாங்கிக்
குணமாக அத்திடைக்குச் சித்ரமூலம்
நமரவே சேர்த்திடித்துப் பிட்டுவைத்து
நலமாக உண்டிடவே யெட்டுநாளில்
தமரகமும் பெருமூச்சு காசம்நீங்கும்
தக்கவே சுரவாய்வு தன்மையாகும்
நமரசன்னி தாகமொடு நாடாதோடும்
நாட்டோர்க்கு யாகோபு நலஞ்சொன்னாரே. (340)

வெட்டைக்குத் தைலம்.

தவளநிற எலுமிச்சம் பழத்தைவாங்கித்
தாக்காக சாறுதா னெடுத்துக்கொண்டு
கவனமா யொருகரண்டி யெடுத்துமேதான்
கரண்டியிடை நல்லெண்ணெய் கலந்துசேர்த்துப்
பவளமா யிதைக்குடிக்க ஆறுநாளும்
பதிவான நீர்ச்சுருக்கு வெள்ளைவீழ்தல்
குவளைநிறப் பிரமேகம் போகுமென்று
கூறினார் யாகோபு குணமிதாமே. (341)

சன்னி வாய்வுக்கு.

கறைகண்டன் கருப்பியது யிடையேசேர்ந்துக்
கனிந்துருக்கிக் கல்வத்தி லுடைத்துநன்றாய்
நறைகொண்ட நாற்றமது முக்காலிட்டு
நாடியே பண்ணையுரை வீரம்காலாம்
திறைகண்டு பாணியையும் விட்டேதானும்
திறமாகப் பத்தெருவிற் புடத்தைப்போட்டு
துறைகண்டு பணவிடைதா னுள்ளேகொள்ள
சுகசன்னி வாயுவொடு நோய்கள்போமே. (342)

சிவனார் வேம்புத் தைலம்.

தக்கசிவன் மூலியிடை பாங்கிப்பட்டை
தாக்கியிது நேர்படவா னுளுவைகூட்டி
மிக்கயிந்த ரவியிலிட்டு உலரவைத்து
விதமான கலசத்தி லடைத்துமூடி

பக்கமுடன் குளித்தைலம் வாங்கிநன்முய்ப்
பர்கமுடன் கரண்டியள வாகவுண்ண
நக்குவிஷ கடிகளுட குஷ்டம்போகும்
நலமாகும் வண்டுகடி திருந்தானே. (343)

துருசுச் சுண்ணம்.

உல்லாச யாய்க்கண்டர் பலமெடுத்து
உறுதிபடச் சட்டிதனிற் கிளிஞ்சிற்சுண்ணம்
நல்லாகப் படிரெண்டு யிட்டமுக்கி
நலமாகக் கண்டரைத்தா னடுவில்வைத்து
சொல்லாக வதின்மேலே கிளிஞ்சி நீற்றைச்
சுகமாகக் கொட்டியே அடுப்பில்வைத்து
நல்லாகச் சாமம்ரெண்டு யெரித்துப்பாரு
நலமாகச் சுண்ணமிது நாட்டுள்ளோரே. (344)

வங்கச் சேந்தூரம்.

எரித்துயெடு துரிசதுதான் சுண்ணமாகும்
இதமான காரீயம் பலமும்நாலு
கருத்தநிற அயக்கரண்டி தன்னிலிட்டுக்
கருணைபெறக் கரிநெருப்பி லுருக்கிமேலே
வறுத்துவிடு வெடியுப்புப் பலமும்ரெண்டு
வண்மைபெற அதின்மேலே போட்டுக்கிண்டு
பெருத்ததொரு குங்குமத்தின் நிறமேயாகும்
பேசரிய வங்கத்தின் பெருமைகேளே. (345)

தாரக் களங்கு.

பெருமையாய்ப் பலம்நாலு கல்வத்திட்டுப்
பிலமாக அன்னமிட்டு வில்லைதன்னை
அருமையாய்க் கதிரவன்முன் காயவைத்து
அருள்பெருகும் மூன்றுபுடம் போடச்செம்பாம்
கருநீல கண்டாது யிடையேசேர்த்துக்
கருவான அன்னமிட்டு அரைத்தெடுத்து
அருமைபெறத் தாரத்திற் கங்கியிட்டு
அடைவாக ரவியில்வைத்துக் காயவையே. (346)

கல்லுப்புப் பலம்நிறுத்துக் கல்வத்திட்டுக்
காரனமாய்க் கிளிஞ்சிசுண்ண மிடையேபோட்டு



நல்லுளவாய் அரைத்திடுநீ மேனிநீரால்
நலம்பெறவே முன்னுண்டை மேலேகட்டி
செல்லொத்த கதிரவன்முன் காயவைத்துச்
செழிப்பாகப் பிரிதிவையுங் கவசங்கட்டி
சொல்லொத்த புடம்போட்டு மண்ணைநீக்கு
சுயமாக உள்மருந்து களங்கமாமே. (347)

நல்லாக யிப்படிக்குப் புடமும்மூன்று
நாடியெடு ரவியுருக்கி யிடையேதாக்கு
சொல்லும்போற் பொடியாக்கி மயனம்போலாம்
சொகுசாக யெடுத்துநிறு நாலிலொன்று
கொல்லுமதை உருக்கியெடு கருப்பிகூட்டிக்
கோதையர்பால் விட்டரைத்துப் புடமூன்றிட்டு
வெல்லுமது குருவாகும் யெடுத்துப்பூச
விரும்பியதை யாகோபு விளம்பினாரே. (348)

அடுத்துநின்ற மதிநாலு யிட்டுருக்கி
அகமகிழக் குருரெண்டு கரியில்வைத்து
நடுத்தரத்தி லுருக்கியெடு கருப்பதாகும்
நலமிதுதா னதையூத வயம்போலாம்
கடுகளவு யேமமதை விட்டுருக்கக்
கனகமதை அடித்துபுட மூன்றில்தங்கம்
படுத்திடமா யிரங்கிரெண் டிடைதானிற்கும்
பாலித்தார் யாகோபு பழக்கத்தாலே. (349)

உறவுடைய வாதிக்கு இப்பாகத்தை
உண்மைசொல்லி நூல்கொடுத்து உறுதிகாட்டு
திறமுடைய சிந்தனையாய் நேசமாகும்
சிலரிடத்திற் பேசார்கள் ஞானந்தன்னை
குறவனைப்போல் பார்த்துமே செய்கைபாரு
குடிலமது செய்யாமல் குருவைச்சொல்லு
திறமில்லா வாதிக்குக் குருசொல்லாதே
செப்பினார் யாகோபு திறமிதாமே. (350)

அயச்செம்பு.

இரும்பையிட்டுச் செம்பையெடு மதியிற்குக்கு
இனிதாகப் புடமிறங்கும் யேங்கமாட்டார்
கரும்பிலுள்ள யெண்ணெய்தன்னை யூய்ச்செம்பு
கனமாகப் பழுத்துவிடும் கனகமாகும்
தரும்பிலிடத் தாளுநும் தொந்தமாகும்
அயர்ந்துமே வாதங்கள் நிலங்கிநிற்கும்
குரங்கையொத்த மனக்குரங்கை யிருத்திக்கும்பி
குணமுடனே யாகோபு கூறினாரே. (351)

நெடியோனின் விந்துசத்தி திரிபலாதி
நோகத் தந்திவிரை திரிநேரிட்டு
படியாகப் பாணிபடி அரைநாளொன்று
பயமளவு செய்தயிஞ்சிச் சாரிலுண்ண
குடிபோகும் வியாதியுடன் வாதபித்தம்
குணமாகுந் துளசிதன்னில் சுரமெல்லாம்போம்
முடியதனிற் கங்கையைத்தான் தரித்தயீசன்
மூவர்த்தியென்மே லாசைகொண்டு மொழிந்தவாறே.

காரீயஞ் சுத்தி

சிராவணர்மம் பல்நாலு காண்டியிட்டுக்
கேள்குமரிச் சோறுதன்னைப் பிழியந்தண்ணீர்
சிரவணமா யுருக்கியேட்டுத் தரமுமூந்து
சிடங்கிக் கசடற்றுந் திடயேயாகும்
மூரவரியத் துருத்திகொண்டு உலையிலிட்டு
முடிவுபெறக் கடியஅனல் தன்னிலிட்டு
அரவளமா யுருக்கியே விடவுஞ்சொன்னார்
சுத்தியாம் யாகோபு சொன்னவாறே. (353)

காரீயச் செந்தூரம்.

சுத்தித்த காரீயம் நையத்தட்டிச்
சுழற்றியரை அன்னத்திற் சாமம்நாலு
புத்தியாய் வெய்யோனிற் காயவைத்துப்
போட்டிடுநீ கசபுடத்தில் முருக்கம்பூவாம்
நித்தியமாய் மதுவிலிடு சுடலையாக
நோரான பிரமேகம் வெட்டைகுஷ்டம்



சித்தியா யேகுமென்று யாகோபுசொன்னார்
சீர்பெறவே பண்டிதந்தின் செயலிதாமே. (354)

அழுக்ககற்றுங் கற்சுண்ணம் நேராயிட்டு
அதையளந்து சட்டியிட்டு பாணிசொட்டி
விழுக்கருத்த ஞானிசினை பத்துமேதான்
விட்டுநீ கொதிக்கவைக்க யெண்ணெய்கக்கும்
நழுக்கயெடு கல்வமிட்டு அரைத்துஊது
நல்லசுண்ண மாகுமதை யங்கம்நேரே
இழுத்தரைத்து வில்லைதட்டிக் காயவைத்து
இன்தயூதக் கடுஞ்சுண்ண மெனச்சொன்னாரே.

தாளகச் செந்தூரம்

சுண்ணமிடை மடலரியைச் சேர்த்துக்கல்வம்
சுயமான அன்னமிட்டு அரைத்துமூன்று
சொன்னபடி புடமிடுநீ சிகப்புமாகும்
சுகமாய்நெய் தேனிலிடு காசமேகும்
மின்னலுடைகாசம்போம் மேகம்போகும்
மிகுவெட்டை சலமேகம் விடுபட்டேகும்
தன்னிகரிற் போகுமென்று யாகோப்சொன்னார்
சரியான பாகமிது கண்டுகொள்ளே (356)

சுர மாத்திரை.

நாற்றமொடு நாரிவிடு மிரதங்காரம்
நல்மிளகு வகைக்கொன்று கல்வமிட்டு
போற்றியரை நாரியர்பால் மணிபோற்செய்து
புகலரிய மிஞ்சிபிழிந் தண்டையொன்று
ஏற்றியிடு சுரங்களெல்லாங் குடிவிட்டோடும்
இதங்கெட்ட பிணியகலுங் குடிவெளியிலே
நாற்றிசையிற் கெருடன்கண்ட சர்ப்பம்போலே
நாடாமலோடுமென்று நவின்றிட்டாரே. (357)

சத்திகுன்மத்திற்கு புலிச்சாணிச் சிராவகம்.

புலிச்சாணி மேதகமும் மூன்றுக்கு
புடட்டியே முன்புகைநீர் விட்டடித்து

ம1682

வலியவிடு வாலையிட்டுப் புகைநீர்வாங்கி
வடிகரண்டி நெய்யிலிட்டு அந்திசந்தி
கெலியாகும் வயிற்றுவலி செரியாயாந்தம்
கேள்பொருமல் சத்திருன்பங் குடிவிட்டோடும்
மெலிவாகும் இரவிகண்ட யிருளைப்போலே
யேகுமென்று யாகோபு பலன்சொன்னாரே (358)

பாண்டு காமாலைக்கு.

ஓரிலைத்தா மரைவேரு கதிரிலிட்டு
உலர்த்தியே யிடித்துபொடி யாக்கிவைத்து
சாரியிதை மூவிரற்று ளெடுத்துக்கொண்டு
சரியிடையா ஆவிநெய்யிற் குழைத்துவுண்ண
பாரிலிரு மண்டலமே கொண்டாயானால்
பகர்ந்தபித்தப் பாண்டுகா மாலைசோகை
ஊரிலில்லா தோடுமென்று யாகோப்சொன்னார்
உண்மையாய் மானிடர்க ளறியத்தானே. (359)

பெருவயிறுக்கு.

கிழவியென்ற முருங்கைத்தோல் பொடியதாக்கிக்
கிருமித்துக் காயமெட்டி லொன்றுசேர்த்து
பழையபடி பொடித்துரவி காயவைத்துப்
பதிவான வெருகடிதாள் கொண்டுபாரு
வளமான வாதம்பெரு வயிறுசோகை
வதைக்கின்ற சூலைபிணி மாண்டுபோகும்
இளவயதில் வந்தபிணி தீருமென்று
யிருந்துரைத்தார் யாகோபு யிதமாய்த்தானே ()

வெடியுப்புச் சுண்ண வேதைக்குரு.

க்குருவையெடு வெடியிண்டசேர் கரண்டியிட்டு
கணக்காக அனல்தனிலே உருக்கிக்கட்ட
திருவளரும் வங்கமதிற் சேர்ந்துபோகும்
திட்டமுடனே நாகமது கட்டிப்போகும்
பருகவே அநரசதுவுஞ் சுண்ணமாகும்
படுமுன்னே சரக்கெல்லாங் கட்டிப்போகும்
முருகவிழுங் குழலாள்தன் பாலைக்கூட்டு
முடியுமது வேதைக்குக் குருசொன்னாரே. (361)



சவுக்காரம் எண்ணெய் கழற்ற.

திங்கள்தனி லுற்பவித்த உப்புநீரை
செயமாக முறிக்கவது பாணியாகும்
உங்களுட வாலைதனில் வைத்துமூடி
உறுதியா யெரித்திடவே நல்லதண்ணீர்
பங்கமது வாராமற் சவுக்காரத்தைப்
பாய்ச்சியே யிந்நீரை விட்டுக்காய்ச்சு
மங்களமாம் எண்ணெய்யதும் நீங்கும்நேர்மை
மதிப்பாக யாகோபு வகைசொன்னாரே. (362)

துருசுக்கு.

பொட்டலையும் பலம்நாலு கரண்டியிட்டுப்
புதுமைபட எரியிடுநீ உருகிநிற்கும்
இட்டமுடன் துருசுகாற் பலம்நிறுத்து
இதையமுத்திச் சாமமொன்று மெதுவாகத்தான்
கட்டலையாய்ச் சிறுகயெரி துருசுதன்னைக்
கருதியெடு நீறியது சுண்ணம்போலாம்
துட்டரிடம் பேசாதே யாகோப்சொன்னார்
துடியான பாதையிது தோய்ந்துபாரே. (363)

கற்சுண்ணம் படிரெண்டு அளந்துவிட்டுக்
கருதரிய பூநீறு படியுமாகும்
சொற்படிக்குக் கலந்துபுதுச் சட்டியிட்டுச்
சுட்டதொரு நீலனைத்தா னதற்குள்வைத்து
நற்பொடியை யமிழ்த்தியெரி சாமம் ஒன்று
நலமாக யிறக்கியெடு காரமேறும்
சொற்றவுறு தெடுத்துசிவ பூசைசெய்து
சுகமாகக் கேளென்று துரைசொன்னாரே.(364)

சூதக் கட்டு.

அடுத்துகுரு யிடைசேரு சூதந்தன்னை
அருள்பெருகப் புகைநீரா லரைத்துச்சாமம்
கொடுத்தபின்பு சவ்வீர மரைக்கால்போட்டு
குரிபச்சைக் கற்பூர மவ்விடையேபோடு
தடுத்துநீ புகைநீரை விட்டரைத்துத்
தனையெடுத்து வில்லைதட்டிக் காயப்போடு

கடுத்துயிதை அஞ்சுதரம் புடத்தைப்போடக்
கருத்தாக யாகோபு உரைத்திட்டாரே. (365)

போட்டதனை எடுத்துக்கல்வந் தன்னிலிட்டுப்
புலன்படவே கன்னிதனப் பாலையிட்டு
நீட்டதனை யரைத்துவில்லை கதிரில்வைத்து
நேராகக் காய்ந்தபின்பு நினைவாய்த்தானே
வாட்டமுடன் எருவடுக்கிப் புடத்தைப்போட்டு
வகையுடனே ரவியுருக்க வள்யாம்நேரே
போட்டதைநீ கொடுத்துவிடு நோறுங்குமென்று
புகழாக யாகோபு புகன்றிட்டாரே. (366).

நல்லாக உடைத்துசெம்பு கல்வத்திட்டு
நாடியே குப்பியிடு நாலத்தொன்று
மல்லாக அன்னமிட்டு அரைத்துவில்லை
மதிபெருகக் கெஜபுடத்தில் யிறுகும்பாரு
வெல்லவே மதிநாலில் ரெண்டுதாக்கு
விதியாக ஊதியெடு பொன்போலாகும்
சொல்லாதே யிந்தொழிலை யென்றுசொன்னார்
சுருதிமுறை யாகோபு சுகுவாய்த்தானே. (367)

பொன்னான மட்டமாம் பொன்னையிட்டுப்
போகாமல் தானுருக்கிப் புடத்தைப்போடு
என்னாளு மிறங்குமது பொய்போகாது
இருப்பிடத்தி லிருந்துகொண்டு செலவுசெய்ய
சொன்னபடி யித்தொழிலைத் தொடர்ந்துபாரு
சுருதிதனை யாராய்ந்து இட்டயாக
உன்னிதமாய்ப் பாகமதை யாகோப்சொன்னார்
உறுதிதனை யாராய்ந்தா லுண்மையாமே. (368)

சேம்பு சுத்தி.

செம்புருக்கிக் கெந்திரச மிடையேதாக்கு
சீர்பெறவே சத்தாகும் பழச்சார்தன்னில்
நம்பியே அரைத்தரைத்துப் புடமுமூன்று
நாடியிடு யெடுத்ததனைக் கல்வத்திட்டு
தம்பமற வாய்வுதனைக் காலேயிட்டுத்
தடவியரைப் பழச்சாறில் சாமமாட்டு
உம்பர்கோன் ரவியிலிட்டுக் காயப்போடு
உறுதியா யாகோபு உரைத்திட்டாரே. (369)

வேதைச் செம்பு.

சூரியன்முன் காய்ந்ததைநீ புடமுமிட்டுச்
சுருதிபெற வெண்காரப் பொரியுமிட்டு
வாரிகுகை தன்னிலிட்டு உருக்கிப்பார்க்க
வகையான செம்பாகு மதியிற்பத்து
பாரிலிதை யொன்றிடவே மாற்றுஆறு
பதிவான குருமுனிதான் சொன்னநேர்மை
நாரியுமை பாகனார் அருளாற் சொன்னார்
நான்கண்டு யாகோபு நவின்றிட்டேனே. (370)

சரக்குக்கட்டு திராவகம்.

படைதுரத்தும் ஏாசனது பத்துயிட்டு
பதியயீர் பத்தஞ்சு சீனமிட்டு
குடமடைத்து வாலைதனை மூடிச்சீலை
குணமுடனே செய்துயெரி முன்னீர்தள்ளி
நடைபெருகும் சீசாவி லடைத்துநீரை
நலமான சரக்குகளிற் சுருக்கும்போட
விடைதனைப்போற் கட்டுமென்று யாகோப்சொன்னார்
விரும்பியிதைக் கண்டவுடன் வேதையாமே (371)

மூலமுளைக்கு சுடர்த் தைலம்.

சிவன்விந்து தானரையாங் கெந்திநேராங்
சிறக்கஅரை காட்டெருமைப்பாலைவிட்டு
தவமான சாமமரை துணியிலூட்டித்
தக்கசுடர்த் தைலமதை வாங்கிநேராய்
பலமான நெய்விட்டுத் தடவமூலம்
பதிவான மூலமுளை உதிருமென்று
கவராக யாகோபு சொன்னநேர்மை
கைகண்ட பாகமிதைக் கருதிப்பாரே. (3

தந்திவிரை சுத்தி.

தந்திவிரை தட்டியிட்டுத் தோலைப்போக்கித்
தடைபடவே சாணமிட்டுக் கரைத்தநீரை
முந்திவிடு பானையரை மேலேசீலை
முடிந்துவிடு தந்திவிரை பரப்பிமூடி
சிந்தனையாய்த் தெரிந்தெடு யெண்ணெய்கக்கும்
சீர்பெருகும் நல்லசித்தி திறமாய்க்காணும்
வந்தவினை தீர்க்கயிதை மருந்தோடய
வரும்பிணிகள் தீருமென்று வகைசொன்னாரே. ()

சூதமதி னிடைசுத்தி நாதஞ்சேர்த்துச்
சுகமாக யெட்டிலொன்று தந்திசேர்த்து
காதமரப் பொடியாக்கிப் பணமவ்வீதங்
காட்டிமண்ட லத்தில்திரி கடுகுத்தூளில்
பேதமுடன் படர்சுற்றிப் பிரகாசங்கள்
பெருமையிலா வாய்வுசுரம் பேசாதோடும்
நாதமுண்ட கண்டர்போ லாகுமேனி
நயமாக யாகோபு நலஞ்சொன்னாரே. (374)

வங்க வேட்டை.

எருக்கரண்டி தன்னிலிட்டுக் காரிதன்னை
எழுதா முருக்கிச்சாய் சோறுதன்னில்
பருக்கமுன் னிடைவெடிசேர் பாணிவிட்டுப்
பத்திரிரு வாழ்மடந்தை வெடிநேர்விட்டு
அகிலமதி லடுப்பிலிட்டுக் குழம்பாய்க்காய்ச்சி
அதைஉருட்டிக் காரியிடை யுருக்கித்தாக்க
விகிதமுட னொறுங்கியது உருகும்பாரு
விடுபெற யாகோபு விளம்பினாரே. (375)

அயச்செந்தூர வேதை.

ஆய்ந்தெடுத்த அரபொடியைக் கல்வத்திட்டு
அதனிடைக்கு சோரனிட்டு ஆட்டிவில்லை
காய்ந்தபின்பு மூன்றுபுடம் போட்டெடுக்கக்
கருதரிய செந்தூர மாகும்பாரு



பாய்ந்துமே ரவிநூற்றுக் கொன்றுமீய்ந்து
பதராம லெடுத்துப்பார் மாத்துப்பத்தாம்
தேய்ந்திடுமெண் டலமுமுண்டால் வாதபித்தம்
திருமென்று யாகோபு செப்பினாரே. (376)

ஞானம்.

வேதத்துக் காகாது கள்ளுகஞ்சா
விரும்பியே சாராயம் அபினியோடு
நீதத்திற் கொலைகளவு பொய்மார்க்கங்கள்
நீயுமதை யனுசரித்தா லெல்லாம்பாழாம்.
வீதமிதிற் றவறுசெய்தால் நரகில்வீழ்வாய்
வேதத்தில் சொன்னதுதா னிந்தமார்க்கம்
காதந்த ஊசியுந்தான் வாராதென்று
கடைத்தேற யாகோபு உரைத்திட்டாரே. (377)

சத்திசிவ ஞானம்.

கடைத்தேறப் பொருள்வேணும் வாதம்வேணும்
கண்டிருந்தும் பாகமதைச் செய்யவேணும்
படந்தன்னிற் சித்திரத்தைப் பார்த்துக்கண்டால்
பதிவாக உன்முகமும் தெரியுமாப்போல்
விடையேறு மீசனையும் அந்திசந்தி
மிக்கதந்தை தாய்பதத்தை மறக்கவேண்டாம்
மூடவனைப்போல் சாஸ்திரத்தைப் பார்த்தால் நீயும்
முத்தியில்லை யாகோபு மொழிந்தவாறே. (378)

காந்தக் கிண்ணம்.

காந்தமது பலமொன்று கொள்ளுக்கியாழும்
கனமாக யெழுதரம் காய்ச்சித்தோய்த்துப்
பாந்தமாய் முன்சாரிற் காரியிட்டுப்
பதிந்தரைத்துப் புடமூன்று தானுமிட்டுச்
சாந்தமாய்ச் சாரமிட்டு உருக்கயீயம்
சவுதிரை யில்லாமல் மணிபோலாகும்
வேந்தனார் மெழுகுகட்டிக் கிண்ணிவாரு
வெகுவிதங்க ளாகுமென்று விளம்பினாரே. (379)

அயக்காந்தச் செந்தூரம்.

நல்லிரும்பு ஓரிடையாய்க் காந்தம்நேரே
நாட்டியிதை உருக்கியே கல்வத்திட்டு
சொல்லினிய பொற்றலையை உரலிலிட்டுத்
துவைக்கவருஞ் சாருவிட்டுச் சாமமூன்று
மெல்லியதாய் வில்லைதட்டி ரவியில்வைத்து
மேன்மைபுடம் நாலுயிடு முருக்கம்பூவாம்
சொல்லுமென்ற புலிகண்ட ஆடுபோலாம்
சூட்சமிது யாகோபு சொன்னார்தாமே. (380)

லிங்கச் செந்தூரம்.

சித்தியுடன் வன்னிகெற்பம் நாலிலொன்று
செந்தூரம் பலமொன்று முன்சார்விட்டு
பத்தியரை புடங்கனமா யிட்டுக்கொண்டு
பணவிடைதான் திரிகடுகி லுண்டுபாரு
சத்திபெருஞ் சோகைகா மாலைபாண்டு
சரியான மூல்முதல் விஷபாகங்கள்
நித்தியமு மிருளகற்றுங் கதிரைப்போலே
நிர்ணயமா யாகோபு நிசஞ்சொன்னாரே. (381)

விஷபேதிக்குப் புகை நீர்.

பத்தாயிச் சாராயம் படியும்நாலு
பாங்காக அளந்துவிட்டுச் சாடிதன்னில்
மூத்தினதோர் மிளகாயைப் பொடித்துப்போட்டு
மூடிவைத்து மூன்றுநாள் கழிந்தபின்பு
சித்தாகச் சூடனரை அபினிவன்னி
திறமாகப் பொடிகலக்கிப் புகைநீர்வாங்கு
கத்தாவின் செயலதினாற் கண்டபேதி
காண்டிகொள்ள நயர்சன்னி காணப்போமே. (382)

சேங்கோட்டைத் திராவகம்.

வேகவைக்குஞ் சேரானின் கொட்டைதூக்கு
வீதமிடை அன்னமிட்டுக் கருப்புக்கட்டி
ஆகமதிற் பாணியிடு மிடைதான்ரெட்டி
உதைக்குழப்பி புளிக்கவைத்துப் புகைநீர்வாங்கு



தாகமா யுண்டிடவே சூலைரோகம்
தனுர்வாதம் வாய்வுநன்மம் ரணங்கள்போகும்
யூகமதா யாகோபு சொன்ன நீதி
உலகுதனில் வயித்தியங்க ளுண்மைதானே. (383)

சுரத்திற்கு குளிகை.

எலிகொல்லி சுத்திசெய்து வன்னிரெண்டு
ஏகமது மேனிப்பால் சாயமாட்டி
வலியஅதை மணிப்பயறு உண்டைசெய்து
மதுவிலிடு வலியசுர மெல்லாம்போகும்
பெலமுள்ள சுரங்களறு பத்தும்போகும்
பின்னுவின் பாற்கஞ்சி யுண்டுதேறு
பெலிகொடுக்கும் ராமருட பாணம்போலாம்.
பேதமில்லை யாகோபு பேசினாரே. (384)

தாளக பற்பம்.

சொந்தமா யரிதாரம் யெருக்கம்பாலில்
தோய்த்தெடுத்து நாளெட்டு வெய்யோனிட்டு
முந்தியிடு பால்குடிக்குஞ் சினைமூது
முடிந்துசுண்ண மாகிவிடும் மேலேகட்டு
சிந்தனையாய்க் குக்குட்டத்தில் நீறிப்போகும்
திடமான குட்டமுதல் மேகமெல்லாம்
எந்தவித பழவினையுந் தீருமென்றார்
இருளறுக்குஞ் சூரியனென் றியம்பலாமே. ( )

இரும்பு சுத்தி.

இருளகற்று மிலையிடித்துச் சாருவாங்கி
இந்திடைக்கு நாத்தமதை அரைத்துச்சாமம்
அருள்பெருகும் நல்லிரும்பை நையத்தட்டி
அரைத்துமெள்ளப் பிசிறுகை விட்டுருக்கி
சிறுகவே கிராசமிடு உருக்கும்போது
செப்பாமல் சாரமிடை அரைத்துருக்கு
பருகஅறு சவுதிரை அற்றுநிற்கும்
பாலித்தார் யாகோபு நேர்த்திதானே. (386)

சுகபேதிக்கு யெண்ணெய்.

சட்டியிட்டுத் தந்திவிரை நாலுடைத்து
சரியாகத் தோல்போக்கி நருக்கிமெள்ள
கொட்டியிடு விளக்கெண்ணெய் கரண்டிகுத்தி
குணமாக மத்தித்துக் கொள்வாயானால்
முட்டிருமல் மலசலங்கள் கழிந்துபோகும்
முழுவருத்த மில்லாது நெஞ்சுநோகா
அட்டியிலாச் சுகபேதி யாகுமிந்த
அவனிதனில் யாகோபு சொன்னவாறே. (387)

நாகச் சேந்தூரம்.

பொட்டியிட்டுச் சீறுகின்ற நாகந்தன்னைப்
புகழ்பலத்தைக் கரண்டியிட்டு உருக்கிக்கொண்டு
தட்டியிடு சாரமதைப் பனியில்வைத்துத்
தான்பார்க்கத் தெளிவாகும் தெளிவைநீயும்
கொட்டியிட்டு யிடைசமனுப் கல்வத்திட்டுக்
கூட்டியரை புகைநீராற் சாமம்நாலு
விட்டுஅரை மேருவினில் வைத்தெரிக்க
விதமான செந்தூர மாகும்பாரே. (388)

அடுத்துயெடு பண்விடைதான் தேனிலுண்ண
அறுநாளில் மேகமுதல் சூலைபோகும்
தொடுத்துநிதம் உண்டுவர வாதசோகை
தொலையாத அக்கினியா மந்தம்போகும்
படுத்தசட்டம் நடந்திடுமாம் நவலோகத்திற்
பாய்ச்சிடவே பொன்மாத்து பாதிநேர்மை
கொடுத்துவர நரைதிரைகள் போகுமென்று
கூறினார் யாகோபு குணமிதாமே. (389)

நாக அயச் செம்பு.

சீறுகின்ற நாகமிடை அயம்நேரிட்டுச்
சிறக்கஅரை வில்லைதட்டிப் பழச்சாறாலே
கோருவதைக் காய்ந்துபுடம் வராகமிட்டுக்
கூட்டியெடு ரவிபதத்தி லொன்றுயிட்டு
தேருமதை மதியெட்டில் ரெண்டுசேரு
திறமாக ஊதியெடு யேமமாகும்



கூறுகின்ற மதியூகி யாகோப்சொன்னார்
குணமான செம்பிதுவைக் கூறொண்ணாதே (390)

யானைக்காலுக்குத் தைலம்.

தலைகுனிந்து தொங்குகின்ற பட்சிதன்னைச்
சதம்பிடித்துக் குடல்போக்கி உரலிலிட்டு
விலைகொடுத்து வெள்ளுள்ளி தூக்குகாலம்
வீதமாய்ப் பரங்கிப்பட்டை தூக்குகாலம்
அலைவிலாக் காயமது களஞ்சியிட்டு
அடைவாகப் பாண்டத்திற் பாணியிட்டு
தூலயான தூள்மருந்தைக் கலக்கிப்போடு
தூக்கியெரி யெட்டொன்று யிறக்கிக்கொள்ளே.()

கசப்பெண்ணெய் படியளந்து விட்டுக்காய்ச்சிக்
கருத்துன்னிக் கரண்டிதனிற் கலந்துஉண்ண
நசமான யானைக்கால் அண்டவாதம்
நாடிசடம் ஓதமுடன் வாதமெல்லாம்
பிசகாது யானைகண்ட சிங்கம்போலாம்
பேசரிது யிந்தயெண்ணெய் ஆட்டம்மெத்த
உசத்திபார் யென்றுயா கோபுசொன்னார்
உண்மையிது நிசமாகும் உறுதியாமே. (392)

சூதங்கட்டக் கிண்ணம்.

காந்தமது சேரரையில் நாழிகாடி
கணக்கிட்டுச் சாரம்நேரிட்டரைத்து
பாந்தமுடன் மூன்றுபுட மிட்டுநீயும்
பதிவாக உருக்கியெடு மணியுமாகும்
சாந்தமுடன் பாத்திரங்கள் சமைத்துச்சூதம்
சரியாக அதிலிட்டுக் காய்ச்சக்கட்டும்
நேந்தபடி சொல்லிவிட்டேன் பாகம்பாரு
நிலையான யாகோபு நிசஞ்சொன்னாரே. (393)

பாஷாணங்கள் சுத்தி.

சொல்லிவிட்ட பாஷாண வர்க்கந்தன்னைச்
சுருக்காகத் தொளாந்திரமாய் விட்டம்போட்டு
நெல்லுதனில் மூழ்கவைத்து அவித்துக்கொள்ளு
நிலைத்தசுத்தி யாகுமிது நிசமாய்த்தானே

வெல்லவே பணவிடைதான் கொண்டால்நல்ல
விருப்பமாய்ச் சகலநோ யெல்லாம்போகும்
புல்லறிவரய்ப் பண்டிதற்குப் புத்திசொன்னேன்
புகலரிய யாகோபு புலன்சொன்னரே. (394)

சீலமுள்ள தவத்தோர்க்கும் உண்மைகண்டு
சிறந்திருக்கும் பெரியோர்க்கும் பொய்சொல்லார்க்கும்
ஞாலமதி லெடுத்தகா ரியங்கைகூடும்
நலமான ஏமவித்தை சித்தியாகும்
ஞாலதுவும் விட்டவர்க்குக் கட்சாராயம்
நாட்டமுடன் அபின்கஞ்சா சித்தியாகும்
கோலமில்லா துர்நடத்தை விர்த்தியாகும்
குவலயத்திற் கொடுப்பார்கை பார்ப்பான்பாரே. ()

உலகுறுதி யாசாரந் தன்னைவிட்டு
உண்மையுள்ள அறிவுதவ மில்லாமற்றுன்
நலமில்லாப் பெண்ணுசை கொண்டலைந்தோன்
நன்மையே யின்னதென்று அறியாமுடன்
தலமிருந்த ஞானமில்லான் வியாதியாளன்
சண்டாளன் கொடும்பாவி இவர்களுந்தான்
புலமான சாஸ்திரத்தைப் படித்துத்தேர்ந்து
பாகமது செய்தாலும் பலித்திடாதே. (396)

கருநாகக் களங்கு.

சுத்தமுள்ள கருநாகங் கரண்டியிட்டுச்
சுடுதணலி லுருக்கிட்டு வெடியைமாட்டு
பத்திட்டவே வருத்திட்டுச் சாமமூன்றில்
பரிதிநிற மாம்அன்ன மீதிலாட்டி
சுத்தமறப் புடமூன்றில் சிகப்புமாகும்
கூட்டுநேர் வாழ்மடத்தைச் சேர்ற்றுலாட்டி
சித்துசிறு புடமிடவே களங்குமாகும்
செல்வம்வரும் யாகோபு சொன்னவாறே. (397)

போட்டுவாக் களங்கத்தை ரவியில்ரெண்டு
புரளவே கொடுத்துருக்கி ஒன்றுதாக்கு
நாட்டியே மதிநாலி லொன்றுதாக்கு
நாடிமிகக் கருப்பாகும் மிதனிற்றங்கம்



கூட்டியதைச் சேர்த்துருக்கி ஊதிப்போடு
குடிலமரும் புடமிறங்கும் வர்ணமாகும்
தேட்டுமிக வந்திடுங்காண் யாகோப்சொன்னர்
திடமான களங்கமிது தெளிந்துபாரே. (398)

நாகச் செந்தூரம்.

சீருகின்ற நாகத்தைக் கரண்டியிட்டுச்
சிறுதணலில் வைத்துருக்கி வெடியைத்தாக்க
வீராதுதா னடங்கிவிடும் நாற்சாமத்தில்
வெற்றிபெறக் குழியம்மி தன்னிலேதான்
பாரையுப்புப் பலம்ரெண்டு சீனம்நேரே
பாய்ச்சிடுநீ பழச்சாறு விட்டுநீயும்
கோரியதை யரைத்துருக்க மஞ்சளாகும்
கூறினர் யாகோபு குணமிதாமே, (399)

வரிக்கடுக்காய் நீர்தெளிந்த சலமிருத்து
வராகனெட்டு வருத்திட்ட சோரனெட்டு
பரியவே உப்புமுன் னிடையேகூட்டிப்
பகையான சாரதனி லரைத்துக்கொண்டு
பிரியமாய்ச் சிவக்கமட்டும் புடத்தைப்போடு
பெருமைவர ரவியிலிடு யேமமாகும்
விரிவான மேகபிணி வெட்டையோடும்
விதமாகும் யாகோபு வித்தைதானே. (400)

வேடியுப்புச் சீனம் ஓமத் திராவகம்.

சத்துருவைச் செய்பண்ணும் உப்புபத்து
சரியிடைசேர் சீனமது பதினைந்தாகும்
மித்துருவா யிடித்துஅதை வாலையிட்டு
விட்டபின்பு முன்னீரைத் தள்ளிப்போடு
சித்திபெற நடுநீரை வாங்கிஓமம்
சீர்பெறவே பாதியிட்டுத் திரிநாள்வைத்து
நத்தியே வாலைதனை மூடுமென்று
நயமான யாகோபு நலஞ்சொன்னரே. (401)

மூடிவரும் புகைநீரை வடித்துக்கொண்டு
மூனையிரு காசிடைதான் கொள்ளச்சொல்லு

தேடியமுன் வினைகளெல்லாந் தெரித்துப்போகும்
திரிகடுகில் சூலையெல்லாம் சினத்தில்போகும்
கூடியசோ றுண்ணபசி தீபனந்தான்
கொள்ளவே அய்யமெல்லா மகன்றுபோகும்
வாடியதோர் தேகமது வலுக்கும்பாரு
மகத்தான யாகோபு வகைசொன்னரே. (402)

மிளகுத் திராவகம்.

வடிந்துநின்ற புகைநீரில் மிளகுபாதி
வலுவாகச் சேர்த்திடித்துத் திரிநாள்வைத்து
கடிந்துஅதை வாலைவைத்து யிறக்கிக்கொண்டு
காசிடைதா னுண்டிடவே வாதவாய்வு
படிந்துமிக ஓடிவிடும் பதியுங்கெட்டு
பருதிகண்ட பனிபோலாம் பாடியும்நோவு
முடிந்தவுடன் பத்தியங்க ளுப்புத்தள்ளு
முடித்தமலர் வாசனைபோல் புதுமையாமே. (403)

இஞ்சித் திராவகம்.

நல்லயிஞ்சி தனையெடுத்துத் தூக்குஒன்று
நாடியிடு புகைநீரு அதனில்ரெட்டி
சொல்லியதை நாள்மூன்று புளிக்கவைத்து
சூட்டியதை வாலையிட்டுப் புகைநீர்வாங்கு
மெல்லவதை யிருகாசு யிடையேகொள்ள
மேதினியில் மானிடர்க்கு உழலைதாகம்
கொல்லவந்த உப்பிசமுஞ் சுரங்கள்போகும்
கூறினர் யாகோபு குணமிதாமே. (404)

திப்பிலித் திராவகம்.

ஒளிந்துநின்ற திப்பிலியைச் சேரிடித்து.
ஒட்டிரெட்டிப் புகைநீரை விட்டுச்சாவில்
களிதிரிநா ளூறியதை வாலையிட்டுக்
கருத்துடனே நீர்பிடித்துக் காசுவீதம்
தெளிந்துயிடு திரிதோஷம் நாசமாகும்
திறமுடைய வாய்வுகளும் சுரமும்போகும்
அழிவான யிருமலறும் மென்றே சொன்னர்
அவனிதனில் நோய்போக அறைந்திட்டாரே.()



ஆனைத் திப்பிலித் திராவகம்.

பேரானைத் திப்பிலியை உரலிலிட்டுப்
பிலமாகத் துவைத்தெடுத்துப் புகைநீர்ரெட்டி
சீராகச் சாடியிட்டு புளிக்கவைத்துச்
செழுமைபெறப் புகைநீரை வாங்கிக்காசு
நேராக ஆறுபொழு துண்ணவாதம்
நிலைகெட்ட மயக்கமது நேர்ந்துபோகும்
பாரான மானிடர்க்குப் பிணிகள்தீரப்
பாலித்தார் யாகோபு பரிசுதானே. (406)

கடைச்சரக்குத் திராவகம்.

ஆக்கிவைத்த கடைச்சரக்கு யெல்லாம்வாங்கி
அறுபத்துநாலுமொரு யிடையேசேர்த்துப்
போக்கதிலே புகைநீரை விட்டிடித்துப்
புலன்பட்டவே தளரவிட்டுப் புளிக்கவைத்துத்
தாக்கியிடு வாலையிட்டு நீரைவாங்கித்
தவறாமல் துட்டிடைதான் உண்ணச்சொல்லு
பாக்கியுள்ள நோயெல்லாம் கடலேபுக்கும்
பதிவாக யாகோபு பகர்ந்திட்டாரே. (407)

பூண்டுத் திராவகம்.

பிரசவமே யானபெண்ணு ளுரித்துஉண் ணும்
பெலமான பூட்டதனை யிடைநிறுத்து
அரையாமல் உரலிலிட்டு யிடித்துவைத்து
அதுநிறையப் புகைநீரை விட்டுச்சாடித்
திரமாகப் புளிக்கவைத்துப் புகைநீர்வாங்கித்
தெரிந்திடு நீ சன்னிசுர மூலவாய்வு
உரமான அதிசாரம் போகுமென்று
உறுதிபெற யாகோபு ஓதினரே.

துருசுச் சேம்பு.

ஊரல்பறி தனையெடுத்துச் செம்பதாக்கி
உகந்துநின்ற நாற்றமதை யிடையேபூசி
தேரயிடு புடந்தனிலே கரிபோலாகும்
இட்டமதாய் யிருதாரு யிடையரைத்து

பாரயிடு புடந்தனிலே செம்புமாகும்
பதியயெடு மதியெட்டில் ரெண்டுசேரு
தாரியிடை பாகர்போல் மேனியாகும்
தாடியெடு யாகோபு நலஞ்சொன்னரே. (409)

பூநீரேண்ணெய் களட்ட.

சித்திரையின் நிலந்தனிலே பூத்துநிர்ந்த
செயலான பூவெடுத்துச் சாடியிட்டு
மூத்திபெறப் பாணியிடு நாலதாக
முதன்மையெடு கற்சுண்ணம் ஒன்றுதாக்கிப்
பத்தியுட னதைக்கலக்கிச் சாடியிட்டுப்
பரிந்திட்டவே கடற்குருவி படிதானென்று
நித்திபமா யதைக்காய்ச்ச உப்பதாகும்
நிர்ணயமா யாகோபு நிசஞ்சொன்னரே. (410)

சோதிபெறக் காய்ச்சியெடு விளாங்காய்போலே
துய்யரவி தன்னிலிட்டு அஞ்சுசுண்ணம்
பாதிகுசை தன்னிலிட்டுப் புடமும்போடப்
பகாரிய வழலையென்ற சுண்ணமாகும்
நீதிபெற யிம்மருந்தா லெல்லாம் நீறும்
நிலைத்துநின்ற ரசவாதம் யெளிதிலாகும்
பாதிமதி சடையணிந்த பரமனரும்
பாலித்தார் யாகோபு பதமாய்த்தானே. (411)

அப்பிரேகச் சுண்ணம்.

தாயதனைக் கொன்றவனை உரலிலிட்டுத்
தடியிட்டுத் தானிடிக்கத் தண்ணீராகும்
மாயவே அப்பிரேகம் கல்வத்திட்டு
மடியவரை மூவாறு புடத்திற்சுண்ணம்
நாயன்மார் சொன்னபடி மேகமெல்லாம்
நடுங்கிவிடுஞ் சலரோகம் நாடாதோடும்
மாயாமல் நிலைத்துநின்ற யாகோபுசொன்னர்
மயங்கினு லெல்லாந்தான் லாயாதாமே. (412)



நாக வேதை.

வெண்ணாகங் கரண்டியிட்டு உருக்கிப்பின்பு
வெடியையிடு யிடைசமமாங் காண்டியாலே
தண்ணாகக் கிண்டிவரச் சுண்ணமாகும்
நாடியெடு கல்வத்திற் பொடியாய்ப்பண்ணி
பண்ணன யிரதமதை யிடையேசேர்த்துப்
பத்தியதை வெண்கருவா லரைத்துவில்லை
பிண்ணாகப் புடம்போடச் சுண்ணமாகும்
பேருலகில் யாகோபு பாலித்தாரே. (413)

துருசுச் சுண்ணம்.

சுண்ணமாம் வங்கமென்ற ராஜாதன்னைச்
சூட்டியிதில் நாலிலொன்று வீரங்கூட்டி
நன்னயமாய் முன்னீரால் அரைத்துக்கண்டர்
நலமாக மேலிட்டுக் கதிரின்முன்னே
சொன்னபடி காயவைத்துப் புடமும்போடு
சுருக்காகச் சுண்ணமாங் கண்டர் நீற்றை
இன்னிலத்தில் ரசங்கட்டும் தங்கம் நீறும்
இன்பமா யாகோபு யிதஞ்சொன்னரே. (414)

அயத்துருசுச் செம்பு.

கூத்தனது பலம்ரெண்டு பண்ணைபாதி
குணமான வீரனுமே காலதாகும்
நாத்தமுதல் யிருமூக்கால் அயமுமொன்று
நலமாகச் சரக்கைந்துங் கல்வத்திட்டு
ஏத்திடுவாய் பழச்சாரு விட்டுஆட்டி
இனிதாகப் பெரியபுடம் போட்டெடுத்து.
காத்தெனவே கல்வத்தி லிட்டுமுன்சார்
கருத்தாக விட்டரைத்து யெடுத்துவையே (415)

விட்டரைத்துப் புடம்பத்து போட்டெடுத்து
வீசமிடை வெங்கார மிடையேசேர்த்து
முட்டயிதைக் குகையிலிட்டு உருக்கச்செம்பாம்
முதன்மையிது புடமிறங்குஞ் செம்புமாகும்

சுட்டமதி இருபதுக்கு ரெண்டுதாக்கு
சுயமான பொன்னுருஞ் சூட்டிப்பாரு
கட்டியபொன் னிடைசேர்க்க லாபங்கீணும்
கருதினின்று யாகோபு கழறினரே. (416).

வங்க சுத்தி.

போர்க்களத்திற் சண்டைசெய்யும் உப்புநேரே
புகலரிய அன்னமிடு புளியும்ரெட்டி
பாற்குமரித் தண்ணீரிற் கரைத்துவைத்துப்
பதியகரு நாகத்தை யுருக்கிமூவேழ்
ஏர்க்கவே யிதிலுருக்கிச் சாய்க்கச்சுத்தி
இதமான செந்தூர யினத்துக்கெல்லாம்
பார்க்கவே யிச்சுத்தி நல்லதாகும்
பதித்துவைத்தார் யாகோபு பண்பாய்த்தானே. ()

பூநீர் சுத்தி

பொட்டலையி னிடைரெட்டி பாணியிட்டுப்
பொடியாக்கித் தணலிலிட்டுக் காடியிட்டு
இட்டமுடன் நாறும்பூ பலமீரெட்டு
இழுத்துபழச் சாருவிட் டரைத்துச்சாமம்
நெட்டடங்க அரைத்துரவி காயவைத்து
நிலையான கரண்டியிட்டு உருக்கிமூவேழ்
திட்டமுடன் சாய்த்திடவே யெண்ணெய்கக்கும்
செயசுத்தி யாகோபு செப்பினரே. (418)

துருசுச்செம்பு சுத்தி.

நீலனைத்தான் பழச்சாரு விட்டரைத்து
நேருருக்கு ரவியாகுந் தகடுதட்டி
ஞாலமதில் பெருவாயின் நீரில்நல்ல
நாட்டமுடன் சீனம்வெடி யுப்புக்குன்றி
காலமதில் சாரமிடு மாலைநேரம்
கரைத்திடுநீ ரவிதனிலே பழுக்கக்காய்ச்சி
ஏலவே மூவேழு தரந்தான்தோய்த்து
யெடுக்கவே யாகோபு இயம்பினரே. (419)



அரிதார சுத்தி.

மடலினிய அரிதாரம் பலமும்நேராய்
மட்டிநீ ரிடைசமமாய்க் காரிசேர்த்துத்
திடமினிய கல்வமிட்டு அரைக்கநீராம்
தீக்கினிய சந்திரன்முன் வைக்கரெம்பும்
படமினிய அரிதார மோட்டிலிட்டுப்
பதிபெறவஞ் சுருக்கிடவே கசடுகக்கும்
விடமான சத்திதிது தாரம்வந்த
விடத்திலிதைச் சேரென்று விதஞ்சொன்னரே()

நாகசு த்தி.

புத்தரவு நாகத்தைக் கரண்டியிட்டுப்
புகலினுப்பை நெய்யதனிற் சாரம்போட்டு
நித்தியமா யுருக்கியெடு பத்துயெட்டு
நிலையாகச் சாய்த்திடவே சுத்தியாகும்
பத்தவது அடங்கிநிற்கும் கசடுநீங்கும்
பதமுடைய யிந்நாகம் பார்வைமெத்த
குத்தமது வாராது வாதந்தோணும்
குறைவில்லை யாகோபு கூறினரே. (421)

எச்சரக்குஞ் சுத்திசெய்தா லெண்ணெய்கக்கும்
இதமாகும் பதமாகும் யெழும்பியோடும்
பொய்ச்சரக்கைச் சுத்திசெய்ய மாயமாட்டா
புவியோர்கள் செய்துஒன்று மில்லையென்பார்
மெய்ச்சரக்கு சொன்னதுபோற் செய்வீராகில்
மேதினியில் ரசவாதம் மேன்மையுண்டாம்
கைச்சரக்கைக் கைபாக மாகச்செய்தால்
கவலைவிடும் யாகோபு கருதினரே. (422)

சிங்கிச் செந்தூரம்.

நல்லசிங்கி பலம்நாலு கல்வத்திட்டு
நாடியரை அன்னமென்ற நீரினலே
மெல்லஅதைத் திரிநாளில் வில்லைதட்டி
மிக்க அதைப் புடம்போட்டு முன்போலாட்டி

செல்லபுடம் மூன்றிடச்செந் தூரமாகும்
சிறுகயிடு பணவிடைதான் நெய்யிற்கொள்ள
கொல்லவந்த வியாதிகளுங் கடலேபுக்கும்
கூறினார் யாகோபு குணமாய்த்தானே. (423)

சிங்கி வேதை.

செல்லவே பெரியோர்கள் சொன்னசிங்கிச்
செந்தூரம் ரவியுருக்கி நூற்றொன்றிட்டால்
எல்லாமும் யேமமாந் தின்றிட்டாக்கால்
இருந்துவிடுந் தேகமது யுகாந்தகாலம்
வெல்லவந்த கூற்றுவனு மஞ்சிப்போவான்
விதமான சூலைபதி னெட்டுந்தீரும்
கல்லான வாதம்யெண் பத்துநாலுங்
கடல்புக்கு மென்றுயா கோப்சொன்னாரே. (424)

நீலகண்டர் நாத்தமது கூடச்சேர்த்து
நிர்ணயமாய்ச் சத்தானால் சொல்லக்கேளு
ஆலகண்டர் பழச்சாரி லுருக்கிச்சாய்க்க
அதிலுள்ள கல்மிசங்க ளகன்றுபோகும்
கோலமுள்ள ரவிபழுக்கும் உறுதியாகும்
குணமாகும் வாதங்கள் குடிலமில்லை
ஞாலமுள்ள சத்துக்கு உறுதியாகும்
நானறிந்த படிசொன்னேன் யாகோப்தானே. (425)

கிராணிக்குச் சூரணம்.

வடிவுகொண்ட சூரனுட கனியைத்தட்டி
வகைபருப்புப் பலமெடுத்து உரலிலிட்டு
முடிவான மோதகமும் நெல்லிமுள்ளி
முதன்மையுறு பழத்தோலும் வெந்தையங்கள்
கடிதுபெரு சுண்டைவத்தல் நிம்பபத்திரம்
இடிவுபெற்று யிதனில்வெரு கடியாயுண்ண
இதமான சலக்கிராணி யெல்லாம்போமே. (426)

எலி கடிக்கு.

வச்சிரத்தின் மூலிவேர் தொக்கச்சீவி
வடிவான அம்மியிட்டு மிளகுஉள்ளி



நிச்சயமாய்க் கண்டதிப் பிலிநேரிட்டு
நிலையாக அரைத்துயிடை கழற்சிஉண்ண
தச்செயலாய் நாலாறு உண்டுஉப்பு
தனைத்தள்ள வயிறுபோம் பாற்சோர்கூட்டு
துச்சயெலி கடிநீங்கும் சயமும்நீங்கும்
துடியாக யாகோபு சொன்னவாறே. (427)

சிவன் வேம்புத் தைலம்.

தக்கனைத் தரித்தவன்பேர் மூலிவாங்கித்
தாட்டிகமா யிடைதானும் நாலுதூக்கு
மிக்ககதிர் வெய்யோனில் உலரவைத்து
மிக்ககலை சத்திடுவாய் பொருந்தமூடி
தக்கபுடம் போட்டுகுழித் தைலம்வாங்கிச்
சாடியிட்டு நாறும்பூப் பொடியாய்ப்பண்ணி
மிக்கதயி லம்தாலி லொன்றுதூவ
மேன்மையென்று யாகோபு விளம்பினாரே. (428)

இரச பற்பம்.

வீரமுடன் பதங்கபற்பம் பலமும்நாலு
வீதமிடை மிளகுசுக்குத் தந்திகூட
பாரமுள்ள நெல்லிமுள்ளிக் கடுக்காய்நேராய்ப்
பார்த்துஅரை புகைநீரால் சாமம்ரெண்டு
கோரமதா யுலர்த்தியுள வாகவுண்டை
கொடுத்திடு மகோதரங்கள் முப்பத்தொன்றும்
நேரமதா நில்லாம லோடிப்போகும்
நிட்சயமா யாகோபு நிசஞ்சொன்னாரே. (429)

நாகச் செயநீர்.

நாகத்தைக் கரண்டியிட்டு உருக்கிக்கொண்டு
நலமாகப் பாதியிடை சூதமிட்டுப்
பாகமா யிலுப்பநெய் நிறையஊற்றி
பத்தியது யெரிந்திடுங்காண் ரசமுமோட
யூகமா யெரிந்தபின்பு சுத்தியாச்சு
உபாயமாய்க் கல்வமிட்டு நையத்தட்டிச்
சோகமா யிடைகாலாம் வீரமிட்டுத்
துப்பரவா யரைத்திடவே தண்ணீராமே (430)

அரைத்துமிரு பிங்காளி லடைவாகத்தான்
அதன்பின்பு துருசுதனை செம்புபண்ணிக்
கரைத்துதக டடித்துமிதைக் கரியோட்டிற்றான்
கனமாகப் பழுக்கவைத்து நீரிற்றோய்க்க
உரைத்துவிடும் மதியெட்டில் ரெண்டுசேர்த்து
உருக்கியிதை ஊதியபின் யேமஞ்சேர்த்துத்
தரைக்குளிகை உருக்கிடவே பொன்னுமென்று
தாஷ்டிகமா யாகோபு தான்சொன்னாரே. (431)

உப்புச் செந்தூரம்.

கல்லுப்புச் சினமும்நே ரிடையேசேர்த்துக்
கனபழத்தின் சாரினு லரைத்துக்கொண்டு
நல்லொத்த சாடியிட்டு உருக்குமஞ்சள்
நல்லநிற மாயிருக்கும் யெடுத்துநேரே
வல்லொத்த மடலினிய அரிதாரத்தை
மாட்டிவிட்டு மூன்சாமா லரைத்துவில்லை
தெல்லுப்போல் வில்லைபண்ணிப் புடமூன்றிட்டால்
திறமான செந்தூர மாகுங்காணே. (432)

கரைகாணுச் செந்தூரந் துருசுச்செம்பில்
கட்டிடுவாய் பத்துக்கு ஒன்றுதானும்
முறைகாண உருக்கிடவே யேமமாகும்
முடியவே பணவிடைதான் தேனிலுண்ண
நரையில்லை வாதசயம் நவின்றுபோகும்
நாடியதோர் சிலேற்பனமும் நாடாதோடும்
முறையோடே மேனியது கற்றூணாகும்
முதன்மையா யாகோபு மொழிந்தவாறே. (433)

நாகரசப் பதங்கம்.

சேருகின்ற நாகத்தைச் சுத்திபண்ணித்
திட்டமாய்க் கிண்ணியொன்று அயத்திற்பண்ணி
தேருகின்ற கல்லுப்புச் சினம்நேரே
திறமாக யிடித்துஅயக் கிண்ணிரெம்ப
பாருமே யிட்டமுழ்த்தி நடுவிற்பள்ளம்
பண்ணியே சூதமொரு பலமும்வாரு



நேருமே மேல்நாகக் கிண்ணிமூடி
நிச்சயமா யாகோபு பலன்சொன்னாரே. (434)

மூடியே துணியேழு சீலைச்செய்து
மூடியதை அடுப்பில்வைத்து யெரிக்கயேறாம்
நாடியே யிதைவழித்துச் செம்புபத்தில்
நலமாக ஒன்றிடவே யேமமாகும்
தேடியே பதங்கமதைத் தேனிலுண்ணத்
திடமான சூலைபதி னெட்டும்போகும்
ஓடிப்போம் சிகலநோய் பறந்துபோகும்
உண்மையா யாகோபு உரைத்திட்டாரே. (435)

வேடியுப்பு சுத்தி.

இணங்கனது படிரெண்டு பாணியெட்டு
இதைக்கடத்தி விட்டுமேல் வாயைமூடி
சினம்படவே சீலைசெய்து அடுப்பிலேற்றி
திறமாக யெரித்துவிடு முக்கால்நீர்தான்
சுண்டியது வடித்திடுங்காண் சாணியிட்டுத்
துப்பரவா யெரித்துதண்ணீர் கொஞ்சஞ்சுண்டும்
துணையோலை தொட்டுநீ நிகத்திற்குத்து
துவரையது பருப்புபோ லுறையுந்தானே. (436)

துவரைவித்துப் போலுறைந்தால் பதமதாகும்
துடிபெறவே முடிவைக்க மூன்றுநாளிற்
கவரதுபோல் விழுந்துவிடுங் கம்பிதானும்
கனமென்ற கம்பிதனை லுருசாதப்பா
பவருரெம்ப தெருப்பிட்டால் பத்தமாட்டா
பதமான யிந்தஉப்பைச் சுண்ணஞ்செய்தால்
நவ்யாக யெட்டெட்டுச் சாக்குங்கட்டும்
நன்மையா யாகோபு நலஞ்சொன்னாரே. (437)

வேடியுப்பு ஜெயநீர்குரு.

சுத்தித்த வெடியுப்புப் பலமும்பத்து
சுருதிபெற்ற சீனமது ரெண்டதாகும்
முத்திபெற்ற சாரமது ரெண்டதாகும்
முடிவான கல்வத்தி லிட்டுத்தானே

நத்திபெரும் பழச்சாரு விட்டரைத்து
நலமாகச் சட்டியிட்டு அடுப்புதன்னில்
பத்தியே யெரித்திடவே சுண்ணமாகும்
பகாரிது சுண்ணத்தின் பண்புகேளே. (438)

சந்திரனிற் பீங்கானிற் சாரமிட்டுச்
சலம்பெருக வைத்திடவே செயநீராகும்
முந்தனவே வீரமிட்டுப் பூரமிட்டு
மூடியதை வைத்திடவே சிவப்புமாகும்
சிந்தனைகள் வாராது சரக்குதன்னில்
சீர்பெறத்தோய்த் ததைவாட்டக் கட்டிப்போகும்
பந்தமது கரியில் நின்று ஆடும்வேதை
பகாரிது யாகோபு குருச்சொன்னரே. (439)

துருசுதனைத் தோய்த்தெடுக்கச் சுண்ணமாகும்
துடியான கல்லுப்புக் கட்டிப்போகும்
வரிசையாய்க் காரமிடக் கட்டி நின்று
வகையாகக் கரியில்நின்று ஆடுப்நேர்மை
பிரியமுட னின்றநிலை சொல்லிப்போட்டேன்
புத்தியுள்ள வாதியவன் கண்டுகொள்வான்
பரிசனத்துக் கிடமாகுஞ் சொன்னேனப்பா
பகாரிது வெடியுப்பின் பலனைத்தானே. (440)

அரிதாரப் பற்பம்.

வைப்பிருந்த சுடர்க்கொடியோன் கட்டுத்தாரம்
வகைசமனுப் பொடித்துகடம் அடியிலிட்டுத்
துப்புரவாய் மேல்மூடிச் சீலைசெய்து
துடியாகக் கனலெரிக்க உயரவேறும்
தப்பிதமில் லாதெடுத்துக் கல்வத்திட்டுத்
தனப்பாலை விட்டரைத்து வில்லைபண்ணி
இப்படிக்குப் புடம்போடப் பற்பமாகும்
இனிமையா யாகோபு சொன்னவாறே. (441)

மதுவிலிடு கபவாத சன்னிதீரும்
மயக்கமறும் அடிவயிறு வாந்திபோகும்



அதிசயங்கள் நீர்முறியும் தோஷம்போகும்
அடுத்திசிவு குடல்புரட்டும் நசலும்போகும்
நிதிபெறவே காசமுதற் சொல்லாதோடும்
நிலைத்துநின்ற பெருவயிறு நீங்கிப்போகும்
கதிபெறவே கதிர்கண்ட பனிபோலாகும்
கண்டபடி சொன்னதிந்தக் காட்சிதானே. (442)

பாஷாண பற்பம்.

எலிகொல்லி பலம்ரெண்டு சூதம்நேரே
இதையரைப்பாய் உமிழ்நீரிற் சாமம்நாலு
பலியிடுக் முன்கடத்தி லிட்டுமூடிப்
பதமாகச் சீலைசெய்து அடுப்பிலேற்றிக்
கலிநீங்க யெரித்துயெடு மேலேயேறும்
கல்வமிட்டு முன்படிக்கு அரைத்தெடுத்து
நலியவே ஐந்துதர மெரித்தெடுக்க
நாதாந்த பற்பமிது நாடிப்பாரே. (443)

வீராசப் பதங்கம்.

அடுத்துயெடு வீரமது பலமுமொன்று
அதில்சேர்க்க உருக்குத்தூள் பலமுமொன்று
தொடுத்துயிடு பொடியாக்கி அரைக்கச்சூதம்
சூட்சமுடன் கக்குமதைப் பீங்கானிட்டுத்
தடுத்தகல் லுப்புபடி நாலெடுத்துத்
தனைவறுத்த செங்கற்றூள் பொடியுமொன்று
விடுத்ததனை யிடித்துசட்டி நிறையப்போட்டு
விருப்பமுடன் தூள்நடுவில் குழியைப்பண்ணே()

சூதமிடு குழிநடுவே சட்டிமூடித்
துடியான மண்செய்து அடுப்பிலேற்றி
வீதமுட னெரித்திடவே சாரமூன்று
விடுபடவே யேறியது பற்பமாகும்
காதலுடன் வழித்தெடுத்துப் பதங்கந்தன்னைக்
கலாஅடை குப்பியிட்டு யெரிநால்சாமம்
ஏதலுடன் முக்கணனைப் போலேயேறும்
எடுத்துவைத்து யாகோபு யிதஞ்சொன்னரே. ()

நெல்லினிடை யுனுப்பானந் தன்னிலேதான்
நிர்ணயமாய்க் கொண்டிடவே மேகசூலை
சொல்லுமுன்னே பறந்தோடும் வாதந்தானும்
தொடுத்துவந்த புற்றுகள்தான் சுணங்கிவாடும்
நல்லறிவு வந்துவிடும் முடக்குத்தீரும்
நவிலுமுன்னே சயரோகம் போகுங்கண்டீர்
புல்லறிவு சன்னிமுத லோடுமென்று
பூதலத்தில் யாகோபு புகன்றவாறே. (446)

கால்கை நடுக்குகளுக்கு.

எக்கியத்திற் பலிகொடுக்கும் கொழுப்பினோடு
இந்திடைக்குத் திரிகடுகு பறங்கிப்பட்டை
ஒக்கவெடு உள்ளியுடன் சேர்த்திடித்து
ஒருபானை தன்னிலிட்டுப் பாணியெட்டு
தக்கவெரி யெட்டொன்றாய் வற்றக்காய்ச்சித்
தனியாக நல்லெண்ணெய் யெடையேசேர்த்துப்
பக்குவமா யெரித்துசிறு கரண்டிகொள்ளப்
பாக்கியவான் யாகோபு பலன்சொன்னாரே. (447)

சொல்லடங்கா விந்துகட்டுந் திறமுமாகும்
சோர்வையுள்ள கைநடுக்கம் நசலும்போகும்
நல்லறிவு போலவே தேகமாகும்
நானுண்ட யெண்ணெய்யிது நாட்டிற்சொன்னேன்
வெல்லரிது தாதுவுங் கெட்டுப்போகா
வீதமிகும் நரம்பிறுகிப் பெலமுண்டாகும்
புல்லறிவு யில்லையிந்த யெண்ணெய்நேர்மை
போக்கோடே யாகோபு புலன்சொன்னாரே. (448)

விரை வாதத்திற்கு.

முக்கணுடைத் தேசுரண்டிச் சட்டியிட்டு
முன்னீரை விட்டுஅதைப் பிழிந்துகொண்டு
திக்கினிய வெங்காயம் கழஞ்சுயெட்டு
சிறந்திருந்த தந்திவிரை பலமுங்கால்தான்
தக்கவுண்ட ரசகற்பூ ரம்பலங்கால்
தாட்டியெரி யெண்ணெய்வடி நாட்டுளோர்க்கு



மிக்கசிறு கரண்டி நிறை யெண்ணெய்உண்ண
மிகயெளிதில் விரைவாதம் போகுந்தானே. (449)

போகுமே கழல்வாதம் அண்டவாதம்
புறமடைத்தல் நெஞ்செரிவு நீங்கிப்போகும்
ஏகுமே யிடுப்புவலி அந்திரவாய்வு
இதமான மகோதரங்கள் யீளைபோகும்
பாகுமே பத்தியந்தான் புளியாகாது
பதிவான நோயதுவும் பறந்துபோகும்
நேகமதாய் நீரடைப்பும் பலதுமேகும்
நீனிலத்தில் யாகோபு சொன்னவாறே. (450)

விக்கலுக்கு.

கணபதிமுன் தூபமதைக் கல்வத்திட்டுக்
கரும்புரச மிடைசேர்த்து அரைத்துக்கொண்டு
பணவிடைதான் நுனிநாவில் தடவிப்பாரு
பஞ்சிலிட்ட தீப்போலே விக்கல்தானும்
செணமதிலே ஓடிவிடும் ஓடாவிட்டால்
திரும்பதிரி நாட்கொள்ளச் சணத்திற்புக்குங்
குணமதனை யறிந்துகொள்ளு மென்றுசொல்லிக்
குற்றமில்லா யாகோபு கூறினாரே. (451)

வயிற்று வலிக்கு.

முக்கணுடை பெலிகொடுக்கும் மூத்தோன்கையில்
முனிவாகப் பிடித்தகொம்பைப் பொடியாய்ப்பண்ணி
மிக்கயிடை வெடிசேர்த்து அரைத்துப்பாணி
வில்லைதட்டிப் புடம்போடச் சுண்ணமாகும்
பக்குவமாய்த் திரிகடுகி லிருநாள்கொள்ளப்
பறக்குமடா வயிற்றுவலி பித்தமெல்லாம்
தக்கபெரி யோர்சொன்ன நீதிதன்னைச்
சாற்றினே னிந்நூலிற் சார்பாய்த்தானே. (452)

வங்கச் செயநீர்.

பலதோஷம் போக்குகின்ற வங்கந்தன்னைப்
பலமொன்று கரண்டிதனி லுருக்கும்போது
தலைமையொடு வெடிரெட்டி உருகும்ரெண்டும்
தனைத்தேய்ப்பாய் கரண்டியினூற் சாமம்ரெண்டு

பிலமாகக் குங்குமத்தின் நிறமதாகும்
பேசரிய சுண்ணமாம் பலிக்கும்வேதை
நலமாகச் சாரமிட்டுப் பனியில்வைக்க
நாடறியச் செயநீராம் நாட்டுளோர்க்கே. (453)

உண்டான செயநீரில் வீரமிட்டு
உறுதிபெறப் பீங்கானில் வைத்துக்கொண்டு
பண்டான துருசுதனிற் செம்பெடுத்துப்
பதிய அடி தகடாகக் கரியிலிட்டுத்
துண்டாக ஊதிவிடு செயநீர்தன்னில்
தோய்த்துபெடு அதையெட்டுத் தாமுந்தானும்
கண்டறுட செம்பதுவுங் கட்டிப்போகும்
கருத்தறிந்து யாகோபு காட்டினாரே. (454)

கட்டினதோர் செம்பெடுத்து நையத்தட்டிக்
கணக்காக உடைத்திட்டு மதிதானெட்டில்,
ஒட்டியே ரெண்டுமிடப் பொன்போலாகும்
ஓங்கியிடை பாதியிடு தங்கந்தானும்
கோட்டியதோர் தேள்போலே யெட்டுமாகும்
கூடுமிதில் வேதைவருங் கூர்ந்துபாரு
செட்டிகையில் விற்றுடனே செலவுசெய்யத்
திறமாக யாகோபு செப்பினாரே. (455)

நாகச் சுண்ணம்

சோருகின்ற நாகமதை ஊதநீறும்
சுயமாகப் புணவிடைதா னனுப்பானத்தில்
வேரும் ஆடாதோடைத் தளிரைவாங்கி
விதமாக பிட்டவித்து அதைப்பிழிந்து
காருமே அதிலிடவே காலைநேரம்
கனிந்துமே கொண்டிடவே யிருமல்போகும்
சாருகின்ற குத்திருமல் காசம்போகும்
சரியாக யாகோபு சாற்றினாரே. (456)



பொன்னாங் கன்னித் தைலம்.

தோணும விராவணன் சிறையெடுத்த
தோகைபொன்னாங் கன்னிதனைப் பிடுங்கிவந்து
நாணாதே கல்லுரலி லிட்டுநைய
நலம்பெறவே திலகமுன் னெடையும்ரெட்டி
வாணமல் வாங்கியிடி பாணிரெட்டி
வகையாக யெரித்துமுடா ஊற்றிக்காய்ச்சிக்
காணாத் தைலங்கள் முழுகக்கேளு.
கண்களுக்கு அருந்தநியுங் காணுந்தானே. (457)

வெள்ளெழுத்து மாறுவதற்கு.

மயிர்களைந்து தைலமது முழுகும்போது
மறுபாசிப் பயருஞ்சீ யக்காய்சேர்த்து
ஒயிலாகத் தானரைத்து முழுகிப்பாரு
உறுதிபெருஞ் சிரசினுக்குக் குளிர்ச்சியாகும்
பயிலான கண்பார்வை ஒளிவுதோணும்
பரிவான வெள்ளெழுத்தும் மாறிப்போகும்
தைலமிந்த விதமுழுக உலகத்தோர்க்குத்
தாட்டிகவான் யாகோபு சாற்றினாரே. (458)

கண்டமாலைக்குத் தைலம்.

சிறியநங்கை யிலைபிடுங்கி உரலிலிட்டுச்
சிறக்கயிடி சாறுவரும் படியும்நாலு
சரியிடைசேர் கோசலத்தின் பாலும்நோய்
சட்டியிட் டெபம்யெரிக்க நெய்யதாகும்
பிரியமுட னெடுத்துமயிர் களைந்துமுழ்கப்
பித்தமுதல் பொடுவுகளும் கண்டமாலை
துரிதமா யேகிவிடுங் குளிர்ச்சியாகும்
சுகமாக யாகோபு சொன்னதாமே. (459)

காமாலைக்கு.

சிருநெல்லி தானிலையை உரலிலிட்டுச்
சிறக்கயிடி சாறுவருங் கால்சேரிட்டுப்
பெருகயெடை கோசலம்பால் யெடைகலக்கிப்
பேசரிய காலையிலே நாள்மூன்றுண்ண

மருகிவிடும் உப்பதனைத் தள்ளிப்போடு
வகையான காமாலை தீர்ந்துபோகும்
உருகுகின்ற உடலதுவும் வலுக்குமென்று
உறுதிபெற யாகோபு சொன்னார்தாமே. (460)

வெடியுப்புத் திராவகம்.

பொட்டளையும் பலமாறு இந்துப்புமூன்று
புகலரிய சாரம்ரெண்டு பேதிஒன்று,
கட்டளையாய்ப் படிகாரம் பதினைந்தாகும்
கருதுமொரு பூநீறு பொரியுமொன்று
திட்டமுட னிடிகடத்தி லரையுமிட்டுச்
சீர்பெறவே வாலையிட்டு அடுப்பிலேற்றிச்
சட்டமுட னெரித்திடவே புகைநீராகும்
சரியான பாகமிது சார்ந்துபாரே. (461)

திரிகடுகு வகைக்கொன்று தூக்குமிட்டுத்
திட்டமாய்க் கல்லுரலிற் போட்டிடித்து
வரிசையுடன் பொட்டளையின் திராவகத்தை
வண்மைபெற ரெட்டிப்பு யிட்டுமூன்று
உரிசைபெற நாள்வைத்துக் கலையத்திட்டு
உகந்ததொரு வாலையிட்டுத் தீநீர்வாங்க
பரிசைபெற யிறக்கியே சீசாதன்னில்
பரிவுடனே தானடைக்கச் சொன்னார்பாரே. (462)

அடுத்துநின்ற திரிகடுகு பொடித்துநன்றாய்
அதைச்சேர்த்து யிட்டுமெள்ள உண்ணச்சொல்லு
தொடுத்துநின்ற குன்மமெல்லாங் கடலேபுக்கும்
துடியான மகோதரத்துக் கொருசொட்டிட்டுப்
படிந்துவருங் கதிரோனைக் கண்டுநீங்கும்
பனியதுதான் விலகுமது போலேயாகும்
உடுத்துநின்ற வாயுவெல்லாங் கதறியோடும்
உற்றதொரு யாகோபு உரைத்தவாறே. (463)



கம்புக்கஞ்சித் திராவகம்.

கள்ளமில்லா கம்பஞ்சோற் காடிதானும்
கணக்காக நாலுபடி கடத்திலிட்டு
உள்ளபடி சீனம்ரெண்டு தானும்போட்டு
ஊறவைத்து வாலையென்ற சட்டிமூடித்
தள்ளாதே புகைநீரை வாங்கிக்கொண்டு
தனித்துமே ஒருகரண்டி கொள்வீராகில்
தெள்ளவே நீர்சுருக்குச் செரியாமாந்தம்
திறமான மலக்கட்டுந் தீர்ந்துபோமே. (464)

காடித் திராவகம்.

அன்னத்தி னீர்காடி படியும்நாலு
அளந்துவிட்டு யெட்டிலொன்று சீனஞ்சேர்த்து
நன்னயமாய் வாலையிட்டுப் புகைநீர்வாங்கு
நன்றாகக் கரண்டிகொள்ளப் புளிக்கும்பல்லு
சொன்னபடி காந்தியுமாஞ் சன்னிதீரும்
துயரறுமே வாயுவெல்லாஞ் சொல்லாதோடும்
முன்னோர்கள் சொன்னபடி யானுஞ்செய்தேன்
முக்கியமாய் யாகோபு மொழிந்தவாறே. (465)

துருசுச் செம்புசுத்தி.

நீலனைத்தான் பழச்சாரி லூறவைத்து
நீயாட்டிக் காயவைத்து உண்டைபண்ணி
காலமொரு புடமிடவே கரியுமாகும்
கணக்காகக் கால்கார மிட்டுருக்கு
ஞாலமிதில் செம்பாகு மெடுத்துக்கொண்டு
நலமாகப் பழுக்கவே காய்ச்சிமுன்சார்
சாலமாய்த் தோய்த்தெடுக்கச் சுத்தியாகும்
சரிவரவே யாகோபு சொன்னார்தாமே. (466)

இஞ்சித் திராவகம்.

நல்லிஞ்சி தூக்கொன்று யிடித்துச்சாரு
நலமாகப் படியெட்டுக் கடத்திலிட்டு
மெல்லவே ஓமமிடு நீரில்நேராய்
விதமாக வாலையிட்டு வடித்துஉண்ணக்

கொல்லவந்த குன்மமெல்லா மோடிப்போகும்
　　கொடுமையுள்ள வாயுமுதல் வெப்பும்போகும்
மெல்லவே பிணியெல்லா மகன்றுபோகும்
　　மேதினியில் யாகோபு விளம்பினாரே. (467)

வகார வங்கச் செந்தூரம்

பாரே நீ காரீயம் பலமும்பத்துப்
　　பதக்குத்தா னட்டமுரி உருக்கிச்சாய்க்கக்
காரே நீ கசடகலு மன்னமிட்டுக்
　　கருணைபெற அரைத்தரைத்துப் புடமுமூன்று
சாரே நீ போட்டுயெடு மஞ்சள்போலாஞ்
　　சரியாக யின்னுமொரு புடமும்போடு
பேரே நீ யெடுத்துவைத்துப் பின்புகேளு
　　பிரீதியா யாகோபு பேசினாரே. (468)

பேசினதோ ரரிதாரம் பலமும்பத்துப்
　　பின்னெடுத்து முன்னமுரி தன்னிற்றாக்கித்
அசதனிற் கிளிபோலத் தொங்கவிட்டுத்
　　துணிகரமா யொருசாம மெரித்துவாங்கு
பாசியறும் ஓட்டிலிட்டு அமுரிதன்னாற்
　　பதமாகச் சுருக்கிட்டுப் பகர்ந்தெடுத்து
வாசனையாய் முன்வங்கச் செந்தூரத்தில்
　　வகையோடே பாதியிட மதிசொன்னாரே .(469)

சொன்னதொரு கன்னியுட பாலைவிட்டுச்
　　சுகமாக அரைத்துமுன்போற் புடத்தைப்போடு
நன்னயமாய் மூன்றுபுடம் போட்டெடுத்து
　　நலமாகப் பாரு நீ பற்பமாகும்
இன்னிலத்தில் பற்பத்தில் நாலிலொன்று
　　இதமான வெண்காரங் கூடச்சேர்த்துச்
சின்னமதா யரைத்துருட்டிக் குகையிலிட்டுத்
　　திடமாக உருக்கிமெள்ளச் சாய்த்துப்பாரே. ()



சாய்த்துருக்கு கரண்டியிலே யிளகும்போது
　　சடுதியா யெட்டிலொன்று விந்தைச்சேர்த்து
மாய்த்துயெடு குழிக்கல்வந் தன்னிலிட்டு
　　மடியஅரை அன்னத்தால் வில்லைதட்டிப்
பாத்திபனுங் கதிரவன்முன் காய்ந்தெடுத்துப்
　　பத்திதருங் கல்லுப்பும் சுண்ணம்நேரே
போத்தியரை மேலங்கி போட்டுச்சேவற்
　　புடம்போட்டுக் கல்வத்தி லிட்டுக்கேளே. (471)

கல்வமிட்டு அரைத்துமுன்போற் கவசங்கட்டிக்
　　காரணமாய்ப் புடம்போட்டு யெடுத்துநல்ல
மல்கயிடு தாரமதை நாலிலொன்று
　　மயமாக சேர்த்தரைத்துக் குகையிலிட்டு
நல்கவதை யுருக்கவது கசடுதீரும்
　　நலமான தங்கத்தை யிடையேசேர்த்துச்
செல்கயிதை உருக்கியெடு யென்றுதானுந்
　　திறமாக யாகோபு சொன்னார்தாமே. (472)

உருக்கியெடு இரண்டுமொன்றாய்க் கல்வத்திட்டு
　　உரியெடைதான் சூதமிட்டுத் தாரய்நேரே
பெருக்கியரை அன்னத்தி னீரினாலே
　　பெலம்பார்த்துக் கதிரினிலே காயவைத்து
நெருக்கியெடு முன்னங்கி கட்டிக்கொள்ளு
　　நிர்ணயமாய்ப் புடமூன்றில் செந்தூரிக்கும்
முருக்கியிடு ரவிநூற்றில் ஒன்றுதாக்க
　　முக்கியமா யாகோபு மொழிந்திட்டாரே. (473)

மொழிகேளு ரவிநூறும் பழுக்கும்பாரு
　　முதன்மைபெறப் புடமிறங்கும் தங்கந்தானும்
வழியோடே பணவிடைதா னுண்ணச்சொல்லு
　　வலதுள்ள ராவணனோ டனுமார்போலாம்
பொழியுமது விந்துகளும் பெலனுமாகும்
　　பொற்பிரபை மேனியுமாம் சாவோயில்லை

கழிபோல நாவுதடுஞ் சிவந்துகாணும்
கருத்துகந்த யாகோபு கீர்த்திதானே. (474)

என்றுவங்கந் தனிலுழைத்தாற் றங்கமாகும்
இருந்திடத்தி லிருக்கலா முத்தியாகும்
அன்றுமனம் புத்திசித்த மாங்காரந்தான்
அடுத்துமெள்ள விருத்தி அங்கம் பார்த்துத்தேறு
கன்றுபோல் மேனியது போலேயாகக்
கற்பத்தில் முதற்கற்ப மிதுதானாகும்
என்றூழி காலமெல்லா மிருப்பாரென்று
இருந்துரைத்தார் யாகோபு விதமாய்த்தானே,

காரீயச் செந்தூரம்.

காரியத்தைச் சுத்திபண்ணிக் குகையிலிட்டுக்
கனமாக உருக்கியெடை நறும்பூவிட்டு
வீரியமாய்ப் பார்த்திடவே கரித்தூள்போலாம்
மிகநல்லாம் அன்னத்தி னீரா லட்டி
ஆரியபின் விஷ்ணுவின் மனைவிகூட்டி
அரைத்துவில்லை கதிரவன்முன் காயவைத்து
ஊரிலுப்பு சுண்ணமும்நே ரிடித்துக்கட்டி
உறவாகப் புடமிட்டு யெடுத்துவாங்கே. (476)

வாங்கியபின் நின்றமேற் கவசந்தள்ளி
மருகநின்ற கவசமதை உடைத்துப்பார்த்தால்
தேங்கியது கூடாகக் கவசத்துள்ளே
திறமாக நின்றிடும்பார் கல்வத்திட்டுத்
தாங்கியே பழச்சாறு விட்டுஆட்டித்
தன்மையுடன் கதிரவன்முன் காயவைத்து
ஓங்கவே மூன்றுபுடம் போட்டெடுக்க
ஒழுங்கான செந்தூர மாகும்பாரே. (477)

சித்தியாம் செந்தூர முருக்கம் பூப்போல்
சிறிதெடுத்து ரவிநூற்றி லொன்றுதாக்க
முத்தியா மோக்ஷமாம் யேமமாகும்
முதிர்த்தநரை பணிவிடைதா னுண்ணப்போகும்



வெத்தியாய் மண்டலத்திற் கற்றானாகும்
விளம்பினே னிந்நூலிற் பொய்போகாது
நத்தியே செய்திடுவீ ரென்றுமேலாம்
நலமாக யாகோபு நவின்றிட்டாரே. (478)

வங்கச் சுத்தி.

அப்புதனைக் கரண்டியிட் டுருக்கிநல்ல
அதில்ரெட்டி உப்புதனைப் போட்டுக்கிண்டி
செப்பினதோ ரிருசாமங் கிண்டிக்கொண்டு
செயலான அன்னமிட்டுக் கல்வத்தாட்டி
ஒப்பிடவே வில்லைதட்டி வெய்யோன்தன்னில்
உலரவைத்துப் புடமொன்றில் மஞ்சளாகும்
தப்பிதங்கள் வாராது யெடுத்துப்பாரு
தாட்டிகமா யாகோபு அருள்செய்தாரே. (479)

புடமிட்ட வில்லைக்கு யெட்டிலொன்று
பொருந்தவே வெங்காரஞ் சேர்த்தரைத்து
நடமிட்ட குகையிலிட்டு உருக்கித்தீரு
நல்மாக உருகியது சுத்தியாகும்
திடமுற்றுக் கரண்டிதனில் வைத்துருக்கிச்
சீர்பெறவே விஷ்ணுவின் பெண்டீர்தன்னை
இடமிட்டு நேராகத் தாக்கிக்கல்வம்
இழுத்தரைத்து வில்லைகதிர் காயவையே. (480

வங்கச் செந்தூரம்.

கதிரவன்முன் காயவைத்துப் புடமுமைந்து
கடிதாக உருக்கிமெள்ள விந்துநேரே
பதிவாகச் சேர்த்துருக்க உடைந்துதூளாம்
பாகமதாய்க் கல்வத்திற் கொட்டிநல்ல
முதிராத சோறுதனை விட்டரைத்து
முனைந்துரவி காய்வைத்துப் புடமூன்றிட்டால்
சதிர்க்கப் பவளநிற மாகுமென்று
சமத்தாக யாகோபு சாற்றினாரே. (481)

செம்புருக்கி நூற்றுக்கு ஒன்றுயிட்டுச்
சிறக்கவதை யெடுத்துமெள்ளப் பார்க்கும்போது
நம்புதலே யேமமது பந்துமாகும்
நானிலத்திற் புடமிறங்கும் நாட்டுளோர்க்குத்
தெம்புடைய வாதமது சித்தியாகும்
சீர்பெருகும் வாழ்வுகளுஞ் செல்வமுண்டாம்
அம்பமற்ற வாதமிது அனுப்பானத்தில்
குட்டியே பணவிடைதான் கொண்டுபோரே. ()

கொண்டிடவே வாதங்கள் குட்டம்போகும்
கூறினர் யாகோபு குணங்களாகக்
கண்டிடவே புகோதரங்கள் சயங்கள்போகும்
காரணத்தின் சூலைபதி னெட்டும்போகும்
விண்டிடவே பித்தங்க ளெல்லாம்போகும்
விதமான மாந்துளிர்போல் மேனியாகும்
குண்டிடவே காயசித்தி யோகசித்தி
குணமாக யாகோபு கூறினரே. (483)

இளநீர்க் கிருதம்.

முக்கனுட யிளையோனை வெட்டி நீரை
முழுச்சட்டி தன்னிலிட்டு உள்ளிப்பூண்டைச்
சிக்கெனவே உரித்துயிடு சேரைத்தானும்
சீர்பெறவே அவித்தெடுத்து முன்னீர்தன்னில்
கைக்கடுப்புக் கிதையுண்ணத் திரிநேரந்தான்
கால்வீக்கம் வயற்போதல் மூலவாய்வு
மிக்கெனவே யோடிவிடும் புளியாகாது
மீதுரைத்தார் யாகோபு மேன்மைதானே.

கெந்தித் தைலம்.

முத்தமகன் பெலியேற்கு மீனையோன்றன்னை
முனைசீவிப் பேர்த்துசட்டி தன்னிலிட்டுப்
பார்த்துவெள்ளைப் பூடுரித்து ஒருசேரிட்டுப்
பதமாக அவித்தெடுத்து நீக்கிநீரைச்
சேத்துயெடு சிவந்தநிறம் நாற்றங்காலாம்
சேர்பொடித்துச் சட்டினி விட்டுமுடிக்



காத்துயிதைக் கலசமிட்டுத் தைலம்வாங்கு
கருணைபெருங் கெந்தகத்தின் தைலமாமே. (485)

தைலமதைத் தூட்டிடையுங் கொள்ளச்சொல்லு
தாதுவெல்லா மிறுகிவிடும் வாதந்தானும்
ஒயிலாக ஓடிவிடுங் குஷ்டம்போகும்
உற்றுநின்ற கடிவிஷங்கள் ஒழிந்துபோகும்
வெயில்கண்ட பனிபோலே வியாதிதீரும்
வேதையிதில் ரெம்பவுண்டு விரிக்கப்போகா
குயில்போலே அங்கம்வரும் மூலம்நீங்கும்
கூறினர் யாகோபு குணமிதாமே. (486)

அயமணி.

ஆய்ந்தெடுத்து அரைபொடியும் நாலில்ரெண்டு
ஆதிமகா விஷ்ணுவின் மனையாள்தன்னைத்
தோய்ந்தபொடி சேர்த்தரைத்துக் குகையிலிட்டுத்
துணிவாக உருக்கிடவே உருகுஞ்சத்தாய்
ஈந்தெடுத்த பொரிகாரம் பாதிசேர்த்து
இதையரைத்து உருக்கிடவே நிரைசத்தாகும்
வாய்ந்தபடி சவுதிரை யற்றுநல்ல
மணியாகும் யாகோபு வகைசொன்னரே. (487)

அய்க்களங்கு.

நல்லஅய முருகையிலே நாலிலொன்று
நலமான தங்கஞ்சேர் தங்கம்நேராம்
வெல்லரிய நாகமிடு களங்குமாகும்
விடுபட்டு அதையெடுத்து ரவியில்பத்து
சொல்லரிய ஒன்றிடவே யேமமாகும்
சூக்ஷமிது காலறிந்து துயர்ந்துபாரு
புல்லறிவைப் போக்கிநூல் விபரம்பார்க்கப்
போக்குடனே யாகோபு புலன்சொன்னரே (488)

அயக்களங்குச் செந்தூரம்.

நல்லிரும்புக் களங்கத்தைக் கல்வத்திட்டு
நாற்றமதை யிடைசமனுப் குதஞ்சேர்த்துக்
கொல்லவதைப் பொற்றலையின் சாரைவிட்டுக்
குணமாக அரைத்துடனே குப்பியிட்டு

வெல்லவதை அடுப்பிலிட்டு முச்சாமந்தான்
வீதமெரி செந்தூர மாகும்பாரு
சொல்லிவாய் மூடுமுன்னே ரவிபழுக்கும்
சூட்சமா யாகோபு சொன்னவாறே. (489)

பணவிடைதான் செந்தூரங் கொண்டாயானால்
பாலனு மெந்நாளு மிருக்கலாகும்
குணமில்லா நோயெல்லா மேவல்கேட்கும்
குடிலமுறு குலையெல்லாங் கெட்டேயோடி
சினமுடனே கடலதனி லொளிக்கும்பாரு
சிறப்பாகும் அயக்களங்குச் செந்தூரந்தான்
உணவுதனில் உப்போடு புளியுந்தள்ளு
உத்தமமாம் யாகோபு ஓதினாரே. (490)

அப்பிரேகச் செந்தூரம்.

அப்பிரேகந் தனையெடுத்துக் கல்வத்திட்டு
அரனுடைய விந்துபெண்டீர் யிடையேசேர்த்து
ஒப்பிஅரை ஒருசாமம் அதைவழித்து
உள்ளடைத்துக் குகைதனிலே பாதியிட்டுத்
தப்பிதமாய்ப் போகாம லுருக்கித்திரு
தகர்ந்துமே அதுஉருகி மணிபோலாமே
செப்பினே னிப்படி நீ யெடுத்துக்கொள்ளு
செந்தமிழால் யாகோபு சொன்னார்தானே. (491)

கல்காந்தம் பலம்நாலு நிறுத்துக்கொண்டு
கனகவெள்ளைப் பாஷாண மிடையேசேர்த்து
நல்லாக அரைத்துமே ஒரு சாமந்தான்
நளினமுடன் அன்னமதா லரைத்துக்கொண்டு
கல்காந்தங் குகையிலிட்டு உருக்கிப்பார்த்துக்
கதித்துஒரு மணியாக வாங்கிக்கொண்டு
மெல்லயிதைச் செந்தூர மாகக்கேளு
விளம்பினா யிந்நூலில் விளங்கத்தானே. (492)

நல்லிரும்பு காந்தம் அப்பி ரேகம்நேராய்
நலமாக உருக்கினதை யுடைத்துக்கல்வம்



செல்லவிட்டு அரைத்துக்கையா னிரிலேலே
சீராகப் புடம்போட்டு யெடுத்துக்கல்வம்
நல்கயிடு வன்னிதனைப் பலங்காலாக
நாட்டியிடு முன்னீரா லரைத்துக்கொண்டு
மல்கயிடு பின்னும்வன்னி பலங்காலாக
மாட்டியரை யாகோபு மதிசொன்னாரே. (493)

சொன்னபடி வில்லைதட்டிக் காயப்போடு
சுகமாகக் காடையென்ற புடத்தில் நீறும்
நன்னயமாய்ப் பணவிடைதான் கொள்ளச்சொல்லு
நலமான வாதபித்த சிலேற்பனத்தால்
சின்னமென்ற ரோகமெல்லாம் ஒழிக்குங்கண்டாய்
செயமான சலரோக மேகச்சூலை
உன்னியே கடலதுதான் புக்குமென்று
உறுதிசொன்னார் யாகோபு உண்மைதானே. (494)

வங்கச் செந்தூரம்.

கருநாக மோரிடையாங் கரண்டியிட்டுக்
கனிந்துமது உருகையிலே வெடிதான்பாதி
வருநாக மதைப்பிரட்டி வருத்துக்கொள்ளு
வடிவாகும் மஞ்சள் நிறங் கல்வத்திட்டுத்
திருவாக அரைத்துஅதை நையத்தட்டித்
திட்டமாய்ப் புடமூன்று போட்டெடுத்து
உருவாக அதையெடுத்து வைத்துப்பின்னு
லுரைக்குமருந் ததிற்சேர்க்கும் உண்மைபாரே. ()

சீனமடா யிருபத்து அஞ்சிற்பாதி
சிறந்திருந்த பொட்டலையும் உரலிலிட்டு
ஊனத்தா னதையிடித்துக் கடத்திலிட்டு
ஒழுங்காக வாலையிட்டு முன்னீர்தன்னி
ஞானமதாய்ப் பின்னீரைப் பிடித்துச்சாடி
நலமாக ஊத்தியதை நவிலக்கேளு
தானந்த சரக்கதனைத் தோய்த்துவாட்டத்
தனிக்கட்டா மாகுமிதன் தன்மைபாரே. (496)

அரன்பீசம் பலம்நாலு கல்வத்திட்டு
அடுத்துமுன் புகைநீரை விட்டுவெய்யோன்
கரம்படவே தேய்க்கவது பூக்குங்கண்டீர்
கனிந்ததொரு பூவெடுத்துப் பீங்கானிட்டு
உரம்படவே முன்வங்க மிடையேசேர்த்து
உரத்துஅரை புகைநீரால் உலரவைத்துச்
சிரம்படவே கடமிட்டு மேலேமூடிச்
சிறக்கயெரி மேலேறுஞ் செய்கைதானே. (497)

மேலேறும் ரசபதங்கந் தனையெடுத்து
மிக்ககல்வந் தன்னில்வைத்து அரைமுன்னீரால்
சேலாக உமியில்வைத்துக் கடத்திலிட்டுத்
திரும்பஅதை வறுத்துயிடு கடத்திற்றானே
பாலாக யெரித்திட்டு வழித்துவாங்கு
பாங்காக யேறமட்டு மெரித்துவாங்கு
நாலாக யிப்படியே பாகஞ்செய்தால்
நல்லதொரு செந்தூரமாகுந்தானே. (498)

செகப்பான செந்தூரந் துருசுச்செம்பில்
சேர்த்திடவே நூற்றுக்கு ஒன்றுதானும்
உகப்பான ஆணிக்குப் பத்துகாணும்
உவமையது சொல்லவென்று லொப்போயில்லை
துகப்பான மண்டலத்திற் காயசித்தி
துடியான மேனியது அலரிபோலாம்
வருப்பான புத்தியா யுண்டுதேற
வழியாக யாகோபு வகைசொன்னாரே. (499)

மஞ்சள் தைலம்.

பசப்புமஞ்சள் தூக்கியிடி பானையிட்டுப்
பற்றியதில் துவாரமிட்டுத் தலைகீழாக்கி
ஒசத்தியந்தக் குழிநடுவே சட்டியிட்டு
உள்வரையை யடைத்துநீ மண்தானிட்டு
நிசப்படவே யெருவடுக்கி மேலேதானும்
நிலவரமாய்த் தீப்போடு தைலம்வீழும்



வசப்படவே தானெடுத்து வைத்தபின்பு
வரும்விபரம் யாகோபு வகைசொன்னாரே. (500)

விளங்கக்கேள் முன்தைலம் நாலுக்கொன்று
வீதமிடை கெந்தகத்தைப் பொடித்துத்தூவி
உளங்குளிரச் சீசாவிலடைத்துமூடி
உண்மையுடன் நெல்லாவி நடுவில்வைத்து
வளமாக மூடியதை நெல்லவித்தால்
வசமான தைலமாமெடுத்துப்பாரு
இளங்கன்று போல்வளருந் தைலமுண்டால்
இதமாக யாகோபு யியம்பினாரே. (501)

கெந்தித் தைலம்.

கெந்தகத்தின் தைலத்தை உண்ணவீதம்
கிருபையதாய்த் துட்டிடையுங் கொள்வீராகில்
வந்தவினை மண்டலத்தில் மேகுகுஷ்டம்
வகையில்லா வாதமகோதரங்கள்தீரும்
முந்தவினைப் பெருவயறு குன்மஞ்சோகை
முனிந்துவந்த வினையெல்லா மோடிப்போகும்
சிந்தனைகள் வாராது யாகோப் சொன்னார்
சிறப்பான தைலமிது சீராய்ப்பாரே. (502)

நாகச் சுண்ணம்.

சீருகின்ற நாகமதைச் சுத்திபண்ணிச்
சேர்த்துநீ உருக்கையிலே சூதம்பாதி
வாருகினு மதியிரட்டி வெடியுங்கூட்டி
வலுக்கஅரை பழச்சாரால் வில்லைதட்டி
நீருகின்ற வெய்யோனி லுலரவைத்து
நிலவரமாய்க் காடையென்ற புடத்தில்நீறும்
பாருலகில் ரசவாதி பிழைக்கவென்று
பழம்பொருளா யாகோபு பாவித்தாரே. (503)

பாவித்து நீற்றினதை யெடுத்துமுன்சாறு
பாய்ச்சியரை யாயோனின் பெண்டீர்மேலே
கோவித்து யெடைசமனாய்க் கட்டிக்காயக்
கொள்கைவைத்துச் சுண்ணப்பு அங்கியிட்டுத்

தாவித்துப் புடமிட்டு யெடுத்துப்பார்த்துத்
தள்ளிடு நீ மேற்கவசம் உள்ளிருக்கும்
பூவொத்த கவசத்தைத் தூளாய்ப்பண்ணிப்
புகலரிய செம்புதனிற் பாய்ச்சிக்கொள்ளே.(504)

பாய்ச்சிடவே துருசினுட செம்புதன்னில்
பதியயிடு ரெண்டுக்கு ஒன்றுதானும்
காய்ச்சிடவே அதையெடுத்து வெள்ளியேழுங்
கணக்காகக் குருசெம்பு மூன்றுமாகும்
மூச்சிடவே குருவொன்றிட் டுருக்கிப்போட
முனிந்துயிதில் யேழுயெட்டு மாத்துப்பொன்னு
பாய்ச்சியிதிற் றுய்சேர்க்க மாத்தெட்டாகும் [ம்
பஞ்சமித்திரம் முந்நூறும் பார்த்துத்தேரே ()

உரோமத்தைலம் யேமவித்தை.

இளவயசு கேசந்தான் பலமும்நூறு
இதைநறுக்கிச் சீயக்காய் தனையரைத்துக்
குளகுளப்பாய்ப் பாணியிட்டுக் கொதிக்கவைத்துக்
குணமாகக் கழுவியே காயவைக்க
வளவளப்பு யேறிவிடும் அயத்தின்சட்டி
வடிவுபெற வைத்தடுப்பில் திலகமிட்டுத்
தளதளப்புக் கேசத்தை யதிலேபோட்டுத்
தயிலம்வரும் பொழுதுஅர பொடியைப்போடே.

போட்டபொடி கேசத்தின் தயிலத்தன்னில்
பொருந்தஅதைப் பிரட்டிவரக் கரிபோலாகும்
நாட்டியெடு கல்வமிட்டு நீலன்ரெண்டு
நலமாக அதிலெட்டு நாறும்பூத்தான்
கேட்டுயெடு அதிலேந்தாங் காரம்ரெண்டு
கிரகணித்த திலகமிட்டுக் கொதிதாளிட்டு
வாட்டியதைப் புதுக்குகையில் வைத்துருக்கு
விரிசைபெற வெள்ளிபொன்போ லாடுந்தானே

ஆடுகின்ற வெள்ளிவெங் கலம்போற்றேனும்
அதையெடுத்து நிறுத்து நீ வீரங்காலாம்



பாடுபட்டு விட்டரைத்துத் தாரம்பாதி
பதிவான செவ்வல்லிப் பூச்சார்விட்டு
நாடியிதை யரைத்துவில்லை கதிரில்வைத்து
நலமாகப் பத்தெருவிற் புடமுமிட்டால்
ஈடுடனே குருவாகும் மதியிலெட்டு
இதைரெண்டு சேர்த்துப்பார் யேமமாமே. (508)

துருசுஅயச் செம்பு.

பார்த்துயெடு நீலனது பலமும்பத்துப்
பகரிய நாறும்பூ முக்காலிட்டுச்
சேர்த்துஅரை கொடியோனு முதலிற்பாதி
செயமுள்ள வீரனது முதலிற்காலாம்
நேர்த்தியாய்ப் பழச்சாறு விட்டரைத்து
நேர்மையெட்டு நாள்ரவியிற் காயவைத்து
சேர்த்துஉப்பு சுண்ணமுடன் கவசங்கட்டிச்
சுகமாகப் புடம்போடக் கருப்புமாமே. (509)

கருப்பெடுத்துக் கல்வமிட்டுத் தாரம்பாதி
கனிந்துவிட்டு முன்பழச்சார் கனியஆட்டி
உருப்பாக வில்லைகட்டிப் புடமுமிட்டு
உறுதிபெற யெடுத்துவைத்து உண்மைகேளு
நெருப்பாகப் புடம்போட்ட மருந்திற்பாதி
நேர்மையுடன் அரபொடியிற் பழச்சார்விட்டு
விருப்பாகத் திரிநாள்தான் கழுவிப்பின்பு
வெற்றிபெற முன்சொன்ன மருந்திற்சேரே (510)

அயச் செம்பு.

போட்டு அதைப் பிசறிவைத்துக் குகையிலிட்டுப்
புகலரிய உருக்குமுகங் காரங்கூட்டி
தாட்டு நீ வைத்துருக்கு செம்புமாகும்
நல்லதங்கச் செம்பதுவை மதிதானெட்டில்
காட்டுமுன்னே ரெண்டுகொடுத் துருக்கிப்பாரு
கணக்கான தங்கமுமாங் கருத்துள்ளோர்க்குத்
தேட்டுவரும் யாகோபு சொன்ன நீதி
செகத்திலே அயச்செம்பு செய்துபாரே. (511)

கசடருத்த தாளகமும் சேருமெட்டுக்
    களைகண்டர் பலமெட்டுக் காரமூன்று
பிசகாமல் வெடியொன்று வீரனொன்று
    பேசரிய யெருக்கினுட பாலாற்சாமம்
நிசமாக வில்லைதட்டிப் பதங்கமிட்டு
    நிலைத்தபின்பு தங்கமிட்டுத் தரமுமைந்து
வசமாகச் செவ்வல்லிப் பூச்சாருட்டி
    வகையாக வில்லைதட்டிக் கதிரில்வையே. (512)

வில்லைதனைச் சுண்ணஉப்பு கவசங்கூட்டி
    வெற்றிபெறப் புடமிட்டு யெடுத்துருக்கச்
சொல்லவொரு சத்தாகும் சத்திற்பாதி
    சுடர்க்கொடியோ னிட்டுமுன்போ லாட்டிக்காய்ந்து
நல்லாகப் புடமிட்டுக் கருப்பிபாதி
    நலமாகச் சேர்த்துருக்க ரவியுமாகும்
மெல்லவதை மதிதனிலே யெட்டுரெண்டு
    விதமாகச் சேர்த்துருக்கத் தங்கமாமே. (513)

நேரான சத்ததனிற் செம்புதானும்
    நேர்மையுடன் வாராம லிருந்துதானாற்
பாராளும் படைராஜன் பலமும்பத்து
    படிகார மிருபத்து ஐந்துங்கூட்டித்
தாராள மாய்ப்பொடித்துக் கலயத்திட்டுத்
    தன்மையுள்ள வாலைதனை மூடிச்சீலை
ஏராள மாய்ச்செய்து யெரிக்கநீராம்
    இதமாக முன்தள்ளிப் பின்னீர்வாங்கே. (514)

வாங்கியே பீங்கானி லடக்கம்பண்ணி
    வாதிகளே சத்துருக்குஞ் சத்துதன்னில்
பாங்கியே செம்புதான் வாராப்போனால்
    பதிவாகப் புகைநீரை விட்டரைத்துத்
தாங்கிதிரி நாள்வைத்துக் கொடியோன்பாதி
    தாக்கியிடு அரைத்துவில்லை கதிரில்வைத்து
ஏங்காதே புடம்போடு கருப்பிசேர்த்து
    இதமாக உருக்கிடவே செம்புமாமே. (515)



செம்புதனைத் தானெடுத்துக் காரங்கூட்டிச்
    செழிக்கவதை உருக்கி நீ தகடடித்து
நம்புமதி யெட்டிரண்டுஞ் சேர்த்துருக்கி
    நலமாக யெடைசமமா யேமஞ்சேரு
வம்புசெய்யாத் தகடடித்துப் புடமும்போட
    வடிவான புடமிறங்குந் தங்கமாகும்
தெம்புடனே அதைவிற்று உண்டுதேறு
    செயமாக யாகோபு சொன்னார்தாமே. (516)

சத்தெடுத்தால் நிறமதனைச் சொல்லக்கேளு
    சரியான வெண்கலம்போல் நிறமதாகும்
முத்தான வெங்காரஞ் சத்திற்சேர்த்து
    மூன்றுதர முருக்கிப்பார் சத்துநன்றாம்
வித்தான இலதைலம் முக்கண்பாலும்
    வீரியமா யிலுப்பெண்ணெய் தேன்புங்கெண்ணெய்
நத்தாசை யாகசரி யிடையாய்ச்சேர்த்து
    நன்றாக மத்தித்து நடக்கைகேளே. (517)

நல்லாக மத்தித்துச் சத்துவெல்லாம்
    நாடறியக் காரமிட்டு உருக்கிநீயும்
பொல்லாமை யில்லாமற் தரமுமூன்று
    போக்கிலே சாய்த்துவரக் கல்மிசங்கள்
நில்லாம லோடிவிடுங் கடலேபுக்கும்
    நேர்மையுள்ள செம்பாகுஞ் செம்புதன்னை
வல்லமையாய் மதியெட்டில் ரெண்டுசேர்க்க
    வகைதெரிய களங்குமுந் நாறும்பாரே. (518)

செம்புதனை யெடுத்துமே பஞ்சமித்திரம்
    செயமாக மூன்றுதரங் காரங்கூட்டி
நம்பியதில் மூன்றுதர முருக்கிச்சாய்க்க
    நலமாக அருணனைப்போல் நிறமதாகும்
தெம்புடனே யெடுத்துமதி யெட்டுரெண்டு
    சேர்த்தெடுத்துப் பார்க்கையிலே பொன்போலாகும்
தம்பிரான் செயலென்று யாகோப்சொன்ன
    தக்கநல்ல கைபாகந் தகைமையாமே. (519)

திருச்சேம்பு.

நீலனோடு பலம்பத்து மெடுத்துக்கொண்டு
நேராக நாறும்பூ பலமும்பத்துக்
காலனொரு கொடியோனும் பலமுமைந்து
கலந்ததொரு அரிதாரம் பலமுமைந்து
சேலான வீரனோடு பலமும்ரெண்டு
செயமாகக் கல்வமிட்டுப் பழச்சாற்றாலே
காலமது மிருசாம மரைத்து நீயும்
கனிவாக நாளேழு அரைத்திடாயே. (520)

நல்லாக அரைத்துவில்லை கதிரில்வைத்து
நலமாக உப்புநேர் சுண்ணமிட்டுப்
பொல்லாமை யில்லாமற் புடத்தைப்போடு
புகலரிய கரிபோலே நிறமதாகும்
சல்லாப மாய்க்கொஞ்சம் கரியிலிட்டுச்
சாதகமா யுருக்கிப்பார் ஓடிப்போகும்
அல்லாவி னதுமேலே ஆணையிட்டேன்
அடைவாக யிப்பாகம் நிசமாங்காணே. (521)

ஓடினதோர் செம்பெல்லாம் பிடிக்கக்கேளு
ஓதரிய கேசரமும் பலமும்நூறு
நீடியதைச் சீயக்காய் வேகவைத்து
நீருதன்னில் சுத்திசெய்து பின்புநீயும்
தேடியே அயச்சட்டி தன்னிலிட்டுத்
திறமான தில்தப்பால் கொஞ்சமிட்டுக்
கூடியபின் னடுப்பேற்றி யெரிக்கும்போது
குணமாகத் தைலமதா யுருகுப்பாரே. (522)

உத்து நின்று உருகையிலே புடமுன்போட்ட
உறுதிபெற்ற மருந்ததனைப் பொடியாய்ப்பண்ணிப்
பத்திநின்று உருகையிலே மேலேபோட்டுப்
பதிவாக ரோமமிட்டு உருகும்போது
சித்திபெறக் கிண்டிவிட்டு யெடுத்துக்கொள்ளு
சீர்பெறவே சேர்ந்துசெம்பை யிழுத்துக்கொள்ளும்



நத்தியே கரியோடே யெடுத்து நீயும்
நலமாகச் சொல்லுகிற பாகங்கேளே. (523)

ஆய்ந்தெடுத்த அரபொடியும் பலமுமைந்து
அதிலிடுவாய் பழச்சாறு படிதானுழி
தோய்ந்தபின்பு ஊறவைத்துத் தெளிவிருத்துத்
துப்புரவாய்த் தெளிவைத்தா னெட்டக்காய்ச்சிப்
பாய்ந்துமே வருத்து அதை யெடுத்து நீயும்
பதிவான ரோமத்தின் கரியினோடே
வாய்ந்தபடி சேர்த்துமே பிசறி நீயும்
வடிவான வுண்டிலது கூட்டிக்கொள்ளே. (524)

கூட்டியே குகையிலிட்டு உருக்கிப்பாரு
குணமான சூரியன்போற் செம்புமாகும்
நாட்டியே யிப்படிக்குக் காரங்கூட்டி
நலமாக மூன்றுதரா முருக்க நீயும்
மூட்டுபஞ்ச மித்திரத்தில் தரமுமூன்று
முடிவாக உருக்கிச்சாய் கல்மசம்போம்
கூட்டியதை யெடுத்து நீ மதியில்மூன்று
குணமாக ஒன்றிட்டு உருக்கிடாயே. (525)

உருக்கியபின் னெடுத்துப்பார் மாற்றுஆறு
உறுதிபெறத் தங்கமது யிடையேசேரு
மருக்கியபின் மாற்றெட்டு மாகும்பாரு
மதியான யாகோபு கண்டநேர்மை
வருக்கமுட னுலகத்தில் யேழைவாதி
வண்மையுள்ள பேர்களுக்கு உறுதிசொன்னேன்
நெருக்கமுட னல்லாவின் பேரிலாணை
நிலையாகு மிப்பாகம் நிசமதாமே. (526)

பச்சைமண் தோண்டி தன்னிற் பூநீறுதன்னைப்
பதிவாக மொண்டுவரிற் கரைந்தேபோகும்
இச்சையுடன் சுட்டதோர் மண்பாண்டத்தில்
இங்கிதமாய்த் தண்ணீர்மொள்ளக் கரையாதப்பா

நிச்சயமா யிதுபோலே செத்தசெம்பு
நிலமையாய் நின்றுஉப்புக் காவிக்கேறும்
பச்சையது செம்பிருந்தாற் கழன்றுபோகும்
பக்குவமா யாகோபு சொன்னதாமே. (527)

தாளகக்கட்டு வேடியுப்புத் திராவகம்.

ஈரஞ்சு பொட்டனையா மிதினில்ரெட்டி
இயல்பான அய்யஞ்சு படியுமாகும்
பாரஞ்சு மூரலிலிட்டுப் பொடியதாக்கிப்
பக்குவமாய் வாலையிட்டுப் புகைநீர்வாங்கு
நேரஞ்சு முன்னீரைத் தள்ளிப்போட்டு
நினைவோடே பின்னீரை வாங்கித்தாரம்
பேரஞ்சு நாழிகையுஞ் சுருக்குத்தாக்குப்
பேர்பெறவே தாளகமும் கட்டிப்போமே. (528)

காரீயம் பலம்பத்துக் கரண்டியிட்டுக்
கனிந்துருகும் போதுவெடி.ஐந்தாங்காய்ச்சல்
பாருசரி யிடைக்கெடைதான் போட்டுநன்றாய்
பண்பான சிறுகரண்டி தன்னாற்கிண்டு
வாரியாய்ச் சாமமது சென்றபின்பு
வகையாக மஞ்சள்போற் றூளாய்நிற்கும்
ஊரியபின் னெடுத்துமே கல்வத்திட்டு
உறுதிபெறத் திநீராற் சாமமாட்டே. (529)

நல்லாக ஆட்டிமுன் தாளகத்தில்
நாடியே மேற்கவசங் கட்டக்கேளு
வெல்லவே தாளகத்தின் மேலேநன்றாய்
விதமூன்று பங்குபண்ணிக் காயவைத்துப்
பொல்லாமை யில்லாமற் காடையாகப்
போக்கோடே வைத்துகல்வ மீதிலிட்டு
நல்லறிவாய்த் திநீரை விட்டுஆட்டி
நலமாகத் தாளகத்திற் கவசம்போடே. (530)



போட்டுமே கதிரவன்முன் காயவைத்துப்
பொருந்தவே நபிமாரைத் தொழுதுபோற்றி
காட்டெருவில் முன்போலே புடத்தைப்போடு
கனியவெடு கல்வமிட்டுப் புகைநீர்சேர்த்து
நாட்டுக்குள் சாமமரை வழித்துத்தாரம்
நலமாக மேற்கட்டிப் புடமுமிட்டு
நீட்டியெடு கடுஞ்சிகப்பாய்க் குருவுமாகும்.
நேர்மையா யாகோபு நிசஞ்சொன்னாரே. (531)

துருசுச் செம்பு.

பழச்சாறு பீங்கானில் ரெப்பவிட்டு
பதிவான நீலனதைப் பொடித்துத்தூவு
தழல்தன்னில் வைத்துமே காயவைத்து
தாட்டிகமாய்க் குகையிலிட்டு உருக்கச்செம்பாம்
உழவாக யிச்செம்பு யிடைதான்ரெண்டு
உறுதிபெற முன்சொன்ன மருந்தைத்தூக்க
தழமாக நொருங்கியது தூளாய்ப்போகும்
நாடியே யாகோபு நலஞ்சொன்னாரே. (532)

நல்லாக நொருங்கினதோர் தூளுதன்னை
நலமாகக் கல்வமிட்டு வீரங்காலாய்
மெல்லவே புகைநீரா லரைத்துவில்லை
விதியாகக் கட்டியதைக் காயவைத்து
சொல்லவொரு புடம்போட்டு யெடுத்துக்கொண்டு
சுத்திபெற வெள்ளிதனில் நாலுரெண்டு
வல்லமையாய்ச் சேர்த்துதத் தங்கமொன்று
வகையாகச் சேர்த்துருக்கத் தங்கமாமே. (533)

தங்கமாந் தங்கமது சிவப்புமாகும்
தாட்டிகமாய்க் காவிக்கு நிலைத்துநிற்கும்
பங்கம்வரா தென்றுரைத்தார் யாகோப்தானும்
பத்திதரும் நபிமார்க ளெனக்குச்சொன்னார்
வங்கவித்தை உலகத்தில் வாதிமார்க்கு
வகைகாணப் பொன்னாகும் வடிவுமெத்த

சிங்கம்போ லாகுமிது முன்னோர்தானுஞ்
　　செய்திட்ட பாகமது நான்கண்டேனே. (334)

விடத்தலைக் கற்பம்.

வாருகேள் விடத்தலையின் பட்டைவாங்கி
　　மகிழ்வாகக் காயவைத்துப் பலமும்நாலு
தேருகேள் வன்னியதின் பதங்கந்தன்னைச்
　　செயமாக யிடைசமமாய்ச் சேர்த்துமல்விச்
சாருவிட்டு கடிகையைந்து அரைத்துக்காய்ந்து
　　சமமாகக் கருந்தேன்வார்த் துண்டைசெய்து
பேருகேள் சிமிழ்வைத்துக் காலைமாலை
　　பேணியிதை யுண்டுவரப் பெருமைகேளே. (535)

உண்டிடவே மண்டலந்தா னந்திசந்தி
　　உறுதிபெறச் சடமிறுகித் தங்கம்போலாம்
கண்டவுடன் விந்துருகி மணிபோலாகும்
　　கடல்புக்கும் பித்தமறும் கபத்தைப்போக்கும்
பண்டுபோல் நீயிருக்கக் கற்பமாகும்
　　பத்திவரு முத்திதரும் பலிக்குஞ்சித்தி
கொண்டுவர அண்டரென மதிப்பாருன்னைக்
　　கொடியவினை களைப்போக்குங் கூறினேமே. (536)

சஞ்சீவி மூலிதனைக் கிழித்துநீயும்
　　சாற்றரியக் கதிரில்வைத்து இடித்துத்தூளாய்
மிஞ்சாமல் வன்னிபற்ப மிடையேசேர்த்து
　　மீறும விருசாமந் தேனலாட்டி
வஞ்சமில்லா மண்டலந்தான் கொண்டுவந்தால்
　　வகையான மேகமறும் வெட்டைநீங்கும்
பஞ்சிலிட்ட தீப்போலாம் பாலனுவான்
　　பார்த்துஉண்மை யாகோபு பாலித்தாரே. (537)

துருசுச் சுண்ணம்.

பணிவாகத் துருசுரெண்டும் அதின்மேற்சினம்
　　பண்பாயோர் பலம்நிறுத்துக் கவசங்கட்டித்
துணிவாகச் சட்டிதனிற் பூநீர்தன்னைத்
　　தூளாக்கி ரெண்டுபடி தானுமிட்டு



அணிவாக நீலினையும் நடுவில்வைத்து
　　அதின்மேலும் ரெண்டுபடி தூளால்மூழ்த்தித்
தணல்பறக்கச் சாமமொன்று தீமூட்டித்
　　தானெடுக்கக் கண்டாது நீறுந்தானே. (538)

நல்லாக நீறினதோர் துருசுநேரே
　　நாட்டியிடு புகைநீரி லெடுத்துச்சூதம்
வெல்லவே ரெண்டிடையுங் கல்வமிட்டு
　　விதமாகப் புகைநீரா லரைத்துப்பின்பு
கொல்லுமதை யிருசாமங் கடந்துநீயும்
　　குணமான சவ்வீர மரைக்காலிட்டுப்
பல்லவமாய்ப் பச்சைக்கற் பூரந்தானும்
　　பதியவிடு அரைக்கால்தான் பண்புபாரே. (539)

பண்பாகக் கதிரில்வைத்துக் காய்ந்தபின்பு
　　பதியவே அயமுடன் வெங்காரநேரே
தண்பாக அரைத்துமே கவசங்கட்டித்
　　தாட்டிகமாய்க் காடையென்ற புடத்தில்வைத்து
உண்பாக மேற்கவசம் பிரித்துத்தள்ளி
　　உறுதிபெற உள்மருந்தைக் கல்வத்திட்டு
நண்பாகப் புகைநீராற் சாமமாட்டி
　　நலமாக உண்டைபண்ணி நாட்டக்கேளே. (540)

நாட்டவே துருசினுட செம்பெடுத்து
　　நலமாகப் பலங்காலை உருக்கிநீயும்
பூட்டவே உண்டையெல்லாங் கிராசமிட்டால்
　　பொடியாக நொருங்கிடுமே வெள்ளிநாலில்
கூட்டியிதில் ஒன்றுகொடுத் தூதிப்போடு
　　குணமாக மாற்றேழு யிடைதான்சேர்த்துத்
தாட்டிகமாய்க் காவிதனிற் புடத்தைப்போடு
　　தவறுமல் ரெண்டிடையுந் தங்கமாமே. (541)

சிவன் வேம்புத் தைலம்.

சித்திபெறச் சிவனுடைய வேம்புதூக்கு
　　சிறக்கபிடி உரலிலிட்டுப் பொடியதாக்கி

நித்தியமாய்க் கதிரில்வைத்து உலர்ந்தபின்பு
நேராக வாலுளுவை வித்துங்கூட்டிப்
புத்தியதாய்ச் சிவகரந்தைச் சாருவிட்டுப்
புகட்டியரை நாள்ரெண்டு கதிரில்வைத்துப்
பத்தியதா யுலர்த்தியதைப் பொடியாய்ப்பண்ணிப்
பகாரிய பூமிபுடம் வைக்கக்கேளே. (542)

காசிகுப்பி தனையெடுத்து மருந்தையிட்டுக்
கருத்துறவே சீசாவாய் சதம்பைமூடித்
அசிபடாப் புதுச்சட்டித் தூரைப்பொத்துத்
தொடுத்தகுப்பிக் கவிழ்த்துமே உள்ளேநாட்டு
வாசிபெறச் சலங்கைமணல் மேலேமூடி
வகையாக அதின்மேலே புடத்தைப்போடு
மோசம்வரா தடுப்பேற்றி அடுப்புக்குள்ளே
முதன்மையுள்ள பீங்கானை வைத்துப்பாரே.(543)

உண்டான தைலமெல்லாம் வீழ்ந்தபின்பு
உறவாக யெடுத்துமுக் களஞ்சினைத்தி
தொண்டர் செய்யும் ரசபதங்கம் பணமவ்வீதம்
தொக்கஅந்தி சந்திமண் டலமேகொள்ளு
கண்டவுடன் திமிர்குஷ்டம் பத்துயெட்டுங்
கடல்புக்கும் நரைதிரையுங் காணாதோடும்
பண்டுபோல் காயமது யிறுகிப்போகும்
பகலவன்போ லொளியாகும் பண்புதானே. (544)

மாத்தேர ரோமத்தைலம்.

கேசரந்தான் நரையின்றி பலமும்நூறு
கிருபையுடன் சீயக்காய் பாணியிட்டு
வாசமற அரைத்தபின்பு குழம்பதாக்கி
வைத்தசட்டி தன்னிலேதான் ரோமம்போட்டுச்
மாசகலக் கொதிக்கவைத்து யெடுத்துப்பின்பு
மயமாகக் கத்தரித்துத் திலகந்தன்னை
வாசமற ஒட்டிரெட்டி யிட்டு நீயும்
வுண்மைபெறக் கொதிப்பித்து யிறக்கிவையே.(545)



கரிசட்டி தனிற்கோணி னைசிருத்திக்
கனமாகச் சல்லடைபோல் துவாரம்போட்டு
சரியாகப் பொத்துஅதி லீர்க்குத்தன்னைச்
சரிநுனியை விட்டுயிழு துவாரமெல்லாம்
குறியாக அடைத்துவிடும் சுற்றிரோமக்
குழம்பதனை பூத்திவிட்டு மேலேதானும்
விரிவான கரிச்சட்டி மல்லாத்திமூடி
வீரியமாய்ச் சுற்றிலுமே சீலைசெய்யே. (546)

நல்லாகச் சீலைசெய்து அடுப்பிலேற்றி
நாடியே மேற்சட்டி அகண்டவாயில்
மல்லாத்திக் கனத்தயெரு வடுக்கித்தீயை
மருகவே புடம்போட்டு அடுப்புக்குள்ளே
செல்லவொரு பீங்கானை வைத்து நீயும்
செயமாகத் தீப்பற்றி யெரியும்போது
கல்லலடைக் குச்சியெல்லாம் பிடுங்கிப்போடு
கதித்துமே தயிலமது யிறங்குந்தானே. (547)

வந்ததொரு தயிலமெல்லாம் வழித்துக்கொள்ளு
வருகாட்டால் முன்போலே புடத்தைப்போடு
சிந்தனையாய் வந்துவிழுந் தயிலந்தன்னைச்
சிறப்பாகச் சேரெட்டு யெடுத்து நீயும்
கெந்தகமுஞ் சேரொன்று துருசுசேரு
கிளர்ந்தஅரி தாரமொடு சேருஐந்து
முந்தியெடு வீரமது சேருகாலாம்
முனிந்துகல்வ மிட்டுஅதில் தயிலம்விட்டே(548)

விட்டுஅரை கொஞ்சமதாய்ச் சாமம்பத்து
விரமாக வழித்துப்பதம் பார்த்துக்கொள்ளு
முட்டுகொஞ்சந் தயிலமிட்டுக் குழம்பதாக
முன்தயில மிறக்கியதோர் சட்டியிட்டுச்
செட்டுடனே முன்போற்பா வனையேசெய்து
சீர்பெறவே தயிலமதை யிறக்கிக்கொள்ளு

கட்டுமது லோகமெல்லாம் செம்புமாகும்
கனகமிதில் மாத்தேறுங் கண்டுபாரே. (549)

கண்டுயெடு அரைபொடியுங் காலதாகக்
கனிநிம்பச் சாற்றினிலே திரிநாளூறப்
பண்டுவதைப் பாணியிட்டு அலம்பிச்சட்டி
பதியயிட்டு அடுப்பேற்றித் தீயைமூட்டி
முண்டுபடா தெரித்துவா சிவக்கமட்டும்
முடிந்திருந்த தயிலமதைத் தானெடுத்து
மண்டுகின்ற தயிலமதைக் குத்திக்குத்தி
மகிமைபெறக் கரண்டியினாற் பிரட்டுவாயே (550)

பிரட்டியெடு தயிலமெல்லாஞ் சுவறிப்போகும்
பின்புநீ கல்வமிட்டுப் பொடியதாக்கித்
துரட்டில்லா வெங்காரங் காலுமிட்டுத்
தூக்கியிதைப் பொடிசெய்து குகையிலிட்டுப்
பரட்டியதை உருக்கியுடை பின்புகாரம்
பதியவிட்டு யிப்படிக்குத் தாமுமைந்து
திரட்டியதை யுருக்கிடவே செம்புமாகும்
சீரான அயச்செம்பு சேர்த்துபாரே. (551)

மதியெடுத்து ஊதிவிட்டு யேழும்மூன்று
வண்மைபெறச் சேர்த்துருக்கி யெடுத்துப்பார்க்க
விதிப்படிக்குத் தங்கம்போ லுரையுமாகும்
வெற்றிபெறத் தங்கமிடை சேர்த்துருக்கிப்
பதிவாகத் தகடடித்துப் புடமும்நாலு
பதியவே உப்புசெங்கற் பொடியுஞ்சேர்த்துச்
சதிபெறவே தகட்டைப்புளி யதனிற்றோய்த்துச்
சரியாகப் புடம்போட யிறங்கும்பாரே. (552)

இறங்கினதோர் தங்கத்தை விற்று நீயும்
இனியதொரு சுந்திரிக்குச் சோறுமாக்கிக்
கிரங்கிவந்த அதிதிகட்குப் பிச்சையிட்டுக்
கிளர்ந்தகுமர் கரையேறப் பணங்களீய்ந்து



திரங்காணக் கணவனுக்குக் கட்டிவைத்துத்
தீன்முகம் மதுவைநிதம் தொழுதுபோற்றி
வரங்காண இப்பாக முடித்துக்கொண்டால்
வல்லசித்தி பெற்றுலகில் வாழலாமே. (553)

சித்திபெற அஞ்சாறு ஏழுயாற்று
சீர்பெருகும் பொன்னதனை வாங்கிவந்து
பத்தியுடன் தகடடித்துத் தயிலம்பூசிப்
பதியபுடம் போட்டெடுத்துக் காரங்கூட்டி
நித்தநித்த முருக்கியதைப் புடமூன்றிட்டால்
நிலையுள்ள தங்கமாய் மாத்துயேறும்
சத்தியமா யிந்தவித்தை நபியார்சொன்னார்
சரிவரவே கண்டுநான் சொன்னவாறே. (554)

தங்கமதைத் தகடடித்துத் தயிலந்தன்னைத்
தடையறவே பூசியதைப் புடமூன்றிட்டுத்
துங்கமதா யெடுத்துப்பார் கருத்துநிற்கும்
துடியான காரமதைக் கூட்டி நீயும்
சங்கமதா யுருக்கிடவே ரவியுமாகும்
சரிவரவே யெடுத்துவெள்ளி யெட்டில்ரெண்டு
பங்கம்வரா தெடுத்துருக்கி முகத்தைப்பாரு
பாருலகிற் றங்கமாம் பாரிலோர்க்கே. (555)

பாரிலே யித்தயிலஞ் செய்து நீயும்
பதியவே வாதங்கள் மிகவுஞ்செய்து
ஊரிலே யிருந்துவிடு நபிமார்போலே
உலகத்தி லிப்பாகஞ் சொல்லவேண்டாம்
வேரிலே நீரிருந்தால் மரந்தளிர்க்கும்
விதம்போலக் கருவுகளின் விபரந்தன்னைக்
கூறினா லொன்றுமில்லை தயிலபாகங்
குணமாகச் செய்திடவே சித்தியாமே. (556)

சித்தியாய் முன்னோர்கள் தயிலந்தன்னைச்
செய்பவில்லை யென்றுமே பாகமாகப்
பத்தியாய் நான்கண்டு பாகம்பார்த்துப்
பதிவாக அனுசரித்துச் சித்துயாட
முத்துகளை ஒருகயிற்றிற் கோர்த்தாப்போலே
முழுப்பாகங் களங்குமுந் நூறுசொன்னேன்
சத்தியா யிதைக்கண்டு தேறித்தேறிச்
சஞ்சலத்தை விட்டுமே தங்கஞ்செய்யே. (557)

குப்பிவைப்பு அயச்செந்தூரம்.

அச்சமில்லான் பலப்பத்து அதற்குநேரே
ஆண்மையுள்ள கெந்தகமுங் கொடியோனைந்து
நச்சரவாம் வீரமது பலமுங்கால்தான்
நலமாகக் கல்வமிட்டுப் பழச்சாற்றாலே
நிச்சயமா யரைத்திடு நீ சாமம்நாலு
நேராக வில்லைசெய்து கதிரில்வைத்து
இச்சையுடன் சுண்ணாம்பு உப்புநேரே
இதமாக அரைத்துமே கவசங்கட்டே. (558)

கவசமிட்டுப் பத்தெருவிற் புடமுமிட்டுக்
கனிவாக மேற்கவசந் தள்ளிநீயும்
தவமாக கல்வமிட்டு அய்முங்காலாம்
தாக்கியிடு ரசபதங்கம் முக்காலிட்டுப்
பவமாகப் புகைநீரா லரைத்துச்சாமம்
பதியயெடு பீங்கானி லிட்டுநீயும்
உவமாகக் கரியோட்டில் நெருப்பையிட்டு
உறுதிபெற வருத்திடென்று உரைசெய்தாரே. ()

வருத்தபின்பு காசியென்ற மேருக்கிட்டு
வடிவாக நால்சாமங் கடுமையாகப்
பெருத்துமே தீயெரித்துக் கல்வமிட்டுப்
பேறுபெறப் புகைநீரை விட்டுச்சாமம்
பருத்துமே அரைத்துமுன்போல் வருத்துநீயும்
பதியஅதை காசியென்ற மேருக்கிட்டுச்



சிறுத்துமே யெரியிடுநீ நாலுசாமம்
செயமாகச் சிவக்கமட்டு மெரித்திடாயே. (560

எரித்துமே அல்லால்வத் தொழுதுபோற்றி
இதமாக யிதையெடுத்துப் பதமாகத்தான்
பிரித்துமே செந்தூரம் ரவியிற்றுனும்
போராகப் பத்துக்கு ஒன்றுதாக்கு
விரித்துமே உருக்கியெடுத் தொடித்துவொன்று
விதமாக வெள்ளியெட்டில் ரெண்டுசேர்க்க
மருத்துமே தங்கம்ரெண்டு சேர்த்துஊத
வடிவான தங்கமாம் வண்மைபாரே. (561

வேதைக்குப் புடபாகம்

வண்மைபெறத் தகடடித்து உப்புநாலு
வகையாகச் செங்கத்தூள் மூன்றுதாக்க
உண்ணுமது புளியிட்டு மத்தித்தேதான்
உறவாக அதில்வைத்துப் புடமுங்கொஞ்சம்
நண்ணவே புடமூன்று யிட்டெடுக்க
நலமாக அருகுகட்டிப் புடமிறங்கும்
கண்ணலாய் நினையாதே உருக்கிப்பார்க்கக்
கனகமது பீர்க்கம்பூ வர்ணமாமே. (562)

தங்கமதை யெடுத்துவிற்றுச் செலவுகேளு
தன்மைபெறக் கந்திரிகள் மிகவுஞ்செய்து
உங்கவே மிசுக்கையர்க்கு அன்னமீய்ந்து
உயர்வான சுண்ணவகை யெல்லாம்பார்த்துட்
பங்கமாய்ப் போகாமற் சவுக்காரத்தைப்
பதையாமற் செய்தபின்பு துருசைநீற்று
சங்கவரை குதத்தைக் கட்டியாடு
சதாகோடி காலம்வரை யிருப்பார்சொல்லே (563)

சொல்லிவிட்டேன் கைபாக வரிசைகண்டு
சுயமாக திறைபாகங் கருவைக்கண்டு
நல்லிட்ட புடபாக மெரிப்பின்பாகம்
நலமாக யிப்பாகம் வரிசைகண்டு

வில்லிட்ட அம்புபோற் செய்துபாரு
வேதாந்த மெய்ப்பொருளும் விளங்கும்நன்றாய்
முல்லைமலர் போலவே சுண்ணஞ்செய்ய
முக்கியமா யறுநூறும் மொழிந்தேன்பாரே. (564)

மொழிகேட்டு நபிமார்க ளெல்லோருந்தான்
முயற்சியா யென்னைத்தான் வரவழைத்து
அழிவில்லா மெய்ப்பொருளும் வாதமார்க்கம்
அடங்கலையுங் காட்டியே பின்புதானும்
கழியவே சுண்ணச்செந் தூரத்தோடு
கனகமது பிறக்குகின்ற கருத்தைக்காட்டிப்
பழியில்லா தண்டகம் நூற்றிப்பத்தில்
பதிவாகக் குருமுடிக்க வகைசொன்னேனே (565)

சூடத் திராவகம்.

கற்பூரத் திராவகத்தைக் கருதிச்செய்யில்
காசினியில் நோய்களெல்லாங் காணாதோடும்
சொற்படிக்குப் பாஷாண மெல்லாங்கட்டச்
சுளிவான கம்பியுப்புப் பலமோபத்து
சற்பனையாஞ் சீனமது யிருபத்தைந்து
தாக்கிரெண்டும் பொடித்ததனைக் கலையத்திட்டு
உற்பனமாய் வாலையென்ற சட்டிமூடி
உளுந்தாலே சீலைசெய்து அடுப்பிலேற்றே. (566)

ஏற்றியே தீயெரிக்க வெள்ளை நீராம்
இதமாக வந்துவிழு முன்னீர்தள்ளி
நாற்றிசையு மெய்க்கவே பின்னீர்தன்னை
நாட்டமுடன் குப்பிதனி லடைத்துப்பின்பு
பார்த்திபனார் கொடியோனும் பலமும்பத்து
பதிவான வீரமது பலமுங்கால்தான்
சேர்த்துமே புகைநீரா லரைநீசாமம்
செம்மையுடன் கரைத்துஅதைக் குழம்பாயாக்கே



ஆக்கிவைத்த குழம்பதனை வழித்தெடுத்து
ஆண்மைபெறக் கலயமிட்டு வாலைமூடி
நோக்கியபின் உளுந்தாலே சீலைசெய்து
நுண்மைபெற அடுப்புதனி லேற்றிப்பின்பு
பாக்கியமாய்ச் சிறுகயெரி நீர்தான்வந்து
பதிவாக யிறங்கிவிடும் புகைபடாமல்
தாக்கியபின் நின்றுயெடு திராவகத்தைச்
சகலசித்து மாடுமென்று தான்சொன்னாரே. ()

நல்லாக யிறங்கினதோர் புகைநீர்தன்னை
நம்பியடை அரக்கென்ற குப்பியிட்டு
மெல்லவொரு சொட்டுதிரி கடுகிலுண்ண
வேகமது கண்டவுடன் நோய்களெல்லாம்
சொல்லாம லோடுமது தெண்டனிட்டுச்
சுகமான புகைநீரா மிந்தநீரு
எல்லாமுஞ் சுண்ணமய மாக்கச்சொன்னார்
இதன்விபாஞ் சுண்ணமுந்நூ றெழுதினேனே

தாளகக் கட்டு.

கசடற்ற அரிதாரங் கல்வத்திட்டுக்
கடுமையுள்ள புகைநீரை விட்டரைத்து
நிசமாக யிருசாம மரைத்துநன்றாய்
நேர்மைபட வில்லைதட்டிக் கதிரில்வைத்து
வசமாகக் காய்ந்தபின்பு வாட்டி நீயும்
வளப்பமுடன் கல்வத்தி லிட்டுப்பின்பு
பசமாக முன்போலே நெருப்பில்வாட்டு
பத்தியுட னைந்துதரம் வாட்டிப்பாரே. (570)

வாட்டிடவே புகையதுவுங் கட்டி நிற்கும்
வகையாக மேற்கவசம் வழுத்தக்கேளு
தாட்டிகமாய்ச் சீனமது பலமும்பத்து
தக்கபுகை நீரைவிட்டுக் கல்வத்தாட்டி
மூட்டியெடு யிருசாமஞ் சென்றபின்பு
முதன்மையாய் வில்லைதட்டிக் கதிரில்வைத்து

ஒட்டிலே ஊதிவிடு கடுமையாக
உண்மையாய்க் கடுஞ்சுண்ண மாகுந்தானே. ()

சுண்ணமிதைத் தாளகத்தின் மேலேகட்டிச்
சுடுதணலில் வாட்டிசிறு புடத்தைப்போடு
சொன்னபடி தாளகமும் நீறிப்போகும்
சுருதிமுறை தாளகநீர் துருசுக்கிட்டால்
சின்னமது வில்லாமல் நீறுங்கண்டாய்
சிறப்பாக முன்தொந்த மேற்றிக்கொள்ளு
நன்னயமா யிதுபோலே யெலிப்பாஷாணம்
நலமான மிருதார சிங்கிக்காமே. (572)

சரக்கெல்லா மிப்படியே தட்டி நீற்று
சலுதிபடத் தொந்தமது வேறத்தங்கம்
பாக்கவே செய்யாமற் பெருமையாகப்
பத்தியுடன் செய்தாக்காற் பலனுமாகும்
உரக்கவே சுண்ணமென்ற அறுநாறுதன்னில்
உறுதிமிகச் சொல்லிவிட்டே னுற்றுப்பார்த்துச்
சுருக்கமா யிடைபாகங் கண்டுசெய்தால்
சுகப்படுத்துஞ் சுண்ணமதின் தொழிலுமாமே.()

சூதபதங்கம்.

அன்னமிடு முன்னிடும்பூ தூக்குஒன்று
அந்திடைக்குப் பண்ணையிட்டு அதிதமாகச்
சொன்னபடி யிடித்துபுதுச் சட்டியிட்டுத்
துகையாக அமுக்கிநடுப் பள்ளம்பண்ணி
நன்னயமா யரன்பீசம் பலமும்நாலு
நாடியிடு பள்ளத்திற் சட்டிமூடி
முன்னேமு சீலைசெய்து அடுப்பில்வைத்து
முனிவாக யாகோபு முறைசொன்னாரே. (574)

நல்லாகக் கன்லிட்டு விறகுபாய்ச்சி
நாடியெரி மூவருந்தான் மேலேயேறி
சல்லாப மாயிருக்கும் சாமத்துள்ளே
சரிவரவே கனலாற்றிப் பிரித்தெடுத்து



மல்லாத்திப் பதங்கத்தை வழித்தெடுத்து
மகிமையுள்ள கல்வத்தி லிட்டுநல்ல
மெல்லிநல்லாள் தனப்பாலை விட்டுஆட்ட
மேதினியில் யாகோபு விளம்பினாரே. (575)

வீசமதிற் பணமெடுத்து நோய்கள்போகும்
விதமான திரிகடுகில் மூன்றுநேரம்
பாசமுடன் சொன்னபடி உண்டுபாரு
பறக்குமே வாதபித்த மையமெல்லாம்
காசமுடன் பதினெட்டுச் சூலைபுண்கள்
கடிவிஷங்கள் பாண்டுகுஷ்ட மேகமெல்லாம்
யோசனைகள் பண்ணாமல் கடலேபுக்கும்
ஓதினார் யாகோபு உறுதிதானே. (576)

ஓதினதோர் பெருவயிற்கா மாலையீளை
உண்ணஒரு மண்டலத்திற் கன்னப்புற்று
நீதியாய் மகோதரமுந் துடையின்வாலை
நிமைகொட்டி விழிக்குமுன்னே நெட்டிட்டோடும்
வாதியாம் உப்பாகா புளியுமாகா
வடிவமெல்லாம் நோகாது வாய்வேகாது
சோதிதான் முன்னோர்கள் சொன்ன நீதி
சொல்தவரு திதனையுண்டு சுகத்தைப்பாரே.(577)

காசத்திற்குப் புகை.

இருகூராங்கி னீலபிடுங்கி உரலிலிட்டு
இடித்தெடுத்துப் பிழிந்துவிடு பீங்கானிட்டுத்
திருமடந்தை கல்வமிட்டுச் சாமமாட்டித்
திட்டமா யரைத்துரவி காயவைத்துப்
பருகச்சுங் கானில்வெரு கடிதூளிட்டுப்
பகற்பொழுது மூன்றுநாள் புகையுட்கொள்ளத்
தருகாது சயகாசம் குடிவிட்டேகுஞ்
சாற்றக்கேள் பத்தியந்தான் புளியாகாதே. (578)

இருவங்கச் செந்தூரம்.

இருவங்கம் சமனெடுத்துக் கரண்டியிட்டு
இதமாக ஊதிடவே உருகும்பாரு
மருகவதைக் கிண்டிடவே மஞ்சளாகும்
வடிவான கல்வமிட்டு அரையன்னத்தால்
பருக்கவே வில்லைதட்டி வெடியுப்பங்கி
பதமாகச் செய்துபுட மிட்டெடுத்து
உருகவே குகையிலிட்டுச் சாமமூது
உற்பனமாய்ச் சுத்திவங்க மெனச்சொன்னாரே. (579)

சொன்னதொரு வங்கத்தைக் கரண்டியிட்டுச்
சுகமாக உருகையிலே வெடியும்பாதி
நன்னயமாய்ப் போட்டுவறு மஞ்சளாகும்
நாடியே மாளமட்டும் புடமுமிட்டு
இன்னிலத்தி லெடுத்துப்பார் சிவப்புமாகும்
இடுகவசம் வாள்மடந்தை மேலேகட்டு
முன்னமே சொல்லிவிட்டேன் புடத்தைப்போடு
முக்கியமா யெடுகரியா யிருக்கும்பாரே. (580)

கரியெடுத்துத் துருசுனுட செம்புதன்னில்
கருத்துறவே ரெண்டுக்கு ஒன்றுசேர்த்துச்
சரியாய்ப்பொன் சேர்த்துருக்கி ஊதிப்போட
சலனமற்று ரெண்டிடையும் யேமமாகும்
குரியாகச் சொல்லிவிட்டேன் களங்கமற்றுக்
குறிப்புடனே சுண்ணச்சூத் திரமுந்நூறும்
பரிபோலே நூற்றியைம்பத் தைந்துஞ்சொன்னேன்
பார்க்கயிதில் வாதவித்தை பலிதமாமே. (581)

அப்பிரேக வங்கச் செந்தூரம்.

அப்பிரேகம் பலம்நாலு கல்வத்திட்டு
அந்திடைக்குக் காரியது கூட்டிநன்றாய்
முப்பான அன்னத்தின் னீரினாலே
மூன்றுபுடம் போட்டெடுக்கக் கசடுநீங்கும்
தப்பாமல் தாளகமும் பாதியிட்டுத்
தாக்கியரை முன்னரைத்த நீரில்வில்லை



செப்பினேன் அங்கியிட்டு யெடுத்துப்பாரு
செந்தூர மாகுமிந்தச் சேதிதானே (582)

செம்புருக்கி நூற்றிலொன்று கொடுக்கநல்ல
செயமுள்ள தங்கமாஞ் சொல்லப்போகா
நம்பியொரு பணவிடைதான் கொண்டாயானால்
நாடாது சலரோகம் மேகவெட்டை
வெம்பினதோ ருடல்வெதுப்புக் குஷ்டமேகம்
வினையமுள்ள வாதங்கள் பித்தம்போகும்
வம்பில்லாச் செந்தூர முந்நூறு தன்னில்
வழுத்தினே னிதன்விவரம் வளமாய்த்தானே (583)

ஓமத் திராவகம்.

இணங்கனது பலம்நாலு ஓமந்தூக்கு
இதமான பாணியது ரெட்டிப்பிட்டு
சுணங்கவதைத் திரிநாள்வை கலசத்திட்டுச்
சூட்சமாய் வாலைகொண்டு மூடிநன்றாய்க்
கணங்களரி தீபமிடும் புகைநீர்வீழும்
கதுமையா யதையெடுத்து வைத்துக்கொண்டு
வணங்கியே கடவுள்தனைப் பணிந்துகொண்டு
வாய்த்துவந்த நீரிடைக்கு ஓமம்போடே. (584)

போட்டுதிரி நாள்வைத்துக் கலையத்திட்டுப்
புத்தியுட னதையெடுத்து வாலையிட்டு
வாட்டமிலா திப்படியே மாற்றிமாற்றி
வாலைதனில் அஞ்சுதரம் வடிநீர்தன்னை
நாட்டுவாய் பேதியுட மாந்தம்போகும்
நலமான குன்மவலி மூலவாய்வு
கேட்டவுடன் தெண்டனிட்டு வியாதியோடும்
கிருபையுடன் யாகோபு கூறினாரே. (585)

இரத்தமூலக் கடுப்புக்கு.

கருங்குருவை சேரையொன்று பாணியிட்டுக்
கருத்துறவே ஊறவைத்து யெடுத்து அம்மி
நெருங்கயிட்டு நற்பிரண்டை யிடையேசேர்த்து
நிலைபெறவே அரைத்து அடை பண்ணிப்பின்பு

உருகவதை முத்தெண்ணெய் சட்டியிட்டு
உறுதிபெற முன்னடையை வேகவைத்துத்
திரும்பதிரி நாட்கொள்ள ஆணிமூலஞ்
சிரில்லா மூலமெல்லாந் தீருந்தானே. (586)

மூலவாய்வுக்குச் சூரணம்.

நற்புநவாப் பட்டையுடன் பிரண்டைசேர்த்து
நலமாக யிடித்துமோர் குருணியிட்டு
வற்படனே அதைநீயும் புளிப்புமேற
வகைபெறவே திரிநாள்வை வாலையிட்டுத்
தற்பிடவே புகைநீரைப் பிடித்துச்சாடி
தன்னிலிட்டு முன்பிரண்டை நறுக்கிப்போட்டு
அற்புதமாய் நீரைவிட்டுக் கல்லுப்பிட்டு
அடைவாக உலரவைத்துக் குறிப்பைக்கேளே. (587)

அங்கியிட்டு உலரவைத்து யிடித்துத்தூளாய்
அதுதனையே வடிகட்டித் தசநாட்கொள்ள
எங்குமுள்ள செரியாமை பித்தவாய்வு
இனிதான வலிகுன்மம் மூலவாய்வு
தங்கிநின்ற புளித்தேப்பம் உப்பிசங்கள்
சாடிவிடுங் கனலுண்டாய் இருகுமேனி
இங்கிதமாய்ப் புளிதள்ளி உண்ணச்சொல்லு
இருந்துரைத்தார் யாகோபு யிதமாய்த்தானே (588)

விளக்கெண்ணெய் சுத்தி.

பிள்ளைமக ளிளையோனை முகத்தைச்சீவிப்
பொத்துமே பேராகப் பதக்குநீரை
உள்ளபடி ஊத்தியதில் வெடிமுத்திட்டு
ஊறியதை யவித்தெடுத்து உலர்த்திக்கொண்டு
துள்ளயிடி முன்னீரிற் கரைத்துக்காய்ச்சு
துடிபெறவே யெண்ணெய்கக்கும் யிறுத்துக்கொள்ளு
கள்ளமற யெண்ணெய்தான் சுத்தியாச்சு
கருத்துகந்து யாகோபு சொன்னார்தாமே. (589)



வெட்டைக்கு மனோரஞ்சித யெண்ணெய்.

சுத்தியுள்ள எண்ணெய்படி ரெண்டுவிட்டுத்
துடியான வல்லாரை சிவதையோடு
பத்திபுளி யாரைநில வாகையோடு
பதிவான சூரத்தா வரையுங்கூட்டி
நித்தியமாய்க் கையானும் வகைக்கொண்டு
நேராக யிடித்துயிடு பாண்டத்துள்ளே
நத்தியெடு கடுக்காயுந் தான்றிக்காயும்
நலமான சீரகமுங் கிராம்புங்கூட்டே. (590)

கூட்டியே கற்கடக சிங்கிதானும்
குணமாகத் திரிகடுகும் வகைக்குக்காலாய்
மாட்டியே அடுப்பில்வைத்துக் காய்ச்சிவற்றி
வளமாக யெண்ணெய்பதம் பார்த்தெடுத்து
நாட்டிலே வா யுலகத்தில் மானிடர்க்கு
நலமாக யெண்ணிறைந்த நோவுதன்னை
ஓட்டிவைக்குங் கதிர்கண்ட பனிபோலாகும்
ஓதினார் யாகோபு உண்மைதானே. (591)

எண்ணெய்தனைக் கரண்டியளவாகக்கொள்ள
இருமல்சயம் வெட்டையொடு அரிப்புநீர்கள்
உண்ணவுடனோடிவிடுங் கால்கைதானும்
உற்றுமே கனலெரிவு உப்பிசங்கள்
சன்னுமடா யிந்தயெண்ணெய் குளிர்ச்சிதானும்
சரியான கபாலத்தின் சூடுபோகும்
மின்னுடலங் குளிர்ந்துவிடும் யாகோபு சொன்னார்
வேதமனோ ரஞ்சிதமாம் யெண்ணெய்தானே.()

வங்கச்செந்தூரம்.

அரியுமான் பீசமிடை கல்வத்திட்டு
ஆட்டிடுநீ மூச்சாமம் மேனிச்சாறால்
உரியகுண்டு கல்லுப்போலுண்டைசெய்து
உலர்த்தியதை வைத்துப்பின் உறுதிகேளு
பெரியகரு நாகத்தைக் கரண்டியிட்டுப்
பெலமாக உருக்குமுகம் உண்டைதாக்கு.

கரியாகும் மெடைக்கெடை நீ கொடுக்கவென்று
காரணமா யாகோபு சொன்னார்தாமே. (593)

கருவான வெட்டைவங்கங் கல்வத்திட்டுக்
கணக்கவதைச் சோறுதன்னாற் கனிவாயாட்டி
மருகபுட மூன்றிடவே சிவந்துபோகும்
மதிரவியிற் பாய்ச்சிடவே தங்கமாகும்
உருவாகப் பணவிடைதா னுண்டாயானால்
உறுதிபெரும் நோயெல்லா மோடிப்போகும்
சிறுவயது போலாகும் மேனிதானும்
சித்திபெற யாகோபு சொன்னவாறே. (594)

சிரநோய்க்குத் தைலம்.

செம்பையிலை தூக்கியெடுத் துரலிலிட்டுச்
சிதறயிடி நீர்வாரு அந்நீர்தன்னில்
நம்பியிடு கிச்சிலியின் கிழங்குதன்னை
நாடியரைத் ததிற்போடு யெண்ணெய்வாரு
தும்பிமாங் கனிபிழிந்து கலக்கிச்சேர்த்துச்
சுண்டவெரி தயிலமொடு தேய்த்துமூழ்கு
கொம்புமத கரிகண்ட சிங்கம்போலக்
குடியோடுஞ் சிரநோய்கள் குணமதாமே. (595)

பித்தங் காமாலைக்கு யெண்ணெய்.

வனத்தில்நிற்கு மாவாரைப் படிதூள்ஒன்று
வளமையாய்ப் பாணிபடி யெட்டுவிட்டு
இனத்திலொரு படியாக வற்றக்காய்ச்சி
எடுத்தபின்பு கொட்டைமுத்து பதக்குவாங்கிக்
கனத்துடனே காடிதனில் அவித்தெடுத்துக்
காயவைத்து உடைத்திடித்துப் பானையிட்டு
தினைத்திடுமுன் முத்தவித்துக் காடிவார்த்து
நேராக யெரித்துவடித் தெண்ணெய்வாங்கே()

எண்ணெய்தனிற் கலக்குதற்கு மருந்தைக்கேளு
இயல்பரங்கிப் பட்டைபலம் நாலாதாகும்
நண்ணயமாம் வெள்ளுள்ளி பலம்நாலாகும்
நவிலுவேன் நேர்வாளம் பலங்கால்கூட்டி



உண்மையுட னிம்மூன்றும் அரைத்தெடுத்து
உறுதிபெற முன்னெண்ணெய் தனிற்கலக்கிப்
பிணிமையில்லா தடுப்பேற்றிப் பதமாய்க்காய்ச்சிப்
பிரபலமாய்க் கரண்டிகொள்ளப் பிணிகள்போமே()

வாதத்தி லெழுந்ததொரு சூலைபோகும்
வருகாங்கை பித்தங்கா மாலைபோகும்
நீதத்த மகோதரங்க ளற்றுப்போகும்
நேரான விப்புருதிக் கட்டிபோகும்
பாதத்தி லுண்டான புத்துப்போகும்
பவுந்திரங்க ளரையாப்பும் பறந்துபோகும்
தீதுற்ற கன்னத்தின் புற்றும்போகும்
சில்விஷத்தால் வந்தரணந் தீருந்தானே.(598)

தாட்டிகமா யெண்ணெய்யுண்ட பலனைக்கேளு
சலமேக மதுமேகந் தந்திமேகம்
வாட்டவருங் கிரீச்சனங்கள் ரத்தமேகம்
வயிற்றுவலி குலையெரிவு மாந்தம்சோகை
கூட்டமரு மிடுப்புவலி கால்கைகுத்தல்
கொடுமையுள்ள நெஞ்சடைப்பு மூர்ச்சைவாய்வு
நாட்டமுடன் யெண்ணெய்யிதைக் கொண்டபோது
நவிலாம லோடிவிடும் புளியாகாதே. (599)

அயநாகச் செந்தூரம்.

கரும்பொன்னர் பொடியிடைக் காரீகூட்டிக்
கல்வத்தி விட்டுபழச் சாற்றாலாட்டி
விரும்பியதைக் காயவைத்துப் புடந்தானிட்டு
விருப்பமாய் மடலினிய அரிதாரத்தைத்
திரும்பவந்தை நாலிலொன்று சேர்த்தரைத்துத்
திறமாக வில்லைபண்ணிக் கதிரிலிட்டுக்
கரும்பிடவே பெரியபுடம் போட்டெடுக்கக்
கனகமுள்ள செந்தூர மாகுந்தானே. (600)

கூத்தனுட செப்புதனில் நாலுக்கொன்று
கொடுத்திடவே கருப்பாக யிருக்கும்பாரு

வேத்துமனஞ் செல்லாமல் மதியிலெட்டு
　　விதமிரண் டிட்டுருக்கிப் பொன்னைச்சேர்த்து
பார்த்துமே உருக்கியிதை ஊதிப்போடப்
　　பண்டுபோல் பொன்னாகும் ஆணிக்கொக்கும்
சேர்த்துமே பணவிடைதா னுண்டாயானாற்
　　சித்திபெற லாகுமென்று செப்பினேனே. (601)

மண்டலத்திற் பணவிடைதா னந்திசந்தி
　　மறவாமற் றின்றுவர மேகம்போகும்
கொண்டவுடன் வாய்வுதன்மஞ் சூலைபோகும்
　　கொடிதான சயரோகம் பித்தகாசம்
கண்டவுடன் பறந்துவிடும் கைகாலோச்சல்
　　கனகமென்ற மேனியுறும் விந்துகட்டும்
முண்டகம்போற் முகமலர்ந்து குளிர்ந்துபோகும்
　　மொழிந்தாரே யாகோபு முறையிதாமே. (602)

சாம்பிராணித் தைலம்.

மட்டிப்பால் பலம்நாலு கலையத்திட்டு
　　வயமான சாம்பிராணி யிடைதூள்சேர்த்து
நட்டியில்லா வாய்சரியாய்ச் சில்லும்போட்டு
　　நடுவிலே பொத்துசிறு குழலும்வைத்து
கட்டியதை சீலைமண் கனக்காய்ச்செய்து
　　காரணமா யக்கியிடு மெதுவாய்த்தானும்
விட்டுயெரி சாம்பிராணித் தயிலம்வீழும்
　　வெற்றிபெற யாகோபு விளம்பினாரே. (603)

வாசமென்ன அதிதமது சிரசுநொந்தால்
　　வகைபெறவே துட்டிடைதான் தடவிப்போடு
நேசமுடன் பீனிசங்கள் சொல்லாதோடும்
　　நிலைமையா யித்தயிலம் சிரசிற்கொஞ்சம்
பாசமுடன் தேய்த்து நீ மூழ்கிப்பாரு
　　பரிவுள்ள தலைநோவு காசமெல்லாம்
தோசமுதல் சன்னிகளு மோடிப்போகும்
　　துறைதெரிந்து யாகோபு சொல்கிறாரே. (604)



மெஞ்ஞானம்.

தானான சிவஞானந் தெரிந்தோனாகில்
　　சடமழியா திருக்கக்கற்ப முண்டோனாகில்
மானார்கள் மயக்கத்தை விட்டோனாகில்
　　மானிலத்தி லாசைதனை மறந்தோனாகில்
தேனான ரிஷியாகிச் சித்தனாகிச்
　　செகமாயை தனைவெறுத்து முனிவனாகில்
வானான வானவர்கள் எதிராவார்கள்
　　வையகத்தில் யாகோபு வளங்கினாரே. (605)

ஈடலது துலாராசி பிறந்தோன் வேணும்
　　இல்லாட்டால் சிங்கமென்ற ராசிவேணும்
ஆவலுடன் கன்னியுட ராசிவேணும்
　　அல்லாட்டால் கற்கடக ராசிவேணும்
நாடதனி லூனமில்லா திருக்கவேணும்
　　நலமோடு யென்னூலைப் பார்க்கவேணும்
வீடடையா யோகமது புரியவேணும்
　　வெகுநூலும் பார்த்தறிய விளங்குந்தானே. (606)

அதிகசன்னி போகவே தயிலஞ்சொன்னேன்
　　அதனடுத்த கைபாகம் நூற்றுப்பத்தில்
அதிநடுவே யிருக்குமந்த விபரஞ்சொன்னேன்
　　அன்பத்தோ ரட்சரமும் விளங்கச்சொன்னேன்
விதிமிகுந்த சூத்திரம்நா னூறுசொன்னேன்
　　வேணுமென்றே யதைப்பார்த்தா லெல்லாமாகும்
பதியிருப்பு தன்னிலே உழைத்துப்பாரு
　　பாகமெல்லாஞ் சரியாகப் பலிக்குந்தானே. (607)

தங்கத்தைக் கண்டவுடன் கொச்சிக்காதே
　　தாசியர்மே லாசைகொண்டு யிச்சிக்காதே
இங்கிதமா யோரிடத்தி லிருந்துதேரு
　　இதமான வாதமெல்லாஞ் சித்தியாகும்
உங்களுட உள்ளன்பில் நினைத்துத்தேரு
　　ஒருவருடன் பேசாமல் உறுதிபாரு

மங்களமாய் கனகமது உண்டாம்நேரே
வாழ்வதற்கு பெரியோரை வணங்கித்தேரே.(608)

பிரண்டை ரசம்.

நாருநீ பிரண்டைபிடி சட்டியிட்டு
நல்லுள்ளி அதிநேரே பாணியிட்டு
பாருநீ சட்டியிலே போட்டவித்துப்
பதிவாக அதைக்கடைந்து வைத்துக்கொண்டு
மோருஒரு படிவார்த்து கலக்கிக்கொண்டு
முத்தமமாய் மிளகாயும் மிளகுஉப்பும்
சீருடனே புளியிட்டு கரைத்துப்போடு
செயமாக பிரண்டைரசம் உண்ணக்கேளே. (609)

உண்டிடவே திரிநேரம் வாந்திவாய்வு
உண்மைசெரி யாமாந்தம் பேதியெல்லாம்
கண்டவுடன் தெண்டனிடு மூலவாய்வு
கனலெழும்பி அப்புறந்தான் காணுதோடும்
முண்டுசெய்யும் பசியுண்டாம் வாய்வுநீங்கும்
மூலமுளை யுஞ்சுருங்கும் முளையுமில்லை
பண்டுசெய்த பெரியோர்கள் சொன்ன நீதி
பாருலகில் யாகோபு பலன்சொன்னாரே. (610)

பூரணாதி லேகியம்.

சடைக்கஞ்சா பலம்நாலு சட்டியிட்டுத்
தண்ணியிட்டுத் திரிநாள்வைத் தலம்பிவாங்கி
திடமாகப் பின்னுமொரு சட்டியிட்டுச்
சீரான பால்படியும் பாணிநேரே
விடையாக அதைத்தானும் போட்டுவைத்து
விதமாகப் பிழிந்துரசம் வாங்கிப்பின்பு
கிடமிட்டு ஆவின்நெய் சேருமிட்டுக்
கிருபையாய் வைத்துநீ பாகங்கேளே. (611)

சக்கரையுஞ் சுக்கேலம் மூளகுமாஞ்சி
சாதிக்காய் பத்திரியுங் கிராம்புகோஷ்டம்
மிக்கஅதி மதுரமுடன் அமுக்கிராவும்
விதமான வால்மிளகு கசகசாவும்



தொக்வகை பலம்ரெண்டு தூள்கள்செய்து
சுருதிபெறப் பாலிலிட்டுப் பாகாய்க்காய்ச்சி
பக்கமுள்ள முன்ரசத்தை அதிலேவிட்டுப்
பாகமா யிறுகுபதம் பார்த்திறக்கே. (612)

பார்த்துயெடு சாரயந் தேனும்விட்டுப்
பதமாக ஊத்தியள வாகவைத்து
சாத்திநீ லேகியத்தை யதிலேபோட்டு
தான்கொடுநீ சன்னிமுதல் பேதிநிற்கும்
காத்திடுநல் மூலமதிற் கிராணிநன்றாங்
கடிதான செரியாமை வாந்திநிற்கும்
போத்தியெடு தேகத்தைப் பார்த்துத்தாக்கு
புகலரிய யாகோபு புலன்சொன்னாரே. (613)

நபிமார்கள் சந்தோஷம்.

கூவென்ற சொற்கேட்டு நபிமாரெல்லாம்
குண்டலியைத் தானசைத்துத் தின்றீனென்றார்
ஆவென்ற சொற்கேட்டு ஓடிவந்தேன்
அசனுசனும் வேறல்ல நீதானென்றார்
மாவென்ற ரொட்டியொன்று யீய்ந்துபின்பு
மக்கத்தி லேயிருங்க ளென்றுசொல்லி
ஈவென்றுஞ் சொல்லாது கலிமாவோதி
இருந்தேனே சிலகாலம் யாகோப்பென்றே(614)

அண்டநீர் சீனச்சுண்ணம்.

காட்டெருமைப் பாலுமழக்குக் கருவுநேரே
கலந்துமத்தப் பீங்கானிற் றிரிநாள்வைக்க
தாட்டிகமாய் முறிந்துவிடும் நீரைவார்த்து
தப்பாமல் சீனத்தைக் கரியில்வைத்து
மாட்டியே ஊதியெடு சுண்ணமாகும்
வண்மையுள்ள கல்வமிட்டு முன்னீராலே
மூட்டியரை வில்லைக்குக் கவசஞ்செய்து
மூட்டிடவே கெசபுடத்தில் நீறுந்தானே.(615)

சங்குநிறம் நீறியதோர் சீனச்சுண்ணம்
சாங்கமற யெடுத்துவைத்துச் சாற்றக்கேளு
இங்கிதமாய் வன்னிரசம் உப்பிலிட்டு
இதமாக யெரித்திடவே பதங்கமாகும்
அங்கவதை யெடுத்துமுன் சுண்ணம்நேரே
அடியாகச் சேர்த்துமே கல்வத்திட்டு
சங்கைபடப் பழச்சாரால் சாமமாட்டிச்
சதிராகக் கிடத்திலிட்டு மூடிக்கேளே. (616)

மூடியதைச் சீலைசெய்து யெரிநால்சாமம்
முடிந்தசுண்ணந் தேனில்மண் டலமுமுண்ண
கோடிநோ யோடிவிடு குஷ்டம்போகும்
குணமாக வாதவெடி சூலைபோகும்
நாடிவரு மகோதரமு மகன்றுபோகும்
நாட்டிலுள்ள நீரழிவு நடுங்கிஓடும்
வாடிமுகம் ஒளிகண்ட யிருள்போலாகும்
வகையாக யாகோபு சொன்னவாறே. (617)

பிரண்டைச் சூரணம்.

கோதையர்பால் நாழியதில் பிரண்டையிட்டுக்
குணமாக அவித்தெடுத்துப் பிரண்டைதன்னை
ஆதரவாய் வெந்தபா லுடன்பிழிந்து
அதிலேயிடு திரிகடுகு கிராம்புயேலம்
போதரவாய் வகைக்கொன்று பலமுமிட்டுப்
போட்டுரவி காயவைத்துத் தூளதாக்கி
சேதமில்லா மூவிரற்று ளாறுவேளை
சித்தமாய்க் கொள்ளென்று திறஞ்சொன்னாரே ()

கொண்டிடவே வாதபித்தம் மூலவாய்வு
குணமாகு வேதமுதற் குன்மம்போகும்
கண்டவுட னோடிவிடுஞ் செரியாமாந்தம்
கண்ணெரிவு சோகைமுதல் கரப்பானோடும்
மண்டலத்தில் காயமது உறுதியாகும்
மகத்தான மருந்திதுதான் கொண்டபோது



அண்டாமல் பலபிணியும் போகுமென்று
அருளினார் யாகோபு அன்பாய்த்தானே (619)

முப்பிரண்டைச் சூரணம்.

முப்பிரண்டை ஒருதூக்குச் சட்டியிட்டு
மூலைபெருகும் பசும்பாலில் அவித்திருத்து
தப்பரவே பிழிந்துயெரி ரசத்தினுள்ளே
தன்மைதிரி கடுகோமம் வகைக்குஒன்று
செப்பமுட னெடுவறுத்துப் பொடித்துத்தூவி
செயமாக ரவியிலிடு பொடித்துத்தேனைக்
கொப்பமுடன் விட்டுமூ விரல்தூளுண்ணக்
குறிப்பாக யாகோபு கூறினாரே. (620)

வில்லிடைகள் வலிகுன்மம் ருத்திரவாய்வு
விருத்தியுள்ள மகோதரங்கா மாலைசோகை
கொல்லவருஞ் சன்னிகளும் மூலவாய்வு
குருதியுள்ள பெரும்பாடு குணமதாகும்
கல்லடைப்புக் கனல்மேகங் காணாதோடுங்
கருதிபெருங் குடல்பிரட்டல் வாந்திநிற்கும்
நல்லபுளி தள்ளிவிட்டு உண்டுபாரு
நலமாக யாகோபு நவின்றதாமே. (621)

எலிகோல்லிப் பாஷாணக் கட்டு.

வச்சிரத்தின் பாலழக்குப் பீங்கானிட்டு
வசமாக அண்டவெள்ளைக் கருநேரிட்டு
தச்செயலாய்த் திரிநாள்வை முறிந்துநீராம்
தகமைபெற யெலிகொல்லி ஓட்டிவிட்டு
வச்சபடி முன்னீராற் சுருக்குமிட்டு
வகையாக நால்சாமம் போட்டுத்தீரு
உச்சிதமா யண்டமென்ற சுண்ணங்கூட்டி
ஊரறியப் புடமிடவே கட்டுந்தானே. (622)

கட்டுகின்ற பாஷாணங் கரியிலாடும்
காதலா யெடுத்துஅதை வைத்துக்கொண்டு
வெட்டுகின்ற வெள்ளீயம் நூற்றுக்கொன்று
விரும்பியிடு ரசிதமாம் நீர்தானற்று

தட்டுநீ நாதமிடுங் கடையில்விற்றுக்
தகமையுள்ள ஞானத்தைத் தரித்துக்கொள்ளு
பட்டுநூ லிற்சாயம் யேறினாப்போல்
பதிவாகத் தானிருக்கும் பாருபாரே. (623)

சன்னிக்குத் தைலம்.

நிம்பயெண்ணெய் படியழக்குக் கரண்டியிட்டு
நினைவாக வெள்ளுள்ளி தாரங்கொஞ்சம்
தெய்புடனே போட்டெரித்துச் சூடுகண்ட
திரமான பருவமதிற் தலையிற்தேய்க்க
பம்பமது சன்னிநளிர் விட்டுப்போகும்
பதைப்புள்ள சலவைகளுஞ் சொல்லாதோடும்
நம்பியிட்ட பயிர்போலே நலமதாகும்
நாதாந்த யாகோபு நலஞ்சொன்னாரே. (624)

வாந்திபேதிக்கு மருந்து.

கருத்துடைய மானிடர்க்குப் பேதிகண்டால்
கைக்கடங்காப் பிடியதுதான் மிளகாய்தன்னை
இருத்தியரை வெண்ணெய்போல் தலையிற்தேய்த்து
இதமாகப் பத்திட்டுப் பின்புநீயும்
பெருத்ததொரு வன்னிபற்ப முடனேதாக்கு
பேருலகிற் சன்னியற்று பிழைப்பார்பாரு
வருத்தமில்லாக் கைகண்ட தொழிலியாகும்
வண்மையுள்ள யாகோபு வசனித்தாரே. (625)

பேதிகண்ட உடனேஒத் தனமுஞ்செய்து
பேதமில்லா ஆக்ராணக் கலிக்கம்போட்டு
நீதியாய் மாத்திரைகள் பற்பஞ்சேர்த்து
நிலையாக ஒருநாளிற் செய்துகொள்ளு
சோதிபெற நாள்ரெண்டிற் செய்யவேண்டாம்
சுருக்கிலே சன்னிவந்து மூடிப்போகும்
நாதிதா னில்லாட்டா லுயிருப்போகும்
நலமான யாகோபு நவின்றவாறே. (626)

விதிதனக்கு மருந்தில்லை நோய்கள்மிஞ்சும்
விதமான பேதிகண்டு வாந்திசெய்யில்



கெதியான கபமடைத்து சன்னிமிஞ்சில்
கிளர்ந்தோமம் சாரம்சே ரிடைசுண்ணாம்பு
பதியாக மத்தித்து நாசிதன்னில்
பாய்ச்சிடுநீ நாசிதன்னிற் பரிவாய்க்காட்ட
நிதிகதிரைக் கண்டபனி போலேமாறும்
நேர்த்தியென்று யாகோபு நிகழ்த்தினாரே (627)

லிங்கக் கட்டு.

நச்சரவம் பேதிகண்ட வுடனேலிங்கம்
நாட்டியெடு விராகனிடை ரெண்டுநாற்றம்
உச்சிதமாய்ப் படிரெண்டு பொடித்துஒட்டில்
உறுதிபெற உருக்குமுகம் வன்னிபோட்டு
மெச்சவதைப் பிரட்டியெடு கட்டிப்போகும்
மேனியுட் பாலிலே உரைத்துஉண்ண
தச்செயலாய்ப் பேதிநிற்கும் தாபசோபம்
தானடங்கு மென்றுசொன்னார் யாகோப்தானே ()

தாளகச் சுண்ணம்.

வாள்மடந்தை பலம்ஒன்று சுண்ணத்துள்ளே
வைத்துஅவித் தெடுத்துக்கல்வ மிட்டுநன்றாய்
கேள்குமரி நீர்விட்டுத் திரிநாளாட்டிக்
கெட்டி உண்டை கதிரவன்முன் சுண்ணத்துள்ளே
மாளயிட்டுச் சாமம்நா லெரித்துவாங்கு
மடிந்துவிடும் யிம்முறைபோ லஞ்சுபண்ணு
தூள்சங்கு நிறமாகும் யிடைபோகாது
தூக்கியெடு சுண்ணமாம் சொகுசுமாமே. (629)

நச்சரவின் பல்விஷங்கள் எலிவிஷங்கள்
நாடியறும் மகாசயமும் பெருநோக்காடு
வச்சவிடந் தெரியாது அடைப்புநீங்கும்
வளருகின்ற குட்டமுதல் வண்மைபோகும்
நிச்சயமாய் வியாதியெல்லாங் கடலேபுக்கும்
நிகழாதே பத்தியமா யுண்டுதேறு
அச்சமாய் பருதிகண்ட பனிபோலாகும்
அன்பாக யாகோபு அறைந்தார்தாமே. (630)

பேதிக்கு மருந்து.

தையோடு மாசிபங் குனியுஞ்சித்திரை
தற்காலம் பேதிவருங் காலந்தன்னில்
பையவே படுரெத்த மூர்ந்துநீராம்
பதிவாக ஊழியாம் பேதிக்குத்தான்
உய்யவே யிதற்கடுத்த மருந்துதன்னை
உரைக்கிறேன் மருந்தினுட கருத்தெரிந்து
செய்யவே பிரயாசை மெத்தப்பாரு
சீர்பெறவே யாகோபு செப்பினாரே. (631)

கொம்புடனே திப்பிலியு மிளகுநேரே
கூட்டியெடு சந்தனமுஞ் சிவதைமட்டும்
தெம்புடனே அரைப்படிநீர் தனில்அவித்து
சிறப்பாகச் சுத்திசெய்து அவ்விடையாய்
நம்கடுகு ரோகணியுங் கல்வத்திட்டு
நலமான தந்தியிடை யாறுஞ்சேர்த்து
தும்பமறத் தட்டியதைத் தோடுபோக்கிச்
சுகமாகக் கரிக்கிமுன்னேர் சரக்கிற்போடே.(632)

நல்லபழச் சாறரைத்து உண்டைசெய்து
நாடிகதிர் காயவைத்து உண்டைதன்னை
உல்லாசமாகநகர் தனிலொருத்தர்
உரமாகப் பேதிகண்டு யிருந்தாரானால்
சல்லாப மாகயிந்த உண்டைதன்னைச்
சார்பாக உண்டிடவே கட்டிப்போகும்
நல்லாகச் சுகபேதி யாவதற்கும்
நலமாகச் சாப்பிடவே நலஞ்சொன்னாரே. (633)

மருந்தினாற் பேதிகண்டால் வினையபேதி
மாயமா யோடிவிடும் அம்மைப்பாலைத்
தெரிந்தெடுத்து அம்மையிலாப் பேர்க்குப்போட
திரும்பி அம்மை வார்க்காது செகத்தின்மீது
திருத்தவே ஆதிசிவ ரூபந்தன்னைத்
தெரிந்துஅர்ச் சனையுமே செய்துபூவில்



பெருகவே பேதிகண்டா லுடனேயுண்டை
பேதமறக் கொடுக்கமலங் கட்டிப்போமே. (634)

நாகபற்பம்.

சேருகின்ற வாசுகியைக் காண்டியிட்டுச்
சேர்த்துருக்கு யெட்டிரண்டு யிரதங்கூட்டிப்
பார்கல்வ மிட்டுயிடை வெடியுப்பிட்டுப்
பண்பாக நாகவல்லிச் சாறாலாட்டி
ஏருகதிர் காயவைத்து அங்கியிட்டு
எடுத்துமே பற்பமதை யனுப்பானத்தில்
திருமதை யிட்டிடவே மூலரோகம்
தேசத்தி லில்லாம லோடிப்போமே. (635)

பொன்முசுட்டை வேரதனை மேற்றோல்போக்கி
புகழ்நாகப் பூவுடனே கிராம்புநேரே
தண்ணிவிட்டு அரைத்துநீ உண்டைபோலே
தாக்கியிடு நாகபற்பம் பணமதாக
நன்னியிடு நாளேழு தனிலேமூலம்
நாடாது சீமூலம் பேதிக்கிராணி
வன்மமுள்ள நாய்கண்ட நரிபோலோடும்
மகிழ்வான யாகோபு வழுத்தினாரே. (636)

சேங்கொட்டை வல்லாதி.

முத்தினசேங் கொட்டையெட்டு மூக்குவெட்டி
மூரியெருக்கம் வேரினுட தோலைக்கொய்து
சித்தியாய் பிரம்மனுட கிழங்குநேராய்
சிதறயிடி பரங்கியுட பட்டைதானும்
சத்தியமா யம்மிதனிற் சேர்த்தரைத்து
தடையறவே ஆவின்னெய் விட்டுஆட்டி
நித்தியமாய் வெருகடியில் நாகபற்பம்
நிறையாகப் பணவிடையா யெடுத்துஉண்ணே.()

உண்டுவா மண்டலத்திற் குறைநோய்குன்மம்
உணர்வாகுங் கிரந்திமுத லானமேகம்
தொண்டுசெய்யும் விஷநீரால் தோல்கள்மேலே
துடர்ந்துபடர் பத்துகளுஞ் சொல்லாதோடும்

பண்டுமுன்போ லிருந்துவிடும் தேகந்தானும்
பதியைவிட்டு யேகும்நோய் புளியைத்தள்ளு
கொண்டுவர மாந்தளிர்போ லாகுமேனி
குணமான யாகோபு கூறினாரே. (638)

திமிர் குட்டத்துக்குச் சூரணம்.

கதிரவன்பேர் கொண்டெருக்கு வேருவாங்கிக்
கத்தியினூர் சுராண்டியெடு பட்டைதன்னை
கதிரோன்முன் காயவைத்துப் பொடியதாக்கிக்
கைமூன்று விரலெடுத்து வெந்நீரிட்டு
கதிரவனைப் போற்றியுண்ண மண்டலத்தில்
கழிந்ததசை திமிர்குட்டம் விலகிப்போகும்
கதிரவன்போல் மேனியுமா மிந்தப்பாகம்
காட்டாதே யென்று சொன்னார் யாகோப்தானே. ()

எலிகடிக்கு மாத்திரை.

விதிபிறந்த மதியோனும் வேகத்தோனும்
மிளகுயிஞ்சி தேனோடு கல்வத்தாட்டி
மதிகடலை போலுண்டை செய்துநெய்யில்.
மத்தித்துக் கொடுத்திடவே சுரமுமேகும்
கெதிபடவே எலிகடியும் கெட்டேயோடும்
கிருபைதரும் நோயகலும் புளிப்புத்தள்ளு
நீதிபெறவே வாய்வுபுத்திரன் போலிருப்பார்
நிதானித்தார் யாகோபு நிசமாய்த்தானே.(640)

கருநாகக் களங்கு.

சீருகின்ற நாகமிடை காரியிட்டுச்
சிறுகரண்டி தனிலிட்டு உருக்கிக்கொண்டு
பாருலகி லிலுப்பைநெய் தன்னிலேதான்
பதினாறு தரஞ்சாய்த்துக் கல்வத்திட்டு
சோறுதன்னா லரைத்துயிரு சாமம்வில்லை
சுடுகதிரிற் காயவைத்துப் புடமுமூன்று
பாருயெடு கட்டினதோர் தாரந்தன்னைப்
பண்பாகச் செந்தூரஞ் செய்யக்கேளே (641



சொல்லரிய தாரம்முன் மருந்திற்சேர்த்து
துப்பரவாய்க் கல்வமிட்டு அன்னத்தாலே
நல்லாக அரைத்துவில்லை கதிரின்முன்னே
நாடியிடு புடமூன்றில் சிவப்புமாகும்
வெல்லாவி தன்னிலிடு நூற்றுக்கொன்று
விருதுபெற்ற யேமமாம் புடத்துக்கேகா
பொல்லாதார் தங்களுக்குச் சொல்லவேண்டாம்
பூட்டாக யாகோபு பொருள்சொன்னாரே. (642)

பொய்யாது செந்தூரம் பணமுண்டாக்காற்
புகலரிய மேகமுதல் வாதம்வாய்வு
வையகத்திற் காசமுதல் ருத்திரவாய்வு
வலிகுன்மம் பெரும்பாடு குஷ்டஞ்சூலை
கைகாலில் விழுமேகம் யிளைப்புப்போகும்
காட்டிலே யாளிகண்ட யானைபோலாம்
மெய்நரம்பு யிறுகிவிடுந் தாதுவிர்த்தி
வேணுமென்று யாகோபு சொன்னவாறே.(643)

அரையாப்புக் கட்டிக்கு.

முத்தொன்று சேராநின் கொட்டையொன்று
மூக்கைவெட்டி மஞ்சளிட்டு முலைப்பாலிட்டு
சத்தையரை விளக்கெண்ணெய் தனிற்குழைத்து
தனைத்துணியில் தடவியிடு கட்டியெல்லாம்
வெத்திபெருஞ் சூலைமுதல் விடுபட்டோடும்
வேகமது அரையாப்புக் கட்டி நீங்கும்
சத்தியமா யிம்மருந்து செய்துபாரு
சாஸ்திரமா யாகோபு சாற்றினாரே. (644)

வாய்வுக்கு உப்புக்கட்டு.

சருவகா லந்தானு மனிதருண் ணுஞ்
சதாசிவன்றன் பெண்டீரை நாலிலொன்று
கருவையிடு கல்வமிட்டு அரைத்துத்தீயில்
கட்டியெடு யிடித்துவடி கட்டி நீயுங்
குருவையிடு பித்தமுதல் வாய்வுபோகும்
குணம்பெரிய செரியாமை குன்மந்தீரும்

உருகியுடல் வெதுப்பதும் போகுமென்று
    உற்றுணர்ந்து யாகோபு ஓதினரே. (645)

குன்மத்துக்கு வெடியுப்புக்கட்டு.

சீனமோர் படிரெட்டி வெடியுப்பிட்டு
    சிறுசட்டி தன்னிலிட்டு அடுப்பில்வைத்து
மோனமாத் தீயெரிக்க உருகும்பாரு
    முக்கியமாய்ச் சாய்த்தெடுத்து வைத்துத்தூளாய்
ஞானமதாய்த் துட்டிடைதா னெடுத்துக்கேளு
    நன்மைபெறத் திரிகடுகிற் றிரிநாளுண்ண
ஈனமுள்ள வாய்வுகுன்ம மெட்டுந்தீரும்
    ஏகாந்த யாகோபு யிதஞ்சொன்னரே. (646)

காந்தமயங் கெந்திரசஞ் சாதிக்காயும்
    கனதந்தி அதிவிடையம் பொன்முசுட்டை
பாந்தமாய்ப் பெரியோர்க ளுண்ணுங்கற்பம்
    புரிவான அபினியொடு யேலங்கிராம்பு
சேர்ந்ததொரு தாளிசம் உவருப்போடு
    சிறக்கவெடு வகைக்குஒரு களஞ்சிவீதம்
நீர்ந்தவதைக் கல்வமிட்டு அரைக்கக்கேளு
    நிலையான மூன்றுநாள் நீராலாட்டே. (647)

சேதுபந்தனக் குளிகை.

ஆட்டியிரு சாமமெடு கடலைபோலே
    அதையுருட்டி நிழலுலர்த்தி வியாதிவந்தால்
நீட்டிவிடு விகுழிஅதி சாரங்கிராணி
    நிலையிட்டு மூலமுதல் நீங்கிப்போகும்
கேட்டவுடன் தெண்டனிட்டு யிம்மருந்திற்
    கிருபைதருஞ் சேதுபந் தனமுமாகும்
நாட்டிலே.பனிகண்ட சூரியன்போல்
    நலமான யாகோபு நவின்றார்தானே. (648)

சயத்துக்கு.

திப்பிலியும் பீலம்பத்து கடுகுஐந்து
    சிறந்ததொரு மிளகைந்து ஓமம்ரெண்டு
முப்பிரியாம் வலம்புரிக்காய் அரத்தைசுக்கு
    மூதண்ட சீரகமும் லவங்கப்பட்டை



செப்பினதோர் தாளிசமும் லவங்கப்பத்திரி
    திரிபலையுங் கிராம்பேலம் வேலிகூட்டி
முப்படிக்கு வகைக்கிரண்டு சட்டிசேர்த்து
    முந்தினதோ டெல்லாம்நீ பொடியாய்ச்செய்யே()

தூக்கியிடை சர்க்கரைதேன் விட்டுக்கிண்டி
    தூளாக வெருகடிதா னந்திசந்தி
நாக்கிலிட யிளைசயம் காசவாய்வு
    நாடாது சிலேற்பனங்கள் தொண்ணூற்றாறும்
நோக்கிவிடு முதிரமுதல் வாய்வுபோகும்
    நுனிமூக்கிற் சீருகின்ற நாற்றம்நீங்கும்
எக்கமுடன் வந்தவினை யெல்லாந்தீரும்
    இதமான மருந்தாகு மியல்புதானே. (650)

வாதக் கிராணிக்கு.

வாதத்தாற் கண்டதொரு பேதிக்குந்தான்
    வகைகண்டு யிஞ்சிச்சார் படிபிழிந்து
தீதற்ற பிரண்டைபிடி பாணிவிட்டுத்
    திறமாக அவித்திருத்து யிஞ்சிநீரில்
பேதமுடன் பிழிந்துஉப்பு மிளகாயிட்டுப்
    பிரட்டுள்ளி புளியிட்டு ரசமாய்க்காய்ச்சி
நீதமுடன் புகட்டிடவே வாந்திபேதி
    நிலைகெட்டுப் போகுமென்றார் யாகோப்தானே()

பித்த கிராணிக்கு.

பித்தத்தால் வந்ததொரு பேதிதன்னைப்
    பிறகுஒரு பலமிளகாய் மிளகுமிட்டு
நித்தியமாய் வச்சிரத்தை யவித்திருத்து
    நிலையாகக் கியாழமிட்டு உண்ணக்கேளு
மத்தவன்னி பற்பமதைக் கடுகுவீதம்
    மாட்டிவிடு கியாழத்தில் வியாதிபோகும்
வித்தகனே கதிர்கண்ட பனிபோலாகும்
    வேதாந்த யாகோபு விளம்பினரே. (652)

அய்யக் கிராணிக்கு.

அய்யத்தால் வந்ததொரு பேதிதன்னை
அதைநிறுத்தக் கண்டத்திப் பிலியும்பத்து
மெய்யுள்ள பிரண்டையையும் அவித்தெடுத்து
விரும்பியதை ரசமிட்டு யிருத்துஉண்ண
பையவே லிங்கபற்ப முடனேதாக்கு
பறக்குமே சிலேற்பனத்தின் பேதியெல்லாம்
எய்யவந்த கணைபோலே சுருக்குமாகும்
இருந்துரைத்தார் யாகோபு யிதமாய்த்தானே. ()

தோந்திக் கிராணிக்கு.

தொந்தமாய் வந்ததொரு தேகபேதி
சுயமாக உள்ளியிலை அவித்திருத்து
அந்தமதாய்ச் சேரையெடு பரங்கிப்பட்டை
அந்திடைக்குச் சேர்த்துடனே சட்டியிட்டு
முந்தயிடு சுரசமிட்டு வன்னிபற்ப்
முறுதிபெறப் பணவிடையில் மூன்றதாகும்
தந்துகொடு பேதியது நீங்கிப்போகும்
தாட்டிகவான் யாகோபு தாக்கினாரே. (654)

வாந்தி நிற்க.

நாலான பேதியதி னாலே அய்யம்
நலமாக வாந்திபண்ணில் அன்னமிட்ட
மேலான காடிதனில் வெந்நீரிட்டு
விதமான பழச்சாரு நாலிலொன்று
சேலாக்க் கொடுத்துவரத் தாகசோபம்
சிறப்பான வாந்திமுதற் சன்னி நீங்கும்
காலான யெரிவுமுதற் போகுமென்று
கருத்துரைத்த யாகோபு கருணைதானே. (655)

கண் வலிக்கு.

சீவிழுஞ் சிகையதுதான் பலமுங்கால்தான்
சிறக்கவெடு சீனமிடை அதனில்விட்டு
தாவியெடு மண்வெட்டி யடுப்பில்வைத்துத்
தாக்கியெரி பழுத்துவிடும் அதனிற்றானும்



தாவிவிடு உருகிநிற்கும் பதத்தில்தானும்
துடியுள்ள பழச்சாரும் விட்டரைத்து
பாவினிய பதமாகும் யெடுத்துப்பின்பு
பதமான கண்ரெப்பை யதனிற்பூசே. (656)

பூசியது காய்ந்திடவே மறுநாள்தானும்
புகழுங்கண் வலியற்று உறுத்தல்போகும்
பாசிபடாப் பாணியது அறுத்துஊத்தும்
பருதிகண்டாற் கூசாது வலியும்நிற்கும்
தூசியது விழுந்தாலும் ஒதுங்கிப்போகும்
துடியான முத்தெண்ணெய் கரண்டிவீதங்
கூசாமற் குடித்திருக்கப் பேதியாகும்
குடிலமறும் கண்வலியுங் குணமதாமே. (657)

ரச மெழுகு.

நிம்பயிலை யிடையொன்று உரலிலிட்டு
நேகயிடி பாணிரெட்டி சாலிலிட்டு
தம்பமா யெட்டிலொன்றாய்க் கஷய்ச்சிக்கொண்டு
தனையெடுத்து வடிகட்டிப் பிழிந்துசாரில்
நம்பியிடு அரன்பீசம் பலமுமைந்து
நாட்டியிடு வத்தயெரி குழம்புபோலே
தம்பியெடு கல்வமிட்டு அதைநாற்சாமம்
தானரைக்க மெழுகாகும் தாக்கிப்பாரே. (658)

சூலைவாய்வுக்கு எண்ணெய்.

ஈரவெங் காயமுடன் கழற்சிக்கொட்டை
இலையிடித்து ரெண்டிடைதான் படியுமிட்டு
கார்முள்ள முத்தெண்ணெய் படியுமொன்று
கருத்தரிந்த தந்திவிரை பலமுங்கால்தான்
கூரயிடு காய்ச்சிவடி கட்டிப்பூசை ;
கொடுத்துமே எண்ணெயது பணமவ்வீதம்
பாரமுள்ள ரசமெழுகு பணங்கால்சேர்த்துப்
பாய்ச்சிடவே நோய்தீரும் பரிசுகேளே. (659)

பாரித்த வெண்ணெய்தான் மூன்றுபோது
    பாய்ச்சிடவே பாரிசமாஞ் சூலைவாய்வு
சாரியிட்டுக் குடிபோகும் ரோகமெல்லாம்
    தாக்கிவிடு மகோதரங்கள் சாந்தமாகும்
கூரிவந்த படியேகும் வாதமெல்லாம்
    கொள்ளைகொண்ட வாரதுபோல் ஓடிப்போகும்
சோருமிதில் மேகவெட்டை நீர்மேகங்கள்
    சுவரிடுங்கான் வாயுவெல்லாம் சூரையாமே. ()

சுவரிடுங்கான் பவுந்திரமு மூலரோகம்
    சொற்பெரிய நீராம்பல் துடிகள்போகும்
கவாதுபோ லாகிவிடும் வெண்ணெய்ப்போக்கு
    கைகண்டு கும்பமுனி கருத்திற்கண்டு
தவறிடா தெனக்குரைத்தா ருலகத்தோர்கள்
    தான்பிழைக்கச் சொன்னதிந்த மார்க்கந்தன்னை
எவரிடத்துஞ் சொல்லாதே புளிப்புத்தள்ளி
    இதமாக உண்டவர்க்குப் பிணிகள்போமே. (661)

சிருநாகப் பதங்கம்.

காரியிடை சோரனுமே கூடச்சேர்த்துக்
    கரண்டியிட்டு உருக்கிமெள்ள யிலுப்பைநெய்யில்
சாரமிட்டுப் பத்துரெண்டு தரமுஞ்சாய்த்துச்
    சரிவரவே கரண்டியிட்டு உருக்கிமெள்ள
கூரியதோர் சூதமிட்டு வுருக்கித்தானே
    குற்றமற்ற முத்தெண்ணெய் நிறையவிட்டு
பாருநீ தீபிடிக்கும் யெரியவிட்டுப்
    பாகமதா யெடுத்துநிறு யிடைபோகாதே. (662)

போகாது கல்வமிட்டு உடைத்துஅன்னம்
    பூட்டியரை வில்லைதட்டிக் கடத்திலிட்டு
யூகமா யெரித்திடவே பதங்கமேறும்
    உற்றுவழித் தெடுத்துவைத்து அடியில்நின்ற
தாகமாய் வில்லையதைச் சோறுமிட்டு
    தாக்கியரை வில்லைதட்டிப் புடமூன்றிட்டால்



பாகமாய் வில்லையது சிவந்துபோகும்
    பாரினிலே யாகோபு பகர்ந்ததர்மே. (663)

சூதச் செந்தூரம்.

ஏறிநின்ற சூதமிடை புகைநீர்விட்டு
    எரிதணலில் விதம்பண்ணி வைத்துப்பாரு
கூறியதோர் காளானுஞ் சிவந்தவில்லை
    கூட்டியரை கடத்திலிட்டு யெரித்துத்தானும்
மாறியெடு சிவந்துநிற்கும் ரவியில்நூறு
    மயமாகத் தாக்கிடவே வொன்றுதானும்
பாறியது யேமமது பத்துமாகும்
    பாலித்தார் யாகோபு பண்புமாமே. (664)

தேனிலிடச் சகலநோ யெல்லாந்தீருஞ்
    செங்கதிரா மேனியது யிரும்புபோலாம்
வானிதனி லிப்பாகம் பொய்யோவென்றால்
    வண்மையுள்ள ஆண்டவனும் பொய்யுமாச்சு
ஞானிகளுக் கிவ்வேதை சொன்னமார்க்கம்
    நாட்டிலுள்ள நல்லவர்கள் செய்துகொள்வார்
கூனிநிமி ராதவர்கள் செய்யமாட்டார்
    கொட்டினார் யாகோபு குணமிதாமே. (665)

அயக்காந்தச் செந்தூரம்.

காந்தஅயம் நேரிடைதான் கையா நீரால்
    கணக்கஅரை வில்லைதட்டி உலையிலூது
பாந்தமா யிப்படிக்குத் தரமுமஞ்சு
    பக்குவத்தி லெடுபருதி போலேயாகும்
சேர்ந்தயிடை நாலிலொன்று கெந்திசூதம்
    திறமான தந்திவிரை தோட்டைப்போக்கிப்
பாந்தமொடு குழிக்கல்வந் தன்னிலிட்டுப்
பாங்காக மூன்றுமொன்றாய்ப் பொடித்துக்கொள்ளே.

பொடித்துயிதை அயக்காந்தச் செந்தூரத்தில்
    புகழாக யிரண்டையு மொன்றாகச் சேர்த்து
எடுத்துவைத்து மிளகுசுக்கு நெல்லிமுள்ளி
    இயல்பான கடுக்காயோ டிடையாய்வாங்கி

விடுத்துமே தானிடித்துச் சூரணித்து
வெய்யதனிற் காயவைத்துப் பீங்கானிட்டுக்
கொடுத்துவிடப் பாகமது சொல்வேனென்று
குறிப்பாக யாகோபு கூறினாரே. (667)

இயல்புள்ள செந்தூர மிளகுவீதம்
எடுத்துமே தேனிலிட்டுக் குழப்பிக்கொண்டு
நயவாக வெறுங்கடிசூ ரணத்துள் தன்னில்
தான்சேர்த்து ஆறுநாள் சாப்பிட்டாக்கால்.
நயமாக அண்டவெட்டை நீராம்பல்தான்
நலமாகுஞ் சூலைபதி னெட்டும்போகும்
வியமாக புளியோடு உப்புந்தள்ளு
விதனமறும் யாகோபு விள்ம்பினாரே. (668)

பதங்கமதை லிங்கமதி லெடுத்து நீயும்
பலம்நாலு சுக்குமிள கோமங்கூட்டி
விதம்பெறவே தந்திவிரை சுத்திசெய்து
வீதமிடு நெல்லிமுள்ளி கடுக்காய்நேராம்
அதம்படவே கையாநீ ரரைத்துச்சாமம்
அதையெடுத்துக் குடுக்கைதனி லடைத்துக்கொள்ளு
இதம்படவே பணவிடைகால் கொள்ளச்சொல்லு
எந்தவித மகோதரமும் ஏகுந்தானே. (669)

சூலைமகோ தரம்போகு மாம்பற்கட்டி
தொடர்ந்த குன்மம் வயிற்றுவலி சொல்லாதோடும்
வேலைதனிற் போய்விடும்பார் கெண்டைகட்டி
விடுபடுங்காண் சிலேட்டுமகோ தரமும்போகும்
ஆலைதனிற் கரும்பாகும் உப்புத்தள்ளு
ஆறுநாள் சென்றபின்பு யெண்ணெய்ஸ்நானம்
காலையிலே செய்துகொண்டு தூங்கலாகா
கருத்துரைத்தார் யாகோபு கருணைதானே (670)

தூங்கினாற் சிரசதனில் நீருமேகிச்
சுகசன்னி மண்டையிடி தும்மல்ரோகம்



தாங்கியே வந்திடும்பார் பத்தியங்கள்
தவறினால் கைகால்கள் முடக்கிக்கொள்ளும்
பாங்கியர் மேலாசைகொண்டு திரிவாயானால்
பகையான சன்னியது மூடிக்கொள்ளும்
எங்கியதில் மயங்காம லிருக்கவேதான்
இதமாக யாகோபு இயம்பினாரே. (671)

அயக்காந்தச் சூரணம்.

நல்லிரும்பு ஓரிடையாஞ் செப்புநேரே
நாட்டியதை பொடியாக்கி குகையிலிட்டு
வெல்லவதை யுருக்கிடவே புட்டுப்போலாம்
விரும்பியெடு ரெண்டுமுக்கால் நாற்றஞ்சூடன்.
செல்லவதை ரெண்டுஅரை நிறுத்துக்கொள்ளு
சீரான வீரமது ரெண்டுகாலாம்
சொல்லவிந்து வைத்துடனே நிறுத்துக்கல்வம்
சுருதியுடன் பாணிவிட்டு அரைத்துக்கொள்ளே.()

அரைத்துவில்லை அங்கியிடு பத்துத்தானும்
அதின்பேரு சுயமக்கினி அவைநிறுத்து
மறைத்துப்ல மொன்றுநிறு வேலிவேரும்
வகைக்குக்கடு கோமமொடு சிறுதேக்காரும்
நிறுத்தியெடு ஆனைத்திப்பிலி யிந்துப்பாம்
நேரான கோஷ்டமொடு வகைக்குஒன்று
குறைத்துநிறு காயங்கால் வசம்புகாலாம்
குணமான கடுகுபொடி அரையும்போடே.(673)

இளவறுப்பாய்ச் சூரணித்து சுயமக்கினிசேர்த்து
இஞ்சிலரைத்துச் சாமம்ரெண்டு வேலிநீரால்
குளம்பான சர்க்கரைதா னிடையேசேர்த்துக்
குற்றமற வைத்துவெரு கடிதான்கொள்ள
உளமகிழும் வெந்நீரி லுரைக்கக்கிராணி
ஓடிவிடும் உதிரவலி முகவாதங்கள்
இளகிவிடும் வாதமெல்லாங் கடலேபுக்கும்
இருந்துரைத்தார் யாகோபு யிதமாய்த்தானே.()

பாண்டுக்கு அயமெழுகு.

நல்லிரும்பு ஓரிடையாங் காந்தந்நேரே
நாட்டியரை வில்லைதட்டி ஊதிப்போடு
எல்லநிறு பலமொன்று கெந்திகூதம்
இதையரைக்கக் கரியாமுன் காந்தமிட்டுக்
கொல்லஅரை பிற்பாடு முத்தக்காசு
கொத்தமல்லி சொடிமுந்திரி யேலமோடு
சொல்மிளகு கிராம்புடனே வேலித்திப்பிலி
சொற்பெரிய சாதிக்காய் கூடைநீரே. (675)

கூடைநீர் சாதிப்பத்திரி வால்மிளகு
கூடியே லவங்கப்பத் திரியுஞ்சுக்கும்
வேகமுடன் சமபாகங் கையாநீரை
விட்டரைப்பாய் சர்க்கரையுஞ் சமனுய்ச்சேர்த்து
ஏகமுடன் வெருகடிநெய் தேனிலேதான்
இதையாறு நாட்கொள்ள அந்திரவாய்வு
தாகமுடன் பாண்டுசுரம் மயக்கந்தூக்கம்
தங்காது மேகமெல்லாம் சாந்தந்தானே. (676)

நாற்பத்து ரெண்டுபித்த மரோசியங்கள்
நல்லவன்னத் தோசமொடு உஷ்ணநோய்கள்
காற்பத்து சேட்டுமங்கள் அக்கினிமந்தம்
கனவாய்வு கையெரிவு காந்தல்வீக்கம்
மேற்பத்து நோய்களெல்லாம் தீர்ந்துபோகும்
மெய்வலுக்கும் புளிஉப்புத் தள்ளிஉண்ணு
நாற்பத்து நாளுமிதை நேரேதாக்கு
நலமான யாகோபு நாட்டினுரே. (677)

அப்பிரேகம்.

வச்சிரத்தி னப்பிரேகம் பலமுமொன்று
வகைநிறுத்து வீரங்கா விட்டுப்பாணி
தச்செயலாய்க் கல்வமிட்டு அரைக்கவெண்ணெய்
தனையெடுத்துக் கதிர்ல்வைத்துப் புடமூன்றிட்டு
இச்சையுட னெடுத்துபச்சைப் பூரந்தன்னை
இடைசேர்த்து அரைபாணி புடமூன்றிட்டு



உச்சிதமா யெடுத்துநிறு ரசசெந்தூரம்
உடனுக இடைசேர்த்து அரைத்துத்தானே. ()

ஆவின்கோ ரோசனையுங் குங்குமப்பூ
அடைவான யேலமொடு கிராம்புகோஷ்டம்
தாவியெடு சாதிக்காய் அக்ருக்காரம்
தனைநிறுத்து வகைக்கொன்று கல்வமிட்டு
ஓவியமாய் சந்தனமும் லவங்கப்பூவும்
உடன்தண்ணீர் விட்டுயெட் டொன்ருய்க்காய்ச்சி
ஏவியே அதையிருத்துச் சாமம்நாலு
இதமாக அரைத்துமெழு காகச்செய்யே. (679)

நல்லாக வரைத்துருட்டிக் குளிகையாக்கி
நற்கதிரிற் காயவைத்து மேஷப்பாலில்
வெல்லவே அதினிலொரு உண்டைதன்னை
விதமாக யிட்டிடவே தொண்டைக்கட்டும்
வெல்லவலி வீக்கசயம் சிலேட்டுமங்கள்
விதமான தொண்ணூற்ருறு வியாதிபோகும்
கொல்லவந்த நமர்சன்னி தோஷமெல்லாம்
கொடுமையுட னேகிவிடும் குணமதாமே. (680)

குணமாகு மயக்கமொடு வாந்திபோகும்
குடல்பிரட்டு வலியிசுவு குடிலங்குத்து
சினமாகு மினியமந் தாகாசம்
செப்பரிய வாய்வுமந்தங் காசம்போகும்
இனமாகும் பிரமிசுவு நடுக்கல்போகும்
இன்பமுள்ள நோய்களெல்லா மேங்கயேங்கக்
கனப்பொழுது போக்கிவிடும் யாகோப்சொன்ன
கருத்திதுவாங் குளிகையிது கண்டுதேறே. (681)

நாசிகாச் சூரணம்.

செக்காடும் இலுப்பைப் புண்ணாக்குதன்னைச்
செயம்பெறவே தீயிலதைச் சுட்டுத்தானே
மிக்கவே நாவுபலம் யெருக்கம்பாலில்
மிகவரைத்துக் கதிரினிலே காயவைத்துத்

தொக்கயெடு சுண்டைவேர் துப்பைமூலம்
துடியாக உலர்த்திமுன் னிடையேசேர்த்துத்
தக்ககுழ லடைத்துவிடு யென்றுசொன்னார்
தாட்டிகமா யாகோபு தன்மைதானே. (682)

நாசிதனில் தக்கபொடி யிட்டுப்பாரு
நமர்சன்னி மண்டைவெடி பீனிசங்கள்
ஊசிவலிக் குத்துடனே சுரங்களேகும்
ஒருத்தலைநோய் பூச்சிவிழுஞ் சிரசிலுள்ள
வாசினையாந் தோசமது சிங்கங்கண்ட
மதயானை போலாகு மாக்கிராணந்தான்
நேசமுடன் யாகோபு சொன்னாரிந்த
நிலையான கைபாக நேர்மைதானே (683)

குளிர்ச்சிக்கு யெண்ணெய்.

முத்தெண்ணெய் படியொன்று சட்டியிட்டு
முனிவாக யிந்திடைக்குப் பழத்தின்சாரு
சித்தம்வைத்துக் குமரிச்சார் படிதானென்று
சிறுகடுக்காய் பலம்ரெண்டு அம்மியிட்டு
நத்தியரை யெண்ணெய்தனில் குழம்பாய்க்காய்ச்சி
நலமாக மெழுகுபதம் வடித்துக்கால்சேர்
நித்தமொரு காண்டியுண்ணத் தீரும்வியாதி
நிசமான யாகோபு நியமித்தாரே. (684)

காலெரிவு கையெரிவு காந்தல்போகும்
கண்குளிரும் உந்தியது குளிர்ச்சியாகும்
சீலமுடன் வெட்டைநீர் குத்தல்போகும்
சினம்போகு முஷ்ணமுடன் வறட்சிதாகம்
காலமொடு மேனியது குளிர்ச்சிகாணும்
காட்டுமுன்னே விந்திறுகும் கருணைகூறும்
ஏலவே யேந்திழையாள் பிருதிவேணும்
இருந்துரைத்தார் யாகோபு யிதமாய்த்தானே ()

பச்சைவாதத்திற்கு ஐந்தெண்ணெய்.

நிம்பயெண்ணெய் படியளந்து சட்டியிட்டு
நேராக முத்தெண்ணெய் படியவ்வீதம்



புங்கயெண்ணெய் படியிட்டுக் கலக்கிப்பின்பு
புகழான புன்னையெண்ணெய் படியும்விட்டு
நம்பியெடு நல்லெண்ணெய் படியோடைந்து
நலமாக நாள்மூன்று கலக்கிப்பின்பு
தெம்புடனே கடைச்சரக்கைக் கேளுநீயும்
திரமாம் யாகோபு செப்பினேனே. (686)

பேர்சொல்லா வசம்பு வெள்ளுள்ளிகாயம்
பெருமைபெறத் திரிகடுகு கிராம்புஓமம்
ஆர்சொல்வார் சதகுப்பை கடுகுரோணி
ஆதிசித்ர மூலம்வகைக் கொன்றுகூட்டிப்
பேர்சொல்லத் தானரைத்து யெண்ணெய்தன்னிற்
பிரட்டியதை அடுப்பிலிட்டுச் சீராய்க்காய்ச்சி
வாரான மெழுகுபதந் தனில்வடித்து
வடிவாகக் கரண்டிகொள்ள வாதம்போமே. ()

வாதமெல்லாந் தீருமண்ட வாதந்தீரும்
மடிபிடித்துக் கடித்தநரி வாதந்தீரும்
சேதமுள படுவாதம் கடினவாதம்
செப்பமுள்ள மேல்கடுப்பு வாதம் நீங்கும்
வேதமது முகவாதம் சன்னிவாதம்
விருப்பமுள்ள திமிர்வாத மெல்லாம் நீங்கும்
ஆதரவாய்ப் புளிதள்ளி உண்டுபாரு
ஆதிநபி மாமெனக்கு அருளினாரே. (688)

கெற்பசூலைக்கு பெருங்காய யெண்ணெய்.

பெருங்காயம் கழற்சிவிரை யெட்டேயாகும்
பேசரிய முத்தெண்ணெய் நாழிதன்னில்
பருத்தந்தி தோல்போக்கிப் பலமுங்கால்தான்
பரமன்வித்து விராகனிடை ஐந்துங்கூட்டித்
தருகாமல் தானரைத்துச் சட்டியிட்டுத்
தயங்காம லதையெடுத்து திரிநாள்வைத்துத்
உருங்காம லடுப்பேற்றி மெழுகதாக்கி
உண்மையுடன் முன்வடித்து உறுதிகேளே(689)

உறுதியாய்த் துட்டிடைதான் கொண்டபோது
உகந்துநின்ற வாயுவரு மண்டவாதம்
அருதியாஞ் சூலைமுதல் யோனிப்புற்று
அடைவான குதிவாத மடங்காத்தாகம்
பெருகிநின்ற மகோதரங்கள் ஆம்பற்கட்டி
பேசரிய உதிரவலி கெற்பச்சூலை
திருதிஅஸ்தி சுரமோடு யிவைகள்தீரும்
நிச்சயமா யாகோபு நிசஞ்சொன்னுரே. (690)

அயக்காந்தச் செந்தூரம்.

நல்லிரும்பு ஓரிடையாங் கெவுரிநேராய்
நாடியிடு கல்வமிட்டுப் பாணியாலே
செல்லவரைத் திரிநாள்தான் சென்றபின்பு
சேர்த்துகுகை தன்னிலிட்டு உருக்குநன்றாய்
மெல்லவெடு வெங்கலமாம் யெடுத்துவைத்து
மேன்மைபெறப் பலயிரும்பில் வெள்ளைநேரே
சொல்லியே பாணியினு லரைத்துருக்கு
சூக்ஷமதாய் முன்போலே உருகுந்தானே.(69?

உருகினதை யெடுத்துவைத்து அரபொடியைவாங்(
உண்மைபெற அதிநேரே கெந்தியிட்டுப்
பருகவரை பாணியினு லரைத்துருக்கப்
பதமாக உருக்கமுன்போ லுருகும்பாரு
பெருகவந்தை யெடுத்தபின்பு மூன்றுநேராய்
பேசவே யிதைநிறுத்துக் கல்வமிட்டுத்
தருகவரை பொற்றலையி னீரினலே
தாக்கிவில்லை அங்கியிட்டுப் புடத்தைப்போட(

புடம்போடக் கருப்பாகும் யெடுத்துக்கல்வம்
பூட்டியிடைக் கிடைசேரு வீரந்தன்னைத்
துடர்ந்துமே முன்சாறா லரைத்துவில்லை
தாக்கிக்கதிர் காயவைத்துக் கடத்திலிட்டுக்
குடமூடிச் சீலைசெய்து அடுப்பிலேற்றிக்
குணமாகச் சாமமொன்று யெரிக்கயேறும்



கடம்வழித்து அடியில்நின்ற தோடேசேர்த்துக்
காட்டியெரி ஐந்துதர மெரித்துக்கொள்ளே. ()

எரித்துஎடு செந்தூர முருக்கம்பூப்போல்
இதமாயப் புரம்வைத்துக் காந்தம்நாலு
மூரத்துகெந்தி யிடைசேர்த்துக் கல்வமிட்டு
முதலரைத்துக் குகையிலிட்டு உருக்கித்திரு
விரித்துஅது உருக்கிடுங்காண் சத்துமாகும்
வீதமிடை முன்னுருக்குச் செந்தூரத்தைத்
தரித்துயிடு யிதுநேரே கல்வத்திட்டுத்
தாக்கியரை பொற்றலையி னீரினலே (694)

சாத்திலரைத் தங்கியிட்டுப் புடத்தைப்போடு
சத்துஅரை கொள்ளினுட கியாழத்தாலே
பார்த்துகதிர் வில்லைதனைக் காயவைத்துப்
பதிவாகச் சிவக்கமட்டும் புடத்தைப்போட்டு
சோத்திலிதை விட்டரைத்துப் புடமேபோடு
சுகமாகச் சிவந்தபின்பு சொல்லக்கேளு
நேர்த்தியாய் லிங்கமது பலமுமொன்று
நேராக ஓடுதனி லிட்டுக்கொள்ளே. (695)

இட்டுபழச் சாறினற் சுருக்குச்சாமம்
இதமாக லிங்கமிடை சீனங்கெந்தி
பட்டுமதைப் பொடித்துஒரு ஓட்டிலிட்டுப்
பதமாகக் கரிக்கிமெள்ள வன்னிதன்னை
தொட்டுஅதைப் பிரட்டிடுங்காண் பொடியுமிட்டுத்
துடியாகப் பிரட்டியெடு சாமமொன்று
கட்டுமது கம்பியது யிறுகிப்போகும்
கனிவாக யாகோபு கடாட்சித்தாரே. (696)

கருத்தரித்த செந்தூரம் நாலிலொன்று
கருதியிடு வன்னிகற்பங் கல்வத்திட்டு
வருத்தரை நீ கொம்பரக்குக் கிஷாயத்தாலே
வலுமைபெற அரைத்துவில்லை அங்கியிட்டு

பொருத்தமுள்ள வில்லைதனைப் பூமியிட்டுப்
புகலரிய சட்டியினுற் மூடிப்போட்டு
பெருத்ததொரு புடம்போட்டு யெடுத்துப்பாரு
பேரான செந்தூர மாகுந்தானே. (697)

ஆகுமிந்தச் செந்தூரந் துருசுச்செம்பில்
அணைத்திடவே ஐம்பதுக்கு ஒன்றுபோடு
தாகமுடன் எமமது பத்துமாகும்
தனையெடுத்துப் பணவிடைதான் பாலிலுண்ணப்
யோகமது வந்திடும்பார் தேகந்தன்னிற்
உகந்துவந்த நோயெல்லாம் ஓடிப்போகும்
பாகமது அறிந்தாலே வாதமாகும்
பார்த்துணர்ந்தார் யாகோபு பரிசுதானே. (698)

யாகோபு வயித்தியசிந்தா மணியாமிந்நூல்
யானுமே சொல்லிவிட்டேன் வெளியதாக
வாக்கதுவும் பொய்யாது செய்துபாரு
மகத்தான சாஸ்திரத்தை வெளிவிடாதே
பாக்கியம்பெற் றய்யவென்று லெந்நூல்பாரு
பகாரிய சுண்ணமறு நூறும்பாரு
நோக்கிப்பார் செந்தூரச் சுருக்கம்பாரு
நூணுக்கமெத்தக் கண்டறிந்து தேர்ந்துபாரே. ()

முற்றிலுமே எழுநூறு பாடலாக
முடித்துவிட்டுச் சுருக்கமோ ரைம்பத்தாகக்
கற்றறிந்தோர் தங்களுக்குக் கிடைக்குமிந்நூல்
கைகண்ட பாகமிது திறவுகோலாம்
பற்றுதலாய் மக்கத்தி லிருந்துகொண்டு
பாடிவிட்டேன் புவியோர்கள் பிழைப்பதற்கு
உற்றுப்பார் யாகோபு இராமதேவர்
உறுதியாம் யெழுநூறு குருநூல் முற்றே (700)

முற்றிற்று.

உ

பரமபதி துணை.

யாகோபு திருவாய்மலர்ந்தருளிய வைத்திய சிந்தாமணி
எழுநூறுக்குச் சுருக்கம்

# குருநூல் - 55.

வேதமுத லாய்நின்றந்த பொருளுமாகி
விகற்பசங் கற்பமில்லா ரூபமாகி
நீதமுள பரப்பிரம அரூபமாகி
நிட்களநி ராமயமாய் விளங்கிநின்று
பேதமிலா தென்நாவிற் குடியிருக்கும்
பெரியபரம் பொருளான வெளியைப்போற்றிச்
சாதகசற் குருமூலம் பாதம்போற்றித்
தன்மையுடன் குருநூலைம் பதைச்சொல்வேனே. ()

மூலமுத லாய்நிறைந்த நபியைப்போற்றி
முக்கியமா யைம்பதுவின் முறையேதென்றால்
கோலமுட னெழுநூற்றின் குருவேயாகுங்
குவலயத்தோர் யாவர்களும் பிழைக்கக்கேளு
சீலமுடன் பூநீறு தானெடுத்துச்
சிறப்பாகத் தசதீட்சை தான்முடித்து
ஞாலமுடன் கரியுப்பு மதுபோற்றீட்சை
தலமாகச் செய்தபின்பு எடுத்துக்கொள்ளே. (2)

எடுத்துமே வெடியுப்பு ஐந்தாங்காய்ச்சல்
இயல்பாக நீவாங்கி மூன்றுந்தன்னை
விடுத்துமே சமனிடையாய் வைத்துக்கொண்டு
மேலான எலுமிச்சம் பழச்சாரிட்டு
கொடுத்துமே சோதிக்கவைத் தெடுத்துப்பாரு
குணமாகு மெண்ணெய்கக்கி யெழுத்துக்காணும்
அடுத்துமே அந்தஉப்பை யெடுத்து நீயும்
அன்பாகச் சேநீரி லாட்டக்கேளே. (3)

ஆட்டிடவே வெள்ளைக்கல் கொண்டுவந்து
அடைவாக நீற்றியே சுண்ணும்பாக்கி
தாட்டிகமாய்ச் சாரமதைச் சமனாய்ச்சேர்த்துத்
தானரைத்துப் பீங்கானிற் பனியில்வைக்க
நாட்டமுள செயநீராம் வீரம்பூரம்
நலமாகத் தான்போட்டு வைத்துக்கொண்டு
மேட்டிமையாய் முன்வைத்த மூன்றுஉப்பும்
மேலாக அரைக்கின்ற வகையைக்கேளே. (4)

வகையாகக் கல்வத்தி லுப்பையிட்டு
மகிழ்வாக செயநீர்விட் டரைத்தெடுத்து
துகையாக வில்லைதட்டிக் கதிரில்வைத்துச்
சுகமாகப் பத்தெருவிற் புடத்திற்சுண்ணம்
நகைபோலே முப்பூவின் குருவுமாச்சு
நன்மையுள்ள குருவண்டு மிதுவேயாச்சு
திகையாமற் புகைச்சரக்கு எதுவானாலும்
திறமாகக் கொஞ்சமிடச் சுண்ணமாமே. (5)

கெந்தக பற்பம்.

சத்துருவைச் செயம்பண்ணுங் கெந்தகத்தைத்
தான்கட்டி யாகஒரு பலத்தைவாங்கிச்
சுத்திசெய்து தானெடுத்து வைத்துக்கொண்டு
சுகமாக சிறுபூளை யிலையரைத்து
சித்திபெறக் குகைசெய்து அதற்குள்ளேதான்
சீரான கெந்தகத்தை வைக்குமுன்னே
உத்தமொரு குருச்சுண்ணம் வாய்நீராலே
ஒழுங்காக வேதடவிக் காயவையே. (6)

சொல்லியதோர் கெந்தகத்தைக் குகைக்குள்வைத்துச்
சுகமான யிலைக்குகையை மேலேமூடி
மெல்லவே சீலைமண் சரியாய்ச்செய்து
வெகுசுகமாய் மூன்றெருவிற் புடத்தைப்போடு
நல்லதொரு கெந்தகத்தின் பற்பந்தானும்
நலமான விபூதிபோல் நீறிப்போகும்
வல்லதொரு நெல்லிடையாய்ப் பற்பந்தன்னை
வாகுபெற உண்ணயா கோப்சொன்னாரே. (7)



சிரங்குமுதற் சூலைபோம் கரப்பான்போகும்
செயலான சூலைபதி னெட்டும்போகும்
கரங்குகின்ற கண்புகைச்சல் கண்ணீரோடல்
காணாம லோடிவிடுங் கடலைப்புக்கும்
பரங்கிமுதல் வியாதிகளும் பறந்தேபோகும்
பத்தியமோர் பாலாகும் நெய்யுமாகும்
இரங்குகின்ற புளிதள்ளி உப்பைச்சேரு
இன்பமுடன் யாகோபு இயம்பினாரே. (8)

சிலாசத்துப் பற்பம்.

பச்சமுடன் சிலாசத்துக் கட்டி வாங்கிப்
பாகமுடன் வாய்நீராற் குருவைப்பூசி
நிச்சயமாய்ச் சுண்ணப்புச் சீலைசெய்து
நேரான குக்குடமாய்ப் புடத்தைப்போடு
அச்சமிலா பற்பமது வெள்ளையாகும்
அன்புடனே வெந்நீரி லுள்ளேயுண்ண
எச்சமயத் தோருக்கும் யாகோபுந்தான்
இதமாகப் பிழைப்பதற்கு வகைசொன்னாரே. (9)

மலசலங்க ளடைப்புக்கு மருந்தையுண்ண
வகையுடனே கழிந்துவிடும் புகைச்சல்போகும்
நலமாக வாயில்நின்ற ரோகம்போகும்
நன்மையுடன் தொண்டைவலி யிருமல்போகும்
குலமான விம்மருந்தி லநேகநோய்கள்
குடிபோகும் பத்தியமோ கரப்பான்தள்ளு
பெலமான யாகோபு சொன்னநீதி
பிசகாது ஒருநாளும் பேணிப்பாரே. (10)

தாளகபற்பம்.

அரிதாரம் பலம்வாங்கிச் சுத்திசெய்து
அன்புடனே அதைத்தானும் வைத்துக்கொண்டு
பெரிதான நாயுருவி தன்னைச்சுட்டுப்
பிசகாம லமுதப்பால் விட்டரைத்து
சரியான குகைசெய்து அரிதாரத்தில்
சாற்றியதோர் முன்குருவாம் நீராற்பூசி

சிரிதான குகைக்குள்வைத்துச் சீலைசெய்து
சித்திபெறக் குக்குடத்தில் புடத்தைப்போடே. ()

நீறுபோல் நீறியது பற்பமாகும்
நிலையாகப் பணவிடைதான் தேனிலுண்ண
ஆறுபோல் வந்ததொரு சயரோகங்கள்
அடைவான மீளைமுதற் காசத்தோடு
சீறுற்ற முறைக்காய்ச்சல் கண்டமாலை
சிறப்பில்லா சத்திருன்மஞ் சுரமும்போகும்
பேறுபெற்ற யாகோபு சொன்ன நீதி
பேருலகில் யாவருமே பிழைக்கத்தானே (12)

வங்க பற்பம்.

சொல்லடங்கா வங்கத்தைச் சுத்திசெய்து
சுகமாகத் தகடுதட்டி ஆலம்பாலில்
வல்லமையா யூறியபின் கல்வத்திட்டு
வகையுடனே தானரைக்க மெழுகுமாகும்
நல்லாக அதையெடுத்து வில்லைதட்டி
நலமாகக் கலந்துமே லோடுமூடி
அல்லாமு மாகுமென்று யாகோப்சொன்னர்.
அருமையுட னுலகோர்கள் பிழைக்கத்தானே.(13)

வங்கமது காய்ந்தபின்பு குருவைப்பூசி
வராகபுடம் போட்டெடுக்கப் பற்பமாகும்
தங்கம்போல் வெண்ணெய்யிலே தானேகொண்டால்
சரியாகத் தாதுவிர்த்தி புஷ்டியாகும்
பங்கமுள்ள சூலைபுண்ணும் பறந்தேபோகும்
பறங்கிமுதற் பிரமியங்கள் தீர்ந்துபோகும்
திங்கள்போ லிருப்பதற்கு யாகோப்சொன்னர்
சிறப்பாகச் செய்துநீ முடித்துப்பாரே. (14)

சூத பற்பம்.

சூதமது களஞ்சிபத்துக் கல்வத்திட்டுச்
சுகமான சிவகரந்தைச் சாறுவாங்கி
நீதமுடன் சூதமதிற் சேர்த்தரைத்து
நேர்மையுடன் வில்லைதட்டி ரவியிற்போடு



வாதமுடன் புதுஓட்டில் வைத்துநன்றாய்
வளையம்போல் ஓலைசுத்தி வைத்துக்கொண்டு
பேதமிலா நாயுருவி விதையைக்கொட்டிப்
பெலமாக மூடிநன்றாய் எருமேல்வையே. (15)

குக்குடமாய்ப் புடம்போடப் பற்பமாகும்
குணமாகத் தானெடுத்து வைத்துக்கொண்டு
தக்கதொரு புண்புரைகள் பொல்லாமேகம்
தானேகும் ரசவாத வித்தைக்காகும்
செக்கவே சிவந்துநா வுதடுதொண்டை
திறமாக யிருக்கின்ற வியாதிபோகும்
மிக்கதொரு யாகோபு சொன்னாரிந்த
விதமறிந்து தெரிந்துகொடு மருந்துதானே.(16)

நல்லதொரு சவ்வீரஞ் சுத்திசெய்து
நலமாக ஐங்கோலத் தயிலந்தோய்த்து
வல்லவே ரவியில்வைத்துக் காய்ந்தபின்பு
வசமாகக் கவசமது செய்துகொண்டு
சொல்லவே மண்சீலை பெலமாய்ச்செய்து
சூரியனிற் காயவைத்துப் பின்னுமித்தை
கல்லமிலா யாகோபு கருதிச்சொன்னர்
கபடற்றுச் செய்திடுவாய் கருணையோடே.(17)

தீபமது தானேற்றிக் காயவைக்கச்
செகமெய்க்கும் மெழுகாகும் சிமிழில்வைத்து
தாபமது நீங்கவே தாயைப்போற்றித்
தானெடுத்துத் தங்கத்தை ரேக்காய்ச்செய்து
சோபமதில் லாமலே மெழுகுக்கீய்ந்தால்
சுத்தமுள்ள மெழுகாகும் அதனிற்கொஞ்சம்
சாபமது நீக்கியே நவலோகத்தில்
தானீய ஏமய்யா கோப் சொன்னரே. (18)

கற்பமது நாற்றெட்டு மகான்கள்கொண்டார்
காதலுடன் மூலிகையின் கற்பமாகும்
சொற்பமிது ஆவரையின் பட்டையோடு
சுத்திசெய்த சிவன்வேம்பு வேங்கைப்பட்டை

அற்பமென்று நினையாமல் மூன்றுமொன்றாய்
அன்பாக வேபோட்டுப் பாண்டத்திட்டு
சற்குருவா மையங்கோலக் கருவுங்கூட்டிச்
சார்வாக யாகோபு சாற்றினரே. (19)

பாண்டமதைச் சீலையண் சரியாய்ச்செய்து
பட்சமொடு குழித்தயில மிறக்கிக்கொண்டு
ஆண்டவனைப் போற்றிசெய்து பணவிடைதான்
அருமையுட னுட்கொண்டால் வியாதிபோகும்
நீண்டதொரு நரம்புகளும் வலுத்துப்போகும்
நிலையான தேகத்திற் சட்டைவாங்கும்
வேண்டியது இக்கற்பம் யோகிக்குத்தான்
மென்மேலும் யாகோபு விளம்பினரே. (20)

பண்டலமே இக்கற்பம் கொண்டாயானால்
வயிரம்போற் றேகமது வலுத்துப்போகும்
அண்டரெல்லாங் கொண்டகற்ப மிதுதான்முன்பு
அழியாத தேகத்தோ டிருக்கலாச்சு
கண்டவர்க ளொருநாளுங் கைவிடார்கள்
கருவான குதத்திற் கிட்டார்கட்டும்
கொண்டவனும் நானென்று யாகோப்சொன்னார்
கூறின ருலகோர்க்குக் குறிப்பாய்த்தானே. (21)

தயிலமது சொல்லுகிறேன் கழற்சியின்றன்
சாறுதா னொருபடியுந் தானெடுத்து
ஒயிலான செம்முள்ளிச் சாறுநாழி
உத்தமமாம் துத்தியுட சாறுநாழி
பயிலாகச் சங்கங்குப்பிச் சாறுநாழி
பக்குவமாய் நொச்சியிலைச் சாறுநாழி
அயிலான கெவ்தும்மைச் சாறுநாழி
அடைவாக வாங்கயா கோப்சொன்னரே. (22)

உத்தநிலைப் பனைக்கிழங்குச் சாறுநாழி
ஊர்சுத்தி யமுரியது சாறுநாழி
பத்தமுள்ள விளக்கெண்ணெய் படியும்நாழி
பண்பாகப பாண்டத்தில் ஒன்றாயிட்டு



சுத்தமுள்ள அதிமதூரம் முத்தக்காசு
சுழிவான சாதிக்காய் கிராம்பு கோஷ்டம்
சித்தமுள்ள ரோகணியும் ஏலஞ்சுக்கு
செயலான கார்போக அரிசிதானே. (23)

ஒன்பதையும் விராகனது ஒன்றுதூக்கி
உத்தமமாய் முன்சாறா லரைத்துமைப்போல்
தென்புடனே முன்சாறில் கரைத்துக்கொண்டு
திறமாக அடுப்பேற்றித் தீயெரித்து
அன்புடனே மெழுகுபத மாகக்காய்ச்சி
அடைவாகத் தயிலமதை வடித்துவாங்கி
இன்பமுடன் குருவதனிற் கொஞ்சமிட்டு
எடுத்துவைத்து சாப்பிடுதற் கெளிமைதானே(24)

ஒருகாண்டி தயிலமெழு நாளேகொள்ள
உற்றதொரு வியாதியெல்லா மொடுங்கிப்போகும்
கருணையிலாச் செங்கிரந்தி கருங்கிரந்தி
கள்ளிப்புக் கிரந்திவெட்டை மேகவாய்வு
பெருமையிலா மேகமென்ற திருபத்தெட்டும்
பிரமேக வியாதியுட னெல்லாம்போகும்
அருமையுடன் யாகோபு உலகோர்க்காக
அன்புடனே வெட்டவெளி யாக்கிட்டாரே.(25)

கஞ்சியுப்புக் கட்டு.

கஞ்சியுப்பைப் படிகாலு அளந்துவைத்துக்
கனகஉப்புக் கொள்ளவே கலசம்வாங்கி
நஞ்சில்லாக் கொழுஞ்சியின்றன் வேர்கொணர்ந்து
நலமாகத் தோலுரித்து வைத்துக்கொண்டு
தஞ்சமென்ற புதுக்கலசந் தனிலேதானும்
சார்வாகக் கொஞ்சஉப்பும் உரித்ததோலும்
கொஞ்சங்கொஞ்ச மாய்ச்சரியாய்த் தானும்போடு
குணமாக ரெம்பியபின் சிட்டிமூடே. (26)

உப்பிட்ட கலசமதைக் காியில்வைத்து
ஊதிவரத் தணலாகி உருகிநிற்கும்

செப்பமுடன் சாணாக்கிற் றானும்ஊத்திச்
சீர்பெறவே தானெடுக்கக் கட்டிப்போகும்
துப்பாவாய்ப் பொடிசெய்து குன்மத்திற்குச்
சுயமாகத் தான்கொடுக்கக் கடலேபுக்கும்
தப்பிதமில் லாமலே யாகோப் சொன்னார்
சகலருக்கும் இந்தஉப்பு உதவுந்தானே. (27)

திரிலோகச் செந்தூரம்.

அயப்பொடியும் உருக்கினுட பொடியினோடே
அன்பான கிட்டத்தின் பொடியுந்தானும்
செயமாகச் சுத்திசெய்து வகைவகைக்குத்
திறமாக வொருபலந்தா னெடுத்துக்கொண்டு
பயமில்லாக் கல்வத்தில் மூன்றும்விட்டு
பக்குவமாய் நாவற்பட்டைச் சாறாற்சாமம்
நயமாக வேயாட்டி ரவியில்வைத்து
நலமாகக் காய்ந்தபின்பு எடுத்துக்கொள்ளே (28)

காய்ந்ததையும் மறுபடியே கல்வத்திட்டுக்
கனமான முன்சாறா லரைத்துப்பின்பு
வாய்ந்தபடி ஐந்துமுறை யிவ்வண்ணமாய்
வகையோடே செய்துமதிற் குருவுங்கொஞ்சம்
ஆய்ந்தசித்தா மணக்கிலையை அரைத்துமேலே
அடைவாக வேபொதிந்து வைத்துக்கொண்டு
எய்ந்தபடி நெய்ப்பாண்டத் திட்டுமூட
இனிமையுடன் செந்தூர மாகும்பாரே. (29)

செந்தூரம் பணவிடைதான் தேனிலுண்ணத்
தீருமே பாண்டுகா மாலைசோகை
சந்துவலி பெருவயிறு பிரவிப்பாண்டு
சதிரான உப்பிசநோய் கிராணியாறும்
வெந்துவருஞ் சலக்கழிச்சல் இளைப்பிருமல்
மிகத்தீரும் பத்தியமோ கரப்பான்தள்ளு
இந்தமுறை யுலகோர்க்கு யாகோப்சொன்னார்
இனிமையுடன் செய்தறிந்து பாகப்பாரே. (30)



பவள பற்பம்.

நல்லதொரு பவளமது கொண்டுவந்து
நல்மர்க சுத்தசலந் தன்னிலிட்டு
வல்லவே இரவுபக லூறவைத்து
வாகுடனே அதையெடுத்துக் கழுவித்தேய்த்து
எல்லவே ஆவின்பால் தன்னிலிட்டு
இனிமையுட னொருநாளும் ஊறவைத்து
சொல்லவே அதையெடுத்து வைத்துக்கொள்ளச்
சொன்னாரே யாகோபு துணிவாய்த்தானே. (31)

முக்கியமாய்த் தேள்கொடுக்குக் காயிடித்து
முன்பாகப் புத்தோட்டில் பரப்பிக்கொண்டு
தக்கபடி முன்பவளம் அதிற்பரப்பித்
தயவாக அதன்மேல்முன் காய்பரப்பிப்
பக்குவமாய் மேல்மூடிச் சீலைசெய்து
பதறாமல் கெஜபுடத்திற் போட்டெடுக்க
திக்கிலுள்ளோர் மெச்சுகின்ற பற்பமாகும்
செகத்தோர்க்கு யாகோபு செப்பினாரே. (32)

மெச்சுகின்ற பற்பமதைப் பீங்கானிட்டு
மெதுவாக ஆவின்பால் தன்னைஊட்டி
பச்சமுள்ள ரவிதனிலே சாமமொன்று
பதிவாக வைத்தெடுக்க வெண்மையாகும்
உச்சிதமாய்க் குப்பிக்குள் வைத்துமூடி
உசிதமாய் நெற்பானைக் குள்ளேவைத்து
கச்சிதமாய் நாலுநாட் கழித்தெடுத்துக்
கருத்துறவே யாகோபு கருதினாரே. (33)

ஆவின்பால் நெய்தேனி லருந்தலாம்பின்
அனுப்பானந் தயிலவர்க்கம் லேகியங்கள்
பாவுடனே சாப்பிடும்போ திதையுஞ்சேர்த்துப்
பக்குவமாய்ச் சாப்பிடவே காசரோகம்
தாவுடனே சொறிகரப்பான் தொண்ணூற்றாறும்
சற்றங்கே நில்லாம லோடிப்போகும்
நாவுக்கும் பாவுக்குஞ் சரியதாக
நவின்றிட்டார் யாகோபு நன்மைதானே. (34)

அரிதாரப் பற்பம்.

அரிதாரம் பலமொன்று கட்டிவாங்கி
அன்புடனே துணிசுத்தி வைத்துக்கொண்டு
பெரிதான சுண்ணாம்புக் கல்தான்வாங்கிப்
பேசரிய புத்தோட்டில் சுண்ணாம்புக்கல்
உரிதாக வேபரப்பித் தாரம்வைத்து
உகமையுள்ள சுண்ணாம்பை மேலேபோட்டுச்
சரியான தேசிநீர் வார்த்துமூடித்
தானெரித்து யேழுதாஞ் சுத்திசெய்யே. (35)

சுத்திசெய்த அரிதாரம் பற்பஞ்செய்யச்
சுகமான வாழையதின் கிழங்கெடுத்து
கத்திகொண்டு உள்குடைந்து அதனுள்வைத்துக்
கணக்காகக் கிழங்கதினால் வாயைமூடி
மத்தியிலே கிழங்குக்கு ஏழுசீலை
மண்செய்து காயவைத்து எடுத்துக்கொண்டு
பத்தியாய்க் குழிவெட்டிக் கெசபுடத்திற்
பற்பமென்று யாகோபு பகர்ந்திட்டாரே. (36)

நேரான பற்பமதிற் குருவைச்சேர்த்து
நேர்த்தியுள்ள நெய்தேனி லுண்ணவேதான்
சீரான மந்தார காசமீளை
சிறப்பான சிலேத்துமங்கள் தொண்ணூற்றாறும்
பேரான கபவாதங் குஷ்டரோகம்
பெருங்கரப்பான் சிரங்குமுதல் நோய்களெல்லாங்
கூராம லோடுமென்று யாகோப்தானுங்
கூறினா ருலகோர்க்குக் குறிப்பாய்த்தானே (37)

தாம்பூரப் பற்பம்.

நல்லதொரு தாம்பூரந் தகடுதட்டி
நலமான வெள்ளெருக்கம் பாலைவிட்டு
வல்லதொரு தாம்புரத்தை யதிலேயிட்டு
வைத்துமே சூரியனிற் காயவைத்து
சொல்லுகின்ற முன்பாலை வத்தவைத்துச்
சுகமாகக் குருப்பூசி ஒட்டில்வைத்து
மெல்லவே மேல்மூடி ஓடுவைத்து
விதமாக மண்சீலை அஞ்சுசெய்யே. (38)



அருமையுடன் கெசபுடத்தில் போட்டெடுக்க
அன்பான விபூதிபோல் நீறிப்போகும்
பெருமையுடன் பற்பமதை ஆவின்நெய்யில்
பேசரிய பாலதனி லுண்ணவேதான்
உரிமையுடன் குன்மமெட்டும் மேகநூலை
ஓடியேதான் பதினெட்டுக் குட்டம்போகும்
வருமைகளு மித்தோடே அகன்றுபோகும்
வகையுடனே யாகோபு வசனித்தாரே. (39)

நாக பற்பம்.

நாகமது ஒருகட்டி வாங்கிக்கொண்டு
நயமான அயக்கரண்டிக் குள்ளேயிட்டு
பாகமா யடுப்பேற்றிக் கரிசாலைச்சார்
பண்பான யீருள்ளிச் சாரிலேனும்
தாகமுள்ள சிறுநங்கைச் சாரிலேனும்
தயவாக் மூன்றிலொன்று படிசார்வாங்கி
ஏகமதாய் நாற்சாமம் சுருக்குத்தாக்கி
இதையெடுத்து யாகோபு இயம்பினாரே. (40)

குகைதனிலே சிறுநங்கை கீழ்மேல்வைத்துக்
குறிப்பாக நாகத்தை நடுவேவைத்து
திகையாமற் குருவிட்டு ஊதஊது
சிறப்புடனே பொருமியது நீறிப்போகும்
பகையிலா தேயெடுத்து வைத்துக்கொண்டு
பண்புடனே அனுப்பானந் தெரிந்தேயூட்டு
வகையோடு யீளைப்பிருமல் தீருமென்று
வாகாக யாகோபு வழுத்தினாரே. (41)

துருசு பற்பம்.

துருசதுவும் ஒருபலந்தான் வாங்கிக்கொண்டு
சுகமான கருந்துளசிச் சாறுவாங்கிப்
பெருமையுள்ள துருசதுவை அதிலேபோட்டுப்
பேசரிய ஒருசாம மூறவைத்து
அருமையுட னந்தயிலை தன்னைத்தானும்
அரைத்துமே துருசுக்குக் கவசம்பூட்டி
மருவில்லா யெழுசீலை மண்ணுஞ்செய்து
வையென்று யாகோபு வழுத்தினாரே. (42)

முதலாகச் சாணகலஞ் சாணீளந்தான்
முக்கியமாய்க் குழிவெட்டி யதற்குள்வைத்து
இதமாகக் குழிநிரம்ப யெருவடுக்கி
இயல்பாகக் குழிப்புடந்தான் போட்டெடுத்து
விதமாகக் கல்வமிட்டு நொருக்கிக்கொண்டு
வேகமுடன் கருவூமத் தஞ்சாறாலே
பதமாக ஒருசாமந் தானரைத்துப்
பக்குவமா யாகோபு பாவித்தாரே. (43)

அரைத்தெடுத்த துருசுதனிற் குருவைப்பூசி
அன்பாக மேற்சொன்ன இலையரைத்து
மரைத்துஅதைக் கவசமிட்டு ஓட்டில்மூடி
வகையாக சீலையண் மூன்றுஞ்செய்து
கரைத்ததொரு முழப்புடத்தில் போட்டெடுக்கக்
கருத்தாக நீறியது பற்பமாகும்
உரைத்துவிட்டேன் குருவிதுதான் வேறொன்றில்லை
உத்தமமா யாகோபு உரைத்திட்டாரே. (44)

துருசுபற்பங் குருவதனை யனுப்பானத்தில்
சொகுசாகச் சாப்பிடவே சன்னிகாய்ச்சல்
கருவான கெண்டைகட்டி அட்டகுன்மம்
கருத்தான வாய்சூலை கடலேபுக்கும்
திருவான வாதிமகன் செய்வான்வேலை
செப்பாமல் விட்டார்கள் சித்தரெல்லாம்
குருவாகும் யாகோபு துரையதாகக்
கூறினார் வாதிகளும் பிழைக்கத்தானே. (45)

உப்புத் தீட்சை விதி

நல்லதொரு பூநீரைப் பீங்கானிட்டு
நலமாகக் கரைத்தந்தத் தெளிவைவாங்கி
மெல்லவே மறுபீங்கான் தன்னிலிட்டு
மேன்மைபெற ரவியில்வைக்க உப்பேயாகும்
வல்லபமாய் முன்போலே தெளிவைவாங்கி
மருபீங்கா னிட்டுரவி காயவைத்துச்
சொல்லவரு மிந்தமுறை பத்துப்பாகஞ்
சுத்திசெய்த பூநீருஇதுவாம் வையே. (46)



வைய்யப்பா கரியுப்பை யிதுபோலாக
வகையாகத் தான்கரைக்க வழியைக்கேளு
செய்யப்பா கரியுப்பைக் கரைத்துக்கொண்டு
தீயெரித்துக் காய்ச்சியெடு பத்துத்தேரம்
மெய்யப்பா வெடியுப்பை யிதுபோலாக
மேவியே ஐந்துதரங் காய்ச்சசுத்தி
கையிலே குருமுடித்துக் கொடுத்துவிட்டேன்
கணக்கான தீட்சையது கண்டுகொள்ளே. (47)

நூற் கோர்வை.

பச்சமொடு யெழுநூறில் சொல்லுகின்ற
பற்பமொடு செந்தூரஞ் சுண்ணத்திற்கு
இச்சையொடு இடைபாகஞ் சரக்குவைப்பு
எரிப்புதிட்டம் புடபாகம் குருமுடிப்பு
வச்சதொரு சரக்குக்குச் செய்பாகந்தான்
வகையுடனே கைபாக மாகவேதான்
கச்சிதமாய்க் கோர்வைநூல் முறையதாகக்
கணக்குகளைச் சொல்லிவிட்டேன் கருத்தாய்ப்பாரே.

பாடினதோர் நூலதனி லெழுநூறுக்குள்
பற்பமொடு செந்தூரம் வாதப்போக்கு
தேடியே யலையாமல் கைபாகத்தால்
செய்துமே முடிப்பதற்கு வகையுஞ்சொன்னேன்
கூடியே வழிதுறையாய்ச் செய்வாளுகிற்
குபேரனெனச் சொல்லுவர்க ளுலகிலுள்ளோர்
சாடையாய்ச் சொல்லிவிட்டேன் யாகோப்தானும்
தன்மையது தானறிந்து தான்செய்வாயே (49)

சுண்ணமது அறுநூறு குருநூலாக
சொல்லினேன் வழிதுறையாய்க் கண்டுகொள்ள
முன்சொன்ன சுண்ணமுந் நூறும்பாரு
முடியுமல்லால் தவறாது வேறொன்றில்லை
கன்னலா யதைக்குறுக்கி நூற்றைப்பதுவும்
கருணையொடு ஐம்பதையுந் தானும்பாரு
மன்னவன்போல் வாழ்ந்திருக்க யாகோப்தானும்
வழுத்தினார் உலகோர்கள் பிழைக்கத்தானே(50)

செந்தூர முந்நூறு கைபாகந்தான்
சிறந்தநூ லதுபோலே நூல்கள்கிட்டா
சொந்தமுடன் குறுக்கி நூற் றைம்பதுந்தான்
சுருதியுத்தி அனுபவத்திற் கிசைந்துசொன்னேன்
பந்தமுட னதைக்குறுக்கி ஐம்பதுந்தான்
பாகமொடு வாதங்கள் பலிக்கச்சொன்னேன்
வந்தவினை தானகல யாகோப்சொன்னார்
வகையாக நூல்பார்த்து மகிழுவீரே: (51)

வயித்தியமு முந்நூறு பலசந்தத்தால்
வகையுடனே நபிமார்க்குச் சொல்லிவந்தேன்
பயமில்லா திந்தநூல் நாடிபாகம்
பாலித்தேன் மருந்துகளோ பண்புமெத்த
செயமாக நானூறு விரித்துச்சொன்னேன்
திருத்தமா யைப்பதுவுங் குறுக்கிச்சொன்னேன்
சுயமான இடைபாகம் பதினாறோடு
சொல்லினேன் செய்பாகம் பதினாற்பாரே. (52)

சுண்ணமுடன் செந்தூர முந்நூறுக்குச்
சுருக்கமா முந்நூறு களங்குசொன்னேன்
கன்னியமாய்ப் பஞ்சமித் திரமுந்நூறும்
கனிவுடனே சொல்லியைம் பதுவுஞ்சொன்னேன்
இன்னமெழு நூறுக்குச் சுருக்கந்தன்னை
இனிமையுட னிந்தவைம் பதுவுஞ்சொன்னேன்
சொன்னதொரு நூலுக்குக் குருநூலாகச்
சூட்டினேன் தண்டகமாம் நூற்றிப்பத்தே (53)

சுந்தரம்போல் பதினெழு நூல்கள்சொன்னேன்
சுருக்கமாய் வாதத்தைப் பார்க்கச்சொன்னேன்
வந்தாச வாதமது செய்வதற்கு
வகையுடனே நூல்களெல்லாஞ் சொல்லிவைத்தேன்
வித்தையுட னிடைபாகஞ் செய்பாகங்கள்
விரும்பியே தெரிவதற்குச் சொல்லிவிட்டேன்
சிந்தைமகிழ் வாகஎந் நூல் முழுதும்பார்த்தோன்
சித்தனென்று யாகோபு செப்பினாரே. (54)



ஆதியிலே யென்பேரு ராமதேவர்
அருமையுட னனேகநூல் சொல்லிவந்து
நீதியுடன் மக்கத்திற் போயிருந்து
நிலைபெறவே இந்நூல்கள் சொல்லிவைத்தேன்
வாதிகளும் பிழைப்பதற்குத் திறந்துசொன்னேன்
வகைதெரிந்தோன் வாதிமக னவான்பாரு
சோதியது கண்டபின்பு தெரிந்துகொள்வாய்
சுகமான சுருக்கமைம் பத்ந்தந்துமுற்றே. (55)

யாகோபு குருநூல் 55

முற்றிற்று.

## இராமதேவரென்ற யாகோபு அவர்கள் வரலாறு.

இம் முனிவர் ஆதியில் பதினெண் சித்தர்களின் கூட்டங்களுடன் இராமதேவ ரென்ற பெயருடனிருந்து வைத்தியம், ஞானம், ஜாலம் முதலிய அநேக நூல்கள் பாடியபின் கெவுன குளிகை யிட்டு மக்கம் தேசம் போய் அங்குள்ள மகமதியர் குருவான நபிமார்களுடன் தமிழ் நூலுக்கு சாஸ்திரங்களிலுள்ள இரகசியங்களைப் பேசி அகாரம் உகாரம் என்பதும், அசன் உசன் என்பதும் கலந்து பேசி உறுதியான பின் நபிமார்கள் சந்தோஷமடைந்து இராமதேவருக்கு மகமதியர்சாஸ்திரப்படி சுன்னத்துச் செய்து யாகோபு எனப் பெயரிட்டு தொப்பியுங் கொடுத்துத் தங்களுடன் சேர்த்துக் கொண்டார்கள். யாகோபு எனப் பெயரானபின் சித்த வைத்தியம், யூனானி வைத்தியம், ஆயுள்வேத வைத்தியம் முதலான முறைகளை அநுசரித்து யாவரும் எளிதில் உணரும்படி முதலில் யாகோபு சிந்தாமணி 700 பாடி அதன் முறைகளை வைத்தியர்கள் லெகுவாக அருந்தம் பண்ணிக் கொள்ளும்படி சுண்ணம், லோகச் செந்தூரம், களங்கு, இவைகளுக்குச் சூஸ்திரங்களுமாக பதினேழு சாஸ்திரங்கள் பாடியுள்ளார் டி. 17 சாஸ்திரங்களையும் மிகுந்த பிரயாசையுடன் அநேக பொருட் செலவு செய்து சம்பாதித்து என்னால் அச்சிட்டுத் தனித்தனியாகவும் ஒரே கோர்வையாகவும் பயிண்டு செய்து விற்பனையாகிறது.

உ பரமபதிதுணை.

இராமதேவரென்ற

யாகோபு அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய

## வைத்திய சிந்தாமணி எழுநூறின்

# அட்டவணை.

### வகாரச் செந்தூரங்கள்.


| | |
|---|---|
| வகார வங்கச்செந்தூரம் | 468 |
| கருவங்கச் செந்தூரம் | 53 |
| வங்கச் செந்தூரம் | 71 |
| வங்கச் செந்தூரம் | 481 |
| வங்கச் செந்தூரம் | 495 |
| வங்கச் செந்தூரம் | 593 |
| நாகச் செந்தூரம் | 388 |
| நாகச் செந்தூரம் | 399 |
| லிங்கப் பதங்கச்செந்தூரம் | 229 |
| அயச்செந்தூர வேதை | 376 |
| அயக்களங்குச் செந்தூரம் | 489 |
| அயக்களங்குச் செந்தூரம் | 146 |
| அயச்செம்புச் செந்தூரம் | 252 |
| காரீயச் செந்தூரம் | 476 |
| இருவங்கச் செந்தூரம் | 579 |
| துருசுச் செம்புச் செந்தூரம் | 115 |
| திரிவங்கச் செந்தூரம் | 216 |
| தாளகச் செந்தூரம் | 226 |
| சிங்கிச் செந்தூரம் | 423 |
| உப்புச் செந்தூரம் | 432 |
| குப்பி வைப்பு அயச்செந்தூர | 558 |
| அயநாகச் செந்தூரம் | 600 |
| அயக்காந்தச் செந்தூரம் | 691 |
| வங்கச் செந்தூரம் | 345 |
| வெடியுப்புச் செயநீர்க்குரு | 488 |
| அப்பிரேக வங்கச்செந்தூரம் | 582 |


வகாரச் செந்தூரங்கள் முடிக்க வேணுமாகிற் லோகச் செந்தூரம் மூன்றூற்றையும் அதன் சூஸ்திரங்களையும் பார்த்துச் செய்யவும்.

### வகாரக் கட்டுச் சரக்குகள்.


| | |
|---|---|
| துருசுக்குரு | 363 |
| துருசுக் கட்டு | 158 |
| பாறையுப்புக் கட்டு | 72 |
| நாகக் கட்டு | 55 |
| சூதகக் கட்டு | 365 |
| தாளகக் கட்டு | 528 |
| தாளகக் கட்டு | 570 |
| எலிகொல்லி பாஷாணக்கட்டு | 622 |
| பாசாணக் கட்டு | 209 |
| லிங்கக் கட்டு | 628 |
| கரியுப்புக் கட்டு | 127 |
| வெடியுப்பு எண்ணெய்கழட்ட | 51 |


### வகாரத்திற்குத் தைலம்


| | |
|---|---|
| மஞ்சள் தைலம் | 500 |
| கெந்தித் தைலம் | 485 |
| உரோமத்தைல யேமவித்தை | 506 |
| மாற்றேற உரோமத்தைலம் | 545 |


வகாரச் சரக்குக் கட்டுகளின் விபரமும் அவைகளைப் பஞ்சமித்திரஞ் செய்யக்கூடிய வகைகளுந் தெரிய வேண்டுமானல் பஞ்சமித்திரம் 300ல் சொல்லியிருக்கிறார் அதை பார்த்தால் நன்கு விளங்கும்.

### நெய் வகை விபரங்கள்.


| | |
|---|---|
| பித்த வாயுவுக்கு நெய் | 202 |
| சுக்கில மேகத்திற்கு நெய் | 319 |
| கால்கைகடுக்கலுக்கு நெய் | 447 |


### வகாரச்சுண்ணங்கள்.


| | |
|---|---|
| துருசுச் சுண்ணம் | 57 |
| துருச்ச்சுண்ணம் | 214 |
| துருசுச்சுண்ணம் | 344 |
| துருசுச் சுண்ணம் | 414 |
| துருசுச் சுண்ணம் | 538 |
| சுக்கான் துருசுச் சுண்ணம் | 157 |
| சித்தண்டச் சுண்ணம் | 142 |
| வெடியுப்பு சுண்ணக்குரு | 361 |
| நாக வேதை | 413 |
| நாகச் சுண்ணம் | 503 |
| சிங்கி வேதை | 424 |


வகார முப்பு முடிக்க வேண்டுமானல் சுண்ணக்காண்டம் அறுநூறையும் தண்டகம் நூற்றிபத்தையும் இடைபாகம் பதினூறும் பார்க்க நன்றாய்த் தெரியவரும்.

### வகாரச் செம்பெடுக்க வகை.


| | |
|---|---|
| துருசு அயச் செம்பு | 509 |
| துருசுச் செம்பு | 409 |
| துருசுச் செம்பு வேதை | 112 |
| துருசுச் செம்பு வேதை | 231 |
| துருசுச் செம்பு | 520 |
| துருசுச் செம்பு | 532 |
| அயச் செம்பு | 145 |
| அயச் செம்பு | 249 |
| அயச் செம்பு | 351 |
| வேதைச் செம்பு | 370 |
| அரிதாரச் செம்பு | 135 |
| நாகஅயச் செம்பு | 390 |
| அயத் துருசுச் செம்பு | 415 |
| அயச்செம்பு | 511 |
| சூதம்கட்டக் கிண்ணம் | 393 |
| சேதுப் பந்தனக் குளிகை | 648 |


### வகாரத் திராவகம்.


| | |
|---|---|
| அமுரித் திராவகம் | 77 |
| சரக்குகள் கட்டத் திராவகம் | 371 |
| சூடத் திராவகம் | 566 |
| செம்பிற் கிராசம் | 132 |


### வகாரச் சத்து வகைகள்.


| | |
|---|---|
| கண்டர் சத்து | 128 |
| கண்டர் சத்து | 248 |
| பஞ்சமித்திரம் | 251 |
| வங்கவெட்டை | 375 |
| காந்தக் கிண்ணம் | 379 |
| பூநீர் எண்ணெய் கழட்ட | 410 |
| நாகச் செயநீர் | 430 |
| வங்கச் செயநீர் | 453 |
| அயமணி | 487 |
| வேதைக்குப் புடபாகம் | 562 |
| தாளக நீர் | 217 |
| சவுக்காரம் எண்ணை கழட்ட | 362 |


### வகாரக் களங்குகள்.


| | |
|---|---|
| சூதக் களங்கு | 159 |
| அரிதாரக் களங்கு | 346 |
| கருநாகக் களங்கு | 397 |
| அயக் களங்கு | 488 |
| கருநாகக் களங்கு | 641 |
| மாற்றேற வெள்ளி | 335 |


வகாரக் களங்குகள் சத்துகள் செய்ய வேண்டுமானல் களங்கு 300 சொல்லியிருக்கிறார் அதைப் பார்த்தால் களங்காக்கிற விபரங்களும் சத்தாக்குகிற விபரங்களும் தெளிவாய்த் தெரியவரும்.

### பதங்க வகை விபரங்கள்


| | |
|---|---|
| ரசப்பதங்கம் | 221 |
| வாலைரசப் பதங்கம் | 13 |
| அப்பிரேகப் பதங்கம் | 257 |
| குப்பி யெரிப்பு | 16 |
| நாகரசப் பதங்கம் | 434 |
| சூதப்பதங்கம் | 574 |
| கருநாகப் பதங்கம் | 662 |
| வீரரசப் பதங்கம் | 444 |
| திரிவங்க செந்தூரக்கற்பம் | 34 |
| விடத்தலைக் கற்பம் | 535 |

## செந்தூர வகைகள்.


அயச்செந்தூரம் 19
அயச்செந்தூரம் 95
அயச்செந்தூரம் 121
அயச்செந்தூரம் 138
அயச்செந்தூரம் 331
வங்கச் செந்தூரம் 147
தாளகச் செந்தூரம் 356
காரீயச் செந்தூரம் 119
காரீயச் செந்தூரம் 354
அயச்காந்தச் செந்தூரம் 244
காந்தச் செந்தூரம் 380
அயக்காந்தச் செந்தூரம் 666
அயவீரச் செந்தூரம் 261
அப்பிரேகச் செந்தூரம் 223
அப்பிரேகச் செந்தூரம் 260
சூதச் செந்தூரம் 664
அப்பிரேகச் செந்தூரம் 491
நாகச் செந்தூரம் 107
அக்கினி குமாரச் செந்தூரம் 23
உப்புச் செந்தூரம் 123
தாம்பிரகாந்தச் செந்தூரம் 124
அன்னபேதிச் செந்தூரம் 126
பஞ்சசுண்ணச் செந்தூரம் 210
மண்டூரச் செந்தூரம் 219
தாளகச் செந்தூரம் 327
சன்னி வாய்வுக்கு 342
லிங்கச் செந்தூரம் 381


இந்தச் செந்தூரங்களும் இன்னு மநேக செந்தூரங்களும் கைபாகம் செய்பாகம் எடைபாக முதலானவைகளை செந்தூரம் முந்நூறில் விரித்தும் அதற்குச்சூத்திரமாகக் குறுக்கி நூற்றி யைம்பத்தைந்தும் அதைக்குறுக்கி ஐம்பத்தைந்தையுஞ் சொல்லியிருக்கிறார் அவைகளைப் பார்த்துச் செந்தூரங்கள் செய்துகொள்ளவேண்டியது

## வல்லாதி வகை.


சேங்கொட்டை வல்லாதி 46
சேங்கொட்டை வல்லாதி 637


## பற்ப வகை விபரங்கள்.


தாம்பிர பற்பம் 37
தாம்பிர பற்பம் 21
தாம்பிர பற்பம் 30
தாம்பிர பற்பம் 69
தாம்பிர பற்பம் 101
நாக பற்பம் 28
நாக பற்பம் 151
நாக வங்கபற்பம் 162
நாகரச பற்பம் 170
நாக பற்பம் 635
அரிதார பற்பம் 91
அரிதார பற்பம் 154
அரிதார பற்பம் 167
தாளக பற்பம் 328
தாளக பற்பம் 385
அரிதார பற்பம் 441
கருவங்க பற்பம் 150
கருவங்க பற்பம் 165
கருவங்க பற்பம் 329
வெள்வங்க பற்பம் 149
சதுர்முகப் பற்பம் 32
பாஷாணப் பற்பம் 70
பாஷாணப் பற்பம் 443
திரிலோக பற்பம் 160
கல்நார் பற்பம் 140
சூதநாக பற்பம் 164
கலைமான்கொம்புப் பற்பம் 271
வெள்ளைக் குங்கிலியப் பற்பம் 272
லிங்கப்பதங்கப் பற்பம் 90
லிங்கப் பற்பம் 222
இரச பற்பம் 429
செம்பின் பற்பம் 42


## தைலவகை விபரங்கள்


மேகத்திற்குக் கெந்தித்தைலம் 62
தலையிடித் தைலம் 67





வாதத்திற்குத் தைலம் 179
பீனிசத்துக்குத் தைலம் 183
வாதத்திற்கு கெந்தித்தைலம் 186
பொன்னாங்காணித் தைலம் 457
கண்டமாலைக்குத் தைலம் 459
குஷ்டத்திற்குத் தைலம் 502
சன்னிக்குத் தைலம் 624
சேங்கொட்டைத் தைலம் 296
யானைக்காலுக்குத் தைலம் 391
சாம்பிராணித் தைலம் 603


## திராவக வகைகள்.


கடுக்காய்த் திராவகம் 41
சந்தனத் திராவகம் 75
மெழுகுத் திராவகம் 73
சேங்கொட்டைத் திராவகம் 74
புதினாக்கீரைத் திராவகம் 76
காவட்டம்புல் திராவகம் 78
மிளகுத்திராவகம் 80
சுண்டைவற்றல் திராவகம் 81
பெருங்காயத் திராவகம் 83
திரிகடுகுத் திராவகம் 84
தென்னங்கள்ளுத் திராவகம் 85
திரிபலாதித் திராவகம் 86
கல்லுப்புத் திராவகம் 87
சரக்குக்கட்டத் திராவகம் 89
அருநெல்லித் திராவகம் 100
வடத்திராவகம் 109
சூதம்வெடியுப்புத்திராவகம் 213
சரக்குக் கட்டத் திராவகம் 212
உள்ளித் திராவகம் 82
கடைச்சரக்குத் திராவகம் 321
புளிச்சானிலைத் திராவகம் 358
சேங்கொட்டைத் திராவகம் 383
வெடியுப்பு ஓமத்திராவகம் 401
மிளகுத் திராவகம் 403
இஞ்சித் திராவகம் 404
திப்பிலித் திராவகம் 405
ஆனைத்திப்பிலித் திராவகம் 406
விஷபேதிக்குப் புகைநீர் 382
கடைச்சரக்குத் திராவகம் 407
பூண்டுத் திராவகம் 408
வெடியுப்புத் திராவகம் 461
கம்மங்கஞ்சித் திராவகம் 464
காடித்திராவகம் 465
இஞ்சித் திராவகம் 467
ஓமத்திராவகம் 584
ஓமத்திராவகம் 79


## பலரோக மருந்து வகைகள்


வெள்ளெழுத்துமாற 458
காமாலைக்கு மருந்து 239
வெட்டைக்கு மருந்து 255
கள்ளிப்புக்கிரந்திக்கு மருந்து 273
கண்வியாதிக்கு மருந்து 275
நீர்க்கட்டுக்கு மருந்து 50
சூலைக்கட்டுக்கு மருந்து 97
மகோதரத்திற்கு மருந்து 111
சத்திகுன்மத்திற்கு மருந்து 27
விந்துகட்ட மருந்து 59
உதட்டுப் புழுவுக்கு மருந்து 203
கிராணிக்கு மருந்து 208
மந்தாரகாசத்திற்கு மருந்து 232
விரைவாதத்திற்கு மருந்து 44
விரைவாதத்திற்கு மருந்து 449
அண்டவாயுவுக்கு மருந்து 294
அண்டவீக்கத்துக்கு பத்து 295
விஷப்பாண்டுக்கு மருந்து 117
குன்மத்திற்கு மருந்து 36
கிராணிக்கு மருந்து 205
நீர்க் கட்டுக்கு மருந்து 94
சூதகத்திற்கு மருந்து 291
வாதசூலைக்கு மருந்து 292
மலட்டு வலிக்குமருந்து 194
மந்தாரகாசத்திற்கு மருந்து 320
மலசலக்கட்டுக்கு மருந்து 322
அரையாப்புக்கு மருந்து 324
இரசம் வீரடங்க மருந்து 337
வெட்டைக்கு மருந்து 341
எலிகடிக்கு மருந்து 427

விக்கலுக்கு மருந்து 451
காமாலைக்கு மருந்து 460
காசத்திற்குப் புகைமருந்து 578
வாந்திபேதிக்கு மருந்து 625
பேதிக்கு மருந்து 631
வாதகிராணிக்கு மருந்து 651
தொந்தக்கிராணிக்கு மருந்து 654
வாந்தி நிற்க மருந்து 655
சுவாசகாசத்திற்கு 49
சுவாச காசங்களுக்கு 92
தாதுண்டாக 61
வயற்று வலிக்கு 452
சுரத்திற்கு 323
இரத்தமூலக் கடுப்புக்கு 586
சயகாசங் கட்டிக்கு 201

## சுண்ணவகை விபரங்கள்.

சீனக்காரச் சுண்ணம் 241
தாளகச் சுண்ணம் 238
தாளகச் சுண்ணம் 242
தாளகச் சுண்ணம் 629
திராச் சுண்ணம் 68
நாகவங்கப் பரிச்சுண்ணம் 225
அப்பிரேகச் சுண்ணம் 412
நாகச் சுண்ணம் 456
அண்டநீர்சீனச் சுண்ணம் 615

இந்த சுண்ணங்கள் செய்வதாயிருந்தால் சுண்ணக் காண்டம் அறுநூறும் அதைக் குறுக்கிக் கூறிய சுண்ணம் மூந்நூறும் அதற்குச் சூஸ்திரம் நூற்றைம்பத்தைந்தும் அதைக் குறுக்கி ஐம்பத்தைந்தும் சொல்லி யிருக்கிறார் அவைகளைப் பார்க்கக் கைபாகம் செய்பாகம் நன்கு விளங்கும்.

## கியாழவகை விபரங்கள்

சூதமுறிவுக்குக் கியாழம் 204
நீர்க்கட்டுக்குக் கியாழம் 237
இருமலுக்குக் கியாழம் 240
சூதகவலிக்குக் கியாழம் 256
கிருமிக்குக் கியாழம் 276
மேகரோகிதாகத்துக்கு கியா 314
புத்தான்சோர்க் கியாழம் 304

அநேக கியாழங்கள் வைத்தியம் 300 ல் சொல்லி யிருக்கிறார் அதைப் பார்க்க தெரிய வரும்

## சரக்கு சுத்தி முறைகள்.

இரும்பு சுத்தி 386
கெந்தக சுத்தி 333
வெள்ளி சுத்தி 334
காரீயஞ் சுத்தி 353
செம்பு சுத்தி 369
தங்கிலிரை சுத்தி 373
பாஷாணங்கள் சுத்தி 394
வங்க சுத்தி 417
பூநீர் சுத்தி 418
துருசுச்செம்பு சுத்தி 419
அரிதார சுத்தி 420
நாக சுத்தி 421
துருசுச்செம்புச் சுத்தி 466
வங்க சுத்தி 479
விளக்கெண்ணெய் சுத்தி 589
வெடியுப்பு சுத்தி, கட்டு 436

இதில் சரக்கு சுத்திகள் வகாரத்திற்கும் வைத்தியத்திற்குமாக இதில் மாறி மாறிச் சொல்லியிருக்கிறது இன்னுமநேக சுத்தி முறைகள் வைத்தியம் 300 ல் விபரமாய்ச் சொல்லியிருக்கிறார் அதைப் பார்த்துச் சரக்கு சுத்தி செய்து கொள்ளவும்.

## கிருத வகைகள்.

உஷ்ணவாயுவுக்குக் கிருதம் 281
அண்டவாயுவுக்குக் கிருதம் 283
பித்தவெட்டைக்குக் கிருதம் 268
சன்னிக்குப் பூரணாதி கிருதம் 611
இளநீர்க் கிருதம் 484



## மாத்திரை விபரங்கள்.

குன்மத்திற்கு மாத்திரை 40
காசத்திற்கு மாத்திரை 192
பச்சவாதத்திற்கு மாத்திரை 196
வாதசூலைக்கு மாத்திரை 206
விஷத்திற்கு பூரமாத்திரை 233
சூலைவாயுவுக்கு மாத்திரை 270
மலடு நீங்க மாத்திரை 278
குன்மத்திற்கு மாத்திரை 198
இசிவுக்கு மாத்திரை 282
நீரிழிக்கு வங்க மாத்திரை 318
குஷ்டரோகத்திற்குமாத்திரை 325
திமிர்மேகத்திற்கு மாத்திரை 326
சுரத்திற்கு மாத்திரை 357
சுரத்திற்கு குளிகை 384
எலிகடிக்கு மாத்திரை 640
மேகவாயுவுக்கு மாத்திரை 317

## மெழுகு வகை விபரங்கள்.

நீரிழிவுக்கு மெழுகு 302
குன்மத்திற்கு மெழுகு 197
நீரிழிவுக்கு வங்கமெழுகு 309
வாதத்திற்குக் கெந்திமெழுகு 171
தனுர்வாதத்திற்கு மெழுகு 174
உஷ்ணவாயுக்கு மெழுகு 200
ஜலரோகத்திற்கு மெழுகு 303
சுவாசகாசத்திற்கு மெழுகு 45
இரச மெழுகு 658
பாண்டுக்கு அயமெழுகு 675
நீரிழிவுக்கு மெழுகு 311
அந்தரவாயுவுக்கு மெழுகு 284
நீரிழிவுக்கு இடி மருந்து 307
ரசமெழுகு 336
அப்பிரேக மெழுகு 678

## எண்ணெய் விபரங்கள்,

ஆறுதபுண்ணுக்கு எண்ணெய் 66
சூலை 18க்கு எண்ணெய் 184
கர்ப்பசூலைக்கு எண்ணெய் 185
கிலுகிலுப்பை எண்ணெய் 188
எலிகடிக்கு எண்ணெய் 189
வாதசூலைக்கு எண்ணெய் 153
சூலைக்கு எண்ணெய் 177
கிரீச்சனத்திற்கு எண்ணெய் 190
மலசலக்கட்டுக்கு எண்ணெய் 65
வாயுவுக்கு எண்ணெய் 176
குடல்வாதத் தெண்ணெய் 287
சூதகவாயுவுக்கு எண்ணெய் 263
ரணங்களுக்கு எண்ணெய் 264
மேகத்திற்குகுமரிஎண்ணெய் 267
கற்பமுண்டாக எண்ணெய் 279
வலிப்புக்கு எண்ணெய் 173
அண்டவாயுவுக்கு எண்ணெ 286
இளம்பிள்ளைவாத எண்ணெய் 338
சுகபேதிக்கு எண்ணெய் 387
வெட்டைக்கு எண்ணெய் 590
பித்த காமாலைக் கெண்ணெ 596
சூலைவாயுவுக்கு எண்ணெய் 659
குளிர்ச்சிக்கு எண்ணெய் 684
பச்சைவாதத் தெண்ணெய் 686
சூலைக்கு கோழி எண்ணெய் 265
கர்ப்பசூலைக்கு எண்ணெய் 689
சிரநோய்க்கு எண்ணெய் 595

## பலவியாதி மருந்து வகை.

அண்டவீக்கத்திற்கு கட்டு 290
மருந்தின்குணம் 207
நீர்க்கோர்வைக்கு நசியம் 199
அண்டவாதத்திற்குப்புகை 289
ஞானம் 377
சத்திசிவஞானம் 378
மெஞ்ஞானம் 605
பிரண்டைரசம் 609
அரையப்புக்குக்களிம்பு 644
வாய்வுக்குஉப்பு 645

குன்மத்திற்கு வெடிஉப்பு 646
மண்டையிடிக்குஆக்ராணம் 682
பித்தக்கிராணிக்கு மருந்து 652
அய்யக்கிராணிக்கு மருந்து 653
கண்வலிக்கு மருந்து 656
கபிமார்கள் சந்தோஷம் 614


பல வியாதிகளுக்கு வைத்தியம் முந்நூறில் விபரித்துச்சொல்லிருக்கிறது அதைப் பார்த்தால் நன்கு விளங்கும்.

## லேகிய வகைவிபரங்கள்.


மூலக்கிராணிக்குலேகியம் 104
பெரும்பாட்டுக்கு லேகியம் 277
குஷ்டத்திற்கு லேகியம் 297
மலக்கட்டுக்கு லேகியம் 195
மேகவெள்ளைக்கு லேகியம் 38
கடுகு லேகியம் 93
தேகபுஷ்டிக்கு லேகியம் 330
மூத்திர எரிவுக்கு லேகியம் 301


இன்னுமநேக வியாதிகளுக்கு மருந்துகள் முறையோடு வைத்தியம் நானூறில் சொல்லியிருக்கிறது அதைப் பார்த்தால் வைத்ய பாகங்கள் தெளிவாய்த் தெரியும்.

## சுடர்த்தைல வகைகள்


வலிப்புக்குச் சுடர்த்தைலம் 172
குஷ்டத்திற்கு சுடர்த்தைலம் 180
சூலைக்குச் சுடர்த்தைலம் 181
காசத்திற்குச்சுடர்த்தைலம் 201
அரிதாரச்சுடர்த்தைலம் 280
மூலமுளைக்குச்சுடர்த்தயிலம் 372


## சூரண வகைவிபரங்கள்


கிராணிச் சூரணம் 4[illegible]
கால்கையெரிவுக்குச் சூரணம் 60[illegible]
குஷ்டத்திற்குச்சூரணம்
நெஞ்செரிவுக்குச்சூரணம் [illegible]
அண்டவீக்கச்சூரணம் [illegible]
காசத்திற்குச்சூரணம் [illegible]
நீரிழிவுக்குச்சூரணம் [illegible]
நீரிழிவுக்குஆவரைச்சூரணம் 31[illegible]
சுரசன்னிக்குச்சூரணம் [illegible]
பெருவயிற்று சூரணம் [illegible]
பாண்டுகாமாலைக்குச்சூரணம் [illegible]
கிராணிக்குச்சூரணம்
மூலவாய்வுக்குச்சூரணம் [illegible]
மூப்பிரண்டைச்சூரணம் [illegible]
திமிர்குட்டத்திற்கு சூரணம் [illegible]
சயத்திற்குச்சூரணம் [illegible]
அஷ்டகுன்மத்திற்குசூரணம் [illegible]
வாந்திபித்தத்திற்குசூரணம்
பிரண்டைச் சூரணம் [illegible]
சகலமேகத்திற்சூரணம்
அயக்காந்தச் சூரணம் 6[illegible]


## குழித்தைல விபரங்கள்.


இரத்தகாசத்திற்குத்தைலம் 6[illegible]
குஷ்டத்திற்கு குழித்தைலம் 17[illegible]
ஈளைகாசத்திற்குத் தைலம் 1[illegible]
சில்விஷத்திற்குத் தைலம் 34[illegible]
சிவன் வேம்புத் தைலம் 4[illegible]
சிவன் வேம்புத் தைலம் 542


அட்டவணை முற்றிற்று.

101682